www.Padasalai.Net www.Trb Tnpsc.Com




வானவில் கிண்ணத்தில் வண்ணம் கலந்து
கானமயில் பீலியால் கண்கவரப் புனைந்த
கன்னித் தமிழிலொரு கருத்துரை ஓவியம்!

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# பொதிகைத் தமிழ் உரை

## பத்தாம் வகுப்பு

இவ்வுரை நூலில் ....

- உரைநடை : வினா – விடை
- கவிதைப்பேழை (செய்யுள்) : வினா – விடை
- விரிவானம் (துணைப்பாடம்) : வினா – விடை
- இனிக்கும் இலக்கணம் : வினா – விடை
- கற்பவை கற்றபின், நயம் பாராட்டுக
- மொழியை ஆள்வோம், மொழியாக்கம்
- மொழியோடு விளையாடு, நிற்க அதற்குத் தக
- கலைச்சொல் அறிவோம், மொழிப்பயிற்சி
- காலாண்டு, அரையாண்டுத் தேர்வு வினாத்தாள்கள்
- மாதிரி வினாத்தாள்கள்
- பொதுத்தேர்வு வினாத்தாள்கள் (விடைகளுடன்)
- TNPSCயின் தகுதித்தேர்வு வினாத்தாள்| மனப்பாடப்பகுதி

ஆகிய அனைத்தும் இடம்பெற்றுள்ளன.

உருவாக்கம் :
பதிப்பகப் புலவர்குழு

www.Padasalai.Net

பொதிகைப் பதிப்பகம்
கல்விநூல் வெளியீட்டாளர்
43, பந்தர் தெரு, சென்னை – 600 001.
தொடர்பு எண்கள் : 044 – 2538 1415 / 90 8777 9111

விலை ரூ. 375.00

# பதிப்புரை

**இமயத்தை எட்டுவோம்!**

அன்பார்ந்த மாணவமணிகளே, இனிய நல்வாழ்த்துகள்! ஓர் இனம் தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதில் 'மொழி' மிகமுக்கியப் பங்கு வகிக்கிறது. ஒவ்வோர் இனத்தின் வாழ்வின் செழுமையையும், பண்பாட்டுக் கூறுகளையும் மொழியே தன் உள்ளீடாகக் கொண்டுள்ளது. உலகில் ஒவ்வொரு மனிதனும், தாய்மொழியின் வாயிலாகவே தன் அடையாளத்தைத் தேடுகிறான்; தாய்மொழியின் வழியாகவே சிந்திக்கிறான்.

'மொழி', என்பது அளவிடற்கரிய ஆற்றல் மிக்கது! உணர்வுகளின் துடிப்பாகவும், கருத்துப் பரிமாற்றத்தின் கருவியாகவும் திகழ்கிறது. நமது தாய்மொழியாகிய தமிழ், பழமையும் புதுமையும் நிறைந்த மொழி! உயர்தனிச் செம்மொழியாகத் திகழ்வது! இத்தகு சிறப்பு வாய்ந்த தாய்மொழியாம் தமிழைப் பத்தாம் வகுப்பில் பாடமாகப் பயிலும் உங்களைப் பொதிகைப் பதிப்பகம் போற்றிப் பாராட்டி மகிழ்கிறது. தமிழ்ப் பாடநூலில் செழுமையான செய்திகளும், அறிவுக் குவியல்களும் குன்றெனக் குவிந்திருக்கின்றன. தமிழ்ப் பாடத்திட்டத்தை உருவாக்கிய பெருமக்கள், மாணாக்கர் தாய்மொழியைச் செம்மையாகக் கற்க வேண்டுமென்ற நோக்கில் செய்யுள், உரைநடை, துணைப்பாடம், இலக்கணம் மற்றும் மொழிப்பயிற்சி என்னும் பல தலைப்புகளை அணிவகுக்கச் செய்துள்ளனர்.

அவை அனைத்திற்கும், பட்டறிவு வாய்க்கப்பெற்ற வல்லுநர் குழுவைக் கொண்டு, தமிழ்ப் பாடநூலை வகைப்படுத்தியும், முறைப்படுத்தியும் நெறிகாட்டும் நூலாக 'பொதிகைத் தமிழ் உரை'யை வழங்கியுள்ளோம்.

பல்லாண்டுகள் பைந்தமிழைப் பயிற்றுவித்த பட்டறிவும், நூலறிவும், நுண்ணறிவும் மிகுந்த தமிழாசிரியப் பெருமக்கள், பொதிகைப் புலவர்குழுவில் உள்ளமையால், இவ்வுரைநூல் ஏற்றம் பெற்றதாய்த் திகழ்கிறது.

இந்நூலில் உள்ள விடைகளை நீங்கள் நன்கு பயிற்சி செய்தால், கற்றல் எளிமையாகும். அவ்வகையில் எதிர்வரும் பொதுத்தேர்வில் உச்ச மதிப்பெண்களை உங்களால் எளிதில் பெறமுடியும். தன்னம்பிக்கை, கடின உழைப்பு, விடாமுயற்சி என்னும் மூன்றையும் உள்ளத்தில் பதிய வைத்துக்கொண்டால், வெற்றி உறுதி! இவ்வுரைநூல் மேலும் சிறப்பாக அமைய, ஆசிரியர்களின் ஆலோசனைகளை வரவேற்கிறோம்.

**வாழ்க! வளர்க! வெல்க!**

பதிப்பாளர்

**Bank Details for Direct Deposit**

| | | |
|---|---|---|
| Account Name | : | Pothigai Pathippagam |
| Bank Name | : | Kotak Mahindra Bank |
| Branch | : | Porur, Chennai - 600 116. |
| Account Number | : | 5448198319 |
| IFSC | : | KKBK0000472 |

முதல் பதிப்பு : ஜூலை, 2022
திருத்திய பதிப்பு : ஜூன், 2023, 2024
அச்சிட்டோர் : ஸ்ரீ முருகன் பிரிண்டர்ஸ், சென்னை – 05.

| இயல் | பொருளடக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| | கவிதைப்பேழை | அன்னை மொழியே | 5 |
| 1 | உரைநடை உலகம் | தமிழ்ச்சொல் வளம் | 11 |
| | கவிதைப்பேழை | இரட்டுற மொழிதல் | 18 |
| | விரிவானம் | உரைநடையின் அணிநலன்கள் | 22 |
| | கற்கண்டு | எழுத்து, சொல் | 25 |
| 2 | உரைநடை உலகம் | கேட்கிறதா என்குரல்! | 38 |
| | கவிதைப்பேழை | காற்றே வா! | 43 |
| | | முல்லைப்பாட்டு | 48 |
| | விரிவானம் | புயலிலே ஒரு தோணி | 56 |
| | கற்கண்டு | தொகைநிலைத் தொடர்கள் | 61 |
| 3 | உரைநடை உலகம் | விருந்து போற்றுதும் | 71 |
| | கவிதைப்பேழை | காசிக்காண்டம் | 77 |
| | | மலைபடுகடாம் | 81 |
| | விரிவானம் | கோபல்லபுரத்து மக்கள் | 87 |
| | கற்கண்டு | தொகாநிலைத் தொடர்கள் | 90 |
| | வாழ்வியல் | திருக்குறள் | 100 |
| 4 | உரைநடை உலகம் | செயற்கை நுண்ணறிவு | 109 |
| | கவிதைப்பேழை | பெருமாள் திருமொழி | 118 |
| | | பரிபாடல் | 122 |
| | விரிவானம் | விண்ணைத் தாண்டிய நம்பிக்கை | 126 |
| | கற்கண்டு | இலக்கணம் – பொது | 131 |
| 5 | உரைநடை உலகம் | மொழிபெயர்ப்புக் கல்வி | 143 |
| | கவிதைப்பேழை | நீதிவெண்பா | 150 |
| | | திருவிளையாடற் புராணம் | 153 |
| | விரிவானம் | புதிய நம்பிக்கை | 160 |
| | கற்கண்டு | வினா–விடை வகை, பொருள்கோள் | 164 |


Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

| இயல் | பொருளடக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| 6 | உரைநடை உலகம் | பன்முகக் கலைஞர் | 175 |
| | கவிதைப்பேழை | பூத்தொடுத்தல் | 184 |
| | | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் | 188 |
| | | கம்பராமாயணம் | 192 |
| | விரிவானம் | பாய்ச்சல் | 198 |
| | கற்கண்டு | அகப்பொருள் இலக்கணம் | 201 |
| | வாழ்வியல் | திருக்குறள் | 214 |
| 7 | உரைநடை உலகம் | சிற்றகல்ஒளி (தன்வரலாறு) | 224 |
| | கவிதைப்பேழை | ஏர் புதிதா? | 232 |
| | | மெய்க்கீர்த்தி | 236 |
| | | சிலப்பதிகாரம் | 242 |
| | விரிவானம் | மங்கையராகப் பிறப்பதற்கே... | 249 |
| | கற்கண்டு | புறப்பொருள் இலக்கணம் | 252 |
| 8 | உரைநடை உலகம் | சங்க இலக்கியத்தில் அறம் | 261 |
| | கவிதைப்பேழை | ஞானம் | 268 |
| | | காலக்கணிதம் | 274 |
| | விரிவானம் | இராமானுசர் (நாடகம்) | 280 |
| | கற்கண்டு | பா – வகை, அலகிடுதல் | 283 |
| 9 | உரைநடை உலகம் | ஜெயகாந்தம் (நினைவு இதழ்) | 297 |
| | கவிதைப்பேழை | சித்தாளு | 303 |
| | | தேம்பாவணி | 307 |
| | விரிவானம் | ஒருவன் இருக்கிறான் | 315 |
| | கற்கண்டு | அணி | 317 |
| | ➲ | பலவுள் தெரிக (பாடநூல் வினாக்கள்) | 329 |
| | ➲ | மொழிப்பயிற்சி (பாடநூல் வினாக்கள்) | 332 |
| | ➲ | மாதிரி வினாத்தாள்கள் | 346 |
| | ➲ | பொதுத்தேர்வு வினாத்தாள்கள் (விடைகளுடன்) | 365 |
| | ➲ | TNPSC தேர்வுகளுக்கான தகுதித்தேர்வு வினாத்தாள் | 414 |
| | ➲ | மனப்பாடப்பகுதி | 429 |


www.Padasalai.Net

# இயல் – 1

## கவிதைப்பேழை

# 1. அன்னைமொழியே

(பாவலரேறு பெருஞ்சித்திரனார்)

### குறுவினாக்கள்

1. "மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே! முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!" – இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர ஐம்பெருங்காப்பியங்களில் எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.(Dept., May - 22)

- சீவகசிந்தாமணி • வளையாபதி • குண்டலகேசி.

### கூடுதல் வினாக்கள்

2. தமிழ்மொழியைப் பெருஞ்சித்திரனார் எங்ஙனம் போற்றுகின்றார் ?

➤ 'கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசே!' என்று, பெருஞ்சித்திரனார் தமிழ்மொழியைப் போற்றுகின்றார்.

3. தமிழின் பெருமையை எதனைப் போன்று முழங்குவதாகப் பெருஞ்சித்திரனார் கூறுகின்றார் ?

➤ 'எம் தனித்தமிழே! வண்டானது செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடுவது போன்று நாங்கள் உன்னைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள, உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம்' என்று, தமிழின் பெருமையைப் பெருஞ்சித்திரனார் கூறுகின்றார்.

4. பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் இதழ்கள் யாவை ?

➤ தென்மொழி, தமிழ்ச்சிட்டு என்பன பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் இதழ்களாகும்.

5. பெருஞ்சித்திரனாரின் படைப்புகள் யாவை ?

➤ உலகியல் நூறு, பாவியக் கொத்து, நூறாசிரியம், பள்ளிப் பறவைகள், கனிச்சாறு, எண்சுவை எண்பது, மகபுகு வஞ்சி, திருக்குறள் மெய்ப்பொருளுரை ஆகியன, பெருஞ்சித்திரனாரின் படைப்புகளாகும்.

6. க. சச்சிதானந்தரின் தமிழ்ப்பற்றைக் கூறுக.

➤ "சாகும்போதும் தமிழ் படித்துச் சாகவேண்டும் – என்றன் சாம்பலும் தமிழ் மணந்து வேகவேண்டும்" என்பது, சச்சிதானந்தரின் தமிழ்ப் பற்றாகும்.

7. தென்னன் மகள் யார்? அவ்வாறு கூறப்படக் காரணம் என்ன ?

➤ தென்னன் மகள் என்று கூறப்பட்டது தமிழ்.

➤ தென்னன் என்னும் சொல் பாண்டிய மன்னனைக் குறிக்கும்.

➤ பாண்டிய மன்னர்கள் மதுரையில் சங்கம் அமைத்துத் தமிழை வளர்த்ததே அதற்குக் காரணம்.

### சிறுவினாக்கள்

1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?(PTA-2, May-22)

★ செழுந்தமிழ் அன்னை மொழி அழகாய் அமைந்ததாகும்.

★ பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியாகும்.

★ கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் நிலைத்து, அரசாண்ட மண்ணுலகப் பேரரசியாகும்.

★ பாண்டிய மன்னனின் மகள்! திருக்குறளின் பெரும் பெருமைக்குரியவள்!

★ பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் பதினெண்கீழ்க்கணக்கும் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் தமிழுள்ளே பொங்கியெழும் நினைவுகளால் தலைபணிந்து வாழ்த்துகிற சிறப்புடையது.

★ இவையே, தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகும் எனப் பாவலரேறு சுட்டுகிறார்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கூடுதல் வினாக்கள்

**2. பெருஞ்சித்திரனார் தமிழின் பெருமைகளாக முழங்குவன யாவை ?**

- 'செழுமைமிக்க தமிழே எமக்கு உயிர். சொல்லுதற்குரிய உன் பெருமைதனை என் தமிழ் நோக்கு எவ்வாறு விரித்துரைக்கும்?
- பழம்பெருமையும் தனக்கெனத் தனிச்சிறப்பும் இலக்கிய வளமும் கொண்டது தமிழ்! வியக்கத்தக்க, நீண்டு நிலைத்த, உன் தன்மையாக உரைத்த புகழுரை எமக்குள் பற்றுணர்வை எழுப்புகின்றது.
- செந்தாமரைத் தேனை வண்டானது குடித்துச் சிறகசைத்துப் பாடுவதுபோன்று, தனித்தமிழை நாங்கள் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள, உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம் என்பன, தமிழின் பெருமைகளாகப் பெருஞ்சித்திரனார் முழங்குவனவாகும்.

**3. பாவலரேறு பெருஞ்சித்திரனார் – குறிப்பு வரைக.**

**தோற்றம்** : 10.03.1933

**பெற்றோர்** : துரைசாமி – குஞ்சம்மாள்

**இயற்பெயர்** : துரை. மாணிக்கம்

**ஊர்** : சேலம் மாவட்டம் – சமுத்திரம்

**படைப்புகள்** : மல்லிகை, பூக்காரி, கொய்யாக்கனி, சாதி ஒழிப்பு, ஓ ஓ! தமிழர்களே, ஐயை, இளமை விடியல், உலகியல் நூறு, இளமை உணர்வுகள்.

**மறைவு** : 11.06.1995

## நெடுவினா

**1. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.** **(PTA - 5, Dept., Sep.-22)**

அனைவருக்கும் வணக்கம்!

தமிழ்த்தாய் இன்றோ நேற்றோ பிறந்தவள் இல்லை.

அவள் என்று பிறந்தவள் என அறியமுடியாத பழமை மிக்கவள்.

அவளுடைய புகழைப் பாடப் பாட, உள்ளத்தில் இனிமையும் புத்துணர்வும் பிறக்கும்.

தமிழ்த்தாயைப் போற்றாத புலவரில்லை எனக் கூறுவது மிகையாகாது. பலவேறு புலவர்கள் தமிழ்த்தாயைப் போற்றிப் பாராட்டியுள்ளனராயினும், இங்கு மனோன்மணீயம் பெ. சுந்தரனாரும், பாவலரேறு பெருஞ்சித்திர னாரும் போற்றி வாழ்த்தியுள்ளமையைப் பார்ப்போம்.

மனோன்மணீயம் சுந்தரனார், அலைகடலை ஆடையாக அணிந்த பூமிப் பெண்ணிற்குப் பாரத கண்டம், முகமாகத் திகழ்கிறது. அம்முகத்திற்குப் பிறைநிலவுபோன்ற நெற்றியாகத் தென்திசை நாடுகளும், நறுமணம் மிக்க திலகமாய்த் திராவிட நாடும் விளங்க, அத்திலகத்திலிருந்து மணம் பரவி இன்புறச் செய்வதுபோல் தமிழ்த்தாய், எல்லாத் திசைகளிலும் புகழ் பரப்பி இருப்பதாகக் கூறியுள்ளார்.

பழமைக்குப் பழமையாய்த் தோன்றியவள், குமரிக் கண்டத்தில் நிலைத்துநின்று அரசாளும் மண்ணுலகப் பேரரசி, பாண்டிய மன்னனின் மகள், என்றெல்லாம் தமிழைப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் குறிப்பிடுகிறார். தமிழ்த்தாய் எல்லாத் திசைகளிலும் புகழ்பெற்றுத் திகழ்வதாகக் கூறியுள்ளார் சுந்தரனார். அதனையே பெருஞ் சித்திரனார் திருக்குறளின் பெருமைக்குரியவளாகவும், பதினெண் கீழ்க்கணக்கு, பதினெண் மேல்கணக்கு, ஐம்பெருங் காப்பியங்களாய் எல்லாத் திசைகளிலும் பரவியுள்ளாள் என்று ஏற்றிப் போற்றிப் புகழ்ந்து கூறியுள்ளார். அத்துடன், பொங்கியெழும் இந்நினைவுகளால் தலை தாழ்த்திப் பணிந்து வாழ்த்துகிறோம் என்கிறார்.

உலகின் மூத்த மொழியாக இருந்தும், இன்றளவும் இளமை மாறாதவளாக இருக்கின்றாள் என்று சுந்தரனார் பாடுகின்றார். இதனைப் பெருஞ்சித்திரனார், பழமைக்குப் பழமை என்று போற்றுகிறார்.

சுந்தரனார், தமிழ்மொழியின் வளம் பெருகுகின்றதே தவிரக் குறையவில்லை என்கிறார். இதனைப் பெருஞ்சித்திரனார், பழம்பெருமையும் தனக்கெனத் தனிச்சிறப்பும் இலக்கிய வளமும் கொண்டுள்ளது தமிழ் என்கிறார். மேலும் "வியக்கத்தக்க நீண்டு நிலைத்த உன் தன்மைகளை வேற்று மொழியார் உணர்ந்து, உன்னைப் பற்றி உரைத்த புகழுரைகள் எமக்குள் பற்றுணர்வை எழுப்புகின்றன" என்றும் கூறுகிறார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



சுந்தரனாரோ, 'தமிழே! தமிழாகிய பெண்ணே! தாயே உன்னை வாழ்த்துகின்றேன்' என்கிறார். பெருஞ் சித்திரனாரோ, 'எம் தனித்தமிழே! உள்ளத்தில் கனல் மூள வா, வண்டானது செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடுவதுபோல, நாங்கள் உன்னைச் சுவைத்து உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம்'' என்று பாடியுள்ளார். இவ்வாறு மனோன்மணீயம் சுந்தரனாரும், பாவலரேறு பெருஞ்சித்திரனாரும் தமிழின் பெருமைகளைப் பறைசாற்றி வாழ்த்தியுள்ளனர்.

## பலவுள் தெரிக

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா

இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

**விடை : இ) எம் + தமிழ் + நா**

## கூடுதல் வினாக்கள்

2. 'சாகும் போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும் – என்றன் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்'' – என்று கூறியவர் (Sep. - 22)

அ) திரு.வி.க. ஆ) க. சச்சிதானந்தன்

இ) நம்பூதனார் ஈ) தனிநாயக அடிகள்

**விடை : ஆ) க. சச்சிதானந்தன்**

3. தமிழ்மொழி கடல் கொண்ட ______ கண்டத்தில் அரசாண்டது.

அ) குமரி ஆ) ஐரோப்பிய இ) ஆசியா ஈ) ஆஸ்திரேலியா

**விடை : அ) குமரி**

4. 'நற்கணக்கு' என்பது ______ நூல்களைக் குறிக்கும்.

அ) எட்டுத்தொகை ஆ) பதினெண்கீழ்க் கணக்கு

இ) பத்துப்பாட்டு ஈ) காப்பிய

**விடை : ஆ) பதினெண்கீழ்க் கணக்கு**

5. உள்ளத்தில் கனல் மூளச் செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடியது எது ?

அ) தேன்சிட்டு ஆ) (அந்தும்பி) வண்டு

இ) தேனி ஈ) வண்ணத்துப்பூச்சி

**விடை : ஆ) (அந்தும்பி) வண்டு**

6. "முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே'' – என்று பாடியவர்,

அ) பெருஞ்சித்திரனார் ஆ) க. சச்சிதானந்தன்

இ) வாணிதாசன் ஈ) கண்ணதாசன்

**விடை : அ) பெருஞ்சித்திரனார்**

7. "முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே'' என்று பாடியவர்

அ) க. சச்சிதானந்தன் ஆ) துரை. மாணிக்கம்

இ) வாணிதாசன் ஈ) முடியரசன்

**விடை : ஆ) துரை. மாணிக்கம்**

8. "நற்கணக்கே'' என்பதில் சுட்டப்படும் நூல்கள் எத்தனை ?

அ) பதினெட்டு ஆ) பத்து இ) எட்டு ஈ) ஐந்து

**விடை : அ) பதினெட்டு**

9. துரை. மாணிக்கம் என்ற இயற்பெயர் கொண்டவர் யார் ?

அ) பெருஞ்சித்திரனார் ஆ) பெரியவன் கவிராயர்

இ) தேவநேயப் பாவாணர் ஈ) தமிழண்ணல்

**விடை : அ) பெருஞ்சித்திரனார்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



10. பெருஞ்சித்திரனார் பாடலில், 'பழமைக்குப் பழமை' என்னும் பொருள் தரும் சொல்,

அ) முன்னை முகிழ்ந்த ஆ) முன்னைக்கும் முன்னை

இ) முன்னும் நினைவால் ஈ) முந்துற்றோம் யாண்டும்

விடை : ஆ) முன்னைக்கும் முன்னை

11. 'பாப்பத்தே எண்தொகையே' – சரியான பொருளைக் கண்டறிக.

அ) பாடல் பத்து, எண் தொகை ஆ) பா பத்து, எட்டுத்தொகை

இ) பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஈ) பத்தும் எட்டும்

விடை : இ) பத்துப்பாட்டு, எட்டுத்தொகை

12. 'செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த அந்தும்பி பாடும் அதுபோல' – பயின்று வரும் அணி

அ) உவமையணி ஆ) உருவக அணி

இ) எடுத்துக்காட்டு உவமையணி ஈ) தற்குறிப்பேற்ற அணி

விடை : அ) உவமையணி

13. செந்தமிழ், செந்தாமரை ஆகிய சொற்களில் இடம் பெறும் இலக்கணக் குறிப்பைச் சுட்டுக.

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை

இ) உம்மைத்தொகை ஈ) அன்மொழித்தொகை

விடை : அ) பண்புத்தொகை

14. உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல்மூள – இவ்வடியில் காணும் தொடைநயம்,

அ) மோனைத்தொடை ஆ) எதுகைத்தொடை இ) முரண்தொடை ஈ) இயைபுத்தொடை

விடை : அ) மோனைத்தொடை

15. "சாகும்போதும் தமிழ் படித்துச் சாகவேண்டும்" எனப் பாடியவர் ______.

அ) பெருஞ்சித்திரனார் ஆ) பாரதிதாசன் இ) சச்சிதானந்தர் ஈ) சுப்புரத்தினம்

விடை : இ) சச்சிதானந்தர்

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக. (Sep.- 21, May-22)

"செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை
எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?
முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்
விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்".

அ) எந்தமிழ்நா என்பதனைப் பிரித்தால் இவ்வாறு வரும் :

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா

இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

விடை : இ) எம் + தமிழ் + நா

ஆ) செந்தமிழ் என்பது :

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

விடை : அ) பண்புத்தொகை

இ) "உள்ளுயிரே" என்று கவிஞர் யாரை அழைக்கிறார்?

அ) தம் தாயை ஆ) தமிழ் மொழியை இ) தாய் நாட்டை ஈ) தம் குழந்தையை

விடை : ஆ) தமிழ் மொழியை

ஈ) வேறார் புகழுரையும் – இத்தொடரில் 'வேறார்' என்பது :

அ) தமிழர் ஆ) சான்றோர் இ) வேற்றுமொழியினர் ஈ) புலவர்

விடை : இ) வேற்றுமொழியினர்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளி.

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

1. இப்பாடலின் ஆசிரியர்

அ) பெருஞ்சித்திரனார் ஆ) திரு. வி. கலியாணசுந்தரனார்
இ) இராமலிங்கம் ஈ) கவிமணி

விடை : அ) பெருஞ்சித்திரனார்

2. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் ______.

அ) ஒப்பியன் மொழிநூல் ஆ) கனிச்சாறு இ) பிரார்த்தனை ஈ) என்கதை

விடை : ஆ) கனிச்சாறு

3. "கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்" இத்தொடரின் பொருள்,

அ) பாரதத்தின் தென்பகுதி கன்னியாகுமரி
ஆ) பகவதியம்மன் கோவில் அமைந்த இடம் கன்னியாகுமரி
இ) கடல் கொண்ட குமரிக் கண்டம்
ஈ) கன்னியம்மன் கோவில் அமைந்த நாடு

விடை : இ) கடல் கொண்ட குமரிக் கண்டம்

4. பாடலில் இடம்பெற்றுள்ள அடியெதுகைச் சொற்களைக் குறிப்பிடுக.

அ) முன்னைக்கும் முன்னை ஆ) மன்னி, மண்ணுலக
இ) அன்னை, முன்னைக்கும் ஈ) கன்னி, கடல்

விடை : இ) அன்னை, முன்னைக்கும்

## இலக்கணக்குறிப்பு

**செந்தமிழ், நறுங்கனி, செந்தாமரை, பேரரசு, இன்னறும்பா, நற்கணக்கு** – பண்புத்தொகைகள்
**சிறகார்ந்த, முகிழ்த்த** – பெயரெச்சங்கள்
**கன்னிக்குமரி, மண்ணுலகம்** – உருவகங்கள்
**தென்னன் மகள்** – நான்காம் வேற்றுமைத்தொகை
**நின்பெருமை** – ஆறாம் வேற்றுமைத்தொகை
**குடித்து, பாடி, எழுப்ப** – வினையெச்சங்கள்
**வாழ்த்துவமே** – தன்மைப் பன்மை வினைமுற்று
முந்துற்**றோம்**, யாண்**டும்** – முற்றும்மைகள்
**உள்ளக்கனல்** – ஐந்தாம் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்கதொகை

## பகுபத உறுப்பிலக்கணம்

1. முகிழ்த்த – முகிழ் + த் + த் + அ

முகிழ் – பகுதி;
த் – சந்தி;
த் – இறந்தகால இடைநிலை;
அ – பெயரெச்ச விகுதி.

2. வாழ்த்துவம் – வாழ்த்து + வ் + அம்

வாழ்த்து – பகுதி;
வ் – எதிர்கால இடைநிலை;
அம் – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## புணர்ச்சிவிதிகள்

1. **எந்தமிழ் – எம் + தமிழ்**
   'மவ்வீறு ஒற்றழிந்து.... வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்' என்னும் விதியின்படி
   எந் + தமிழ் (எந்தமிழ்)
2. **செந்தமிழ் – செம்மை + தமிழ்**
   'ஈறுபோதல்' என்னும் விதிப்படி (செம் + தமிழ்)
   'முன்னின்ற மெய்திரிதல்' என்னும் விதியின்படி செந் + தமிழ் (செந்தமிழ்)
3. **நற்கணக்கு – நன்மை + கணக்கு**
   'ஈறுபோதல்' என்னும் விதிப்படி (நன் + கணக்கு)
   'முன்னின்ற மெய்திரிதல்' என்னும் விதிப்படி, (நற் + கணக்கு) நற்கணக்கு.
4. **உள்ளுயிர் – உள் + உயிர்**
   'தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்' என்னும் விதிப்படி, (உள்ள் + உயிர்)
   'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி, (உள்ளுயிர்)

## கற்பவை கற்றபின்

1. **"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
   **ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
   **கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று**
   **இத்திறத்த எட்டுத் தொகை"**
   **– இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள எட்டுத்தொகை நூல்களைப் பெயர்க்காரணத்துடன் எடுத்துக்காட்டுக.**

**நற்றிணை :**

நல் + திணை – நன்மை + திணை. 'நல்' என்னும் அடைமொழியும் அகப்பொருள் ஒழுக்கத்தைச் சுட்டும் 'திணை' என்னும் பெயரும் சேர்ந்து, 'நற்றிணை' என்னும் பெயர் பெற்றது.

**குறுந்தொகை :**

குறுமை + தொகை. குறைந்த அடிகள் கொண்ட பாடல்களின் தொகுப்பாக இருப்பதால், குறுந்தொகை எனப் பெயர் பெற்றது.

**ஐங்குறுநூறு :**

ஐந்து + குறுமை + நூறு – ஐங்குறுநூறு. ஐவகைத் திணை குறித்த நூறு குறுகிய பாடல்களாகத் தொகுக்கப்பட்டதால், 'ஐங்குறுநூறு' எனப் பெயர் பெற்றது.

**பதிற்றுப்பத்து :**

சேர மன்னர்கள் பதின்மரைப் பற்றிப் பத்துப் பத்துப் பாடல்களாகப் பத்துப் புலவர்கள் பாடிய தொகுப்பு நூலாகும். ஒரு மன்னருக்குப் பத்துப் பாடல்கள் என்னும் முறையில் நூறு பாடல்களைக் கொண்டுள்ளதால், 'பதிற்றுப்பத்து' எனப் பெயர் பெற்றது. இந்நூலில், முதல் பத்தும், இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை.

**பரிபாடல் :**

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நால்வகைப் பாக்களுக்கும், பலவகை அடிகளுக்கும் பரிந்து இடங்கொடுத்துப் பரிந்து செல்லும் ஓசையையுடைய பரிபாட்டுகளின் தொகுப்பாக விளங்குவதால் இது, 'பரிபாடல்' என்று அழைக்கப்படுகிறது.

**கலித்தொகை :**

ஓசை இனிமையும், தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்னும் சிறப்பான அமைப்பு களையும் கொண்ட கலிப்பாக்களால் அமைந்த அகப்பொருள் நூலாதலால், கலித்தொகை எனப் பெயர் பெற்றது.

**அகநானூறு :**

அகம் + நான்கு + நூறு – அகநானூறு. அகப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட நூல் என்பதால், 'அகநானூறு' எனப் பெயர் பெற்றது.

**புறநானூறு :**

புறம் + நான்கு + நூறு – புறநானூறு. இது புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட நூல் என்பதால், 'புறநானூறு' எனப் பெயர் பெற்றது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**2. "எந்தமிழ்நா நின் பெருமை எடுத்தே உரைவிரிக்கும்" என்ற பாடலடியைக் கொண்டு வகுப்பறையில் ஐந்து நிமிட உரை நிகழ்த்துக.**

உலகில் உள்ள தொன்மையான மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்று என்றால் மிகையாகாது. இன்றும் எழுத்தளவிலும் பேச்சளவிலும் தன் தொன்மையைக் காத்துச் சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்து கொண்டிருக்கிறது நம் அன்னைத் தமிழ்மொழி. தமிழ்மொழி தொன்மை, எளிமை, ஒண்மை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை எனப் பலவகைப் பெருமைகளை ஒருங்கே உடையது என்கிறார் ஞா. தேவநேயப் பாவாணர்.

முண்டாசுக் கவிஞன் மகாகவி பாரதி,
"யாமறிந்த மொழிகளிலே! தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்" என்கிறார்.

தமிழின் சிறப்பை உணர்ந்த மேலைநாட்டு அறிஞர் டாக்டர் ஜி. யு. போப், தமிழை நன்கு கற்று அதன் சிறப்பினை உணர்ந்ததால், தமது கல்லறையில் "இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்" என்று பொறிக்கச் செய்தார். இலக்கியத் தொன்மைகளையும் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்க் கூறுகளையும் கொண்ட மொழியாகும் நம் தமிழ்மொழி. என்தாய்த் தமிழின் பெருமையை, உலக அரங்கு முழுக்க எடுத்துரைப்பேன். அதுவே நான் செய்த பாக்கியம் என்று பலரும் உரைக்கின்றனர்.

இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது தமிழ். தமிழர் வாழ்வியலுக்கு அகம், புறம் என இலக்கணம் வகுத்தது தமிழ்! தமிழ் தொன்மை வளமுடையது. வேறு எம்மொழியும் நெருங்க இயலாத இலக்கிய, இலக்கண வளம் கொண்டுள்ளது. பாரதியார், பாவேந்தர், சுரதா, வாணிதாசன், கம்பதாசன், கண்ணதாசன் முதலான எண்ணற்ற பிற்காலப் புலவர்களை உருவாக்கியுள்ளது. தமிழின் பெருமையை உலக அரங்கில் எடுத்துரைப்பேன். தமிழின் சீரிளமையைக் காக்க என்றும் பாடுபடுவேன். நன்றி. வணக்கம்.

## உரைநடை உலகம்

# 2. தமிழ்ச்சொல் வளம்

**(தேவநேயப் பாவாணர்)**

### குறுவினாக்கள்

**1. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன. (Mar.-24)**
**ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.**
**ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.**
**மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.**

**சரியான தொடர்கள் :**

★ ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
★ ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.

**பிழையான தொடர் – பிழைக்கான காரணங்கள் :**

★ **"ஒரு சீப்பில் பலதாறு வாழைப்பழங்கள் உள்ளன"** என்னும் தொடர் பிழையானது. 'ஒரு சீப்பில் பல தாறு' எனக் குறிப்பிட்டுள்ளதால் தொடர் தவறு. ஒரு தாற்றில்தான் பல சீப்பு வாழைப்பழங்கள் இருக்கும்.

### கூடுதல் வினாக்கள்

**2. டாக்டர் கால்டுவெல் தமிழ்மொழியின் சிறப்பைப் பற்றிக் கூறுவன யாவை ? (அல்லது) தமிழ்ச்சொல் வளம் குறித்துக் கால்டுவெல் குறிப்பிடும் கருத்தை எழுதுக. (PTA -1)**

➤ தமிழ்மொழியின் சொல்வளச் சிறப்பு குறித்து டாக்டர் கால்டுவெல், "தமிழில்மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள்ளன" என்கிறார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



3. தாவரங்களின் இளம் பயிர் வகைகளைக் குறிக்கும் சொற்களில் நான்கினை எழுதுக. (May -22)
   - நாற்று, கன்று, குருத்து, பிள்ளை, பைங்கூழ் ஆகியவை தாவரங்களின் இளம்பயிர் வகைகளைக் குறிக்கும் சொற்கள் ஆகும்.

4. தமிழ்நாட்டில் மட்டும் விளையக்கூடிய சிறுகூலங்களின் பெயர்களை எழுதுக. (Mar. -23)
   - வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி ஆகியவை தமிழ்நாட்டில் மட்டும் விளையக்கூடிய சிறுகூலங்களின் பெயர்களாகும்.

5. தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் பல்வேறு சொற்களை எழுதுக.
   - இலை, தாள், தோகை, ஓலை, சண்டு, சருகு என்பன, தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் பல்வேறு சொற்களாகும்.

6. பூவின் நிலைகளை வரிசைப்படுத்துக.

அரும்பு – பூவின் தோற்ற நிலை
போது – பூ விரியத் தொடங்கும் நிலை
மலர் – பூவின் மலர்ந்த நிலை
வீ – மரத்திலிருந்தும் செடியிலிருந்தும் விழுந்த பூவின் நிலை
செம்மல் – வாடிய பூவின் நிலை

7. கெட்டுப்போன காய்கனி வகைகளைக் கூறுக.

சூம்பல் – நுனியில் சுருங்கிய காய்
சொத்தை – புழு, பூச்சி அரித்த காய் அல்லது கனி
அழுகல் – குளுகுளுத்து நாறிய பழம் அல்லது காய்
சொண்டு – பதராய்ப்போன மிளகாய்
சிவியல் – சுருங்கிய பழம்
தேரைக்காய் – 'தேரை' அமர்ந்ததால் கெட்ட காய்
அல்லிக்காய் – தேரை அமர்ந்ததால் கெட்ட தேங்காய்

8. தாவரங்களின் இளம்பருவச் சொற்களை எழுதுக.
   - நாற்று, கன்று, குருத்து, பிள்ளை, குட்டி, மடலி அல்லது வடலி, பைங்கூழ் ஆகியவை, தாவரங்களின் இளம்பருவச் சொற்கள் ஆகும்.

9. காய்ந்த தாவரத்தின் பகுதிகளுக்கு வழங்கும் சொற்கள் யாவை?
   - சுள்ளி, விறகு, வெங்கழி, கட்டை போன்றவை, காய்ந்த தாவரத்தின் பகுதிகளுக்கு வழங்கும் சொற்கள் ஆகும்.

10. தாவரத்தின் நுனிப்பகுதிகளைக் குறிக்கும் சொற்கள் யாவை ?
    - துளிர் அல்லது தளிர், முறி அல்லது கொழுந்து, குருத்து, கொழுந்தாடை முதலியவை, தாவரத்தின் நுனிப்பகுதிகளைக் குறிக்கும் சொற்கள் ஆகும்.

11. தாவரத்தின் பிஞ்சு வகைகளுக்கு வழங்கும் சொற்கள் யாவை ?
    - பூம்பிஞ்சு, பிஞ்சு, வடு, மூசு, கவ்வை, குரும்பை, முட்டுக் குரும்பை, இளநீர், நுழாய், கருக்கல், கச்சல் முதலியவை, தாவரத்தின் பிஞ்சு வகைகளுக்கு வழங்கும் சொற்கள் ஆகும்.

12. தாவரங்களின் குலை வகைகளைக் குறிப்பதற்கான சொற்கள் யாவை ?
    - கொத்து, குலை, தாறு, கதிர், அலகு அல்லது குரல், சீப்பு ஆகியவை, தாவரங்களின் குலை வகைகளைக் குறிப்பதற்கான சொற்கள் ஆகும்.

13. தானியங்களுக்கு வழங்கும் சொற்கள் யாவை ?
    - கூலம், பயறு, கடலை, விதை, காழ், முத்து, கொட்டை, தேங்காய், முதிரை ஆகியவை, தானியங்களுக்கு வழங்கும் சொற்கள் ஆகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**14. தமிழ்நாட்டில் விளையும் நெல்லின் வகைகளை எழுதுக.**

➤ செந்நெல், வெண்ணெல், கார்நெல், சம்பா, மட்டை, கார் என்பன, தமிழ்நாட்டில் விளையும் நெல்லின் வகைகள்.

**15. சம்பா நெல்லின் வகைகள் யாவை ?**

➤ ஆவிரம் பூச் சம்பா, ஆனைக் கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச் சம்பா, சீரகச் சம்பா முதலிய அறுபது உள்வகைகள் சம்பா நெல்லில் உள்ளன.

**16. பருப்பொருட் சொற்களும், நுண்பொருட் சொற்களும் அமைத்துக் கொள்வது யாருக்கு மட்டுமே இயலும்?**

➤ பொருளைக் கூர்ந்து நோக்கி நுண்பாகுபாடு செய்து அவற்றிற்கேற்பப் பருப்பொருட் சொற்களையும் நுண்பொருட் சொற்களையும் அமைத்துக் கொள்வது, சிறந்த மதிநுட்பமும் பண்பாடும் உடைய மக்களுக்கே இயலும்.

**17. பன்மொழிப் புலவர் க. அப்பாத்துரையார் குறித்து எழுதுக.**

➤ க. அப்பாத்துரையார், குமரி மாவட்டம் ஆரல்வாய் மொழியில் 24–06–1907இல் பிறந்தவர்.

➤ தமிழ்நாட்டு மொழியியல் வல்லுநர்களுள் ஒருவர். பன்மொழிப்புலவர் எனச் சிறப்புப் பெயர் பெற்றவர்.

➤ குமரிக்கண்டம், தென்னாட்டுப் போர்க்களங்கள் போன்ற பல்வேறு நூல்களை எழுதியுள்ளவர்.

**18. பழத்தோல் வகைகளுக்கான பெயர்களை எழுதுக.**

➤ பழங்களின் மிக மெல்லிய மேற்பகுதி தொலி; திண்ணமானது தோல்; வன்மையானது தோடு; மிக வன்மையானது ஓடு; சுரையின் ஓடு குடுக்கை; தேங்காய் நெற்றின் மேற்பகுதி மட்டை; நெல், கம்பின் மூடி உமி; வரகு, கேழ்வரகு இவற்றின் உமி கொம்மை எனப் பல்வேறு பெயர்களால் குறிப்பிடப்படுகின்றன.

**19. கார்டிலா – நூற்குறிப்பு வரைக.**

➤ 1554இல் போர்ச்சுகீசு நாட்டில் தமிழில் முதன்முதலில் மொழிபெயர்க்கப்பட்ட நூல் கார்டிலா.

➤ இது, ரோமன் வரிவடிவில் அச்சிடப்பட்ட நூல். இந்திய மொழிகளுள், மேலைநாட்டு மொழிகளில் அச்சிடப்பட்ட முதல்நூல் தமிழ்மொழி நூலே.

## சிறுவினாக்கள்

**1. "புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது" – இதுபோல் இளம் பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.** (PTA -3, May - 22)

★ தென்னம்பிள்ளை – தோப்பில் தென்னம் பிள்ளைகளை நேற்று நட்டேன்.

★ மாங்கன்று – நடப்பட்ட மாங்கொட்டையில் முளைத்த மாங்கன்று நன்கு வளர்ந்துள்ளது.

★ நெல் பைங்கூழ் – வயலில் நடவு செய்யப்பட்ட நெல்லின் பைங்கூழ் நன்றாக வளர்ந்துள்ளது.

★ கத்திரி நாற்று – சந்தையிலிருந்து கத்திரி நாற்றுகள் வாங்கி வந்து வயலில் பயிரிட்டு உள்ளேன்.

★ பனை மடலி அல்லது வடலி – வேலியின் ஓரத்தில் நடப்பட்ட பனையின் வித்திலிருந்து மடலிகள் அல்லது வடலிகள் நன்கு வளர்ந்துள்ளன.

## கூடுதல் வினாக்கள்

**2. தேவநேயப் பாவாணர் – குறிப்பு வரைக.**

| | |
|---|---|
| பிறப்பு | : 07.02.1902, கோமதி முத்துபுரம், சங்கரன் கோவில். |
| பெற்றோர் | : ஞானமுத்து தேவேந்தரனார் – பரிபூரணம் அம்மையார். |
| பணி | : பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகத்தில் தமிழாசிரியப்பணி, தமிழறிஞர், சொல்லாராய்ச்சி வல்லுநர். |
| படைப்புகள் | : இலக்கணக் கட்டுரைகள், தமிழியற் கட்டுரைகள், மொழியாராய்ச்சிக் கட்டுரைகள், மொழிநூற் கட்டுரைகள், செந்தமிழ்ச் சிறப்பு. |
| இறப்பு | : 15.01.1981, மதுரை. |

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



3. **இரா. இளங்குமரனார் – குறிப்பு எழுதுக.**

**பிறப்பு** : இரா. இளங்குமரனார்

**தமிழ்ப்பற்று** : விழிகளை இழக்க நேரிட்டாலும் தாய்த் தமிழினை இழந்துவிடக் கூடாது என்றார்.

**திரு.வி.க.வழி** : தமிழ்த்தென்றல் திரு.வி.க.போல் இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கொண்டவர்.

**சிறந்த நூல்கள்** : இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம், பாவாணர் வரலாறு, குண்டலகேசி உரை, யாப்பருங்கலம் உரை, திருக்குறள் தமிழ் மரபுரை, புறத்திரட்டு உரை, காக்கைப் பாடினிய உரை, தேவநேயம்.

**புறச் செய்திகள்** : திருவள்ளுவர் தவச்சாலை மற்றும் பாவாணர் நூலகத்தை அமைத்தவர்.

4. **எந்தெந்தத் தாவரங்களின் அடிப்பகுதிகள் என்னென்ன பெயர்களால் அழைக்கப்படுகின்றன எனப் பட்டியலிடுக.**

நெல், கேழ்வரகு போன்றவற்றின் அடிப்பகுதி – தாள்
கீரை, வாழையின் அடிப்பகுதி – தண்டு
நெட்டி, மிளகாய்ச் செடியின் அடிப்பகுதி – கோல்
குத்துச்செடி, புதர் முதலியவற்றின் அடிப்பகுதி – தூறு
கம்பு, சோளம் முதலியவற்றின் அடிப்பகுதி – தட்டு (அ) தட்டை
கரும்பின் அடிப்பகுதி – கழி
மூங்கிலின் அடிப்பகுதி – கழை
அடி புளி, வேம்பின் அடிப்பகுதி – அடி

5. **எந்தெந்தத் தாவரங்களின் இலைகள், என்னென்ன பெயர்களால் அழைக்கப்படுகின்றன ?**

புளி, வேம்பு – இலை
தென்னை, பனை – ஓலை
நெல், புல் – தாள்
காய்ந்த இலை – சருகு
சோளம், கரும்பு – தோகை

6. **தாவரங்களின் பிஞ்சு வகைகளுக்கு வழங்கப்படும் பெயர்களையும், அவை எத்தாவரப் பிஞ்சுகளுக்குப் பொருந்தும் என்பதையும் கூறுக.**

மாம்பிஞ்சு – வடு
பலாப்பிஞ்சு – மூசு
எள் பிஞ்சு – கவ்வை
தென்னை, பனைப்பிஞ்சு – குரும்பை
முற்றாத தேங்காய் – இளநீர்
இளம்பாக்கு – நுழாய்
இளநெல் – கருக்கல்
வாழைப்பிஞ்சு – கச்சல்

7. **எந்தெந்தத் தாவரங்களின் குலைகள், என்னென்ன பெயர்களால் அழைக்கப்படுகின்றன ?**

அவரை, துவரை – கொத்து
கொடி முந்திரி – குலை
வாழைக்குலை – தாறு
கேழ்வரகு, சோளம் – கதிர்
நெல், தினைக்கதிர் – அலகு (அ) குரல்
வாழைத் தாற்றின் பகுதி – சீப்பு

8. **பழங்களின் மேற்பகுதியினைக் குறிக்க, அவற்றின் தன்மைக்கேற்ப வழங்கப்படும் சொற்களை எழுதுக.**

மிக மெல்லியது – தொலி
திண்ணமானது – தோல்
வன்மையானது – தோடு
மிக வன்மையானது – ஓடு
சுரையின் ஓடு – குடுக்கை
தேங்காய் நெற்றின் மேற்பகுதி – மட்டை
நெல், கம்பு ஆகியவற்றின் மூடி – உமி
வரகு, கேழ்வரகு உமி – கொம்மை

9. **தானியங்களுக்குத் தாவரத்திற்கேற்ப வழங்கப்படும் சொற்கள் யாவை ?**

நெல், புல் தானியங்கள் – கூலம்
அவரை, உளுந்து – பயறு
வேர்க்கடலை, கொண்டைக்கடலை – கடலை
புளி, காஞ்சிரை வித்து – காழ்
வேம்பு, ஆமணக்கு வித்து – முத்து
கொட்டை – மா,பனை வித்து
தென்னை வித்து – தேங்காய்
அவரை, துவரைப் பயறுகள் – முதிரை
கத்திரி, மிளகாய் வித்து, – விதை

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**10. தாவரங்களின் பெயர்களையும் அவற்றிற்குரிய இளம் பருவத்திற்கான பெயர்களையும் எழுதுக.**

- நெல், கத்திரியின் இளநிலை – நாற்று
- மா, புளி, வாழையின் இளநிலை – கன்று
- வாழையின் இளநிலை – குருத்து
- தென்னையின் இளநிலை – பிள்ளை
- விளாவின் இளநிலை – குட்டி
- பனையின் இளநிலை – மடலி (அ) வடலி
- நெல், சோளத்தின் இளநிலை – பைங்கூழ்

**11. தமிழ்ச் சொல்வளம் குறித்துக் கால்டுவெல் குறிப்பிடும் கருத்தை எழுதுக.**

➤ தமிழிலுள்ள ஒருபொருட் பலசொல் வரிசைகள், தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும்போது, அவற்றில் இல்லாக் குறை எந்தத் தமிழறிஞர்க்கும் மிகத் தெளிவாகத் தோன்றும்.

➤ தமிழில்மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள்ளன எனத் தமிழ்ச் சொல்வளம் குறித்துக் கால்டுவெல் கூறுகிறார்.

## நெடுவினா

**1. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.** (PTA -2,3, Sep.- 21, May - 22)

அவையோருக்கு வணக்கம்,

**தமிழின் சொல்வளம் :**

தமிழ்நாட்டு மக்கள், பொதுவாக உயரிய பகுத்தறிவு உடையவர்கள். உலகின் பல்வேறு மொழிகளிலிருந்து சொற்களைக் கடன் பெற்று வளர்ந்துள்ள ஆங்கில மொழியிலும், நூலிலும், இலையைக் குறிக்க Leaf என்ற ஒரேயொரு சொல் மட்டுமே உள்ளது.

ஆனால், தமிழ்மொழியில் அதன் வன்மை, மென்மையின் அடிப்படையில் தாள், இலை, தோகை, ஓலை எனப் பாகுபாடு செய்து தமிழர் பல சொற்களை வழங்குகின்றனர்.

தமிழல்லாத பிற திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும்போது, தமிழிலுள்ளதுபோன்று ஒரு பொருள் குறித்த பல சொற்கள் பிறமொழிகளில் இல்லை என்பது புலப்படுகிறது.

தமிழில்மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் அடிச்சொற்களும் தமிழில் உள்ளன என்று ஆய்ந்து உரைத்திருக்கிறார் கால்டுவெல்.

**புதிய சொல்லாக்கத்திற்கான தேவை :**

உலகிலுள்ள மற்ற உயிரினங்களினின்றும், திருந்திய இனமாக மக்களைப் பிரித்துக் காட்டுவது மொழியாதலின், அந்த மொழியே, ஒரு நாட்டவரின் அல்லது இனத்தவரின் நாகரிகத்தை அளந்தறிவதற்கும் சிறந்த சான்றாக அமைகிறது.

பொருள்களைக் கூர்ந்து நோக்கி ஆராய்ந்து, நுண்பாகுபாட்டுச் சொற்களையும் நுண்பொருட் சொற்களையும் அமைத்துக்கொள்ள வேண்டும்.

அறிவியல் வளர்ச்சியினால் உருவான புதிய புதிய பொருள்களுக்கான கலைச்சொல் வளத்தைப் பெருக்கிப் பறை சாற்றுதல் மொழி வளர்ச்சிக்கும் மொழி வளத்திற்கும் அவசியமாகும்.

தமிழின் பெருமையும் மொழியின் சிறப்பும் குன்றாமல் இருக்கவும், தமிழுக்குச் சிறந்த எதிர்காலம் அமைய வேண்டுமென்பதற்காகவும் புதிய சொல்லாக்கம் தேவை.

பிறமொழிச் சொற்கள் அப்படியே தமிழில் கலந்தால், தமிழின் இனிமை குறையும். அத்துடன் தமிழ் வழக்குச் சொற்கள் நாளடைவில் மறைந்து, அயல்மொழிச் சொற்களே நிலைபெற்றிட வாய்ப்புகள் உருவாகும். இத்தகைய நிலை ஏற்படாதிருக்கத் தமிழில் புதிய கலைச்சொற்களை உருவாக்க வேண்டும்.

வேளாண்மை, மருத்துவம், பொறியியல், தகவல் தொடர்பியல் முதலான பலவேறு துறைகள் சார்ந்த சொற்களையும், அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்படும் கருவிகளுக்கான சொற்களையும் தமிழில் புத்தாக்கம் செய்து, நம் மொழியின் சொல்வளத்தைப் பெருக்க வேண்டும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பலவுள் தெரிக

1. **<u>'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்'</u>** நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது (Sep. - 21,22, Mar.-23)

   அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும் இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

   **விடை : ஈ) சருகும் சண்டும்**

2. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை ______. (PTA-4, May-22)

   அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

   **விடை : ஆ) மணி வகை**

## கூடுதல் வினாக்கள்

3. இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர், (PTA - 2)

   அ) தமிழழகனார் ஆ) அப்பாதுரையார்

   இ) தேவநேயப் பாவாணர் ஈ) இரா. இளங்குமரனார்

   **விடை : ஈ) இரா. இளங்குமரனார்**

4. 'மொழி ஞாயிறு' என்றழைக்கப்படுபவர் யார்? (Sep.- 22)

   அ) தமிழழகனார் ஆ) கம்பர்

   இ) தேவநேயப் பாவாணர் ஈ) வைரமுத்து

   **விடை : இ) தேவநேயப் பாவாணர்**

5. உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு : (Mar.-24)

   அ) சிங்கப்பூர் ஆ) மலேசியா இ) இந்தியா ஈ) இலங்கை

   **விடை : ஆ) மலேசியா**

6. தூறு என்பது எத்தாவரங்களின் அடிப்பகுதியைக் குறிக்கின்றது ?

   அ) நெல், கேழ்வரகு ஆ) கீரை, வாழை

   இ) கம்பு, சோளம் ஈ) குத்துச்செடி, புதர்

   **விடை : ஈ) குத்துச்செடி, புதர்**

7. தாவரத்தின் காய்ந்த கொம்பும் கவையும் அடியும் ______ என வழங்கப்படும்.

   அ) கள்ளி ஆ) விறகு இ) வெங்கழி ஈ) கட்டை

   **விடை : ஈ) கட்டை**

8. நெல், புல் முதலியவற்றின் நுனிப்பகுதியை, ______ என்பர்.

   அ) முறி அல்லது கொழுந்து ஆ) குருத்து

   இ) கொழுந்தாடை ஈ) துளிர் அல்லது தளிர்

   **விடை : ஈ) துளிர் அல்லது தளிர்**

9. **கூற்று 1** : பூவின் நிலையை அரும்பு, போது, மலர், வீ, செம்மல் என்று குறிப்பர்.

   **கூற்று 2** : செம்மல் என்பது வாடின பூவின் நிலையைக் குறிக்கும்.

   அ) கூற்று 1 சரி, 2ம் சரி ஆ) கூற்று 1 சரி, 2 தவறு

   இ) கூற்று 1 தவறு, 2 சரி ஈ) கூற்று 1 தவறு, 2ம் தவறு

   **விடை : அ) கூற்று 1 சரி, 2ம் சரி**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



10. கீழ்க்கண்டவற்றில் தாவரத்தின் அடிவகையைக் குறிக்கும் சொல் எது ?

அ) தாள் ஆ) கவை இ) தோகை ஈ) துளிர்

**விடை : அ) தாள்**

11. குருத்து என்பது

அ) கிளைப்பிரிவு ஆ) அடிவகை இ) இலைவகை ஈ) கொழுந்துவகை

**விடை : ஈ) கொழுந்துவகை**

12. கச்சல் என்பது,

அ) வாழைப்பிஞ்சு ஆ) மாம்பிஞ்சு இ) பலாப்பிஞ்சு ஈ) எள் பிஞ்சு

**விடை : அ) வாழைப்பிஞ்சு**

13. இரா. இளங்குமரனார் இமைகளை மூடியபடி எழுதுவதற்கு யாரை முன்னோடியாகக் கொண்டார்?

அ) தேவநேயப் பாவாணர் ஆ) திரு. வி. க.

இ) க. அப்பாதுரையார் ஈ) பெருஞ்சித்திரனார்

**விடை : ஆ) திரு. வி. க.**

14. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர்,

அ) தேவநேயப் பாவாணர் ஆ) உ. வே. சாமிநாதய்யர்

இ) திரு. வி. க. ஈ) இரா. பி. சேதுப்பிள்ளை

**விடை : அ) தேவநேயப் பாவாணர்**

15. ‘தமிழ்ச்சொல் வளம்’ என்னும் கட்டுரையின் ஆசிரியர்,

அ) இலக்குவனார் ஆ) இரா. பி. சேதுப்பிள்ளை

இ) மு. வரதராசனார் ஈ) தேவநேயப் பாவாணர்

**விடை : ஈ) தேவநேயப் பாவாணர்**

16. ‘திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம்’ என்னும் நூலை எழுதியவர் ______.

அ) பாவாணர் ஆ) கால்டுவெல் இ) இரா.இளங்குமரனார் ஈ) திரு. வி. க.

**விடை : ஆ) கால்டுவெல்**

17. தும்பி – இச்சொல்லின் பொருள்,

அ) தும்பிக்கை ஆ) வண்டு இ) துந்துபி ஈ) துன்பம்

**விடை : ஆ) வண்டு**

## கற்பவை கற்றபின்

1. **பின்வரும் நிலவகைகளின் பெயர்களுக்கான காரணங்களைக் கேட்டறிந்து வகுப்பறையில் பகிர்க.**

தரிசு, சிவல், கரிசல், முரம்பு, புறம்போக்கு, சுவல், அவல்

**தரிசு** : பயிர் செய்யப்படாமல் கிடக்கும் நிலம்.

**சிவல்** : சிவப்பு நிறமாக இருக்கும் நிலம்.

**கரிசல்** : கருப்பு நிறமாக இருக்கும் நிலம்.

**முரம்பு** : பருக்கைக் கல்லுள்ள மேட்டு நிலம்.

**புறம்போக்கு** : அரசின் கட்டுப்பாட்டிலுள்ள நிலம்.

**சுவல்** : மேடான பகுதியிலுள்ள நிலம்.

**அவல்** : பள்ளமான பகுதியிலுள்ள நிலம்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2. **ஒருபொருள் தரும் பலசொற்களைப் பட்டியலிடுக.**

**எ – கா :** சொல்லுதல் – பேசுதல், விளம்புதல், செப்புதல், உரைத்தல், கூறுதல், இயம்புதல், மொழிதல்.

**கிளி** – தத்தை, சுகம், கிள்ளை.

**குழந்தை** – மகவு, குழவி, சேய், பிள்ளை.

**சூரியன்** – ஞாயிறு, கதிரவன், பகலவன், வெய்யோன்.

**நெருப்பு** – தீ, அனல், கனல், சுடர்.

**சொல்** – பதம், கிளவி, மொழி.

**பெண்** – நங்கை, மங்கை, வனிதை.

**வயல்** – கழனி, தரிசு, பழனம், செய்.

**விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.** (PTA - 3)

அ) ஒரு நாட்டு வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்கள் அமைந்திருக்கும்.
நாட்டு மக்களின் அறிவொழுக்கங்கள், எதற்குத் தக்கபடி அமைந்திருக்கும்?

ஆ) சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் தமிழ்த்திரு இரா. இளங்குமரனார்.
சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் யார்?

இ) உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா. (Sep.- 21)
உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு எது?

ஈ) தமிழ்த்தென்றல் திரு. வி. க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர் தமிழ்த்திரு. இரா. இளங்குமரனார்.
தமிழ்த்தென்றல் திரு. வி. க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர் யார்?

## கவிதைப்பேழை

# 3. இரட்டுற மொழிதல்

**(சந்தக்கவிமணி தமிழழகனார்)**

### குறுவினாக்கள்

1. **தற்கால உரைநடையில் சிலேடை நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.** (Mar.-24)

★ "ஐயா பகலுணவும் இரவுணவும் எவ்வாறு இருந்தன?" என்று, பாவாணரிடம் ஒருவர் கேட்டார். "பகலுணவு, பல் உணவாகவும் இரவுணவு இரா உணவாகவும் இருந்தன" என்று, கூறினார்.

★ பகலில் கிடைத்த சிறிதளவு உணவையே அனைவரும் பகுத்துண்ண நேர்ந்ததெனவும், அனைவரும் உணவின்றி இரவைக் கழிக்க வேண்டியிருந்ததால், இரா உணவு என்பதும் பொருள்.

### கூடுதல் வினாக்கள்

2. **மூன்று வகையான சங்குகள் யாவை ?**

➤ வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் என்பன மூவகைச் சங்குகள்.

3. **தமிழர் எதனால் தனிப்பெரும் நாகரிகத்தை உடையவராக இருந்தனர் ?**

➤ தங்கள் நாட்டின் தனிப்பெரும் வளத்தினாலேயே, பண்டைத் தமிழ் மக்கள், தனிப்பெரும் நாகரிகத்தை உடையவராக இருந்தனர்.

4. **இரட்டுற மொழிதல் என்றால் என்ன ?**

➤ ஒரு சொல்லோ, சொற்றொடரோ இருபொருள்பட வருவது, இரட்டுற மொழிதல் எனப்படும். இதனைச் "சிலேடை" என்றும் கூறுவர்.

5. **தமிழ் எத்தனை சங்கங்களைக் கண்டது ? அவை யாவை ? அவற்றினை அமைத்தவர் யார் ?**

➤ தமிழ் மூன்று சங்கங்களைக் கண்டது. அவை முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் ஆகும். அவற்றினை அமைத்தவர், பாண்டிய மன்னர் ஆவர்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## சிறுவினாக்கள்

1. **தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக. (PTA -6, Mar.-23)**

| தமிழ் | கடல் |
|---|---|
| இயல், இசை, நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது. | முத்தினையும், அமிழ்தினையும் தருகிறது. |
| முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது. | வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது. |
| ஐம்பெருங் காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது. | மிகுதியான வணிகக் கப்பல்கள் செல்லும்படி இருக்கிறது. |
| சங்கப் பலகையில் அமர்ந்திருந்த சங்கப் புலவர்களால் காக்கப்பட்டது. | கடல் தன் அலையால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காக்கிறது. |

இவ்வாறு தமிழழகனார், தமிழும் கடலும் ஒன்றே என்கிறார்.

## கூடுதல் வினாக்கள்

2. **தமிழழகனார் குறிப்பிடும் தமிழ்கண்ட முச்சங்கங்கள் யாவை ? விளக்குக.**

- இன்றைய கன்னியாகுமரிக்குத் தென்பகுதியில் கடல் விரிந்து பரந்துள்ளது. முற்காலத்தில் அக்கடற்பரப்பு நிலமாய் அமைந்திருந்தது. அந்நிலப் பரப்பிற்குக் குமரிக்கண்டம் என்பது பெயர்.
- அப்பகுதியை ஆண்ட பாண்டிய மன்னர்கள், தமிழை வளர்க்க இருசங்கங்களை அமைத்தனர். அவை முதல் தமிழ்ச்சங்கம், இரண்டாம் தமிழ்ச்சங்கம் எனப்பட்டன.
- பின், குமரிக் கண்டத்தைக் கடல் கொண்டமையால், இன்றைய வடமதுரையில் பாண்டியர் மூன்றாவது தமிழ்ச்சங்கத்தை அமைத்துத் தமிழ் வளர்த்தனர். இம்முச் சங்கங்களையே தமிழழகனார், 'முச்சங்கம் கண்டதால்' என்று குறிப்பிடுகிறார்.

3. **எவ்வாறு அணை கிடந்து சங்கத்தவர் தமிழைக் காத்ததாய்த் தமிழழகனார் குறிப்பிடுகிறார் ?**

- பண்டைக் காலத்தில் புலவர்கள், தாம் இயற்றிய கவிதை நூலினைச் சங்கப் புலவர்கள்முன் அரங்கேற்றுவார்கள். அவர்கள் பாடலில் நிறை இருப்பின் சங்கப் புலவர் பாராட்டுவர்.
- குறை இருப்பதாய்க் கருதினால், சுட்டிக்காட்டித் திருத்திக் கொள்ளுமாறு வேண்டுவர்.
- சங்கத்தில், புதிதாய் அரங்கேறும் நூல்கள், குற்றம் குறைகளோடு வெளியாகாதாவாறு சங்கப் புலவர்கள் அணைபோல் தடுத்துத் தமிழைக் காத்தமையால், தமிழழகனார் "அணை கிடந்தே சங்கத்தவர் காக்க" என்கிறார்.

## பலவுள் தெரிக

1. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது

அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்

ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்

இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்

ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

**விடை : அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்**

## கூடுதல் வினாக்கள்

2. ஒரு சொல்லோ, சொற்றொடரோ இருபொருள்பட வருவது ______ அணியாகும்.

அ) வஞ்சப் புகழ்ச்சி ஆ) இயல்பு நவிற்சி இ) இரட்டுற மொழிதல் ஈ) நிரல் நிறை

**விடை : இ) இரட்டுற மொழிதல்**

3. 'சந்தக் கவிமணி' எனக் குறிப்பிடப்படுபவர்,

அ) இளவழகனார் ஆ) இளங்குமரனார் இ) தமிழழகனார் ஈ) கண்ணதாசன்

**விடை : இ) தமிழழகனார்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



4. இரட்டுற மொழிதலின் மற்றொரு பெயர் எது ?
அ) உயர்வு நவிற்சி அணி ஆ) சிலேடை அணி
இ) பிறிது மொழிதல் அணி ஈ) உவமை அணி
**விடை : ஆ) சிலேடை அணி**

5. 'முத்தமிழ் துய்ப்பதால்' எனத் தொடங்கும் பாடலின் ஆசிரியர் ______.
அ) வீரராகவர் ஆ) மீனாட்சி சுந்தரனார்
இ) காளமேகப் புலவர் ஈ) தமிழழகனார்
**விடை : ஈ) தமிழழகனார்**

6. "ஆழி" என்னும் சொல்லின் பொருள்,
அ) ஆழமான பகுதி ஆ) கிணறு இ) குளம் ஈ) கடல்
**விடை : ஈ) கடல்**

7. தமிழுக்குரிய அணிகலன்,
அ) இரட்டைக் காப்பியம் ஆ) ஐம்பெருங்காப்பியம் இ) எட்டுத்தொகை ஈ) சிலப்பதிகாரம்
**விடை : ஆ) ஐம்பெருங்காப்பியம்**

8. கடல் தன் அலையால் ______ தடுத்து நிறுத்திக் காக்கிறது.
அ) மீனை ஆ) சங்கினை இ) மண்ணை ஈ) வலையை
**விடை : ஆ) சங்கினை**

9. 'இரட்டுற மொழிதல்' என்னும் பாடலில் அணிகலன் எனச் சுட்டப்பெறும் இலக்கியங்கள்,
அ) ஐஞ்சிறு காப்பியங்கள் ஆ) ஐங்குறுநூறு
இ) ஐம்பெருங் காப்பியங்கள் ஈ) ஐந்திணை ஐம்பது
**விடை : இ) ஐம்பெருங் காப்பியங்கள்**

10. ஐம்பெருங் காப்பியங்கள் என்பவை,
அ) சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.
ஆ) சிலப்பதிகாரம், உதயணகுமாரகாவியம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி.
இ) சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, சூளாமணி.
ஈ) சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, நீலகேசி.
**விடை : அ) சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.**

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளி.** (PTA - 5)

முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் – நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு.

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்,
அ) தனிப்பாடல் திரட்டு ஆ) பழமொழி நானூறு இ) ஆசாரக் கோவை ஈ) திரிகடுகம்
**விடை : அ) தனிப்பாடல் திரட்டு**

2. பாடலில் இடம் பெற்றுள்ள பொருத்தமான அணி
அ) இரட்டுறமொழிதல் அணி ஆ) தீவக அணி
இ) வஞ்சப்புகழ்ச்சி அணி ஈ) நிரல் நிறை அணி
**விடை : அ) இரட்டுறமொழிதல் அணி**

3. தமிழுக்கு இணையாய்ப் பாடலில் பொருத்தப்படுவது,
அ) சங்கப்பலகை ஆ) கடல் இ) அணிகலன் ஈ) புலவர்கள்
**விடை : ஆ) கடல்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



4. தொழிற்பெயர் அல்லாத சொல்,

அ) துய்ப்பதால் ஆ) மேவலால் இ) அணிகலன் ஈ) கண்டதால்

**விடை : இ) அணிகலன்**

5. முச்சங்கம் கண்டதால் என்பதன் சிலேடை,

அ) மூன்று சங்கங்களும், முத்தமிழும் ஆ) மூன்று சங்கங்கள், மூன்று சங்குகள்

இ) முச்சங்கும், முத்தமிழும் ஈ) முத்தமிழும், முத்தும் சங்கும்

**விடை : ஆ) மூன்று சங்கங்கள், மூன்று சங்குகள்**

## இலக்கணக்குறிப்பு

**முத்தமிழ், முச்சங்கம்** – பண்புத்தொகைகள்

**காக்க** – வியங்கோள் வினைமுற்று

**கிடந்த** – பெயரெச்சம்

**அணைகிடந்து** – இரண்டாம் வேற்றுமைத்தொகை

**துய்ப்பதால், கண்டதால், மேவலால்** – தொழிற்பெயர்கள்

## பகுபத உறுப்பிலக்கணம்

1. **காக்க – கா + க் + க**

**கா** – பகுதி

**க்** – சந்தி

**க** – வியங்கோள் வினைமுற்று விகுதி.

2. **கிடந்த – கிட + த் (ந்) + த் + அ**

**கிட** – பகுதி

**த்** – சந்தி, **'ந்'** ஆனது விகாரம்

**த்** – இறந்தகால இடைநிலை

**அ** – பெயரெச்ச விகுதி.

## புணர்ச்சி விதிகள்

1. **முத்தமிழ் – மூன்று + தமிழ்**

"மூன்று ஆறு ஏழ் குறுகும்" என்னும் விதிப்படி, (முன்று + தமிழ்)

"ஈற்று உயிர்மெய் ஏகும்" என்னும் விதிப்படி, (முன் + தமிழ்)

"வந்ததும் ஆகும்" என்னும் விதிப்படி, (முத் + தமிழ்) (முத்தமிழ்)

2. **மெத்தவணிகலம் – மெத்த + அணிகலம்**

"இ, ஈ, ஐ வழி... ஏனை உயிர்வழி வவ்வும்" என்னும் விதிப்படி, (மெத்த + வ் + அணிகலம்)

"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" என்னும் விதிப்படி (மெத்தவணிகலம்)

## கற்பவை கற்றபின்

1. அ) காலைநேரம் ஒரு நிகழ்ச்சிக்காகத் தொடர்வண்டியில் வந்து இறங்கினார் தமிழறிஞர் கி. வா. ஜகந்நாதன். அவரை மாலையிட்டு வரவேற்றனர். அப்போது கி. வா. ஜ., "அடடே! காலையிலேயே மாலையும் வந்துவிட்டதே!" என்றார். எல்லோரும் அந்தச் சொல்லின் சிலேடைச் சிறப்பை மிகவும் சுவைத்தனர்.

ஆ) இசை விமரிசகர் சுப்புடுவின் விமரிசனங்களில் நயமான சிலேடைகள் காணப்படும். ஒருமுறை ஒரு பெரிய வித்துவானுடைய இசை நிகழ்ச்சியை விமரிசனம் செய்யும்போது அவர் குறிப்பிட்டது, "அன்று கச்சேரியில் அவருடைய காதிலும் கம்மல், குரலிலும் கம்மல்".

இ) தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதன் பல் மருத்துவத்தில் சிறப்புப் பட்டம் பெற்ற நண்பர் ஒருவரை அறிமுகம் செய்து வைத்தபோது, "இவர் பல்துறை வித்தகர்" என்று குறிப்பிட்டார்.

– இவைபோன்ற பல சிலேடைப் பேச்சுகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அவற்றைத் தொகுத்துச் சொல்நயங்களைப் பதிவு செய்து கலந்துரையாடுக.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2. **மொழியின் சிறப்புகளை உணர்த்தும் உரையாடல்களில் உங்களுக்குப் பிடித்தவற்றை வகுப்பறையில் படித்துக் காட்டுக.**

திருமுருக கிருபானந்த வாரியார் ஒரு மேடைச் சொற்பொழிவில், "அந்தக் காலத்தில் 'பழங்கள்' என்றால் விரும்பி உண்பார்கள். இப்போதெல்லாம், பழங் 'கள்' என்றால் விரும்பிச் சாப்பிடுகிறார்கள்" என்றார். பத்திரிகை நிறுவனத்தினர், ரசிகமணி டி. கே. சி. அவர்களிடம் ஒரு கட்டுரை எழுதித் தருமாறும், மாதம் பத்து ரூபாய் சம்பளம் என்றும் கூறினர். பத்திரிகை நிறுவனத்தார் ரசிகமணியிடம், "உங்களுக்கு மாதம் பத்து ரூபாய் என்பதில் சம்மதம் தானே" என்று கேட்டதற்கு,

"உங்கள் பத்திரிகையின் தரம் மிகவும் உயர்ந்தது. நீங்கள் கொடுக்கும் மாசம் பத்து எனக்கு மா சம்பத்து" என்றார் ரசிகமணி.

**லோகவாணி** : வணக்கம் கவி, என்ன செய்கிறாய் ?

**கவிதர்ஷினி** : வணக்கம் லோகா. நான் தமிழ் இலக்கிய வரலாறு படிக்கிறேன்.

**லோகவாணி** : அப்படியா! அதில் ஏதாவது சிறப்புச் செய்தி இருக்கிறதா ?

**கவிதர்ஷினி** : ஆமாம்!

**லோகவாணி** : என்ன செய்தி கவி ?

**கவிதர்ஷினி** : நம்முடைய தமிழ்ப் பெருமக்களின் சொல்நயங்கள் நம்மைப் பரவசமூட்டுகின்றன.

**லோகவாணி** : நிஜமாகவா?

**கவிதர்ஷினி** : ஆமாம் லோகா, திருமுருக கிருபானந்த வாரியார், "அந்தக் காலத்தில் 'பழங்கள்' உண்பர். இக்காலத்தவர் பழங் 'கள்' விரும்பி உண்பர்" என்று சொன்னது, சிந்தைக்கு விருந்து; ரசிக்கும்படி இருந்தது.

**லோகவாணி** : ஆமாம் கவி! ரசிகமணி டி. கே. சி. பேசியதைக்கூட என் அப்பா கூறினார். "நீங்க கொடுக்கும் மாசம் பத்து, எனக்கு மா சம்பத்து" என்றாராம்.

**கவிதர்ஷினி** : ஓ... நீயும் தமிழை ரசித்தாயா ?

**லோகவாணி** : ஆமாம், கவி!

## விரிவானம்

# 4. உரைநடையின் அணிநலன்கள்

(எழில்முதல்வன்)

### நெடுவினா

1. **ஒருபக்க அளவில் உரையாடல் எழுதுக.**

**சூழல் – வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியைப் பேசமட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல்.** (PTA -2)

**உறவினர் மகள்**

**(சீலி)** : (ஆங்கிலத் தினசரி படித்துக் கொண்டிருக்கிறார்.)

**ஜெஸிந்தா** : என்ன சீலி! தமிழ்ச் செய்தித்தாள் படிக்கின்றாயா?

**சீலி** : செய்தித்தாள்தான். ஆனால், தமிழ் இல்லை, ஆங்கிலம். நான் ஆங்கில இலக்கிய இலக்கணம் படித்திருக்கிறேன். எனக்கு ஆங்கிலத்தில் செய்யுள், உரைநடை படிப்பது எளிது.

**ஜெஸிந்தா** : ஏன்? தமிழ் படிக்கத் தெரியாதா ?

**சீலி** : தமிழ் படிக்கத் தெரியாது. ஆனால், தமிழ் நன்றாகப் பேசுவேன்; படிக்கத் தெரியாது. எனக்குத் தமிழ் நூல்கள் படிக்க விருப்பம்தான்.

**ஜெஸிந்தா** : தமிழ் மிகவும் எளிமையான மொழி. அம்மொழியைப் பேசுவது எவ்வளவு எளிமையோ, படிப்பதும் அவ்வளவு எளிமைதான். ஏன், எழுதுவதுகூட எளிமைதான்!

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**சீலி** : அப்படியா ? எனக்கு உரைநடை எழுத வராதே!

**ஜெஸிந்தா** : தமிழில் கருத்துகள் தெரிந்தால், அவற்றை எளிதில் உரைநடையாக எழுதவும் முடியும். வாக்கிய அமைப்பில் திணை, பால், எண், இடம், காலம் பொருந்தி, எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் சரியாக அமைந்தால் போதும்.

**சீலி** : தமிழில் செய்யுள், உரைநடை என்கிறார்களே! அஃது என்ன ?

**ஜெஸிந்தா** : செய்யுள் என்பது எதுகை, மோனை, இயைபு, அணி என்று பல நயங்களால் அழகுபடுத்தப்பட்டிருக்கும். சிறப்பாக கற்றவர்களுக்கே அது புரியும். உரைநடை அவ்வாறு இல்லை. உரைநடை என்பது தொல்காப்பியர் காலத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் எளிமையானது. அதான் முன்பே சொன்னேனே! பேசினால் உரையாடல், எழுதினால் உரைநடை!

**சீலி** : அப்படியா ?

**ஜெஸிந்தா** : உரைநடை என்பது, இறையனார் களவியல் உரை, இளங்கோவடிகள் உரை என வளர்ந்து வந்துள்ளது. இருபதாம் நூற்றாண்டில் உரைநடை வளர்ச்சிக்குத் திரு.வி.க., மு.வ., அண்ணா போன்றோர் காரணமாக இருந்துள்ளனர்.

**சீலி** : உரைநடை வடிவில் வரும் இலக்கியங்கள் உள்ளனவா? அவை எவை ?

**ஜெஸிந்தா** : சிறுகதை, புதினம், புராணக் கதைகள் இவையெல்லாம் உரைநடையிலேயே வளர்ந்துள்ளன. உரைநடை வளர்ந்ததால், நாம் பிறமொழி நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்துப் பாரதியின் அவாவை நிறைவேற்றி வருகிறோம்.

**சீலி** : வீரமாமுனிவர், ஜி. யு. போப் போன்ற வெளிநாட்டுத் தமிழ்ச் சான்றோர்களும் இப்பணியைச் செவ்வனே ஆற்றியுள்ளார்கள் அல்லவா ?

**ஜெஸிந்தா** : சரியாகச் சொன்னாய். கால்டுவெல் தமிழுக்கு ஆற்றிய பணிகள் ஏராளம். இவரே தமிழ்மொழியின் சிறப்பைத் தமிழருக்கு விளக்கிக் கூறித் தெளிவுபடுத்தினார் எனலாம். இதுபோலச் சான்றோர்கள் பலர்மூலம் தமிழ்மொழியில் உரைநடை வளர்ந்து வந்துள்ளது. உரைநடை வளர்ந்து வருவதால்தான் தமிழ் இலக்கியங் களைப் பற்றிப் பிறர் அறியமுடிகிறது.

**சீலி** : தமிழ்மொழியை அறியாத வெளிநாட்டவர்களே அதனைப் படித்து, நூல்கள் இயற்றும்போது, நான் கற்பது என்ன கடினமா? இன்றே எனக்குத் தமிழ் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொடு. நானும் கற்றுக்கொள்கிறேன்.

**ஜெஸிந்தா** : சரி.... வா!

## கூடுதல் பலவுள் தெரிக

1. முதல் தமிழ்க்கணினி உருவாக்கப்பட்டு, விற்பனைக்குக் கொண்டுவரப்பட்ட ஆண்டு,

அ) 1983 ஆ) 1938 இ) 1893 ஈ) 1980

**விடை : அ) 1983**

2. முதன்முதலில் உருவாக்கப்பட்ட தமிழ்க்கணினிக்குச் சூட்டப்பட்ட பெயர்,

அ) திருவள்ளுவர் ஆ) தொல்காப்பியர் இ) அகத்தியர் ஈ) கம்பர்

**விடை : அ) திருவள்ளுவர்**

3. சாகித்திய அகாதெமி விருது பெற்ற எழில்முதல்வனின் நூல்,

அ) புதிய உரைநடை ஆ) இனிக்கும் நினைவுகள்

இ) யாதுமாகி நின்றாய் ஈ) எங்கெங்கு காணினும்

**விடை : அ) புதிய உரைநடை**

4. எடுத்துக்காட்டு உவமையணியை உரைநடையில் பயன்படுத்துகையில் அதனை எப்படி அழைப்பர்?

அ) இலக்கணை ஆ) இணைஒப்பு

இ) முரண்படு மெய்ம்மை ஈ) சொல்முரண்

**விடை : ஆ) இணைஒப்பு**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



5. உணர்வுகளைத் தூண்டி எழுப்புவதில் வெற்றி பெறுவது,
அ) உவமையைவிட உருவகமே ஆ) உருவகத்தைவிட உவமையே
இ) எதுகையைவிட மோனையே ஈ) கேள்வியிலே பதில் இருப்பது
**விடை : அ) உவமையைவிட உருவகமே**

6. 'Analogy' என்பதன் தமிழ்ச்சொல் யாது ?
அ) சொல்முரண் ஆ) உச்சநிலை இ) இணைஒப்பு ஈ) இலக்கண
**விடை : இ) இணைஒப்பு**

7. 'Paradox' என்பதன் தமிழ்ச்சொல் யாது ?
அ) முரண்படு மெய்ம்மை ஆ) சொல் முரண் இ) எதிரிணை இசைவு ஈ) இணை ஒப்பு
**விடை : அ) முரண்படு மெய்ம்மை**

8. உணர்ச்சிகளைக் காட்ட ______ கொண்ட மொழிநடையே ஏற்ற கருவி.
அ) உருவகம் ஆ) எடுத்துக்காட்டு இ) உவமை ஈ) கற்பனை
**விடை : இ) உவமை**

9. 'திருவள்ளுவர்' எனப் பெயரிடப்பட்ட கணினி ______, ______ ஆகிய இரண்டு மொழிகளையும் கையாளக் கூடியதாக அமைந்தது.
அ) ஆங்கிலம் இந்தி ஆ) தமிழ் மட்டும் இ) தமிழ் ஆங்கிலம் ஈ) ஆங்கிலம் மட்டும்
**விடை : இ) தமிழ் ஆங்கிலம்**

10. உணர்ச்சிகளைக் காட்ட ______ கொண்ட மொழிநடையே ஏற்ற கருவி.
அ) உருவகம் ஆ) உரையாடல் இ) உரைநடை ஈ) உவமை
**விடை : ஈ) உவமை**

11. "முகநிலவில் வியர்வை முத்துகள் துளிர்த்தன" – இது ______.
அ) உவமை ஆ) எடுத்துக்காட்டு இ) உருவகம் ஈ) இணைஒப்பு
**விடை : இ) உருவகம்**

12. செய்யுளில் இனிய ஓசை இன்பம் விளைவிக்கும் மோனை எதுகைகளை உரைநடையில் பயன்படுத்தியவர் ______.
அ) 'தமிழ்த்தென்றல்' திரு. வி. கலியாண சுந்தரனார்
ஆ) 'குறிஞ்சிமலர்' நா. பார்த்தசாரதி
இ) 'பேரறிஞர்' அண்ணாதுரை ஈ) 'சொல்லின் செல்வர்' இரா. பி. சே.
**விடை : அ) 'தமிழ்த்தென்றல்' திரு. வி. கலியாண சுந்தரனார்**

13. படிப்பவருக்கு முரண்படுவதுபோல் இருக்கும்! உண்மையில் முரண்படாத மெய்ம்மையைச் சொல்வது ______.
அ) எதிரிணை இசைவு ஆ) சொல் முரண்
இ) முரண்படு மெய்ம்மை ஈ) உச்சநிலை
**விடை : இ) முரண்படு மெய்ம்மை**

14. சொல்லையோ கருத்தையோ அடுத்தடுத்து வைக்கும் முறையிலே உள்ள சிறப்பு ______.
அ) முரண்படு மெய்ம்மை ஆ) திரும்பத் திரும்பச் சொல்லல்
இ) உணர்ச்சிப் பெருவெள்ள உச்சநிலை ஈ) எதிரிணை இசைவு
**விடை : இ) உணர்ச்சிப் பெருவெள்ள உச்சநிலை**

## கற்பவை கற்றபின்

**1. நீங்கள் படித்தவற்றுள் நினைவில் நீங்கா இடம்பெற்ற இலக்கியத் தொடர்கள், நயங்களை எழுதுக.**

| | இலக்கியத்தொடர் | நயம் |
|---|---|---|
| i | உள்ளங்கை நெல்லிக்கனிபோல | உவமை |
| ii | கண்ணை இமை காப்பதுபோல | உவமை |
| iii | அத்தி பூத்தாற்போல | உவமை |

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



| | | |
|---|---|---|
| iv | குன்றின் மேலிட்ட விளக்குப்போல | உவமை |
| v | வாழையடி வாழையாக | சீர்மோனை |
| vi | விளையும் பயிர் முளையிலே தெரியும் | சீர் எதுகை |

**2. கொடுத்த தலைப்பில் பேசுவோம்.**

**தலைப்பு – நேரம்** **தவிர்க்க வேண்டிய சொல் – கடிகாரம்**

**குறிப்பு :** ஒரு நிமிடம் பேச வேண்டும். தமிழ்ச்சொற்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும். ஐந்து வினாடி களுக்குமேல் இடைவெளி இருத்தல் கூடாது. இதுபோன்று வேறு வேறு தலைப்புகளில் வகுப்பறையில் பேசிப் பழகுக.

**நேரம்**

வரலாற்று அடிப்படையில் நேரம் என்பதன் பொருள் தொடர்பாக இரண்டு விதமான கருத்துகள் உள்ளன. நேரம் என்பது, அண்டத்தின் அடிப்படையான கூறு. மேலும், இதில் நிகழ்வுகள் ஒரு தொடராக நடைபெறுகின்றன. நேரம் என்பது அளக்கக் கூடிய ஒன்றாகும். இஃது, ஐசக் நியூட்டன் போன்ற அறிவியல் அறிஞர்கள் கொண்டிருந்த இயற்பியல் பார்வை.

இதற்கு முரண்பாடான இன்னொரு கருத்து, நேரம் என்பது அறிவு சார்ந்த அமைப்பின் ஒரு கூறு. இந்த அமைப்பினுள்ளே மனிதர்கள், பல்வேறு நிகழ்வுகளைத் தொடராக்கம் செய்து கொள்கிறார்கள். நிகழ்வுகள் நடைபெறும் காலத்தையும், அவற்றுக்கிடையேயான இடைக்காலத்தையும் அளந்து கொள்கிறார்கள்.

பொருள்களின் இயக்கங்களை ஒப்பிடலாம். மேலும், இக்கருத்துப்படி நேரம் என்பது பாய்ந்து செல்லும் ஒன்றோ, அதனூடாக வேறு பொருட்கள் செல்வதற்கான ஊடகமோ, நிகழ்வுகளைக் கொள்ளுகின்ற ஒரு தாங்கியோ அன்று. கோட்பிரைட் லீப்னிஸ், இம்மானுவேல் கண்ட் போன்றவர்கள் இக்கருத்தைக் கொண்டிருந்தனர்.

பொதுவாக நேரம் என்பது காலத்தை அளக்கப் பயன்படும் ஓர் அளவை ஆகும். காலத்தை அளக்கப் பல வழிகள் உள்ளன.அதனை அளந்தறிவதற்குக் கால அளவியல் என்று பெயர்.

காலம் பொன் போன்றது! கடமை கண் போன்றது! போனால் திரும்ப வராது. அதனால் நேரம் கிடைக்கும்போதெல்லாம் படிக்கவும், எழுதவும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். பொன்னினும் மேலானது காலம். இழந்த பொன்னைக் கடின உழைப்பால் ஈட்டி விடலாம். கடந்த காலத்தை மீட்க முடியுமா? முடியாது. காலம் கிடைக்கும் போதெல்லாம் உழைக்க வேண்டும். நேரத்தை விரயம் செய்வது வாழ்க்கையை விரயம் செய்வது போன்றதாகும். நேரம் என்பது மிக மிக முக்கியமான ஒன்றாகும். நேரம் கிடைக்கும்போதெல்லாம் நூல்களைப் படி. வெற்றிகள் எளிதாகும்.

## கற்கண்டு

# 5. எழுத்து, சொல்

### குறுவினாக்கள்

**1. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும், பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.** **(PTA - 2, Mar.-24)**

**தனிமொழி** : வேங்கை – ஒருவகை மரம்.

**தொடர்மொழி** : வேம்+கை – 'வேகும் கை'.

**பொதுமொழி** : வேங்கை என்னும் தனிமொழி, 'வேம் + கை' எனப் பிரிந்து நின்று 'வேகும் + கை' என்றானது. ஒரு சொல் தனிமொழியாகவும் தொடர் மொழியாகவும் அமைவது, பொதுமொழியாகும்.

**2. "உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்** **(PTA - 6, Sep.-22)**
**வடுக்காண் வற்றாகும் கீழ்" – இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக.**

★ 'உடுப்பதூஉம்', 'உண்பதூஉம்' இன்னிசை அளபெடையாகும்.

★ **இலக்கணம் :** செய்யுளில் ஓசை குறையாதபோதிலும் இனிய ஓசைக்காகக் குறில் நெடிலாகி அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கூடுதல் வினாக்கள்

**3. சொல் எவ்வெவற்றை உணர்த்தி வரும் ?**

➤ இருதிணைகளையும் ஐந்துபால்களையும் குறிக்கும். மூவகை இடங்களிலும் வரும். உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வரும். வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பொருள் உணர்த்தும்.

**4. தொகைச்சொற்களைப் பிரித்தும் விரித்தும் எழுதி, தமிழ் எண்ணுருத் தருக.**

➤ முப்பாலை முழுமையாகத் தந்த தமிழின் சிறப்பினை, ஐந்திணைகளில் அழகுற விளக்குபவை சங்க இலக்கியங்கள்.

➤ முப்பால் – மூன்று + பால் – அறம், பொருள், இன்பம் – ௩

➤ ஐந்திணை – ஐந்து + திணை – குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை – ௫

**5. சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை?**

➤ சார்பெழுத்துகள் பத்து வகைப்படும். **அவை :**

- உயிர்மெய்
- ஆய்தம்
- உயிரளபெடை
- ஒற்றளபெடை
- குற்றியலுகரம்
- குற்றியலிகரம்
- ஐகாரக் குறுக்கம்
- ஔகாரக் குறுக்கம்
- ஆய்தக் குறுக்கம்
- மகரக் குறுக்கம்.

**6. உயிரளபெடை என்றால் என்ன ?**

➤ உயிரளபெடை – உயிர் + அளபு + எடை

➤ செய்யுளில், உயிரெழுத்துகளில் நெட்டெழுத்துகள் ஏழும் தமக்குரிய இரண்டு மாத்திரையிலிருந்து நீண்டு ஒலிப்பதற்கு உயிரளபெடை என்று பெயர்.

➤ அளபெடுத்தமையைக் குறிக்க, நெட்டெழுத்தின் இனமான குற்றெழுத்து பின்னால் எழுதப்பெறும்.

**7. உயிரளபெடை எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?**

➤ உயிரளபெடை மூன்று வகைப்படும்.

➤ அவை : செய்யுளிசை அளபெடை, இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை.

**8. செய்யுளிசை அளபெடை – வரையறு.**

➤ செய்யுளில் ஓசை குறையும்போது, அதனை நிறைவு செய்ய, நெட்டெழுத்துகள் ஏழும் அளபெடுத் தலைச் செய்யுளிசை அளபெடை என்கிறோம். அதனை இசைநிறை அளபெடை என்றும் கூறுவர்.

எ–கா : ஓஒதல் வேண்டும்

**9. இன்னிசை அளபெடை – விளக்குக.**

➤ செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும், இனிய ஓசைக்காகக் குறில் நெடிலாகி அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.

எ–கா : கெடுப்பதூஉம்

**10. சொல்லிசை அளபெடை – விளக்குக.**

➤ செய்யுளில் ஒரு பெயர்ச்சொல், எச்சச் சொல்லாகத் திரிந்து (வினை அடையாக மாறி) அளபெடுப்பது சொல்லிசை அளபெடை ஆகும்.

எ–கா : உரனசைஇ

**11. ஒற்றளபெடை – விளக்குக.**

➤ செய்யுளில் ஓசை குறையும்போது, அதனை நிறைவு செய்ய மெய்யெழுத்துகளான ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் ஆகிய பத்தும் (ஃ) ஆய்த எழுத்தும் அளபெடுப்பது ஒற்றளபெடை எனப்படும்.

எ–கா : எங்ங்கிறைவன்

**12. சொல் என்பது யாது ?**

➤ ஓர் எழுத்துத் தனித்தோ, பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள் தருவது சொல் எனப்படும்.

**13. மொழி என்பது எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?**

➤ மொழி என்பது மூன்று வகைப்படும். அவை : தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**14. தொழிற்பெயர் விளக்குக.**

➤ ஒரு வினை அல்லது செயலைக் குறிக்கும் பெயரானது எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் குறிப்பாகவோ, வெளிப்படையாகவோ உணர்த்தாமல் வருவது தொழிற்பெயர் எனப்படும்.

எ – கா : ஆடல்

**15. விகுதி பெற்ற தொழிற்பெயர் குறித்து விவரி.**

➤ வினை அடியுடன் (பகுதியுடன்) விகுதி சேர்வதால் உருவாகும் தொழிற்பெயர், விகுதி பெற்ற தொழிற்பெயர் ஆகும்.

எ – கா : நடத்தல் – நட + தல் நட – வினை அடிச்சொல் (பகுதி)

தல் – விகுதி.

**16. எதிர்மறைத் தொழிற்பெயர் என்பது யாது ?**

➤ தொழிற் பெயரானது, எதிர்மறைப் பொருளை உணர்த்தி வருமானால், அது எதிர்மறைத் தொழிற்பெயர் எனப்படும்.

எ – கா : நடவாமை

**17. முதனிலைத் தொழிற்பெயர் என்பதை விளக்கி எடுத்துக்காட்டும் தருக.**

➤ விகுதி பெறாமல், வினைப்பகுதியே தொழிற்பெயராக அமைவது, முதனிலைத் தொழிற்பெயராகும்.

எ – கா : உரை, அடி

➤ இவை 'உரைத்தல்', 'அடித்தல்' எனப் பொருள்படும்போது (உரை சிறப்பாக அமைந்தது. அடி அடித்தான்) பொருள் தருவதால் முதனிலைத் தொழிற்பெயர்.

**18. முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன ? எடுத்துக்காட்டுத் தருக.**

➤ விகுதி பெறாமல், முதனிலை திரிந்து வருவது முதனிலை திரிந்த தொழிற்பெயராகும்.

எ – கா : கெடுவான் கேடு நினைப்பான்.

'கெடு' என்னும் முதனிலை (பகுதி) 'கேடு' எனத் திரிந்து தொழிற்பெயராய் ஆயிற்று.

## சிறுவினா

**1. 'அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது' இவை அனைத்தையும் யாம் அறிவோம். அதுபற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும். – இக்கூற்றில் வண்ண எழுத்துகளில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.** (Mar.-24)

| வினைமுற்று | தொழிற்பெயர் | வினைமுற்று | தொழிற்பெயர் |
|---|---|---|---|
| அறிந்தது | அறிதல் | அறியாதது | அறியாமை |
| புரிந்தது | புரிதல் | புரியாதது | புரியாமை |
| தெரிந்தது | தெரிதல் | தெரியாதது | தெரியாமை |
| பிறந்தது | பிறத்தல் | பிறவாதது | பிறவாமை |

## கூடுதல் வினாக்கள்

**2. மொழியின் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

மொழியின் வகைகள் மூன்று. **அவை :** தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி என்பன.

➤ **தனிமொழி :** ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது தனிமொழி எனப்படும்.

எ–கா : கண், மரம், படி, எழுது

➤ **தொடர்மொழி :** ஒன்றுக்கு மேற்பட்ட தனிமொழிகள் தொடர்ந்து வந்து பொருள் தருவது தொடர்மொழி ஆகும்.

எ–கா : கண்ணன் வந்தான்.

➤ **பொதுமொழி :** ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும், அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தருவது பொதுமொழி ஆகும். தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமையும்.

எ–கா : எட்டு – எட்டு (தனிமொழி)–எண்ணைக் குறிக்கும்; எட்டு–எள் + து (தொடர்மொழி) – எள்ளைத் தின்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**3. சொல் என்றால் என்ன ? அவற்றின் பொது இலக்கணத்தை வரையறு.**

- ஓர் எழுத்துத் தனித்தோ, பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள் தரும் வகையில் அமைவது சொல் ஆகும். சொல் இருதிணைகளையும், ஐந்துபால்களையும் உணர்த்தும்.
- தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவகை இடங்களிலும் வரும். உலக வழக்கிலும், செய்யுள் வழக்கிலும் வரும். வெளிப்படையாகவும், குறிப்பாகவும் பொருளை உணர்த்தும்.

**4. உயிரளபெடை என்பது யாது ? அதன் வகைகளை எழுதுக.**

- செய்யுளில் ஓசை குறையும்போது, அதனை நிறைவு செய்ய மொழிக்கு முதலிலும் இடையிலும் இறுதியிலும் நிற்கிற உயிர்நெடில் எழுத்துகள் ஏழும், தம் அளவில் நீண்டு ஒலிக்கும்.
- அளபெடுத்ததைக் குறிக்க அளபெடுக்கும் நெடில் எழுத்துக்கு இனமான குறில் எழுத்து பின்னால் வரும். உயிரளபெடை மூன்று வகைப்படும்.
- **அவை :** செய்யுளிசை அளபெடை (இசைநிறை அளபெடை), இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை.

**5. வினையாலணையும் பெயர் – விளக்குக.**

- ஒரு வினைமுற்று, பெயரின் தன்மையை அடைந்து, வேற்றுமை உருபு ஏற்றும் ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடிவது, வினையாலணையும் பெயர் எனப்படும். அது தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும், மூன்று காலங்களிலும் வரும்.

  எ–கா : வந்தவர் அவர்தாம்.

**6. செய்யுளிசை அளபெடையை விளக்குக.**

- செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவு செய்ய, நெட்டெழுத்துகள் (மொழிக்கு முதலிலும், இடையிலும், இறுதியிலும்) அளபெடுத்தலைச் செய்யுளிசை அளபெடை என்பர். இதனை, இசைநிறை அளபெடை எனவும் கூறுவர்.

  எ – கா : ஓஒதல் வேண்டும் – மொழிமுதல்
  உறாஅர்க்கு உறுநோய் – மொழிஇடை
  நல்ல படாஅ பறை – மொழிஇறுதி
- மொழி முதல், இடை, இறுதி ஆகிய மூவிடங்களிலும் அளபெடுக்கும்.

**7. இன்னிசை அளபெடையை விளக்குக.**

- செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக, குறில் நெடிலாகி அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.

  எ – கா : கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
  எடுப்பதூஉம் எல்லாம் மழை.
- கெடுப்பதும், எடுப்பதும் என்ற சொற்கள் ‘கெடுப்பதூஉம்’, ‘எடுப்பதூஉம்’ என்று குறில் நெடிலாகி ஓசை இன்பத்திற்காக நீண்டு ஒலிப்பதால், இஃது இன்னிசை அளபெடையாகும்.

**8. சொல்லிசை அளபெடையைச் சான்றுடன் விளக்குக.**

- செய்யுளில் ஒரு பெயர்ச்சொல், வினை எச்சச் சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது, சொல்லிசை அளபெடை ஆகும்.

  சான்று : “உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
  வரனசைஇ இன்னும் உளேன்”
- நசை – விருப்பம் (பெயர்ச்சொல்). ‘நசை’ என்னும் சொல் ‘நசைஇ’ என அளபெடுத்து ‘விரும்பி’ என வினைஎச்சப் பொருளைத் தருகிறது. இவ்வாறு பெயர்ச்சொல், அளபெடுத்தலால் வினை அடையாக மாறியதால், இஃது சொல்லிசை அளபெடையாகும்.

**9. பொதுமொழியைச் சான்றுடன் விளக்குக.**

- ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும், அச்சொல்லே பிரிந்து நின்று தொடர்மொழியாகி வேறு பொருளையும் தந்து, தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது பொது மொழி எனப்படும்.

  சான்று : எட்டு – எண்ணைக் குறித்தது. (தனிமொழி)
  வேங்கை – மரத்தைக் குறித்தது. (தனிமொழி)

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



- இவையே எள் + து எனவும், வேம் + கை எனவும் பிரிந்து நின்று தொடர் மொழிகளாக, எள்ளைத் தின், வேகின்ற கை எனப் பொருள் தரும். இவையே, தனி, தொடர் மொழிகளுக்குப் பொதுவாய் அமைவதால், பொதுமொழியாயிற்று.

**10. விகுதி பெற்ற தொழிற்பெயர் என்றால் என்ன ? விளக்குக.**

- வினையடியுடன் (பகுதியுடன்) விகுதி சேர்வதால் உருவாகும் தொழிற்பெயர், விகுதி பெற்ற தொழிற் பெயர் ஆகும். ஒரே வினையடி பல விகுதிகளையும் ஏற்கும்.

| வினையடி | விகுதி | தொழிற் பெயர் | வினையடி | விகுதி | தொழிற் பெயர் | வினையடி | விகுதி | தொழிற் பெயர் |
|---|---|---|---|---|---|---|---|---|
| நட | தல் | நடத்தல் | வாழ் | கை | வாழ்க்கை | ஆள் | அல் | ஆளல் |

**11. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?**

| தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| வினை, பெயர்த்தன்மை பெற்று, வினையையே உணர்த்தி நிற்கும். | தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிக்கும். |
| காலம் காட்டாது. | காலம் காட்டும். |
| படர்க்கைக்கே உரியது. | மூவிடத்திற்கும் உரியது. |
| **எ–கா :** பாடுதல், படித்தல் | **எ – கா :** பாடியவள், படித்தவர் |

## பலவுள் தெரிக

1. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே **(PTA - 3, Mar.-24)**

அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல்; கேட்டவர்

**விடை : ஈ) பாடல்; கேட்டவர்**

## கூடுதல் வினாக்கள்

2. வெஃஃகுவார்க்கில்லை, உரனசைஇ – இச்சொற்களில் உள்ள அளபெடைகள் **(PTA -6)**

அ) ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை

ஆ) இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை

இ) சொல்லிசை அளபெடை, ஒற்றளபெடை ஈ) ஒற்றளபெடை, இன்னிசை அளபெடை

**விடை : அ) ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை**

3. மலர்விழி பாடினாள் – இத்தொடர் : **(May - 22)**

அ) பொதுமொழி ஆ) தனிமொழி இ) தொடர்மொழி ஈ) அடுக்குத்தொடர்

**விடை : இ) தொடர்மொழி**

4. தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது **(PTA -1)**

அ) தொழிற்பெயர் ஆ) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

இ) முதனிலைத் தொழிற்பெயர் ஈ) வினையாலணையும் பெயர்

**விடை : ஈ) வினையாலணையும் பெயர்**

5. ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும், அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தருவது ______.

அ) தனிமொழி ஆ) பகுபதம் இ) தொடர்மொழி ஈ) பொதுமொழி

**விடை : ஈ) பொதுமொழி**

6. எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் குறிப்பாகவோ, வெளிப்படையாகவோ உணர்த்தாமல் வருவது ______.

அ) வினையாலணையும் பெயர் ஆ) பொதுப்பெயர்

இ) தொழிற்பெயர் ஈ) எண்ணுப்பெயர்

**விடை : இ) தொழிற்பெயர்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



7. செய்யுளிசை அளபெடையின் வேறுபெயர்,
அ) இசைநிறை அளபெடை ஆ) சொல்லிசை அளபெடை
இ) இன்னிசை அளபெடை ஈ) ஒற்றளபெடை
விடை : அ) இசைநிறை அளபெடை

8. செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக அளபெடுத்தலை ______ என்கிறோம்.
அ) செய்யுளிசை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை
இ) சொல்லிசை அளபெடை ஈ) உயிரளபெடை
விடை : ஆ) இன்னிசை அளபெடை

9. விகுதி பெறாமல், தொழிற்பெயரின் பகுதி (முதனிலை) திரிந்து வருவது,
அ) விகுதி பெற்ற தொழிற்பெயர் ஆ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்
இ) முதனிலைத் தொழிற்பெயர் ஈ) தொழிற்பெயர்
விடை : ஆ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்

10. காட்சி என்னும் தொழிற்பெயர், ______ எனப் பிரியும்.
அ) காண்(காட்) + சி ஆ) கா + ட் + சி இ) காட் + சி ஈ) காட்டு + சி
விடை : அ) காண்(காட்) + சி

11. உயிரளபெடை, ______ வகைப்படும்.
அ) இரண்டு ஆ) ஐந்து இ) மூன்று ஈ) நான்கு
விடை : இ) மூன்று

12. ஒரு சொல் தனித்துநின்று பொருள் தருமாயின் அது ______ எனப்படும்.
அ) தொடர் மொழி ஆ) தனிமொழி இ) பொதுமொழி ஈ) இரட்டைக்கிளவி
விடை : ஆ) தனிமொழி

## கற்பவை கற்றபின்

1. தேன், நூல், பை, மலர், வா – இத்தனிமொழிகளுடன் சொற்களைச் சேர்த்துத் தொடர்மொழிகளாக்குக.
தேன் : தேன் குவளையைத் திருமாறன் வாங்கினார்.
நூல் : நூல் பல கற்றவர் ஐயம்பெருமாள்.
பை : பையை மைதிலி வாங்கி வந்தாள்.
மலர் : மலர்க் கூடையை லோகவாணி தந்தாள்.
வா : வா கடற்கரைக்கு என்று கவின் அழைத்தான்.

2. வினை அடியை விகுதிகளுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக. காண், சிரி, படி, தடு.
எ – கா : காண், காணுதல், காணல், காணாமை.

| வினையடி | தொழிற்பெயர் |
|---|---|
| சிரி | சிரிப்பு, சிரித்தல், சிரியாமை |
| படி | படிப்பு, படித்தல், படியாமை |
| தடு | தடுப்பு, தடுத்தல், தடுக்காமை |

3. தனிமொழி, தொடர்மொழி ஆகியவற்றைக் கொண்டு உரையாடலைத் தொடர்க.
அண்ணன் : எங்கே செல்கிறாய்? (தொடர்மொழி)
தம்பி : ______ (தனிமொழி)
அண்ணன் : ______ ______ வாங்குகிறாய்? (தொடர்மொழி)
தம்பி : ______ ______ (தொடர்மொழி)
அண்ணன் : ______ (தனிமொழி)
தம்பி : ______ (தொடர்மொழி)
அண்ணன் : ______
தம்பி : ______

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



விடை : அண்ணன் : எங்கே செல்கிறாய்? (தொடர்மொழி)

தம்பி : **கடைக்கு** (தனிமொழி)

அண்ணன் : **அங்கே என்ன** வாங்குகிறாய்? (தொடர்மொழி)

தம்பி : **தேங்காய் வாங்குகிறேன்.** (தொடர்மொழி)

அண்ணன் : **எதற்கு?** (தனிமொழி)

தம்பி : **கோவிலுக்குச் செல்ல வேண்டும்.** (தொடர்மொழி)

அண்ணன் : **எந்தக் கோவிலுக்கு ?** (தொடர்மொழி)

தம்பி : **குன்றத்தூர்.** (தனிமொழி)

4, **'மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலைமீது ஏறுவேன்; ஓரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன்; சுற்றும்முற்றும் பார்ப்பேன்; மனம் அமைதி எய்தும்.' இத்தொடர்களில் உள்ள வினைமுற்றுகளைத் தனியே எடுத்தெழுதித் தொழிற்பெயர்களாக மாற்றுக.**

| வினைமுற்று | தொழிற்பெயர் | வினைமுற்று | தொழிற்பெயர் |
|---|---|---|---|
| அழைக்கும் | அழைத்தல் | ஏறுவேன் | ஏறுதல் |
| அமர்வேன் | அமர்தல் | பார்ப்பேன் | பார்த்தல் |
| எய்தும் | எய்துதல் | | |

5. **கட்டு, சொட்டு, வழிபாடு, கேடு, பாடுதல் – இத்தொழிற்பெயர்களை வகைப்படுத்துக.**

**கட்டு, சொட்டு, வழிபாடு** – முதனிலைத் தொழிற்பெயர்கள்

**கேடு** – முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

**பாடுதல்** – விகுதி பெற்ற தொழிற்பெயர்

## மொழியை ஆள்வோம்

**படித்துச் சுவைக்க : பாடலில் மரம் என்னும் சொல் இடத்திற்கேற்பப் பொருள் தருவதாய் 11 இடங்களில் இடம்பெற்றுள்ளது. பொருள்களைப் பொருத்திப் படித்துச் சுவைக்க.**

"**மரமது**[1] **மரத்தில்**[2] ஏறி
**மரமதைத்**[3] தோளில் வைத்து
**மரமதி**[4] **மரத்தைக்**[5] கண்டு
**மரத்தி**[6] **னால் மரத்தைக்**[7] குத்தி
**மரமதி**[8] வழியே சென்று
வளமனைக் கேகும் போது
**மரமது**[9] கண்ட மாதர்
**மரமுடன்**[10] **மரம்**[11] எடுத்தார்"



தனிப்பாடல் திரட்டு – சுந்தரகவிராசர்

| 1 | 2 | 3 | 4, 9 | 5,7 | 6 | 8 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|
| அரசன் (அரசமரம்) | மா குதிரை (மாமரம்) | வேல் (கருவேலம்) | அரசன் | புலி (வேங்கை) | வேல் | காட்டு வழி | ஆல் ஆலமரம் | அத்தி அத்திமரம் |
| | | | | | | | ஆல் +அத்தி = ஆரத்தி | |

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## மொழிபெயர்ப்பு

1. If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart - Nelson Mandela (PTA-2, Sep. -21)

ஒரு மனிதரிடம் அவருக்குப் புரிகிற மொழியில் பேசினால், அவரது மூளையைச் சென்றடையும். ஆனால், அவருடைய தாய்மொழியில் பேசினால், அது அவரது இதயத்தைச் சென்றடையும். – நெல்சன் மண்டேலா.

2. Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going - Rita Mae Brown. (Sep. -21)

பண்பாட்டை உணர்த்துகிற பாதை வரைபடம் மொழியாகும். அதுவே அந்த மக்கள் எங்கிருந்து வந்தார்கள்; எங்குச் செல்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்தும். – ரீட்டா மே ப்ரௌன்

**சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.** (May -22)

| | |
|---|---|
| "தேணிலே ஊரிய செந்தமிழின் – சுவை<br>தேரும் சிலப்பதி காறமதை<br>ஊனிலே எம்முயிர் உல்லலவும் – நிதம்<br>ஒதி யுனர்ந்தின் புருவோமே"<br>**– கவிமணி தேசிக விநாயகம்** | "தே**னி**லே ஊ**றி**ய செந்தமிழின் – சுவை<br>தே**று**ம் சிலப்பதி கா**ர**மதை<br>ஊனிலே எம்முயிர் உ**ள்ளள**வும் – நிதம்<br>ஒதி யு**ண**ர்ந்தின் **பு**றுவோமே" |

**கீழ்க்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.** (PTA - 4)

**(குவியல், குலை, மந்தை, கட்டு)**

| சொல் | கூட்டப்பெயர் | சொல் | கூட்டப்பெயர் |
|---|---|---|---|
| கல் | குவியல் (கற்குவியல்) | புல் | கட்டு (புற்கட்டு) |
| பழம் | குலை (பழக்குலை) | ஆடு | மந்தை (ஆட்டுமந்தை) |

**வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.**

**எ – கா :**

1. **கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.**
   விடை : கலையரங்கத்தில் எனக்காகக் **காத்திருக்கிறவரை** அழைத்து வாருங்கள்.
2. **ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.**
   விடை : ஊட்டமிகு உணவு **உண்டவர்** நீண்ட வாழ்நாள் பெற்றார்.
3. **நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.**
   விடை : நேற்று என்னைச் **சந்தித்தவர்** என் நண்பர்.
4. **பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.**
   விடை : பொது அறிவு நூல்களைத் தேடிப் **படித்தவர்** போட்டித் தேர்வில் வென்றார்.

**தொடர்களில் உள்ள வண்ணச் சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை மீள எழுதுக.**

1. **உலகில்** வாழும் **மக்களில்** சிலர். **கனி**யிருக்கக் காய் **புசி**த்தலைப்போல, இன்சொல் இருக்க, வன்சொல் பேசி **இன்னற்**படுகின்றனர்.
   விடை : **புவியில்** வாழும் **மனிதர்களில்** சிலர். **பழமி**ருக்கக் காய் **தின்னலைப்**போல், இன்சொல் இருக்க வன்சொல் பேசித் **துன்பப்**படுகின்றனர்.
2. வள்ளல் குமணன் **வறுமையால்** வாடிவந்த **புலவனுக்குத்** தனது தலையைக் **கொடுத்து,** மங்காப் **புகழ்** பெற்றான்.
   விடை : வள்ளல் குமணன் **ஏழ்மையால்** வாடிவந்த **கவிஞனுக்குத்** தனது தலையை **அளித்து,** மங்காப் **பெருமை** பெற்றான்.
3. நளனும் அவனது **துணைவியும்** நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள், மழை**முகில்** கண்ட **மஞ்ஞை** போலக் **களி** கொண்டனர்.
   விடை : நளனும் அவனுடைய **மனைவியும்** நிடத நாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள், மழை **மேகம்** கண்ட **மயில்**போல **மகிழ்ச்சி** கொண்டனர்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



4. சோலையிற் பூத்த மணமலர்களில் சுரும்புகள் மொய்த்துப் பண்பாடி மதுவுண்டன. (PTA -1)

விடை : **பூந்தோட்டத்தில்** பூத்த மணமலர்களில் **வண்டுகள்** மொய்த்துப் பண்பாடித் **தேன்** உண்டன.

5. பசுபோல் சாந்தமும் புலிபோலத் தீரமும் யானை போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

விடை : **ஆவினைப்**போல் **அமைதியும் வேங்கை**போலச் **சீற்றமும் களிறுபோல்** உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

கட்டுரை எழுதுக. (PTA - 1)

குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திரு நாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலா வந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம் மிகமகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். இக்கருத்தைக் கருவாகக் கொண்டு, 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

## சான்றோர் வளர்த்த தமிழ்

### முன்னுரை :

அன்னைத் தமிழ், மூவாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்ட பழமைவாய்ந்த இலக்கிய வளம் மிக்க மொழி. அமுதத் தமிழ் மிகவும் பண்பட்ட மொழி! தனக்கே உரிய வளமான இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கும் மொழி.

### தமிழின் தொன்மை :

தமிழினத்தின் தொன்மையைக் "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றிய மூத்தகுடி" எனப் புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது. தமிழின் அழியாத் தன்மையை, "என்றுமுள தென்தமிழ்" என்பார் கம்பர்.

### ஜி. யு. போப் ஆற்றிய தமிழ்ப்பணி :

சமயப் பணியாற்றத் தமிழகம் வந்த ஜி. யு. போப் என்பார், தமிழ்மொழியால் ஈர்க்கப்பட்டு, தமிழாய் மலர்ந்து, மணம் பரப்பித் தமிழுலகில் என்றும் அழியாப்புகழ் பெற்றவர். திருக்குறளை நாற்பதாண்டுகள் மீண்டும் மீண்டும் படித்துச் சுவைத்த போப், அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 1886ஆம் ஆண்டு வெளியிட்டுத் திருக்குறளின் பெருமையை உலகறியச் செய்தார். வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்தார். ஆங்கிலமொழியை அன்னை மொழியாகக் கொண்ட போப், தமது கல்லறையில் 'இங்கே ஒரு தமிழ்மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்' என எழுதுமாறு கூறித் தம்மை ஒரு தமிழராகவே ஆக்கிக் கொண்டார்.

### வீரமாமுனிவரின் தமிழ்ப்பணி :

இத்தாலி நாட்டில் பிறந்த வீரமாமுனிவர், சமயப் பணியாற்றத் தமிழகம் வந்தவர் தமிழைக் கற்றார். 'தைரிய நாதர்' என்ற தம் பெயரை, தமிழ்மொழிப் பற்றினால் 'வீரமாமுனிவர்' என மாற்றிக் கொண்டார். இவரே, தமிழில் முதன்முதலாக அகராதி முறையை அறிமுகப்படுத்திச் சதுரகராதி என்னும் அகரமுதலியை வெளியிட்டார்.

### ஆறுமுக நாவலர் தமிழ்ப்பணி :

இலங்கை யாழ்ப்பாணம் பகுதியில் நல்லூரில் பிறந்த ஆறுமுகனாரது மொழித்திறமையையும் வாக்கு வன்மையையும் பொருள் விளக்கும் தன்மையையும் கண்ட திருவாவடுதுறை ஆதீனத்தார், இவருக்கு 'நாவலர்' என்னும் பட்டத்தை அளித்தனர். உரைநடை எழுதுவதில் வல்லவரான இவரைப் பரிதிமாற் கலைஞர் 'வசனநடை கைவந்த வல்லாளர்' எனப் பாராட்டியுள்ளார். ஆறுமுக நாவலர், சென்னையில் அச்சுக்கூடம் அமைத்துச் சிறந்த தமிழ் நூல்களைப் பதிப்பித்து, அனைவரும் தமிழைச் சுவைக்க வழிவகை செய்தார்.

### நான்காம் தமிழ்ச்சங்கம் :

பாண்டிய மன்னர்கள், கற்றறிந்த அறிவுசால் புலவர்களைத் திரட்டி முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்கள் அமைத்துத் தமிழை வளர்த்தனர் தமிழ்ப் புலவர்கள். அச்சங்கங்கள் கடற்கோளால் அழிவுபட்ட பின்னர்ப் பரிதிமாற் கலைஞர், உ. வே. சாமிநாதர், இராகவனார் முதலிய பேராசிரியர்கள் துணையுடன் பாஸ்கர சேதுபதி தலைமையில், பாண்டித்துரையார் மேற்பார்வையில் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் அமைத்துத் தமிழை வளர்த்தனர்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**உலகத்தமிழ் மாநாடு:**

உலகிலேயே ஒரு மொழிக்காக, முதன்முதலில் சிறப்பானதொரு மாநாடு நடத்திய பெருமை மிக்க நாடு மலேசியா. அதுவும் தமிழ் மொழிக்காக! இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் இன்றும் தமிழ் ஆட்சி மொழியாகத் திகழ்கிறது. அதற்குக் காரணம், அவ்விடங்களில் குடி ஏறிய தமிழர்களின் தமிழ்ப்பற்றும், தமிழை வளர்க்கும் நோக்கமுமேயாகும்.

**முடிவுரை :**

குமரிக்கண்டத்தில் தோன்றிய தமிழினம் உலகமெலாம் பரவித் தமிழ்மொழியின் புகழை நிலைநாட்டி வருவதற்குக் அடிப்படைக் காரணம், தமிழ்ச் சான்றோர்களின் தியாகமே என்றால் மிகையாகாது. அதனால்தான், "தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவர்க்கொரு குணமுண்டு" என்று பாடினார் தேசியக் கவிஞர் நாமக்கல் இராமலிங்கனார்.

## பா நயம் பாராட்டல்

**தொடைவகை :**

**மோனை** : அடிகளிலோ, சீர்களிலோ முதல் எழுத்து ஒன்றி வருவது **மோனை.**

**எதுகை** : அடிகளிலோ, சீர்களிலோ முதல் எழுத்து (மாத்திரை அளவு) ஒத்திருக்க, இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது **எதுகை.**

**இயைபு** : அடிதோறும் இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ, சொல்லோ ஒன்றி வருவது **இயைபு.**

**முரண்** : அடிகளிலோ, சீர்களிலோ இடம்பெறும் சொல்லோ பொருளோ முரண்பட்டு வருவது **முரண்.**

**அணி** : செய்யுளுக்குச் சொல்லாலும் பொருளாலும் அழகு சேர்ப்பது **அணி.**

செய்யுளில் கூற வந்த கருத்தை இயல்பாக, உள்ளது உள்ளபடி, மிகைப்படுத்தாமல் அமைத்துக் கூறுவது **இயல்பு நவிற்சி அணி.**

செய்யுளில் கூறவந்ததைச் சற்று மிகைப்படுத்தி, உயர்வுபடுத்திக் கூறுவது **உயர்வு நவிற்சி அணி.**

செய்யுளில் போல், போல, போன்ற என்னும் உவமை உருபுகள் வெளிப்படையாக அமைவது **உவமையணி.**

செய்யுளில் ஒரு சொல், ஒரே பொருளில் பலமுறை வருவது **சொற்பொருள் பின்வருநிலையணி.**

**சந்தம்** : செய்யுளை இசையுடன் பாடும்வகையில், ஓசைநயம் அமைவது **சந்தம்.**

**பாவகை** : அடிதோறும், ஆறு சீர்களைக் கொண்டது, **அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.**

ஏழு சீர்களாக அமைந்தது **எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.**

எட்டுச் சீர்களாக அமைவது **எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.**

அடிதோறும், தனிச்சொல் அமைவது **சிந்துப்பா.**

**சுவை** : பாடலில் அமைந்த கருத்தை, நாம் உள்ளத்தில் காணுமாறு காட்சிப்படுத்தி உணரச் செய்வது **சுவை.** இச்சுவைகளைத் தொல்காப்பியர்,

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப" எனக் குறிப்பிட்டுள்ளார்.

**நகை** : சிரிப்பு, புன்முறுவல் (ஏற்படச் செய்வது)

**அழுகை** : துயரம், சோகம், துன்பவலி உணர்வு

**இளிவரல்** : இழிப்பு, இகழ்வு, நிந்தை, அவமானம்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**மருட்கை** : மயக்கம், (அறிவுக் கலக்கம்)

**அச்சம்** : (தீங்கு, இழப்பு, ஆபத்து என்னும்) பய உணர்வு

**பெருமிதம்** : களிப்பு மிகுதி, நியாயமான பெருமை, தருக்கு, செம்மாப்பு (இறுமாப்பு)

**வெகுளி** : கடுங்கோபம், சினம், வெறுப்பு

**உவகை** : களிப்பு, மனத்துள் மகிழ்ச்சி

**நயம் பாராட்டுக.**

தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே!
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே!
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே!
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே!
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே!
மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே!
தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே!
தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே!

– கா. நமச்சிவாயர்

**ஆசிரியர் குறிப்பு** : அந்நியர் ஆண்ட காலத்தில் தமிழை வளர்த்தெடுக்க அரும்பாடுபட்ட 'பைந்தமிழ் ஆசான்' எனப் புகழப்படும் கா. நமச்சிவாயர் இயற்றிய பாடல்களில் இதுவும் ஒன்று. இதில் அமைந்த நயம் காண்போம்.

**மையக்கருத்து** : ஊனினும் உணர்விலும் ஒன்றிய தமிழ்மொழி, தென்னாட்டு மக்களுக்கு இரு கண்களாக விளங்குவது. அம்மொழி மேலும் மேலும் சிறப்புற்று வளரவேண்டும் என்பதே இப்பாடலின் மையக்கருத்தாகும்.

**எதுகை** : அடிகளின் முதல் சீர்தோறும் முதல்எழுத்து மாத்திரை அளவு ஒத்திருக்க இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது, அடிஎதுகைத் தொடையாகும்.

தே**னி**னும், ஊ**னி**னும், வா**னி**னும் – அடிஎதுகை

**மோனை** : அடிகளின், சீர்களில் முதலெழுத்து ஒன்றிவருவது சீர்மோனைத்தொடையாகும்.

**தே**னினும், **தெ**ன்னாடு
**ஊ**னினும், **உ**ணர்வினுக்கு
**வா**னினும், **வ**ண்டமிழ்
**தா**னனி, **த**ழைத்தினி
} சீர்மோனை

**இயைபுத்தொடை** : அடிதோறும், இறுதிச் சீர்களின் இறுதி எழுத்தோ, சொல்லோ, தொடரோ ஒன்றிவரத் தொடுப்பது, இயைபுத் தொடையாகும்.

செந்தமிழ் **மொழியே** தென்**மொழியே**
ஒண்டமிழ் **மொழியே** ஒளிர்தமிழ் **மொழியே**
வண்டமிழ் **மொழியே** வயங்குநன் **மொழியே**
தனித்தமிழ் **மொழியே** தண்டமிழ் **மொழியே**
} இயைபு

**அணி** : இப்பாடலில் 'மொழி' என்ற சொல் ஒரே பொருளில் பலமுறை வந்து **'சொற்பொருட் பின்வரு நிலையணி'** பயின்று வந்துள்ளது.

**சந்தம்** : இப்பாடலில் **எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்** பயின்று வந்து, சுவைபடப் பாடுவதற்கு ஏற்ற சந்த நயத்தையும் பெற்றுள்ளது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## மொழியோடு விளையாடு

**சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.** (Sep. -21, Mar.-23)

தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ.

**எ – கா :** பூமணி

தேன்மழை, மணிமேகலை, பொன்விலங்கு, வான்மழை, செய்விளக்கு, செய்வான், பூமழை, பொன்மணி.

**குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பதுபோன்று வினாத்தொடர்கள் அமைக்க.**

குறளின்பம், சுவைக்காத இளநீர், காப்பியச் சுவை, மனிதகுல மேன்மை, விடுமுறைநாள்.

**எ – கா :** குறளின்பத்தில் திளைக்காத தமிழன் உண்டா?

சுவைக்காத இளநீர் – சுவைக்காத இளநீர் வேண்டுமா ? (Mar.-24)

காப்பியச் சுவை – காப்பியச் சுவையை அறிந்ததுண்டா ?

மனிதகுல மேன்மை – மனிதகுல மேன்மையைப் போற்றியதுண்டா ?

விடுமுறைநாள் – இன்று விடுமுறை நாளா ? (Mar.-24)

**எண்ணுப் பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக.**

| செய்யுள் அடி | எண்ணுப்பெயர் | தமிழ் எண் |
|---|---|---|
| நாற்றிசையும் செல்லாத நாடில்லை | நான்கு | ச |
| எறும்புந்தன் கையால் எண்சாண் | எட்டு | அ |
| ஐந்துசால்பு ஊன்றிய தூண் | ஐந்து | ரு |
| நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி | நான்கு, இரண்டு | ச, உ |
| ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி | ஆயிரம் | க ० ० ० |

**அகராதியில் காண்க.**

1. **அடவி** – காடு, சோலை, தொகுதி, திரள்.
2. **அவல்** – நெல் இடியல், பள்ளம், குளம், விளைநிலம்.
3. **சுவல்** – மேடு, முதுகு, கழுத்து, தோள், பிடரி.
4. **செறு** – சிறுவயல், கோபம், பாத்தி, செய், குளம்.
5. **பழனம்** – வயல், பொய்கை, மருதநிலம், நீர்நிலச் சேறு.
6. **புறவு** – காடு, புறா, புறம்பு, முல்லைநிலம், முல்லைக்கொடி, சிறுகாடு.

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.** (PTA - 5)



**புத்தகம்**

கல்லாமையை இல்லாமை ஆக்கி
சுடர்விடும் அறிவைப் பெருக்கி
மனிதனின் நிலையை உயர்த்தி
தான் மட்டும் மாறாதிருக்கும்
அற்புதம்தான் புத்தகம்!
மாணவப் பருவத்திலே
கல்வி எனும் சாவியால்
அறிவுப் பூட்டைத் திறந்திடு.
நல்மதிப்பெண் பெற்றிட
நாளும் படித்திடு;
அறிவுக் கண்ணைத் திறந்திடு
அற்புதங்கள் நிகழ்த்திடு!

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**நிற்க அதற்குத் தக**

| இன்சொல் வழி | தீச்சொல் வழி |
|---|---|
| பிறர் மனம் மகிழும் | பிறர் மனம் வாடும் |
| அறம் வளரும் | அறம் தேயும் |
| புகழ் பெருகும் | இகழ் பெருகும் |
| நல்ல நண்பர்கள் சேருவர் | நல்ல நண்பர்கள் விலகுவர் |
| அன்பு நிறையும் | அன்பு குறையும் |

**இதில் நீங்கள் செல்லும் வழி யாது? உங்கள் நண்பருக்குக் காட்டும் வழி யாது?**

இன்சொல் பேசுவதே எமது வழியாகும். இன்சொல் பேச முடியாதபோதும், வன்சொல் பேசிடாதே என, நண்பருக்கு வழிகாட்டுவேன்.

**கலைச்சொல் அறிவோம்**

**Vowel** – உயிரெழுத்து (PTA - 1, Sep.-22)
**Monolingual** – ஒருமொழி
**Consonant** – மெய்யெழுத்து
**Conversation** – உரையாடல்
**Homograph** – ஒப்பெழுத்து (PTA - 1)
**Discussion** – கலந்துரையாடல் (Sep.-22)

1. "நாற்றிசையும் செல்லாத நாடில்லை"
"ஐந்துசால்பு ஊன்றிய தூண்" – இந்தச் செய்யுள் அடிகளில் இடம்பெற்றுள்ள எண்ணுப் பெயர்களையும் அவற்றிற்கான தமிழ் எண்களையும் தேர்க.

அ) நான்கு, ஐந்து – ௪, ௫ ஆ) மூன்று, நான்கு – ௩, ௪
இ) ஐந்து, ஏழு – ௫, எ ஈ) நான்கு, ஆறு – ௪, ௬

**விடை : அ) நான்கு, ஐந்து – ௪, ௫**

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# இயல் – 2

## உரைநடை உலகம்

# 1. கேட்கிறதா என் குரல்!

### குறுவினாக்கள்

1. 'நமக்கு உயிர் காற்று (PTA - 1)
காற்றுக்கு வரம் மரம் – மரங்களை
வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்' – இதுபோன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.

- ★ ஒரு மரம்தானே என எண்ணாதே! அதுவே ஒரு துளி வனமாகும்!
- ★ காற்றை மாசு படுத்தாதே! காலன் நமை அண்ட மாட்டான்!
- ★ தூய்மையை நேசிப்போம்! தூய காற்றைச் சுவாசிப்போம்!
- ★ மழையும் தண்ணீரும் வேண்டுமா, மரங்களை நடு!
- ★ காலனை விரட்டக் காற்றைச் சுத்தமாக வை.

### கூடுதல் வினாக்கள்

2. காற்றின் ஆற்றல் குறித்து ஐயூர் முடவனார் மற்றும் மதுரை இளநாகனார் குறிப்பிடுவது யாது? (அல்லது) காற்றின் ஆற்றல், வேகம் ஆகியவை இலக்கியங்களில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது ? (PTA - 2)

- ➤ காற்றை மிஞ்சிய வலிமை (ஆற்றல்) இல்லை என்பதைப் புறநானூற்றுப் பாடலில் ஐயூர் முடவனார், "வளி மிகின் வலி இல்லை" என்று குறிப்பிட்டுள்ளார். "கடுங்காற்று மணலைக் கொண்டு வந்து சேர்க்கிறது" என்று, காற்றின் வேகத்தைப் பற்றி மதுரை இளநாகனார் குறிப்பிட்டுள்ளார்.

3. ஹிப்பாலஸ் பருவக்காற்றுக் குறித்து எழுதுக. (PTA - 5)

- ➤ கி. பி. (பொ. ஆ) முதல் நூற்றாண்டில் ஹிப்பாலஸ் என்னும் பெயர் கொண்ட கிரேக்க மாலுமி, பருவக்காற்றின் உதவியினால் நடுக்கடல் வழியாக முசிறித் துறைமுகத்திற்கு நேரே விரைவில் பயணம் செய்யும் புதிய வழியைக் கண்டுபிடித்தார். அதுமுதல், யவனக் கப்பல்கள் விரைவாகவும் அதிகமாகவும் சேரநாட்டு முசிறித் துறைமுகத்திற்கு வந்து சென்றன.
- ➤ எனவே, அந்தப் பருவக்காற்றிற்கு யவனர்கள், அதைக் கண்டுபிடித்த ஹிப்பாலஸ் பெயரையே சூட்டினார்கள். ஹிப்பாலஸ் பருவக்காற்றின் வழியில் யவனக் கடல் வணிகம் பெருகிற்று.

4. உயிரினங்களின் முதன்மைத் தேவைகள் யாவை ?

- ➤ மூச்சுக்குக் காற்று, தாகத்திற்கு நீர், உறைவதற்கு நிலம், ஒளிக்குக் கதிரவன் போன்றவை உயிரினங்களின் முதன்மைத் தேவைகள் ஆகும்.

5. காற்றின் தன்மை யாது ?

- ➤ காற்றைக் கண்களால் காண முடியாது. மெய்யினால் உணர முடியும்.
- ➤ காற்று, உயிர்களின் உயிர் மூச்சாகும்; இசையையும் இலக்கியத்தையும் உருவாக்கும்.
- ➤ காற்றினால் மழை வரும்; பருவ மாற்றங்கள் ஏற்படும்.

6. உயிராகத் திகழும் காற்றைப் பற்றித் திருமூலர் கருத்து யாது ?

- ➤ உலக உயிர்களின் இயக்கத்தைத் தீர்மானிக்கும் காற்றைப் பற்றித் திருமூலர் தம் திருமந்திரத்தில், "மூச்சுப் பயிற்சியே உடலைப் பாதுகாத்து வாழ்நாளை நீட்டிக்கும்" என்று கூறியுள்ளார்.

7. திசைகளின் அடிப்படையில் காற்றின் வெவ்வேறு பெயர்கள் யாவை ?

- ➤ கிழக்குத் திசையிலிருந்து வீசுவது கொண்டல். மேற்கு திசையிலிருந்து வீசுவது கோடை.
- ➤ வடக்குத் திசையிலிருந்து வீசுவது வாடை. தெற்குத் திசையிலிருந்து வீசுவது தென்றல். என்று, காற்று வீசும் திசைகளின் அடிப்படையில், வெவ்வேறு பெயர்களால் வழங்கப்பெறுகின்றது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**8. மின்னாற்றல் – குறிப்பு வரைக.**

- புதுப்பிக்கக் கூடிய ஆற்றல் வளமான காற்றைப் பயன்படுத்தி, மின்னாற்றல் உருவாக்கப்படுகிறது.
- இதனால் நிலக்கரியின் தேவை குறைந்து, கனிம வளங்கள் பாதுகாக்கப்படுகின்றன. உலகக் காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா ஐந்தாம் இடமும், இந்தியாவில் தமிழகம் முதலிடமும் வகிக்கின்றன.

**9. சிறுவர் நிதியம் (UNICEF) காற்று மாசுபாடு பற்றிக் கூறியது யாது ?**

- ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம், காற்று மாசுபடுவதால் குழந்தைகளின் மூளை வளர்ச்சி குறைவதாகத் தெரிவிக்கிறது.

**10. காற்று மாசுபடுவதற்கான காரணங்களை எழுதுக.**

- குப்பைகள், நெகிழிப் பைகள் போன்றவற்றை எரிப்பதாலும், பட்டாசுகளை மிகுதியாக வெடிப்ப தாலும், தொழிற்சாலைப் புகையாலும், மக்கள் பயன்படுத்தும் பலவகை ஊர்திகள் வெளியிடும் புகையாலும் காற்று மாசுபடுகின்றது.

**11. காற்று மாசுபாட்டினால் ஏற்படும் நோய்கள் யாவை ?**

- கண் எரிச்சல், தலைவலி, தொண்டைக்கட்டு, காய்ச்சல், நுரையீரல் புற்றுநோய், இளைப்பு நோய், மூளை வளர்ச்சிக் குறைவு எனப் பலவகையான நோய்கள் காற்று மாசுபாட்டினால் ஏற்படுகின்றன.

**12. மரத்தினால் ஏற்படும் நன்மைகள் யாவை ?**

- ஒரு மணித்துளிக்கு 12முதல் 18முறை மூச்சுக்காற்றாய் மனிதர்கள் வெளிவிடும் கார்பன் டை ஆக்சைடை எடுத்துக்கொண்டு, நுரையீரலுக்குத் தேவையான உயிர்வளியை மரம் தருகிறது.

## சிறுவினாக்கள்

**1. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசைகளிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான்... முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு 'நீர்' தன்னைப் பற்றிப் பேசினால்... உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.(PTA-6, Sep.- 20)**

★ மண்ணுக்கும் விண்ணுக்கும் உறவுப் பாலம் அமைப்பவன் நான்.
★ பயிருக்கும் பல்லுயிர்க்கும் ஆகாரமாகும் ஆதாரம் நானே.
★ நானில்லா உலகம் நிலைக்குமா? உயிர்கள்தான் பிழைக்குமா?
★ என் ஓட்டம் இன்றேல் ஏரோட்டம் ஏது? தேரோட்டம் ஏது?
★ ஆற்று வெள்ளமாய் ஆர்ப்பரிப்பேன். அணையில் நிரம்பினால் அமைதியாவேன்.
★ வளைந்து நெளிந்தோடியும் ஏறிக் குதித்தும் மண்ணில் வளம் சேர்ப்பவன் நானே!
★ கடலில் இருந்தாலும் மழைப்பொழிவால் குடிக்க உதவுவேன்.
★ மலை அருவியாய் வீழ்வதும் நானே; ஆற்றில் ஊற்றாய் எழுவதும் நானே.
★ உலக உயிர்களின் தாகம் தீர்ப்பதில் நான் தாயாவேன்.
★ குளமா, குட்டையா, ஊருணியா, ஏரியா எதற்கும் உயிர்நாடி நான்தான்.
★ பாலைவனத்தில் பயணிப்போர்க்கும் உயிர் வழங்கும் அமிழ்தம் ஆவேன்.
★ சிறுசிறுதுளிகளாய் உயிர்த்துப் பெருவெள்ளமாய்ப் பெருக்கெடுப்பேன்.
★ பனித்துளியின் தோற்றம் கொண்டாலும், சில உயிர்களைச் சிலிர்க்கச் செய்வேன்.
★ மீன்களின் உறைவிடம் நானே; அவற்றின் ஆடுகளமும் நானே.
★ அருவியாய்ப் பெருகி, நானிலம் மிளிர்ந்திட மின்சாரம் தருவேன்.

## கூடுதல் வினாக்கள்

**2. காற்றின் வேறு பெயர்களையும், பருவநிலை, சூழல், வீசும் வேகம் ஆகியவற்றைப் பொறுத்து வழங்கும் பல்வேறு பெயர்களையும் கூறுக.**

- காற்று, வளி, தென்றல், புயல், சூறாவளி என்பன, காற்றின் வேறு பெயர்கள்.
- பருவநிலை சூழல், வீசும் வேகம் இவற்றைப் பொருத்துத் தென்றல்காற்று, பூங்காற்று, கடல்காற்று, பனிக்காற்று, வாடைக்காற்று, மேல்காற்று, கீழ்க்காற்று, மென்காற்று, இளந்தென்றல், புழுதிக்காற்று, ஆடிக்காற்று, கடுங்காற்று, புயல்காற்று, பேய்க்காற்று, சுழல்காற்று, சூறாவளிக்காற்று எனப் பல்வேறு பெயர்களால் காற்று குறிப்பிடப் பெற்றது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**3. காற்று, திசையினால் பெற்ற பெயர்களையும் அவற்றின் தன்மைகளையும் விளக்குக.**

வீசும் திசைகொண்டு தமிழர் காற்றுக்குச் சில பெயர்களைச் சூட்டியுள்ளனர்.

**கிழக்கு** : 'குணக்கு' என்று வழங்கும் கிழக்குத் திசையிலிருந்து காற்று வீசும்போது 'கொண்டல்' எனப்படுகிறது. இது குளிர்ச்சியையும், மழையையும் தருவதால், மழைக்காற்று எனப்படுகிறது.

**மேற்கு** : 'குடக்கு' என்று வழங்கும் மேற்கிலிருந்து காற்று வீசும்போது 'கோடை' எனப்படுகிறது. வறண்ட நிலப் பகுதியிலிருந்து அதிக வலிமையுடன் வீசுவதால், வெப்பக்காற்று எனப்படுகிறது.

**வடக்கு** : 'வாடை' என்னும் வடக்கிலிருந்து காற்று வீசும்போது 'வாடைக்காற்று' எனப்படுகிறது. மிகவும் குளிர்ச்சியான பனிப்பகுதியில் இருந்து வீசுவதால், ஊதைக்காற்று என்ற பெயரிலும் அழைக்கப்படுகிறது.

**தெற்கு** : தெற்கிலிருந்து வீசும் காற்று 'தென்றல்' எனப்படுகிறது.

- இது மரம், செடி, கொடி, ஆறு, மலை, பள்ளத்தாக்கு எனப் பல தடைகளைத் தாண்டி வருவதால், வேகம் குறைந்து, இதமான காற்றாக வீசுகிறது.

**4. பருவகாலங்களில் எங்ஙனம் மழைப்பொழிவினைத் தருவதாகக் காற்று கூறுகிறது ?**

- "பருவகாலங்களில் மேகத்தைக் கொண்டுவந்து மழையைத் தருகிறேன். கதிரவனின் வெப்பத்தால் சூடாகி, அடர்த்தி குறைந்து மேலே எழும்போது, அங்கு ஏற்படும் வெற்றிடத்தை நிரப்பிப் பருவக் காற்றாக மாறுகிறேன்.
- ஜூன்முதல் செப்டம்பர்வரை தென்மேற்குப் பருவக்காற்றாகவும், அக்டோபர்முதல் டிசம்பர்வரை வடகிழக்குப் பருவக்காற்றாகவும் வீசுகிறேன். அப்போது மழைப்பொழிவைத் தருகிறேன்.
- இந்தியாவின் முதுகெலும்பான வேளாண்மை சிறப்பதிலும் நாடு தன்னிறைவு பெறுவதிலும் பெரும் பங்கெடுக்கிறேன். இந்தியாவிற்குத் தேவையான எழுபது விழுக்காடு மழையளவினைத் தென்மேற்குப் பருவக்காற்றாகக் கொடுக்கிறேன்" எனக் காற்று கூறுகிறது.

**5. காற்று எவ்வெவ்வாறெல்லாம் ஆற்றல்களாக விளங்குகிறது ?**

- காற்றானது, உயிர்வளியாக உயிர்களைக் காக்கின்றது; தாவரங்களின் ஒளிச்சேர்க்கையில் உணவு உற்பத்திக்கு உதவுகின்றது; விதைகளைப் பல இடங்களிலும் கொண்டு சென்று தூவுகின்றது. புவியின் உயிர்ச்சங்கிலித் தொடர் அறுபடாதிருக்க உதவுகின்றது. இவை மட்டுமல்லாமல் நவீனத் தொலைத்தொடர்பின் மையமாகவும் உள்ளது.
- மின்னாற்றலை உருவாக்கும்போது காற்றைப் பயன்படுத்துவதனால், நிலக்கரியின் தேவை குறைந்து கனிமவளங்களைப் பாதுகாக்கவும் உதவுகிறது.

**6. காற்று மாசுபாட்டைத் தவிர்க்க மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளை எழுதுக.**

- காற்று மாசுபாட்டைத் தவிர்க்க மேம்படுத்தப்பட்ட குப்பை மேலாண்மையை மேற்கொள்ள வேண்டும். பொதுப் போக்குவரத்துக்கு மக்கள் முன்னுரிமை தர வேண்டும்.
- மின்னாற்றலால் இயங்கும் ஊர்திகளை மிகுதியாகப் பயன்படுத்த வேண்டும்.
- கச்சா எண்ணெய், நிலக்கரி முதலான புதைவடிவ எரி பொருள்களைத் தவிர்க்க வேண்டும்.
- வீட்டுச் சமையலுக்கு விறகுகளைப் பயன்படுத்துவதைக் கைவிட வேண்டும்.

**7. காற்று மாசுபாட்டினால் விளையும் கேடுகள் யாவை ?**

- கதிரவனிடமிருந்து வெளிவரும் புறஊதாக் கதிர்களை வளிமண்டல மேலடுக்கில் உள்ள ஓசோன் படலம் தடுக்கிறது. பூமியை ஒரு போர்வை போலச் சுற்றியிருந்து அரணாகக் காப்பது ஓசோன் படலமே. நம் வசதிக்காகப் பயன்படுத்தும் குளிர்ப்பதனப் பெட்டியிலிருந்து வெளியாகும் குளோரோ புளோரோ கார்பன், ஓசோன் படலத்தைத் துளையிடுகிறது.
- இதனால், புறஊதாக் கதிர்கள் ஓரறிவு முதல் ஆறறிவுவரை உள்ள அனைத்து உயிர்களையும் தாக்குவதால், கண்களும் தோலும் பாதிக்கப்பட்டுத் துன்பம் அடைகின்றன. காற்றில் கலக்கும் கந்தக டை ஆக்ஸைடு, நைட்ரஜன் டை ஆக்ஸைடு ஆகியவை, மழை பெய்யும் போது மழைநீரில் கரைவதால் அமிலமழை பெய்கிறது. காற்று மாசுபடுவதால் மண், நீர், கட்டடங்கள், காடுகள், நீர்வாழ் உயிரினங்கள் என அனைத்தும் துன்பத்துக்கு உள்ளாகின்றன.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பலவுள் தெரிக

1. **செய்தி 1** : ஒவ்வோர் ஆண்டும் ஜூன் – 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
**செய்தி 2** : காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.
**செய்தி 3** : காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல் கடந்து வணிகம் செய்து, அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள். (PTA - 5)
அ) செய்தி 1 மட்டும் சரி ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி
இ) செய்தி 3 மட்டும் சரி ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி
**விடை : ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி.**

2. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க. (PTA - 3)
அ) கொண்டல் – 1. மேற்கு
ஆ) கோடை – 2. தெற்கு
இ) வாடை – 3. கிழக்கு
ஈ) தென்றல் – 4. வடக்கு
அ) 1 2, 3, 4 ஆ) 3, 1, 4, 2 இ) 4, 3, 2, 1 ஈ) 3, 4, 1, 2
**விடை : ஆ) 3, 1, 4, 2**

## கூடுதல் பலவுள் தெரிக

3. 'ஒரெழுத்தில் சோலை – இரண்டெழுத்தில் வனம்'–என்ற புதிருக்கான விடையைத் தேர்க.(May - 22)
அ) காடு ஆ) நாடு இ) வீடு ஈ) தோடு
**விடை : அ) காடு**

4. கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது. வானம் இருண்டது. வாடைக் காற்று வீசியது – என்ற நயமிகு தொடருக்கு ஏற்ற தலைப்பு : (May - 22)
அ) வனத்தின் நடனம் ஆ) மிதக்கும் வாசம்
இ) மொட்டின் வருகை ஈ) காற்றின் பாடல்
**விடை : ஈ) காற்றின் பாடல்**

5. "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" – இப்பழமொழி உணர்த்தும் சரியான பொருள் (PTA - 6)
அ) காலம் வருமென்று காத்திருந்தால் செயல் கெட்டுவிடும்
ஆ) உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாகச் செய்துவிட வேண்டும்
இ) உரிய காலத்தில் காற்றைவிட வேகமாகச் செயல்பட வேண்டும்
ஈ) உரிய காலத்தை உணர்ந்து உரிய செயலைத் தேட வேண்டும்.
**விடை : ஆ) உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாகச் செய்துவிட வேண்டும்**

6. உலகம் ஐம்பூதங்களால் ஆனது என்றவர்,
அ) திருமூலர் ஆ) அகத்தியர் இ) வள்ளுவர் ஈ) தொல்காப்பியர்
**விடை : ஈ) தொல்காப்பியர்**

7. திருமந்திரத்தில் 'மூச்சுப் பயிற்சியே உடலைப் பாதுகாக்கும்' என்றவர்,
அ) திருமூலர் ஆ)தொல்காப்பியர் இ) ஔவையார் ஈ) ஐயூர்முடவனார்
**விடை : அ) திருமூலர்**

8. "வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில்
ஆயுள் பெருக்கம் உண்டாம்" எனப் பாடியவர்,
அ) தொல்காப்பியர் ஆ) திருமூலர்
இ) ஔவையார் ஈ) பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்
**விடை : இ) ஔவையார்**

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



9. பருவக்காற்றின் பயனை உலகிற்கு உணர்த்திய 'ஹிப்பாலஸ்' என்பவர் ______ மாலுமி.
அ) உரோம் ஆ) கிரேக்க இ) சீன ஈ) ஜப்பான்
**விடை : ஆ) கிரேக்க**

10. 'ஹிப்பாலஸ் பருவக்காற்று' என்ற பெயரைச் சூட்டியவர்கள்,
அ) தமிழர்கள் ஆ) யவனர்கள் இ) சீனர்கள் ஈ) அரேபியர்கள்
**விடை : ஆ) யவனர்கள்**

11. "வளி மிகின் வலி இல்லை" என்ற பாடலடி இடம்பெற்றுள்ள நூல்,
அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) ஐங்குறுநூறு ஈ) நற்றிணை
**விடை : ஆ) புறநானூறு**

12. இந்தியாவில் காற்றாலை மின் உற்பத்தியில் முதலிடத்தைப் பெற்றுள்ள மாநிலம்,
அ) தமிழகம் ஆ) ஆந்திரா இ) கர்நாடகா ஈ) கேரளா
**விடை : அ) தமிழகம்**

13. பொருந்தாத ஒன்றினைத் தேர்வு செய்க.
அ) வளி ஆ) தென்றல் இ) புயல் ஈ) கடல்
**விடை : ஈ) கடல்**

14. "வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்" என்னும் அடி இடம் பெற்றுள்ள நூல்,
அ) சிலப்பதிகாரம் ஆ) திருமந்திரம் இ) ஔவைகுறள் ஈ) புறநானூறு
**விடை : அ) சிலப்பதிகாரம்**

## கற்பவை கற்றபின்

1. **காற்று பேசியதைப்போல, நிலம் பேசுவதாக எண்ணிக்கொண்டு பேசுக.**

நிலம் பேசுகிறது....

ஏ, மனித வர்க்கமே! என்மீது நின்று கொண்டே.... என்மீது வீடு கட்டிக்கொண்டே, என்மீது வாழ்ந்து கொண்டே, எனக்கு எவ்வளவு இம்சைகள் செய்கிறாய்? நன்றி கெட்ட ஆறறிவு உயிரினமே!

நெகிழிப் பொருள்களை என்மேல் வீசி எறிந்து என்னுள் நீர் ஊர்ந்து இயங்க விடாமல் செய்து விட்டாய்! அதனால் நீரைச் சேமிக்கும் திறனை நான் இழந்துவிட்டேன். பூச்சி கொல்லிகளையும் இரசாயன உரங்களையும் என்மீது கொட்டி என் உயிர்ச்சக்தியை அழித்துவிட்டீர்கள்.

எல்லோரும் என்மீது எச்சில் துப்புவதால், அவ்வாறு துப்புகிற உங்களுக்குத்தான் நோய்கள் பரவுகின்றன. எல்லோரும் என்மீது தாறுமாறாகக் குப்பைகளைக் கொட்டுவதால் நீங்கள் வசிக்கும் சுற்றுப்புறந்தான் சீர்கெட்டுப் போகிறது. தாறுமாறாக என்னைத் துளையிட்டு எனக்குள் உள்ள நீரை உறிஞ்சுவதால், உங்களுக்குத்தான் நிலநடுக்கம் என்ற கேடு ஏற்படுகின்றது.

என்னை மாசுபடுத்தாமல், வளப்படுத்தி, இனியேனும் நலமான வாழ்வு காண முயற்சி செய்யுங்கள்!

2. **17–ஆம் நூற்றாண்டில் வெள்ளைப் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டு இன்றும் உலக விந்தையாகத் திகழும் தாஜ்மகால், இன்றளவில் மஞ்சள், பழுப்பு என நிறம் மாறிக் காட்சியளிப்பதன் காரணங்களையும் தீர்வுகளையும் கலந்துரையாடுக.**

**மாணவர்கள்** : வணங்குகிறோம் ஐயா!

**ஆசிரியர்** : வணக்கம், என் மாணவச் செல்வங்களே!

**கவிப்பிரியா** : தாஜ்மஹால், 17ஆம் நூற்றாண்டில் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டது. இந்தியாவின் எழில் மிகுந்த காட்சியாய் இன்பமளிக்கும் அந்தக் கட்டடக் கலையைக் கண்டு, உலகில் வியக்காதோர் உண்டா?

**பாஸ்கர்** : வெள்ளை வெளேரெனப் பளபளப்போடு திகழ்ந்த தாஜ்மஹாலின் அழகு, மெல்ல மெல்ல இப்போது மங்கி வருகிறது.

**கவிப்பிரியா** : வெள்ளைப் பளிங்கால் அமைக்கப்பட்ட தாஜ்மஹால், இவ்வாறு நிறம் மாறுவதற்குக் காரணம் என்ன ஐயா?

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**ஆசிரியர் :** தாஜ்மஹாலைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஆக்ரா மாநகராட்சி நிர்வாகம் குப்பைகளை எரிப்பதால் உண்டாகும் கரும்புகையும், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகையும், மாசும் பளிங்குக் கற்களால் அமைக்கப்பட்ட தாஜ்மஹாலில் படிந்து வருகிறது. இதன் காரணமாகச் சலவைக் கற்கள் வெண்மை நிறத்தில் இருந்து மஞ்சள், பழுப்பு நிறத்திற்கு மாறி வருகிறது.

**மாணவர்கள் :** ஐயா! இதற்குத் தீர்வு கிடையாதா ?

**ஆசிரியர் :** தாஜ்மஹால் அருகே குப்பைகளை எரிக்கக் கூடாது. தொழிற்சாலைகள் புகையை வெளியேற்றுவதைத் தடுக்க வேண்டும். இதைச் சட்டத்தின் மூலம்தான் கட்டுப்படுத்த முடியும். இவ்வாறு செய்வதால் புகை படியாமல், மஞ்சள் வண்ணமாகத் தாஜ்மஹால் மாறுவதைத் தடுக்கமுடியும்.

**மாணவர்கள் :** தகவலுக்கு நன்றி ஐயா!

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.** (Mar.-23)

மேற்கு என்பதற்குக் குடக்கு என்னும் பெயருமுண்டு. மேற்கிலிருந்து வீசும்போது நான் கோடை எனப்படுகிறேன். மேற்கிலிருந்து அதிக வலிமையோடு வீசுகிறேன். வறண்ட நிலப்பகுதியில் இருந்து வீசுவதால் வெப்பக் காற்றாகிறேன். வடக்கு என்பதற்கு வாடை என்னும் பெயருமுண்டு. வடக்கிலிருந்து வீசும்போது நான் வாடைக் காற்று எனப்படுகிறேன். நான் பனிப் பகுதியிலிருந்து வீசுவதால் மிகவும் குளிர்ச்சியான ஊதைக் காற்று எனவும் அழைக்கப்படுகிறேன்.

i) **மேற்கிலிருந்து வீசும் காற்று யாது?**
கோடை (வெப்பக்காற்று).

ii) **ஊதைக் காற்று என்று அழைப்பதேன்?**
பனிப்பகுதியிலிருந்து வீசுவதால்/மிகவும் குளிர்ச்சியாக வீசுவதால்.

iii) **மேற்கு என்பதன் மற்றொரு பெயர் என்ன?**
குடக்கு

iv) **வாடை என்பது எத்திசையைக் குறிக்கிறது?**
வடக்கு

v) **இப்பகுதிக்கு ஏற்ற தலைப்பினை தருக.**
காற்றின் வகைகள்.

## கவிதைப்பேழை

# 2. காற்றே வா!

(பாரதியார்)

### குறுவினாக்கள்

1. **வசன கவிதை – குறிப்பு வரைக.** (PTA-1,2, May - 22)

★ உரைநடையும் கவிதையும் இணைந்து, யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம், வசன கவிதை எனப்படும். தமிழில் பாரதியார் இதனை அறிமுகம் செய்தார்.

### கூடுதல் வினாக்கள்

2. **புதுக்கவிதை உருவாகக் காரணமான கவிதை வடிவம் யாது ? அதனை அறிமுகப்படுத்தியவர் யார்?**

➤ புதுக்கவிதை உருவாகக் காரணமான கவிதை வடிவம் வசனகவிதை ஆகும்.

➤ அதனை அறிமுகப்படுத்தியவர் பாரதியார்.

3. **காற்றிடம் பாரதியார் வேண்டுவன யாவை ?**

➤ இலைகளின்மீதும், நீரலைகளின்மீதும் உராய்ந்து, மிகுதியாக உயிர்வளியைக் கொண்டுவந்து கொடுக்க வேண்டும் என்று காற்றிடம் பாரதி வேண்டுகிறார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**4. காற்று எங்ஙனம் வீசிக்கொண்டு இருக்கவேண்டும் என்று பாரதியார் வேண்டுகிறார் ?**

➤ ஆற்றலைக் குறைத்து அவித்து விடாமல், பேய்க் காற்றுபோல் வீசி மடித்து விடாமல், மெதுவாகவும் சீராகவும் நீண்டகாலம் நின்று வீசிக்கொண்டிருக்க வேண்டும் என்று, காற்றிடம் பாரதியார் வேண்டுகிறார்.

**5. பாரதியார் காற்றிடம் பணிந்து கூறுவன யாவை ?**

➤ உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம். உன்னைப் புகழ்ந்து கூறுகிறோம்.

➤ உன்னைப் போற்றி வழிபடுகிறோம் என்பன, பாரதியார் காற்றிடம் பணிந்து கூறுவனவாகும்.

**6. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய நூல்களைக் குறிப்பிடுக.**

➤ குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, பாப்பாப் பாட்டு, புதிய ஆத்திசூடி முதலானவை, பாரதியார் எழுதிய நூல்களாகும்.

**7. காற்று எத்தகையது ?**

➤ தான் செல்லும் வழியில் உள்ள பொருள்களின் நாற்றத்தை ஏந்திச் செல்வது காற்றின் இயல்பாகும்.

➤ 'இது நல் நாற்றம்; எடுத்துச் செல்வோம்! இது தீ நாற்றம்; வேண்டா!' எனப் பாகுபடுத்திக் காற்று செயலாற்றாது.

**8. பாரதியார் காற்றுத் தேவனைப் பாடி, போற்றி, வணங்குவது பற்றி எழுதுக.**

➤ நல்ல செயல்கள் செய்தவர்களைப் பாராட்டிக் கவிபாடுவதும், புகழ்ச்சி உரை கூறுவதும், வணங்கி வழிபடுவதும் மக்கள் இயல்பு. அவ்வாறே உயிர்வளி அளித்து, உயிரை உடலோடு நிலைக்கச் செய்யும் காற்றைப் பாரதியார் போற்றிப் பாடுவதாகவும், அதன் நற்செயலைப் புகழ்ந்து கூறுவதாகவும், காற்றுத் தேவனை வாழ்த்தி வழிபடுவதாகவும் கூறுகிறார்.

**9. பாரதியாரின் பன்முகங்கள் யாவை ?**

➤ கவிஞர், கட்டுரையாளர், சிறுகதை ஆசிரியர், இதழாசிரியர், கேலிச்சித்திரங்கள் மற்றும் கருத்துப் படங்களை உருவாக்குபவர் என்பன, பாரதியாரின் பன்முகங்களாகும்.

**10. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்**

**உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்**

**உன்னை வழிபடுகின்றோம்" – என்று யார் எதனிடம் கூறுகின்றார் ?**

➤ பாரதியார், காற்றிடம் கூறுகின்றார்.

## சிறுவினாக்கள்

**1. சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்க.** (PTA-2, Mar.-23)

**சோலைக் காற்று** : ஏ. மின்விசிறியே! என்னைப்போல் இதமான குளிர்ச்சியை உன்னால் தர முடியுமா?

**மின்விசிறிக் காற்று** : நான் மெதுவாகவும் வீசுவேன்; வேகமாகவும் வீசுவேன். உன்னால் முடியுமா ?

**சோலைக் காற்று** : ஏன் ? என்னாலும் மெதுவாகவும், வேகமாகவும் வீச முடியும்! அந்தக் காற்றை என்னிடம் கடனாகப் பெற்றுதானே வீசுகிறாய்? உனக்குச் சுயம் உண்டா?

**மின்விசிறிக் காற்று** : இருக்கலாம்! ஆனாலும் என்னால் மனிதர்களுக்குத் தீங்கு ஏற்படாது.

**சோலைக் காற்று** : நானும் மனிதர்களுக்குத் தீங்கு செய்வதில்லை; எளியோர்க்கு நான் நண்பனாவேன்.

**மின்விசிறிக் காற்று** : வசதி படைத்தவர்களுக்கு நான் பல வண்ணங்களில், வடிவங்களில் கிடைக்கிறேன்.

**சோலைக் காற்று** : இயற்கையின் உருவான என்னால் மனிதர்களுக்குப் பொருட்செலவு இல்லை.

**மின்விசிறிக் காற்று** : நமக்குள் சச்சரவு வேண்டாம்! நாம் இல்லாமல் மனிதர்களால் சுகமாக வாழ முடியாது அல்லவா?

**சோலைக் காற்று** : ஆம்! நம்மால் அவர்களுக்குச் சுகமே... இருவரும் இணைந்து, மனிதர்களுக்கு மகிழ்ச்சியை வழங்குவோம்!

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கூடுதல் வினாக்கள்

**2. பாரதியாரின் எழுத்துப் பணியைக் குறித்து எழுதுக.**

- நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலாவான பாரதியார், சிறந்த கவிஞர், கட்டுரையாளர், கேலிச்சித்திரம் மற்றும் கருத்துப் படம் போன்றவற்றை உருவாக்கியவர்.
- சிறுகதை ஆசிரியர். சமுதாய ஏற்றத் தாழ்வுகளையும் பெண்ணடிமைத்தனத்தையும் தம் பாடல்களில் எதிர்த்து எழுதியவர்.
- குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகிய காவியங்களை இயற்றியவர்.
- கண்ணன் பாட்டு, பாப்பாப் பாட்டு, புதிய ஆத்திசூடி எனக் குழந்தைகளுக்கான நீதிக்கதைகளையும் பாடல்களாகத் தந்தவர்.
- இந்தியா, சுதேசமித்திரன் முதலிய இதழ்களின் ஆசிரியராகப் பணியாற்றியவர்.

**3. 'காற்றே வா!' பாடலில் காற்றைப் பாரதியார் எங்ஙனம் புகழ்ந்து போற்றிப் பாடுகிறார் ?**

- காற்றே! மகரந்தத் தூளைச் சுமந்துகொண்டு, மனத்தைக் கொள்ளை கொள்ளும் இனிய நறுமணத்துடன் இலைகள், நீர்நிலைகளின் மீதும் உராய்ந்து, மிகுதியான உயிர்வளியை எங்களுக்குக் கொண்டுவந்து கொடுக்க வேண்டும். எமது உயிரினில் இருக்கும் நெருப்பு நீடித்து நின்று, நல்ல ஒளி தருமாறு நன்றாக வீசிட வேண்டும்.
- ஆற்றலைக் குறைத்து, அதனை அணைத்து விடாதே. பேய்க்காற்றுபோலச் சுழன்று வீசி, அதனை மடித்து விடாதே. மெதுவாக, நன்கு சீராக நீண்டகாலம் நின்று வீசிக்கொண்டிருக்க வேண்டும். காற்றே! அதற்காக நாங்கள் உன்னைப் பற்றிப் புகழ்ந்து பாட்டுகள் பாடிப் போற்றி வழிபடுகிறோம் என்று, பாரதியார் பாடியுள்ளார்.

**4. மகாகவி பாரதியார் – குறிப்பு வரைக.**

- மகாகவி சுப்பிரமணிய பாரதியார், "நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா, சிந்துக்குத் தந்தை" என்று பாரதிதாசனாலும், "பாட்டுக்கொரு புலவன் பாரதியடா!" எனத் தேசிக விநாயகத்தாலும் பாராட்டப் பெற்றவர். எட்டயபுரத்தில் இளம் வயதிலேயே கவிஞராய் அறியப்பட்டவர்.
- 'பாரதி' எனப் புலவர்களால் பாராட்டப் பட்டவர். சிறந்த கட்டுரையாளர். தமிழில் முதன்முதலில் கேலிச்சித்திரம், கருத்துப்படம் போன்றவற்றை உருவாக்கிப் பத்திரிகையில் வெளியிட்டவர்.
- சிறுகதை ஆசிரியர்; இதழாளர்; சமுதாய ஏற்றத்தாழ்வுகளையும், பெண்ணடிமைத்தனத்தையும் தம் பாடல்களில் சினந்து எழுதியவர். குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலிய காவியங்களைப் படைத்தவர்; பாப்பாப் பாட்டு, புதிய ஆத்திசூடி ஆகிய பாடல்கள்வழி, குழந்தைகளுக்கான நீதிகளைத் தந்தவர். இந்தியா, சுதேசமித்திரன் முதலிய பத்திரிகைகளில் பணியாற்றியவர்.

## நெடுவினா

**1.** **மலர்ந்தும் மலராத பாதிமலர் போல**
**வளரும் விழி வண்ணமே – வந்து**
**விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக**
**விளைந்த கலை அன்னமே**
**நதியில் விளையாடி கொடியில் தலைசீவி**
**நடந்த இளந் தென்றலே – வளர்**
**பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு**
**பொலிந்த தமிழ் மன்றமே.**

**– கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரைசெய்க.**

கவியரசு கண்ணதாசன் எழுதிய ஒரு திரைப்படப் பாடல் இது. கேட்போரைப் பரவசப்படுத்துவதோடு, அவர்தம் உள்ளத்தில் நிலைத்து நின்று நடனம் புரியும் வைர வரிகளாலான இப்பாடல், கண்ணதாசனுக்குச் சொந்தமானது. வாழ்நாளின் ஒவ்வொரு நிகழ்வுக்கும் பொருந்தும்படியான ஒப்பற்ற பாடல்களைத் தமிழுக்குத் தந்தவர் கவியரசு !

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**நடந்த இளந்தென்றலே !**

இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் பாடல், தென்றல் காற்றின் வருகையை வருணிக்கும் பாடலாகும். நதியின் குளிர்ந்த நீரில் மூழ்கி விளையாடி, செடி கொடிகளின் ஊடாக நுழைந்து, ஈரப்பதம் பொருந்திய தன் தலையைக் கொடிகளில் சீவிக்கொண்டு, அழகாக அசைந்து மென்மையாக நடைபோட்டு வருகிறது தென்றல் காற்று. தன்னை அழகுபடுத்திக் கொண்டு வரும் காற்றானது, இளம் தென்றலாக வந்து இனிய இன்பம் தருகிறது. "பொதிகை மலையில் தோன்றி, மதுரை நகரை வலம் வந்து, தமிழ் மன்றம் சென்று உலவி, புதுத்தென்றலாய் உடலை வருடிச் செல்கிறாயே காற்றே...." என்று தன்னைத் தொட்டுச் சென்ற இளந்தென்றலை நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார் கவியரசு கண்ணதாசன்.

**கவிதை நயம் :**

"மலர்ந்தும் மலராத பாதிமலர்போல" என்று, மொட்டின் இதழ் விரிக்க நெகிழ்ந்த நிலையை, பாதி மலர்ந்திருக்கும் மலரின் அழகைக் கூறுகிறார். அத்துடன் இதனை வளரும் விழிகளுக்கு ஒப்புமையாக்கி இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அதிகாலைப் பொழுதை, விடிந்தும் விடியாத காலைப் பொழுது எனக் கூறி இருப்பதும் சிறப்பாகும். இப்பாடலில் உவமைநயம், சொல்நயம், பொருள்நயம், மோனை, எதுகை என அனைத்து நயங்களும் அமையக் கவியரசு கண்ணதாசன் படைத்துள்ளார்.

## பலவுள் தெரிக

1. 'உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம் (Sep.-20)
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்' – பாரதியின் இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள நயங்கள் யாவை?
அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை
**விடை : ஆ) மோனை, எதுகை.**

## கூடுதல் வினாக்கள்

2. பாரதியார், காற்றை 'மயலுறுத்து' அழைப்பதைக் குறிக்கும் சொற்றொடர் ______. (PTA - 4)
அ) மணம் வீசும் காற்றாய் நீ வா
ஆ) மனத்தை மயங்கச் செய்யும் மணத்தோடு நீ வா
இ) மயிலாடும் காற்றாய் நீ வா ஈ) மகரந்தம் சுமந்து கொண்டு நீ வா
**விடை : ஆ) மனத்தை மயங்கச் செய்யும் மணத்தோடு நீ வா**
3. பாரதியாரின் 'காற்றே வா!' என்ற பாடலின் வடிவம்,
அ) மரபுக்கவிதை ஆ) வசன கவிதை இ) சந்தக் கவிதை ஈ) ஹைக்கூ கவிதை
**விடை : ஆ) வசன கவிதை**
4. நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா, சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்பட்டவர்,
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கவிமணி ஈ) நாமக்கல் கவிஞர்
**விடை : அ) பாரதியார்**
5. தமிழில் வசனகவிதையை அறிமுகப்படுத்தியவர்,
அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆ) ந. பிச்சமூர்த்தி
இ) பாரதிதாசன் ஈ) பாரதியார்
**விடை : ஈ) பாரதியார்**
6. யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம்,
அ) மரபுக்கவிதை ஆ) வசனகவிதை இ) சந்தக் கவிதை ஈ) எதுவுமில்லை
**விடை : ஆ) வசனகவிதை**
7. கேலிச்சித்திரம், கருத்துப்படம் போன்றவற்றை உருவாக்கியவர்,
அ) சுரதா ஆ) பாரதியார் இ) வால்ட்டிஸ்னி ஈ) பாரதிதாசன்
**விடை : ஆ) பாரதியார்**
8. உரைநடையும் கவிதையும் இணைந்து, யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம்,
அ) வசனகவிதை ஆ) புதுக்கவிதை இ) மரபுக்கவிதை ஈ) ஹைக்கூ
**விடை : அ) வசனகவிதை**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக. (Sep.-22)

"காற்றே வா"
மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு, மனத்தை
மயலுறுத்து கின்ற இனிய வாசனையுடன்வா
இலைகளின் மீதும், நீரலைகளின் மீதும் உராய்ந்து, மிகுந்த
ப்ராண – ரஸத்தை எங்களுக்குக் கொண்டு கொடு"

1. 'மயலுறுத்து' என்பதன் பொருள் :

அ) விளங்கச் செய் ஆ) மயங்கச் செய் இ) அடங்கச் செய் ஈ) சீராக

**விடை : ஆ) மயங்கச் செய்**

2. ப்ராண ரஸம் – பொருள் தருக.

அ) உயிர் வளி ஆ) கார்பன் – டை – ஆக்ஸைடு
இ) ஹைட்ரோ கார்பன் ஈ) கந்தக – டை – ஆக்ஸைடு

**விடை : அ) உயிர் வளி**

3. 'மிகுந்த' – இலக்கணக் குறிப்பு தருக.

அ) வினையெச்சம் ஆ) முற்றெச்சம் இ) பெயரெச்சம் ஈ) வினைத்தொகை

**விடை : இ) பெயரெச்சம்**

4. நீரலைகளின் – பிரித்தெழுதுக.

அ) நீர் + அலைகளின் ஆ) நீரின்+அலைகளின் இ) நீரலை + களின் ஈ) நீர + அலைகளின்

**விடை : அ) நீர் + அலைகளின்**

## இலக்கணக்குறிப்பு

**உயிர்நெருப்பு** – உருவகம்
**நல்லொளி, நெடுங்காலம், மூதூர், நன்மொழி, கொடுங்கோல்** – பண்புத்தொகைகள்
**பாடுகிறோம், கூறுகிறோம், கேட்டனம்** – தன்மைப் பன்மை வினைமுற்றுகள்
**சுமந்து, வீசி, பருகி** – வினையெச்சங்கள்
**மிகுந்த, பொழிந்த, பொறித்த** – பெயரெச்சங்கள்
**நல்ல** – குறிப்புப் பெயரெச்சம்

## பகுபத உறுப்பிலக்கணம்

1. **உராய்ந்து – உராய் + த் (ந்) + த் + உ**

**உராய்** – பகுதி
**த்** – சந்தி, **'ந்'** ஆனது விகாரம்
**த்** – இறந்தகால இடைநிலை
**உ** – வினையெச்ச விகுதி.

2. **கூறுகிறோம் – கூறு + கிறு + ஓம்**

**கூறு** – பகுதி
**கிறு** – நிகழ்கால இடைநிலை
**ஓம்** – தன்மைப்பன்மை வினைமுற்று விகுதி.

3. **பாடுகிறோம் – பாடு + கிறு + ஓம்**

**பாடு** – பகுதி
**கிறு** – நிகழ்கால இடைநிலை
**ஓம்** – தன்மைப்பன்மை வினைமுற்று விகுதி.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



4. வழிபடுகின்றோம் – வழிபடு + கின்று + ஓம்

**வழிபடு** – பகுதி

**கின்று** – நிகழ்கால இடைநிலை

**ஓம்** – தன்மைப்பன்மை வினைமுற்று விகுதி.

5. கொண்டு – கொள் (ண்) + ட் + உ

**கொள்** – பகுதி, '**ள்**', '**ண்**' ஆனது விகாரம்;

**ட்** – இறந்தகால இடைநிலை;

**உ** – வினையெச்ச விகுதி.

### கற்பவை கற்றபின்

1. இவ்வசன கவிதையில் இடம்பெற்றுள்ள வேண்டுகோள் சொற்களும் கட்டளைச் சொற்களும் (வாசனை யுடன் வா; அவித்து விடாதே...) கவிதையின் உட்பொருளை வெளிப்படுத்தத் துணைநிற்பது குறித்துப் பேசுக.

இலக்கியப் படைப்புகளை மதிப்பிடுவதும், அதனை ஆய்வுமூலமாக அணுகுவதும் ஒரு கலை. இக்கலையின்மூலமே ஒரு மொழியில் மிகச்சிறந்த படைப்புகள், பெயரும் புகழும் பெறும்.

**வாசனையுடன் வா :**

"காற்றே வா

மகரந்தத் தூளைச் சுமந்துகொண்டு மனத்தை

மயலுறுத்து கின்ற இனிய வாசனையுடன் வா."

மேற்கண்ட கவிதை வரிகளில் அன்றாட வாழ்க்கையில் உருவாகும் கருத்தைக் காற்றுமூலம் அறிவியலோடு சேர்த்து மிக அழகாகக் காட்சிப்படுத்தியிருக்கிறார் பாரதியார். மகரந்தத் தூள், காற்றுமூலம் இடம்விட்டு இடம் மாறுகிறது.

**அவித்து விடாதே :**

"சக்தி குறைந்துபோய் அதனை அவித்துவிடாதே!"

காற்றே நீ வேகமாக வீசி வாசனையைக் கொடு. சக்தி குறைந்து பயனில்லாமல் போகாதே!" என அருமையாகக் கூறி இருக்கிறார் கவிஞர்.

ஒரு கவிதைக்கு அழகூட்டுவதும், கவிதையின் உட்பொருளை வெளிப்படுத்துவதும் கட்டளைச் சொற்கள் தாம். கட்டளைச் சொற்கள் இல்லையென்றால், கவிதைக்கு உயிர்ப்பு இருக்காது. எனவே, இந்தக் கவிதை வரிகளில் கட்டளைச் சொற்கள் அழகாகக் கையாளப்பட்டுள்ளன.

# கவிதைப்பேழை

# 3. முல்லைப்பாட்டு

(நப்பூதனார்)

### குறுவினாக்கள்

1. பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும்போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக. (PTA - 4)

- "தம்பி அழாதேடா! நீ கெட்டிக்காரன் இல்லையா? நீ அழலாமா?
- நீ சிரித்தால் அழகாக இருக்கிறது தம்பி! எங்கே சிரி... சிரி...
- அப்பாவும் அம்மாவும் உனக்குப் பிடித்த மிட்டாய் வாங்கி வருகிறார்களாம்.
- அழாதே என் தங்கம் இல்லே!" என்று, ஆறுதல் மொழிகளைக் கூறி அமைதிப்படுத்த முயல்வேன்.

2. மாஅல் – பொருளும் இலக்கணக் குறிப்பும் தருக.

- மாஅல் என்றால் திருமால் என்பது பொருள்.
- இலக்கணக்குறிப்பு – செய்யுளிசை அளபெடை
- மா அல் என்றால் பேருருவம் என்பது பொருள்.
- இலக்கணக்குறிப்பு – உரிச்சொற்றொடர்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கூடுதல் வினாக்கள்

**3. முல்லைப்பாட்டு – நூற்குறிப்பு வரைக.**

- பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று முல்லைப்பாட்டு; 103 அடிகளை வரையறையாகக் கொண்டது.
- ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது. முல்லை நிலத்தைப் பற்றிப் பாடப்பட்டது.
- பத்துப்பாட்டில் மிகக்குறைந்த அடிகளைக் கொண்ட நூல்.
- இதனைப் பாடியவர், காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் மகனார் நப்பூதனார்.

**4. நப்பூதனார் – குறிப்பு வரைக.**

- இவர், முல்லைப் பாட்டைப் படைத்தவர்.
- இவர், காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் மகனாவார்.

**5. 'விரிச்சி கேட்டல்' என்றால் என்ன ?**

- மேற்கொண்ட செயல் நடக்குமோ, நடக்காதோ என ஐயுறுவோர், மக்கள் நடமாட்டம் குறைவான ஊர்ப் பக்கத்திற்குப் போய்த் தெய்வத்தைத் தொழுது நிற்பர்.
- அப்போது, அயலார் பேசும் சொல்லைக் கூர்ந்து கேட்பர். அவர்கள் நல்ல சொல்லைக் கூறினால், தம் செயல் நன்மையில் முடியும் என்றும் தீய மொழியைக் கூறினால், தம் செயல் தீயதாய் முடியும் என்றும் எண்ணுவர். இதனையே 'விரிச்சி கேட்டல்' என்பர்.

**6. இளங்கன்றின் வருத்தத்தைப் போக்க இடைமகள் கூறியது யாது ?**

- இளங்கன்றின் வருத்தத்தைப் போக்க, "வளைந்த கத்தியை உடைய கம்பைக் கொண்ட எம் இடையர், புல்லை மேய்ந்த உன் தாய்மாரை இப்போது ஓட்டிக்கொண்டு வந்துவிடுவர், வருந்தாதே" என்று இடைமகள் இளங்கன்றிடம் கூறினாள்.

**7. தலைவியை முதுபெண்டிர் எவ்வாறு ஆற்றுப்படுத்தினர் ?**

- "தலைவியே! பகைவரை வென்று நின் தலைவன் திரைப்பொருளோடு வருவான்.
- மனத்தடுமாற்றம் கொள்ளாதே" என்று, தலைவியை முதுபெண்டிர் ஆற்றுப்படுத்தினர்.

**8. மழைப்பொழிவு குறித்து முல்லைப்பாட்டில் கூறப்பட்டுள்ள செய்தி யாது ?**

- "மேகமானது, ஒலிக்கும் கடலின் குளிர்நீரைப் பருகிப் பெருந்தோற்றம் கொண்டது. நீருண்ட மேகமானது வலமாய் எழுந்தது; மலையைச் சூழ்ந்தது. விரைந்த வேகத்துடன் பெரு மழையைப் பொழிந்தது" என்பதே, முல்லைப் பாட்டில் மழைப்பொழிவு குறித்துக் கூறப்பட்டுள்ள செய்தியாகும்.

**9. முல்லைப்பாட்டில் இடம்பெற்றுள்ள கருப்பொருள்களைக் கூறுக.**

- நீர் – குறுஞ்சுனை நீர், காட்டாற்று நீர்.
- மரம் – கொன்றை, காயா, குருந்தம்.
- பூ – முல்லை, பிடவம், தோன்றி.

**10. 'நிமிர்ந்த மாஅல் போல' – உவமையை விளக்குக.**

- உலகை வளைத்துப் பெருமழை பொழியும் கார்மேகமானது, குறுகிய வடிவம் கொண்ட திருமால், மாவலி மன்னன் நீர் வார்த்துத் தந்தபொழுது, மண்ணுக்கும் விண்ணுக்குமாகப் பேருருவம் எடுத்து உயர்ந்து நிற்பது போன்றுள்ளது என்று, நப்பூதனார் கூறுகிறார்.

**11. அகப்பொருளாவது யாது ?**

- ஒத்த அன்புள்ள தலைவனும் தலைவியும், தம் உள்ளத்தால் துய்க்கும் இன்பமே அகப்பொருள் எனப்படும். அஃது எத்தகையதென்று மற்றவர்க்குச் சொல்ல இயலாததாய் அகத்தால் அனுபவிக்கப் படுதலின், 'அகப்பொருள்' எனப்பட்டது. அகம் – உள்.

**12. முல்லைப்பாட்டு ஆசிரியர் பற்றி எழுதுக.**

- முல்லைப்பாட்டை இயற்றியவர், காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் மகனார் நப்பூதனார்.
- அவர் பெயரின் வாயிலாக, இப்புலவர் காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்தவர் என்பதையும், அவர் பொன்வணிகம் செய்த வணிகர் குடியில் பிறந்தவர் என்பதையும், அவர் இயற்பெயர் பூதன் என்பதனையும் அறிகிறோம்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

### சிறுவினாக்கள்

1. **மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக.** (PTA- 4)

**குறிப்பு :** இலைகளில் சொட்டும் நீர் – உடலில் ஓடும் மெல்லிய குளிர் – தேங்கிய குட்டையில் 'சளப் தளப்' என்று குதிக்கும் குழந்தைகள் – ஓடும் நீரில் காகிதக் கப்பல்.

- ★ மழைத்துளி உயிர்த்துளி! மழைநீர் செடி கொடிகளின் இலைகளில் விழுகின்றபோது இலைகள் அசையும். இலைகள் பளபளவெனப் பசுமை நிறத்தில் மின்னும். மழைநீர் இலைகளில் பட்டுக் கண்ணாடி உருண்டைகள்போல் சிதறும் அழகே அழகு. மழையில் நனையும்போது உடலில் ஒரு சிலிர்ப்புத் தோன்றும்; நேரம் ஆக ஆக உடல் குளிரால் நடுங்கத் தொடங்கும்.
- ★ வாய் ஊதாங்குழல் இசைக்கும்; விரல்கள் நெளிந்து நர்த்தனமாடும்; பற்கள் கடகடவென மெல்லிய மத்தளம் தட்டுவதுபோல் ஒலிக்கும். அஃது எல்லா நேரங்களிலும் நமக்குக் கிடைப்பதில்லை.
- ★ குட்டைகளில் தேங்கிய மழைநீரில், 'சளப் தளப்' என ஓசை எழக் குழந்தைகள் ஆடும் ஆனந்த நடனம், காண்பவர் கண்களுக்கும் செவிகளுக்கும் இன்பமூட்டும்.
- ★ தெருக்களில் பெருகி ஓடுகின்ற மழைநீரில் பொருட்செலவு இல்லாமல் காகிதக் கப்பல் விட்டு மகிழும் கள்ளம்கபடம் இல்லாத சிறுவர்களின் அளவில்லாத ஆனந்தக் களிப்பு, கிடைத்தற்கு அரிய ஒரு புதிய அனுபவமாகும்.

### கூடுதல் வினாக்கள்

2. **முல்லைப்பாட்டு குறிப்பிடும் மாலைக்காலச் செய்தி யாது ?**

- ➤ துன்பம் தருகின்ற மாலைப் பொழுதில் முதிய பெண்டிர் மக்கள் பெருக்கம் இல்லாத ஊர்ப் பக்கம் சென்றனர். யாழிசை போன்று ஒலிக்கும் வண்டுகள் சூழ்ந்து ஆரவாரிக்கும் நறுமணம் கொண்ட அரும்புகள் மலர்ந்த முல்லைப் பூக்களோடு நெல்லையும் சேர்த்துத் தெய்வத்தின் முன் தூவினர்.
- ➤ தெய்வத்தைத் தொழுது, தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றனர். இதுவே, முல்லைப்பாட்டு குறிப்பிடும் மாலைக்காலச் செய்தியாகும்.

3. **முதுபெண்டிர் விரிச்சி கேட்டுத் தலைவிக்குக் கூறிய செய்தி யாது ?**

**இளங்கன்றின் பசி :**

- ➤ சிறு தாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று, பசியால் வாடிக்கொண்டிருந்தது.
- ➤ அதன் வருத்தத்தை ஓர் இடைமகள் கண்டாள். புல்லை மேய்ந்த உன் தாயாரை, வளைந்த கத்தியை உடைய கம்பைக் கொண்ட எம் இடையர் இப்போது ஓட்டி வந்துவிடுவர். வருந்தாதே" என்றாள் இடைமகள்.

**நற்சொல்லைக் கேட்டோம் :**

- ➤ "இடைமகள் கூறிய இந்த நற்சொல்லை நாங்கள் கேட்டோம். நின் தலைவன் பகைவென்று, திறைப் பொருளோடு வருவது உறுதி" என்று முதுபெண்டிர் கூறினர்.

4. **மழைமேகம் – மழைப்பொழிவு குறித்த முல்லைப்பாட்டு வருணனையை எழுதுக.**

**மழைமேகம் :**

- ➤ வலம்புரிச் சங்கு பொறித்த கைகளையுடைய திருமால், மாவலி மன்னன் நீர் வார்த்துத் தந்தபோது விண்ணுக்கும் மண்ணுக்குமாய் எடுத்த பேருருவம் போன்றுள்ளது மழைமேகம்.

**மழைப்பொழிவு :**

- ➤ பேருருவம் கொண்ட மேகமானது வலமாய் எழுந்து, மலையைச் சூழ்ந்து, விரைந்த வேகத்துடன் பெருமழையைப் பொழிந்தது என முல்லைப்பாட்டு வருணித்துள்ளது.

5. **முல்லைப்பாட்டுப் பாடலில் இடம்பெற்றுள்ள முதல், கரு, உரிப்பொருள்களை எழுதுக.**

**திணை** : முல்லைத்திணை

**முதற்பொருள்**

**நிலம்** : காடும் காடு சார்ந்த இடமும்.

**பொழுது** : சிறுபொழுது – மாலை; பெரும்பொழுது – கார்காலம்.

**கருப்பொருள்கள்** : நீர் – குறுஞ்சுனை, காட்டாறு.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



மரம் – கொன்றை, காயா, குருந்தம்.

பூ – முல்லை, பிடவம், தோன்றி.

**உரிப்பொருள்** : இருத்தலும் இருத்தல் நிமித்தமும்.

**6. "இன்னே வருகுவர் தாயர்" – இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம்** : முல்லைப்பாட்டில் தாய்ப் பசுக்களை எதிர்பார்த்து வருந்திய கன்றுகளை நோக்கி, ஆயர் குலச்சிறுமி ஒருத்தி, ஆறுதல்மொழியாகக் கூறியது இது.

**பொருள்** : உம் தாயர் இப்பொழுது வந்துவிடுவர் என்பது பொருள்.

**விளக்கம்** : பசுக்களைக் காலையில் மேய்ச்சலுக்காகக் கோவலர்கள் புல்வெளிக்கு ஓட்டிச் சென்றனர். கன்றுகள் வீட்டில் கட்டப்பட்டிருந்தன. பகலெல்லாம் தாய்மடியின் பிரிவால் வருந்திய கன்றுகள் தாயர் வருகையை எதிர்நோக்கிச் சுழன்றன. அவற்றைத் தேற்றும் விதமாய் ஆயர்குலச் சிறுமி ஒருத்தி, "நிரம்ப மேய்ந்த உம் தாய்மார், கோவலர்கள் பின்னின்று ஓட்டிவர இப்போது வந்துவிடுவர்; வருந்தாதீர்" என்று கூறினாள்.

**7. பெருமழை எவ்வாறு பொழிந்தது ?**

- அகன்று விரிந்த உலகத்தை வளைத்த மேகம் பெருமழையைப் பொழிந்தது. குறுகிய வடிவம் கொண்ட திருமால், மாவலி மன்னன் நீர் வார்த்துத் தந்தபொழுது, மண்ணுக்கும் விண்ணுக்குமாகப் பேருருவம் எடுத்து உயர்ந்து நின்றது போன்றிருந்தது உலகைச் சூழத் திரண்ட மழைமேகம்.
- ஒலி முழங்கும் கடலின் குளிர்நீரைப் பருகிப் பெருந்தோற்றம் கொண்ட மேகம், வலமாய் எழுந்து, மலையைச் சூழ்ந்து, விரைந்த வேகத்துடன் பெருமழையைப் பொழிந்தது.

**8. வருந்திய தலைவியின் துயர்போக்கப் பெருமுது பெண்டிர் என்ன செய்தனர் ?**

- தலைவியின் துயர் கண்ட பெருமுது பெண்டிர், பிரிந்து சென்ற தலைவனின் வருகை குறித்து அறிய, விரிச்சி கேட்க மக்கள் நடமாட்டம் மிகக் குறைவான ஊர்ப்புறம் நோக்கிப் போயினர்.
- அங்கு, நெல்லோடு, முல்லை மலரைக் கலந்து தூவித் தெய்வத்தைத் தொழுது நற்சொற் கேட்க நின்றனர். அப்போது ஆயர்குலச் சிறுமி ஒருத்தி, வருந்திக் காத்திருந்த கன்றுகளை நோக்கி, "உம் தாயர் விரைவில் வருவர்; கவலையுறாதீர்!" என்று கூறியதைக் கேட்டனர்.
- இந்த நன்மொழி கேட்ட பெருமுது பெண்டிர், வீட்டிற்கு விரைந்து தலைவியைக் கண்டு, "விரைவில் வருவர் என்னும் விரிச்சி கேட்டோம். ஆதலால், உன்னைப் பிரிந்து சென்ற தலைவர் விரைவில் பகைவென்று, திறைப்பொருளோடு வருவார்! மனத்தடுமாற்றம் கொள்ளாதே!" என ஆறுதல் கூறினர்.

## நெடுவினா

**1. முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.** (PTA - 2, Mar.-23)

**முன்னுரை :**

முல்லைப்பாட்டால் மழையின் சீற்றம் இயல்பு வாழ்க்கையில் ஏற்படுத்தும் மாற்றங்களைத் தெளிவாக அறியமுடிகிறது.

**பெருமழைப் பொழிவு :**

அகன்ற உலகத்தை வளைத்துப் பெருமழை பொழிகிறது. வலம்புரிச்சங்கு பொறித்த கைகளையுடைய திருமால், குறுகிய வடிவம் கொண்டு நின்றபோது, மாவலி மன்னன் நீர் வார்த்துத் தந்த உடனே, மண்ணுக்கும் விண்ணுக்குமாக உயர்ந்து பேருருவம் எடுத்து நின்றது போன்று மழைமேகம் காட்சியளித்தது. ஒலிக்கும் கடலின் குளிர்நீரைப் பருகிப் பெருந்தோற்றம் கொண்ட மேகமானது, வலமாய் எழுந்து, மலையைச் சூழ்ந்து, விரைந்த வேகத்துடன் பெருமழையைப் பொழிகிறது.

**விரிச்சி கேட்டல் :**

துன்பம் செய்யும் மாலைப்பொழுதில், மிகுந்த காவலையுடைய ஊர்ப்பக்கம் முதிய பெண்கள் சென்றனர். வண்டுகள் சூழ்ந்து ஆரவாரிக்கும் நறுமணம் கொண்ட, அன்று மலர்ந்த முல்லைப் பூக்களோடு நாழியில் கொண்டுவந்த நெல்லையும் சேர்த்துத் தெய்வத்தின்முன் தூவினர். பிறகு தெய்வத்தைத் தொழுது, தலைவிக்காக நற்சொல் கேட்க நின்றனர்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**வருத்தம் கொள்ளாதே !**

சிறு தாம்புக் கயிற்றால் கட்டப்பட்டு, பசியால் வாடிக் கொண்டிருந்த இளங்கன்றுகளின் வருத்தத்தை இடைமகள் ஒருத்தி கண்டாள். பெய்யும் மழையின்குளிர் தாங்காமல் கைகளைக் கட்டியபடி நின்ற அந்த இடைமகள், "புல்லை மேய்ந்த நும் தாயர், வளைந்த கத்தியை உடைய கம்பைக்கொண்ட எம் இடையர் ஓட்டிவர, இப்போது வந்துவிடுவர்; வருந்தாதே" என்று ஆறுதல்மொழி கூறினாள்.

இந்த நற்சொற்களைக் கேட்டுத் திரும்பிய முதுபெண்டிர் தலைவியிடம், "நாங்கள் நற்சொல் கேட்டோம்" என்று கூறினர். அத்துடன் "தலைவியே ! நின் தலைவன் பகைவரை வென்று திறைப்பொருளோடு விரைவில் வருவது உறுதி. மனத்தடுமாற்றம் கொள்ளாதே !" எனத் தலைவியின் துயர் நீங்க ஆற்றுப்படுத்தினர்.

**முடிவுரை :**

கார்கால மழைப்பொழிவையும் தலைவனைப் பிரிந்த தலைவியின் துயர்நீக்கி ஆற்றுப்படுத்தும் வகையில், முதுபெண்டிர் நற்சொல் கூறிய சிறப்பையும் அறியப் பாடப்பகுதி உதவுகிறது.

## பலவுள் தெரிக

1. "பாடுஇமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?

அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்

**விடை : அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல்**

## கூடுதல் வினாக்கள்

2. முல்லைப் பாட்டு ______ அடிகள் கொண்டது.

அ) 101 ஆ) 102 இ) 103 ஈ) 104

**விடை : இ) 103**

3. முல்லைப்பாட்டு, ______ நூல் வகையைச் சார்ந்தது.

அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு இ) கீழ்க்கணக்கு ஈ) சிற்றிலக்கியம்

**விடை : ஆ) பத்துப்பாட்டு**

4. 'நற்சொல்' என்பது ______ எனப் பிரிவது சரி.

அ) நற் + சொல் ஆ) நல்ல + சொல் இ) நன்மை + சொல் ஈ) நல் + சொல்

**விடை :** இ) நன்மை + சொல்

5. பத்துப்பாட்டில் மிகக் குறைந்த அடிகளைக் கொண்ட நூல்,

அ) குறிஞ்சிப்பாட்டு ஆ) முல்லைப்பாட்டு
இ) பட்டினப்பாலை ஈ) திருமுருகாற்றுப்படை

**விடை :** ஆ) முல்லைப்பாட்டு

6. முல்லைப்பாட்டு என்னும் நூலை இயற்றியவர்,

அ) கபிலர் ஆ) மாங்குடி மருதனார் இ) நப்பூதனார் ஈ) நக்கீரர்

**விடை : இ) நப்பூதனார்**

7. 'நனந்தலை உலகம்' என்பதில் 'நனந்தலை' என்பதன் பொருள்,

அ) கவர்ந்த ஆ) அகன்ற இ) சுருங்கிய ஈ) இழந்த

**விடை : ஆ) அகன்ற**

8. தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றவர்கள்,

அ) இளம்பெண்கள் ஆ) முதிய பெண்டிர் இ) தோழிகள் ஈ) சான்றோர்

**விடை : ஆ) முதிய பெண்டிர்**

9. 'கைய கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர இன்னே வருகுவர், தாயர்' என்று, யார் யாரிடம் கூறியது ?

அ) இடைமகள் இளங்கன்றிடம் ஆ) முதுபெண்டிர் பசுவிடம்
இ) தலைவன் காளையிடம் ஈ) தலைவி மேகத்திடம்

**விடை : அ) இடைமகள் இளங்கன்றிடம்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



10. 'நன்னர் நன்மொழி கேட்டனம்' – யார், யாரிடம் கூறியது ?

அ) முதுபெண்டிர், தலைவியிடம் கூறியது ஆ) தலைவி, முதுபெண்டிரிடம் கூறியது

இ) தோழி, தலைவியிடம் கூறியது ஈ) தலைவி, தலைவனிடம் கூறியது

**விடை : அ) முதுபெண்டிர், தலைவியிடம் கூறியது**

11. முல்லையின் நிலம்,

அ) காடும் காடு சார்ந்த இடமும் ஆ) மலையும் மலை சார்ந்த இடமும்

இ) வயலும் வயல் சார்ந்த இடமும் ஈ) கடலும் கடல் சார்ந்த இடமும்

**விடை : அ) காடும் காடு சார்ந்த இடமும்**

12. கார்காலத்திற்குரிய மாதங்கள்,

அ) தை, மாசி ஆ) பங்குனி, சித்திரை

இ) ஆவணி, புரட்டாசி ஈ) கார்த்திகை, மார்கழி

**விடை : இ) ஆவணி, புரட்டாசி**

13. "அருங்கடி மூதூர் மருங்கில் போகி" – இத்தொடரில் 'மருங்கில்' என்பதன் பொருள்,

அ) பக்கத்தில் ஆ) தொலைவில் இ) கிழக்கில் ஈ) மேற்கில்

**விடை : அ) பக்கத்தில்**

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளி.**

நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல, நிமிர்ந்த மாஅல் போல
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன்ஏர்பு
கோடுகொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை.

1. இப்பாடல் இடம் பெற்ற நூல்,

அ) முல்லைப்பாட்டு ஆ) மலைபடுகடாம் இ) நற்றிணை ஈ) குறுந்தொகை

**விடை : அ) முல்லைப்பாட்டு**

2. 'சிறுபுன் மாலை' என்பது ______ எனப் பிரியும்.

அ) சிறுபுன் + மாலை ஆ) சிறுமை + புன்மாலை

இ) சிறிய + புன்மாலை ஈ) சிறுமை + புன்மை + மாலை

**விடை : ஈ) சிறுமை + புன்மை + மாலை**

3. பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்கள்,

அ) பெரும்பெயல், பொழிந்த ஆ) பாடுஇமிழ், பனிக்கடல்

இ) பாடுஇமிழ், கோடுகொண்டு ஈ) நீர்செல நிமிர்ந்த

**விடை : இ) பாடுஇமிழ், கோடுகொண்டு**

4. பாடலில் இடம் பெற்றுள்ள சொல்லிசை அளபெடை,

அ) தடக்கை ஆ) வளைஇ இ) மாஅல் ஈ) கொடுஞ்செலவு

**விடை : ஆ) வளைஇ**

1. இப்பாடலின் ஆசிரியர் (PTA - 4)

அ) ஔவையார் ஆ) நப்பூதனார்

இ) நல்வேட்டனார் ஈ) பெருங்கௌசிகனார்

**விடை : ஆ) நப்பூதனார்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

2. இப்பாடல் இடம்பெற்றுள்ள செய்யுளிசை அளபெடை

அ) வளைஇ ஆ) கெடுப்பதூஉம் இ) மாஅல் ஈ) படாஅதவன்

**விடை : இ) மாஅல்**

3. 'நனந்தலை உலகம்' – இத்தொடரின் பொருள்?

அ) சிறிய உலகம் ஆ) நனைந்த உலகம் இ) சுற்றும் உலகம் ஈ) அகன்ற உலகம்

**விடை : ஈ) அகன்ற உலகம்**

4. பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்களைக் குறிப்பிடுக.

அ) பாடுஇமிழ், கோடுகொண்டு ஆ) கோடுகொண்டு, பெரும்பெயல்

இ) நனந்தலை, வலம்புரி ஈ) பொறித்த, பொழிந்த

**விடை : அ) பாடுஇமிழ், கோடுகொண்டு**

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூலைத் தேர்க. (Mar.-24)

அ) மலைபடுகடாம் ஆ) பரிபாடல் இ) முல்லைப்பாட்டு ஈ) நற்றிணை

**விடை : இ) முல்லைப்பாட்டு**

2. 'நனந்தலை உலகம்' என்பதன் சரியான பொருளைத் தேர்க.

அ) சிறிய உலகம் ஆ) நனைந்த உலகம் இ) சுற்றும் உலகம் ஈ) அகன்ற உலகம்

**விடை : ஈ) அகன்ற உலகம்**

3. 'தடக்கை' – இச்சொல்லின் இலக்கணக் குறிப்பைத் தேர்க.

அ) உரிச்சொல் தொடர் ஆ) பண்புத்தொகை

இ) வினைத்தொகை ஈ) வேற்றுமைத்தொடர்

**விடை : அ) உரிச்சொல் தொடர்**

4. பாடலின் ஆசிரியரைத் தேர்க.

அ) தமிழழகனார் ஆ) நப்பூதனார் இ) கீரந்தையார் ஈ) இளங்கோவடிகள்

**விடை : ஆ) நப்பூதனார்**

## இலக்கணக்குறிப்பு

**மூதூர், பெரும்புயல், சிறுபுன் மாலை, அருங்கடி, பெருமுது பெண்டிர்** – பண்புத்தொகைகள்

**வளைஇ** – சொல்லிசை அளபெடை

**மாஅல்** – செய்யுளிசை அளபெடை

**நல்லோர்** – வினையாலணையும் பெயர்

**உறுதுயர்** – வினைத்தொகை

**கைதொழுது** – மூன்றாம் வேற்றுமைத்தொகை

**தடக்கை** – உரிச்சொல் தொடர்

**அசைத்த, எழுந்த, தொடுத்த, நிமிர்ந்த** – பெயரெச்சங்கள்

**புலி பொறித்த, கோடு கொண்டு** – இரண்டாம் வேற்றுமைத்தொகைகள்

**பனிக்கடல்** – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை

## பகுபத உறுப்பிலக்கணம்

1. **பொறித்த – பொறி + த் + த் + அ**

**பொறி** – பகுதி

**த்** – சந்தி

**த்** – இறந்தகால இடைநிலை

**அ** – பெயரெச்ச விகுதி.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2. **நிமிர்ந்த – நிமிர் + த் (ந்) + த் + அ**

**நிமிர்** – பகுதி

**த்** – சந்தி, '**ந்**' ஆனது விகாரம்

**த்** – இறந்தகால இடைநிலை

**அ** – பெயரெச்ச விகுதி.

3. **நோக்கி – நோக்கு + இ**

**நோக்கு** – பகுதி

**இ** – வினையெச்ச விகுதி.

4. **அசைத்த – அசை + த் + த் + அ**

**அசை** – பகுதி

**த்** – சந்தி

**த்** – இறந்தகால இடைநிலை

**அ** – பெயரெச்ச விகுதி.

5. **பொழிந்த – பொழி + த் (ந்) + த் + அ**

**பொழி** – பகுதி

**த்** – சந்தி, '**ந்**' ஆனது விகாரம்

**த்** – இறந்தகால இடைநிலை

**அ** – பெயரெச்ச விகுதி.

## புணர்ச்சி விதி

1. **தடக்கை – தட + கை**

'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' என்னும் விதிப்படி

(தட + க் + கை) (தடக்கை)

## கற்பவை கற்றபின்

1. **முல்லைப்பாட்டின் காட்சிகளிலிருந்து சங்ககால மக்களின் வாழ்க்கைச் சூழலை உணர முடிகிறதா ? உங்களின் கருத்துகளைப் பதிவு செய்க.**

➤ தமிழகத்தில் சங்ககாலம் என்பது பொற்காலம். இதனை முல்லைப்பாட்டின் செய்திகளால் உறுதி செய்யமுடிகிறது. மூவகை நிலப் பிரிவுகளின் அடிப்படையில் சங்ககால மக்களின் வாழ்வுமுறை அமைந்திருந்தது. காடும் காடு சார்ந்த இடமும் முல்லை நிலம் எனப்பட்டது. முல்லை என்பது மரங்கள், காடுகள், ஆறுகள், பறவைகள், விலங்குகள் நிறைந்த நிலப்பகுதியாகும். சிலர் வேட்டையாடி உணவு உண்டனர்.

➤ காட்டு நிலத்தில் ஆடுமாடுகளை மேய்த்தும், மருத நிலத்தை வேளாண்மைக்குப் பயன்படுத்தியும் வாழ்ந்துள்ளனர். குறிஞ்சி நிலத்தில் இயற்கையான இன்பச்சூழலில் தேன், தினை, கிழங்கு போன்ற உணவுகளை உண்டும், பிறரோடு அன்புடன் பகிர்ந்து உண்டும் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தனர்.

2. **குறிப்புகளைக் கொண்டு ஆர்வமூட்டும் வகையில் கதை / நிகழ்வை எழுதுக.**

அமைதி – வனம் – மனத்தைத் தொட்டது – கொஞ்சம் அச்சம் – ஆனால் பிடித்திருந்தது – இரவில் வீட்டின் அமைதியைவிட – வனத்தின் அமைதி – புதுமை – கால்கள் தரையில் – இலைகளின் சலசலப்பு – பறவைகள் மரங்களின் மேல் – சிறகடிப்பு – அருகில் திரும்பியவுடன் – திடீரென ஆரவார ஓசை – தண்ணீரின் ஓட்டம் – அழகான ஆறு – உருண்ட சிறுகூழாங்கற்கள் – இயற்கையின் கண்காட்சி.

ஒருநாள் அதிகாலை வேளையில் காயத்ரி இயற்கையை ரசித்தபடி தனது பண்ணை வீட்டில் நடை பயின்றாள். அவள் நடந்து சென்ற சோலையில் மரங்கள் அடர்ந்திருந்தன. எங்கும் அமைதி. மனத்தைத் தொட்ட அமைதியான வனத்தைப் பார்த்தாள். இருள் கலைந்தும் கலையாமலும் கொஞ்சம் அச்சம் தருவதாக இருந்தது வானம். ஆனால், வானின் அழகும் பறவைகளின் இரைச்சலும் அவள் மனத்தைத் தொட்டது. இருப்பினும் தனியாக நடப்பதில் அவளுக்குக் கொஞ்சம் அச்சம் இருந்தது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



சில்லென்ற புத்தம் புதிய காலைவேளை, அவளுக்குப் பிடித்திருந்தது. இரவு நேரத்தில் வீட்டைச் சுற்றி ஓர் அமைதி இருந்தது. ஆனால், வனத்தின் அமைதி புதுமையாக இருந்தது. அதைவிட இந்தச் சூழ்நிலை ஒரு பரவசம் கலந்த அமைதி ஏற்படுத்தியது. அவள் நடந்த சோலையில் வெளிச்சம் சற்றுக் குறைவாக இருந்தது.

காலில் பட்ட இலைச்சருகுகள் சலசலத்தன. மரங்களின்மேல் அமர்ந்திருந்த பறவைகளின் ஆரவார ஒலியும், அவற்றின் சிறகடிப்பும் ஆனந்தமாயிருந்தன. அருகில் ஓடும் அழகான ஆற்று நீரின் சலசலப்பு, திடீர் ஆரவார ஓசையாக இருந்தது. ஆற்றின் நீரோட்டத்தில் வானத்தின் காட்சி அழகாய் இருந்தது. அழகான ஆற்று நீரில் கால் வைத்தாள் காயத்ரி. உருண்டு திரண்ட சிறுசிறு கூழாங்கற்கள் இருந்ததை உணர்ந்தாள். சிறகடித்த பறவைகள் திடீரென ஆரவார ஓசை எழுப்பின. அவள் கண்ட காட்சி, இயற்கையின் மடியில் சிறிது நேரம் தன்னை மறந்தாள் காயத்ரி.

## விரிவானம்

# 4. புயலிலே ஒரு தோணி

(ப. சிங்காரம்)

### நெடுவினா

1. **‘புயலிலே ஒரு தோணி’ கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக் குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?(PTA -1, 2, Sep.-20) (அல்லது) ‘புயலிலே ஒரு தோணி’ கதைப்பகுதியில் இடம்பெறும் கடற்பயண நிகழ்வுகளை விவரித்து எழுதுக. (Mar.-23)**

**முன்னுரை :**

புலம் பெயர்ந்த தமிழர்கள் பற்றிய முதல் புதினம், புயலிலே ஒரு தோணி. ஆசிரியர் இந்தோனேஷியாவில் இருந்தபோது தென்கிழக்காசியப் பகுதிகளில் போர் மூண்டது. அச்சூழலில் மலேசியா, இந்தோனேஷியாப் பகுதிகளில் நிகழ்வதாக உள்ள கற்பனைப் படைப்பு அது. அப்புதினத்தின் ஒரு பகுதியான ‘கடற்கூத்து’, கடலின் ஆர்ப்பரிப்பை விளக்குகிறது.

**நெளிந்த அலைகள் :**

கொளுத்திக் கொண்டிருந்த வெயில், இமைநேரத்தில் மறைந்துவிட்டது; புழுங்குகிறது; பாண்டியன் எழுந்துபோய் அண்ணாந்து பார்த்தான். மேகப் பொதிகள், பரந்து திரண்டொன்றிக் கும்மிருட்டாய் இறுகி நின்றன. அலைகள் எண்ணெய் பூசியவைபோல மொழுமொழுவென நெளிந்தன. காற்று இல்லாமல் ஒரே இறுக்கமாக இருந்தது. இது கடலின் நிலை; வானிலைகளைக் குறிக்கும் வருணனை.

**கடலின் ஆர்ப்பரிப்பு :**

இடி முழக்கத்துடன் மின்னல் கீற்றுகள் வானைப் பிளந்தன. வானம் உடைந்து கொட்டு கொட்டென்று வெள்ளம் கொட்டியது. சூறாவளி மாரியும் காற்றும் கூடிக் கலந்து, ஆடிக் குதித்துக் கெக்கலித்தன. அலையோட்டம் தெரியவில்லை. வானுடன் கடல் கலந்துவிட்டது. மழை தெரியவில்லை; வளியுடன் இணைந்துவிட்டது. கப்பல் அப்படியும் இப்படியுமாய்த் தாவிக்குதித்து விழுந்து திணறித் தத்தளிக்கிறது. எலும்புகள் முறிவதுபோல, நொறுநொறு என நொறுங்கல் ஒலி. தலைக்கு மேல் கடல்... கும்மிருட்டு, இருட்டிவிட்டு, கடல் மழை புயல் வானம்.... எங்கிருந்தோ தொங்கிய வடகயிற்றை வலக்கையால் பற்றிக் கிடந்தான் பாண்டியன். சூறாவளிப் புயலில் தோணியும் பயணிகளும் பட்டபாட்டை விளக்கும் வருணனை.

**வெறிக்கூத்து :**

மலைத்தொடர் போன்ற அலைகள் மோதித் தாக்குகின்றன; வானும் கடலும் வளியும் மழையும் மீண்டும் ஒன்றுகூடிக் கொந்தளிக்கின்றன; வானம் பிளந்து தீ கக்கியது; மழை கொட்டுகிறது; வளி முட்டிப் புரட்டுகிறது; கடல் வெறிக்கூத்தாடுகிறது; தொங்கான் தாவித் தாவிக் குதிகுதித்து விழுந்து விழுந்து நொறுங்குகிறது. கடலும் காற்றும் கலந்து ஆடிய ஆட்டத்தில் கப்பலின் நிலை ‘தாதன்படுமோ தறிபடுமோ’ என்னும் வழக்கை நினைவூட்டும் கப்பலின் (தொங்கானின்) நிலை விளக்கும் வருணனை.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**எங்கும் வெள்ளம் :**

முகத்தில் வெள்ளம், உடலில் வெள்ளம், கால் கையில் வெள்ளம். தொங்கான் தாவி விழுந்து சுழல்கிறது. மூழ்கி நீந்துகிறது. தாவி நீந்துகிறது. இருட்டிருட்டு, கும்மிருட்டு, குருட்டிருட்டு, சிலுசிலு மரமரப்பு, இடி முழங்கச் சீனப் பிசாசுகள் தாவி வீசுகின்றன. மூடைகள், சிப்பங்கள் நீந்தியோடி மறைகின்றன. தொங்கான் குதித்து விழுந்து, நொறுநொறு என நொறுங்குகிறது. சுழன்று கிறுகிறுத்துக் கூத்தாடுகிறது. காற்றின் சீற்றம் கடலின் கொந்தளிப்பு இடையே கப்பல் பட்ட பாட்டை வருணிக்கும் வருணனை.

**உதித்தான் சூரியன் :**

பாண்டியன் நாற்புறமும் கடலைப் பார்த்து மலைத்து நின்றான். கடற் கூத்து எவ்வளவு நேரம் நீடித்ததென்று கணக்கிட முடியவில்லை. மறுநாள் காலையில் சூரியன் உதித்தான். கடல் அலைகள் ஒன்றன்பின் ஒன்றாய், முந்தியதைத் தொடர்ந்து பிந்தியதாய் வந்து மொத்மொத்தென்று தொங்கானை மோதின. இனிமேல் பயமில்லை. இரண்டு நாளில் கரையைப் பார்க்கலாம் என்ற நம்பிக்கை பிறந்தது. கொந்தளித்த கடலிடையே நம்பிக்கை விதைத்ததை விளக்கும் வருணனை.

**முடிவுரை :**

பகல் இரவாகி, இரவு பகலானது. கருநீல வானில் விண்மீன்கள் வெகு ஒளியுடன் கண் சிமிட்டி நின்றன. அடுத்த நாள் முற்பகலில் துறைமுகத்தின் கரையைத் தொங்கான் நெருங்கிப் போய் நின்றது. கடலில் கப்பலின் போராட்டத்தை மிக அழகான ஒலிக்குறிப்புச் சொற்களோடு ஆசிரியர் கூறியுள்ளார்.

## கூடுதல் வினாக்கள்

2. 'விசும்பின் துளியும் பசும்புல் தலையும்' என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு, குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதுக. (PTA - 3)

**குறிப்புகள் :** முன்னுரை – இயற்கையோடு இயைந்து வாழ்வோம் – வானத்து மழைநீரைப் பூமியில் காப்போம் – மழைக்கு ஆதாரமான மரங்களை வளர்ப்போம் – முடிவுரை.

### விசும்பின் துளியும் பசும்புல் தலையும்

**முன்னுரை :**

'நீரின்றி அமையாது உலகு' என்பார் வள்ளுவர். உலகின் பெரும்பகுதி, கடல்நீரால் சூழப்பட்டுள்ளது. அந்த நீரை நாம் குடிக்கவோ, சமைக்கவோ, குளிக்கவோ பயன்படுத்த முடியுமா? அதனால்தான் ஈயாதார் செல்வத்திற்குக் கடல்நீர் உவமையாகச் சொல்லப்பட்டது. தாகம் தீர்க்க, உணவு சமைக்க, விவசாயம் செய்ய நல்ல நீர் தேவை. நல்லநீர் மழையால் கிடைக்கிறது. அதனை விசும்பின் துளி என்றனர். இனி விசும்பின் துளியின் சிறப்புகள் பயன்பாடுகள் குறித்துக் காண்போம்.

**இயற்கையோடு இயைந்து வாழ்வோம் :**

நாம் வாழும் மண் உலகையும், அதிலுள்ள தாவர வகைகளையும், அனைத்து உயிரினங்களையும் இயற்கைதான் தோற்றுவித்தது. இதனை இயற்கைப் பரிணாமம் என்பர். இயற்கையோடு இணைந்து, மண்ணில் தோன்றிய உயிரினங்கள் பொருந்தி, இயைந்து வாழ்ந்து வந்ததால்தான் மனிதன் தோன்றினான். அந்த மனிதன் இன்று தன்னிலை மறந்து செயல்படுவதால், பருவநிலை மாற்றங்களும் பேரிடர்களும் தோன்றி, இயற்கை படைத்த உலகைச் சிதைத்து வருகின்றன. எனவே, இனியாவது மனிதன், இயற்கையோடு இயைந்து வாழப் பழகவேண்டும்.

**வானத்து மழைநீரைப் பூமியில் காப்போம் :**

வானத்து மழை என்பது, நீரைப் பெருக்கி மண்ணை வளப்படுத்தத் துணைபுரிகிறது. பருவத்தே மழை பெய்ய வில்லையானால், இம்மண்ணில் பசும்புல்லும் தலையைக் காட்டாது என, வள்ளுவர் கூறியுள்ளார். மண்ணுலகிலுள்ள உயிரினங்கள் அனைத்தும் உயிர் வாழ்வதற்குத் தண்ணீர் இன்றியமையாதது. அந்தத் தண்ணீரைச் சேமிக்க வேண்டியது இன்றியமையாததாகும். அதனால்தான் நம் முன்னோர் குளங்களை வெட்டினர்; ஏரிகளை அமைத்தனர்; அணைக்கட்டுகளைக் கட்டினர். மழைநீரைத் தேக்கினால்தான் பூமியையும், பூமியில் வாழும் உயிரினங்களையும் காப்பாற்ற முடியும். பெய்யும் மழை வழிந்தோடிக் கடலில் கலந்துவிட்டால், குடிதண்ணீருக்கு என்ன செய்ய முடியும்? எனவே, கிடைக்கும்போது நல்ல நீரைச் சேமித்து வைத்துக்கொள்ளவேண்டும் அல்லவா?

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**மழைக்கு ஆதாரமான மரங்களை வளர்ப்போம் :**

மழை எப்படிப் பெய்யும், எதனால் பெய்கிறது? மழைநீருக்கு ஆதாரமானவை தாவர வகைகள். மழையைப் பெறப் பெருங்காடுகள் துணைபுரிகின்றன. மரங்கள், மழையை அழைக்கும் பண்புள்ளவை. அதுமட்டுமா? அவை மண்ணுக்குள் மழைநீரைத் தேக்கும் ஆற்றல் உள்ளவை. நமக்குத் தூய்மையான காற்றை வழங்குபவை. வாகனப் புகை, தொழிற்சாலைப் புகை போன்றவற்றிலிருந்து நம்மைக் காப்பவை. இதனைத் தெளிவாக உணர்ந்து, மரங்களை வளர்க்க வேண்டும். மழை பெறுவதற்கு மட்டுமன்று, நம் உயிர் வாழ்க்கைக்கும் இன்றியமையாதவை மரங்கள். அதனால் மரங்களைப் பேணி வளர்க்க வேண்டும்.

**முடிவுரை :**

"மழை பொழியவில்லையானால், கடலும் தன் வளத்தில் குறையும்" என, வள்ளுவர் கூறுகிறார். கடலின் வளம் குறையுமானால், மண்ணும் மண்ணில் வாழும் உயிரினங்களும் வளமுடன் வாழமுடியுமா? ஒன்றை யொன்று சார்ந்து வாழும் உயிரினங்களின் துணையின்றி மனிதர்களாகிய நாமும் வாழமுடியாது. ஆறறிவு பெற்ற மனிதர்கள் மட்டுமல்லர், உலகில் பரவிக் கிடக்கிற எண்ணற்ற உயிரினங்களும் வாழ, விசும்பின் துளி மிகமிக இன்றியமையாதது. எனவே, உலகில் பசுமை தழைக்க, மழை பொழிய மரங்களை வளர்த்தல் என்னும் உயரிய பணியைச் செய்வோமாக.

**3. முன்னுரை – விசும்பின் துளியும் பசும்புல் தலையும் – காற்று மாசு – பசுமையைக் காப்போம் – மரம் நமக்கு வரம் – மழைநீர் உயிர்நீர் – முடிவுரை. – இக்குறிப்புகளைப் பயன்படுத்தி, 'இயற்கையைக் காப்போம்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. (PTA - 6)**

## இயற்கையைக் காப்போம்

**முன்னுரை :**

நாம் வாழும் உலகம் 'பசுமைக்கோளம்' எனப் போற்றப்படுகிறது. அண்டவெளியில் எண்ணற்ற கோளங்கள் சுழன்று கொண்டிருந்தாலும், நாம் வாழும் கோளம்மட்டுமே உயிரினங்கள் வாழும் பசுமைக் கோளமாக இருக்கிறது என, அறிவியல் அறிஞர்கள் தெளிவாக ஆராய்ந்து கூறியுள்ளனர். இதற்கு முழுமுதல் காரணம், தண்ணீர் என்றால் மிகையாகாது!

**விசும்பின் துளியும் பசும்புல் தலையும் :**

இயற்கையில், நீரே நாம் வாழும் மண்ணுலகைப் பசுமைக் கோளமாக்கியுள்ளது. மண்ணுலகில் வாழும் அனைத்து உயிர்களும், தண்ணீரை நம்பியே வாழ்கின்றன. விசும்பின் துளியான மழை விழுந்ததும், மண்ணில் முதலில் பசும்புல்லே தலை தூக்குகிறது. செடி, கொடி, மரம் என்னும் தாவர வகைகள் நிமிர்ந்து நிற்கின்றன. உயிரினங்கள் அனைத்தும் மகிழ்கின்றன.

**காற்றுமாசு :**

உயிரினங்கள் அனைத்தும் சுவாசித்து உயிர் வாழக் காற்றின் ஒரு பகுதியான உயிர்வளி துணைபுரிகிறது. ஆனால், மனிதன் தொழிற்சாலைகளை அமைத்ததாலும், ஊர்தி வகைகளை அதிகமாகப் பயன்படுத்துவதாலும், கரித்துகள் நிறைந்த புகை அதிகரித்தாலும் காற்று மாசுபட்டது. காற்று மாசால் உலகம் வெப்பமயமாதலில் சிக்கித் தவிக்கிறது. அதனால் வெப்பக்காற்று வீச்சு ஏற்பட்டுப் பல நாடுகளில் காடுகள் தாமே தீப்பற்றி எரிகின்றன. அதனால் சுற்றுச்சூழலும் உயிரின வாழ்க்கையும் பெரிதும் பாதிக்கப்படுகிறது. மனித இனத்தின் சில சுயநலச் செயல்களால் உலக உயிரின வாழ்க்கைக்கே அழிவு ஏற்படுகிறது. அதுமட்டுமா? குவிக்கப்படும் குப்பைக் கழிவுகள், நீரையும் நிலத்தையும் அளவுக்கு அதிகமாக மாசுபடுத்துகின்றன.

**பசுமையைக் காப்போம் :**

உலகைச் சூழ்ந்துள்ள கரித்துகள்கள் கலந்த காற்றை மரங்களும், தாவர வகைகளும் உட்கொண்டு, உயிர்வளியை வெளிவிடுகின்றன. அதனால் காற்றின் மாசு நீக்கப்பட்டுத் தூய்மைப்படுத்தப்படுகிறது. எனவே, தாவர வகைகள் நிறைந்த காடுகளைப் பாதுகாக்க வேண்டும். அத்துடன் மக்கள் வாழும் இடங்களில் மரங்களை நட்டுப் பாதுகாக்க வேண்டும். அவை நிழலைத் தருவதுடன், காற்று மாசு போக்கிடவும் துணை புரிகிறது.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**மரம் நமக்கு வரம் :**

மரங்கள் கரியமில வாயுவை உறிஞ்சி உட்கொண்டு, உயிர்வளியை வெளியிடும் என்பதை அனைவரும் அறிவோம். அண்மையில் அமேசான், ஆப்பிரிக்கக் காடுகளில் அறிவியல் அறிஞர்கள் மேற்கொண்ட ஆய்வில், காடுகள் கரியமில வாயுவை உட்கொள்ளும் ஆற்றல் 1990இல் இருந்ததைவிட 2010இல் குறைந்துள்ளது எனக் கண்டறிந்துள்ளனர். மழையைத் தருபவை காடுகளே என்பதை மறந்துவிடாமல், 'மரமே நமக்கு வரம்' என எண்ணி மக்கள் மரங்களை வளர்க்கவும் காடுகளைப் பாதுகாக்கவும் உரிய செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

**மழைநீர் உயிர்நீர் :**

மழை பெய்து பெருகும் நீரே, உலகில் வாழ்கிற ஓரறிவு உயிர்முதல், ஆறறிவு உயிர்வரை அனைத்து உயிர்களையும் பாதுகாக்கிறது. "பெரிய நீர்ப்பரப்பைப் பெற்றுள்ள கடல்கூட, மழை பெய்யவில்லையானால் தன் வளத்தில் குறையும்" என்று, வள்ளுவர் கூறியுள்ளதை நினைவில் கொள்ளவேண்டும். மண், வளம் பெறுவது மட்டுமன்றிக் கடலும் வளம் பெறுவதற்கு மழைநீர் தேவை என்பதைத் தெளிவாக அறியவேண்டும். அதனால் தாவர வகைகள் தழைத்து வளரும். காற்றில் கலந்துள்ள புகைமாசைப் போக்கும். மழைநீரே உயிர் நீராகும்.

**முடிவுரை :**

பஞ்சபூதங்கள் என்னும் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகியவற்றின் சேர்க்கையால் உருவானது இயற்கை. இவற்றுள் எதன் ஆற்றல் குறைந்தாலும் அதிகரித்தாலும், இயற்கை தன் இயல்பில் சிதையும். இயற்கை அழிந்தால், பருவ மாறுதல்கள் ஏற்படும். பேரழிவுகள் விளையும். உயிரினங்கள் காணாமல் போகும். எனவே, எப்போதும் இயற்கையைத் தன்நிலை சிதையாமல் பாதுகாக்க வேண்டும். மனிதன், இயற்கையோடு இயைந்து வாழப் பழகவேண்டும்.

## பலவுள் தெரிக.

1. 'கஜா' புயலின் பெயரை வழங்கிய நாடு எது ?
   அ) இந்தியா ஆ) இலங்கை இ) தாய்லாந்து ஈ) மியான்மர்
   **விடை : ஆ) இலங்கை**
2. 'பெய்ட்டி' புயலின் பெயரை வழங்கிய நாடு எது ?
   அ) வங்கதேசம் ஆ) மாலத்தீவுகள் இ) தாய்லாந்து ஈ) பாகிஸ்தான்
   **விடை : இ) தாய்லாந்து**
3. 'புயலிலே ஒரு தோணி' என்னும் புதினத்தின் ஆசிரியர்,
   அ) ப. சிங்காரம் ஆ) மு.வ. இ) திரு. வி. க. ஈ) அகிலன்
   **விடை : அ) ப. சிங்காரம்**
4. 'புயலிலே ஒரு தோணி' கதையில் 'தொங்கான்' எனக் குறிப்பிடப்படுவது ______.
   அ) புயல் ஆ) படகு இ) கப்பல் ஈ) தோணி
   **விடை : இ) கப்பல்**
5. வங்கக் கடலில் வீசும் புயலும் அமெரிக்கா, ஜப்பான், சீனாவைத் தாக்கும் புயல்களும் ______.
   அ) சூறைக்காற்றுப்புயல் ஆ) வலம்புரிப்புயல் இ) இடம்புரிப்புயல் ஈ) சூறாவளிப்புயல்
   **விடை : இ) இடம்புரிப்புயல்**
6. வலம்புரி, இடம்புரிப் புயல்கள் குறித்துக் கண்டுபிடித்த காஸ்பார்ட் குஸ்டாவ் கொரியாலிஸ் என்பவர் ______ நாட்டைச் சேர்ந்த கணித வல்லுநராவார்.
   அ) ஹவாய் ஆ) ஜப்பான் இ) சீனா ஈ) பிரெஞ்சு
   **விடை : ஈ) பிரெஞ்சு**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



7. தென்கிழக்காசியப் போர் மூண்டபோது மலேசியா, இந்தோனேசியா பகுதிகளில் நிகழ்வதாக உள்ள கற்பனைப் படைப்பு,

அ) ஆறாம் திணை ஆ) புயலிலே ஒரு தோணி

இ) பால் மரக்காட்டினிலே ஈ) எதுவுமில்லை

விடை : ஆ) புயலிலே ஒரு தோணி

8. 'பல்பழுப் பலவின் பயங்கெழு கொல்லி' என்று குறிப்பிடும் நூல்,

அ) புறநானூறு ஆ) அகநானூறு இ) கலித்தொகை ஈ) நாலடியார்

விடை : ஆ) அகநானூறு

9. புயலுக்கு இந்தியா தந்துள்ள பெயர்களில் நான்கு பூதங்களைக் குறிப்பவை ______.

அ) அக்னி, ஆகாஷ், பிஜ்லி, ஜல் ஆ) மேக், அக்னி, ஜல், ஆகாஷ்

இ) மேக், சாஹர், வாயு, ஆகாஷ் ஈ) பிஜ்லி, அக்னி, மேக், கஜா

விடை : அ) அக்னி, ஆகாஷ், பிஜ்லி, ஜல்

10. 'தமிரோ' என்று உறுமியவர்,

அ) மாலுமி ஆ) ஜப்பானிய அதிகாரி

இ) சீன அதிகாரி ஈ) பாண்டியன்

விடை : ஆ) ஜப்பானிய அதிகாரி

## கற்பவை கற்றபின்

**1. கடலில் புயலின் தாக்கத்தினால் ஏற்பட்ட பதற்றத்தை வெளிப்படுத்த அடுக்குத் தொடர்களும் வருணனைகளும் எவ்வாறெல்லாம் பயன்பட்டுள்ளன என்பது குறித்து வகுப்பில் பேசுக.**

**புயலின் ஆரம்ப நிலை :**

மேகப் பொதிகள் பரந்து திரண்டொன்றிக் கும்மிருட்டாய் இறுகி நின்றன. அலைகள் எண்ணெய் பூசியவைபோல மொழுமொழுவென நெளிந்தன. காற்றையே காணோம். ஒரே இறுக்கம். மாலுமிகள் திடுமெனப் பாய்மரத்தை நோக்கி ஓடிச்சென்று, கட்டுக் கயிறுகளை இறுக்குகிறார்கள். எல்லோரும் எழுந்து, ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து மிரண்டு விழித்தனர்.

**புயலும் வெள்ளமும் :**

கிடுகிடுக்கும் இடி முழக்கத்துடன் மின்னல் கீற்றுகள் வானைப் பிளந்தன. வானம் உடைந்து கொட்டோ கொட்டென்று வெள்ளம் கொட்டியது. சூறாவளியோடு மாரியும் காற்றும் கூடிக்கலந்து ஆடிக் குதித்துக் கொந்தளித்தன. அலையோட்டம், தெரியவில்லை. வானுடன் கடல் கலந்துவிட்டது. வளியுடன் இணைந்து விட்டது.

**வானும் கடலும் :**

வானும், கடலும், வளியும், மழையும் மீண்டும் ஒன்றுகூடிக் கொந்தளிக்கின்றன. வானம் பிளந்து தீ கக்கியது. மழை வெள்ளம் கொட்டுகிறது. முட்டிப் புரட்டுகிறது வளி. வெறிக் கூத்தாடுகிறது கடல். கப்பல் நடுநடுங்கித் தாவித் தாவிக் குதித்துக்குதித்து விழுந்துவிழுந்து நொறுநொறுவென்று நொறுங்குகிறது.

**புயலுக்குப் பின் :**

பகல் இரவாகி, இரவு பகலாகியது. பிறைமதி வெளிச்சம் சிந்திற்று. கருநீலவானில் விண்மீன்கள் வெகு ஒளியுடன் கண் சிமிட்டி நின்றன. உப்புக் காற்று உடலை வருடியது. அவுலியா மீன்கள் கூட்டம் கூட்டமாய், கண்மாயில் முதுகு தெரிய மூழ்கி நீந்தும் எருமைகளைப்போல், முனகல் ஒலியோடு பின்தொடர்ந்தன. அலைகள் நெளிந்தோடின.

இவ்வாறு ஆசிரியர் கடலில் புயலின் கோரத்தாண்டவத்தை வருணனைகளாலும், சொற்களைப் பதற்றமான அடுக்குத் தொடர்களாலும் அமைத்து, கடல், புயல், மழை, காற்று இவற்றின் செயல்களைக் கூறியிருப்பது சிறப்பாகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2. நீங்கள் எதிர்கொண்ட இயற்கைப் பேரிடர் குறித்து விவரித்து எழுதுக.(மழை, வெள்ளம், புயல், வறட்சி)

வெள்ளம்

எனக்கு மட்டுமன்று சென்னை வாசிகள் பலருக்கும் அச்சுறுத்தும் சூழ்நிலையைத் தொடங்கி வைத்த நாள் அது. தீபாவளியின்போதும், அதன் பின்னரும் மழை கொட்டோ கொட்டெனக் கொட்டத் தொடங்கியது. முழங்கால் அளவு தண்ணீரில் நடந்துசென்று, வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக்கொண்டு, குண்டும் குழியுமான சாலைகளைக் கடந்து, கழிவுநீர்த் துவாரங்களிலிருந்து தப்பி வீடு வந்து சேர்வது, சென்னைவாசிகளுக்குப் பழகிப்போன ஒன்றாகி விட்டது.

சாதாரண மழையாகத்தான் இருக்கும் என்று நினைத்துச் சென்றது பிழையாகிவிட்டது. சென்னையின் மையப்பகுதியில் வசித்ததால் பாதுகாப்பைப் பற்றிக் கவலைப்பட்டதே இல்லை. வழக்கமான அன்றைய பணிகளை முடித்துவிட்டு, தொலைக்காட்சியில் கண்களை ஓட்டினேன். மழைபற்றிய செய்திகள் தொடர்ந்து வந்து கொண்டிருந்தன. புறநகர்ப் பகுதிகளில் மழைநீர் தேங்கியதால் ஏற்பட்ட சேதச் செய்திகளைப் பார்த்தேன். உறங்கிவிட்டேன்.

காலை ஆறு மணி. தூக்கம் கலையாத அந்த நேரத்தில் திடீரென அப்பா கூப்பிடும் சத்தம். கூடவே, வெளியில் சாலையில் சைரன் வாகனங்களின் சத்தம். “தண்ணீ.... தண்ணீ...” என்று சத்தமிட்டனர். அப்போது, “வீட்டுக்குள் தண்ணி வந்திடுச்சு...” என்கிற அப்பாவின் பதற்றமான குரலைக் கேட்டு அவசரமாக எழுந்து வெளியே வந்து பார்த்தால், எங்கள் வீட்டை ஒட்டிய சாலைக்குள் திபுதிபுவெனத் தண்ணீர் பெருகி வந்தது. அப்போது மழை எதுவும் இல்லாததால், எங்கிருந்து இவ்வளவு தண்ணீர் வருகிறது என்ற குழப்பத்தில் சாலைக்கு ஓடினேன். முழங்கால் அளவுக்குத் தண்ணீர். என்னைப்போலப் பலர் அங்கே பக்கத்துச் சாலைகளில் இருந்து வரும் தண்ணீரைப் பார்த்து ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தார்கள். எங்கள் வீட்டிற்குள் தண்ணீர் வராமல் இருக்க மளமளவெனத் தடுப்புகள் வைத்தோம்.

ஆற்றிலிருந்து வெகுதூரத்தில் நாங்கள் இருந்தாலும் முதல்முறையாக எங்களையும் புறநகர் வாசிகளாக்கியது வெள்ளம் எனப் புரிந்து கொண்டேன். உடனடியாக மின்சாரம் நிறுத்தப்பட்டது. பின்னர்த் தொலைபேசி இணைப்புகளும் ஒன்றன்பின் ஒன்றாகச் செயலிழந்தன. உணவு, உடை, உறைவிடம் இல்லாமல் தவித்தோம். ஆனால், பல நல்ல உள்ளங்களால் உயிர் பிழைத்து, உயிர் வாழ்ந்தோம் என்பது குறிப்பிடத்தக்கது.

## கற்கண்டு

# 5. தொகைநிலைத் தொடர்கள்

### குறுவினாக்கள்

1. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க. (PTA - 4, Sep.-20,22)

தண்ணீர் குடி – **தண்ணீரைக் குடி**, அவன் தண்ணீர் குடித்தான்.

தயிர்க்குடம் – **தயிரை உடைய குடம்**, அவள் தயிர்க்குடம் சுமந்து சென்றாள்.

### கூடுதல் வினாக்கள்

2. சொற்றொடர் என்றால் என்ன ? எடுத்துக்காட்டுத் தருக.

➤ சொற்கள் பல தொடர்ந்து நின்று பொருள் தந்தால், அது சொற்றொடர் (தொடர்) எனப்படும்.

எ–கா : நீர் பருகினான்.

3. தொகைநிலைத் தொடர் என்றால் என்ன ?

➤ பெயர்ச்சொல்லுடன் வினைச்சொல்லோ, பெயர்ச்சொல்லோ சேரும் தொடரின் இடையில் வேற்றுமை உருபுகளோ, வினை, பண்பு முதலியவற்றின் உருபுகளோ மறைந்து வர, இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட சொற்கள் ஒரு சொல் போல் நிற்குமானால் அதனைத் தொகைநிலைத்தொடர் எனக் கூறுவர்.

எ–கா : கரும்பு தின்றான்.

4. தொகைநிலைத் தொடர் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

➤ தொகைநிலைத் தொடர், ஆறு வகைப்படும். **அவை :**

- வேற்றுமைத்தொகை • பண்புத்தொகை • உம்மைத்தொகை,
- வினைத்தொகை • உவமைத்தொகை • அன்மொழித்தொகை

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**5. வேற்றுமை உருபுகள் எத்தனை ? அவை யாவை ?**

➤ வேற்றுமை உருபுகள் ஆறு. **அவை :** ஐ, ஆல், கு, இன், அது, கண்.

**6. வேற்றுமைத்தொகை என்றால் என்ன ? எடுத்துக்காட்டுத் தருக.**

➤ ஒரு தொடரில் வேற்றுமை உருபுகளில் ஏதேனும் ஒன்று மறைந்து நின்று பொருள் தருமானால், அது வேற்றுமைத்தொகை எனப்படும்.

எ–கா : மதுரை சென்றார் – மதுரைக்**கு**ச் சென்றார்.

**7. உருபும் பயனும் உடன்தொக்கதொகை என்றால் என்ன ? எ – கா தருக.**

➤ ஒரு தொடரில் வேற்றுமை உருபோடு, அதன் பொருளை விளக்கும் பயனும் சேர்ந்து மறைந்து வருமானால், அது உருபும் பயனும் உடன்தொக்கதொகை எனப்படும்.

எ–கா : யானைப்பாகன் – யானையை உடைய பாகன்

**8. பண்புத்தொகையைச் சான்றுடன் விளக்குக.**

➤ அளவு, நிறம், வடிவம், சுவை ஆகிய பண்புப் பெயருக்கும் அது தழுவி நிற்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையில், 'மை' என்னும் பண்பு விகுதியும், ஆகிய, ஆன என்னும் பண்பு உருபுகளும் மறைந்து வரும்.

எ–கா : செங்காந்தள், வட்டத்தொட்டி.

**9. இருபெயரொட்டுப் பண்புத்தொகை என்றால் என்ன ? சான்று தருக.**

➤ சிறப்புப்பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னுமாக வரும்.

➤ இடையில் 'ஆகிய' என்னும் பண்பு உருபு தொக்கி வரும்.

எ–கா : மார்கழித்திங்கள்

**10. உவமைத்தொகை என்றால் என்ன ? எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.**

➤ உவமானத்துக்கும் (உவமைக்கும்) உவமேயத்திற்கும் (பொருளுக்கும்) இடையில் உவமஉருபு மறைந்து வருவது உவமைத்தொகை ஆகும்.

எ–கா : மலர்க்கை

**11. உம்மைத்தொகை என்றால் என்ன ? சான்று தருக.**

➤ இரு சொற்களுக்கு இடையிலும் இறுதியிலும் 'உம்' என்னும் இடைச்சொல் மறைந்து வருவதே உம்மைத்தொகை எனப்படும்.

எ–கா : தாய்சேய்

**12. உம்மைத்தொகை எத்தனை அளவைப் பெயர்களைத் தொடர்ந்து வரும் ? அவை யாவை ?**

➤ உம்மைத்தொகை நான்கு அளவைப் பெயர்களைத் தொடர்ந்து வரும்.

➤ எண்ணல், நீட்டல், எடுத்தல், முகத்தல் என்னும் நான்கும் அளவைப் பெயர்களாகும்.

**13. 'தொடர்' என்றால் என்ன ? அஃது எத்தனை வகைப்படும் ?**

➤ ஒரு சொல் மற்றொரு சொல்லோடு பொருள் பொருத்தமுற நின்று தொடர்வது தொடர் எனப்படும்.

➤ அஃது இருவகைப்படும். **அவை :** தொகைநிலைத்தொடர், தொகாநிலைத்தொடர் ஆகும்.

**14. அன்மொழித்தொகை என்றால் என்ன ?**

➤ வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகைநிலைத் தொடர்களில் உருபுகளும் அவை அல்லாத வேறு சொற்களும் மறைந்து நின்று பொருள் தருவது அன்மொழித்தொகையாகும்.

எ–கா : முறுக்கு மீசை வந்தார்.

முறுக்கு மீசை' என்னும் தொகைநிலைத்தொடர், அது அல்லாது,

➤ 'வந்தார்' என்னும் குறிப்பால் 'முறுக்கு மீசையை உடையவர்' எனப் பொருள் தருகிறது. (அல் + மொழி + தொகை – அது அல்லாத வேறு மொழியை உணர்த்தும் தொகைச்சொல்)

**15. இடைச்சொல் மறைந்து வரும் தொகைச்சொற்கள் எவை ?**

➤ வேற்றுமைத்தொகை, பண்புத்தொகை, வினைத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை ஆகிய தொகைச் சொற்களில் இடைச்சொல் மறைந்து வரும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**16. வினைத்தொகையைச் சான்றுடன் விளக்குக.**

➤ காலம் கரந்த பெயரெச்சம், வினைத்தொகை எனப்படும். இதில் காலம் காட்டும் இடைநிலையும், பெயரெச்ச விகுதியும் மறைந்து நிற்கும். அதாவது, வினைப் பகுதியைத் தொடர்ந்து ஒரு பெயர் வந்து, ஒரு சொல்லைப் போல் நடக்கும்.

எ–கா : வீசுதென்றல்

➤ வீசிய தென்றல், வீசுகிற தென்றல், வீசும் தென்றல் என இறப்பு, நிகழ்வு, எதிர்வு (வீசிய, வீசுகின்ற, வீசும்) எனும் முக்காலங்களும் மறைந்து வினைப்பகுதி சொல்லோடு பொருந்தி வரும்.

**17. இரண்டாம் வேற்றுமைத் தொகைக்கு எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.**

எ–கா : ஆத்திசூடி படித்தாள்.

➤ இத்தொடர், 'ஆத்திசூடியைப் படித்தாள்' என விரிந்து நின்று பொருளைத் தருகிறது. 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்து நிற்கத் தொடர்ந்தமையால், இஃது இரண்டாம் வேற்றுமைத் தொகையாகும்.

**18. ஆறு வேற்றுமைத் தொகைகளுக்கும் எடுத்துக்காட்டுகள் தருக.**

| | | |
|---|---|---|
| மோர் பருகினான் | – (ஐ) | – இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| தலை வணங்கு | – (ஆல்) | – மூன்றாம் வேற்றுமைத்தொகை |
| விழுப்புரம் சென்றான் | – (கு) | – நான்காம் வேற்றுமைத்தொகை |
| மலைவீழ் அருவி | – (இன்) | – ஐந்தாம் வேற்றுமைத்தொகை |
| கம்பர் பாடல் | – (அது) | – ஆறாம் வேற்றுமைத்தொகை |
| கடல் வாழ்உயிரிகள் | – (கண்) | – ஏழாம் வேற்றுமைத்தொகை |

➤ **குறிப்பு :** முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபுகள் இல்லை. முதல் வேற்றுமைக்கு 'எழுவாய் வேற்றுமை' என்றும், எட்டாம் வேற்றுமைக்கு 'விளிவேற்றுமை' என்றும் பெயர்களுண்டு.

**19. பொற்றொடி வந்தாள் – இஃது எத்தொகையாகும் ?**

➤ பொற்றொடி – பொன்னால் ஆன வளையல் என்பது பொருள். அதனால் இது மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையாகும்.

➤ இத்தொடர், 'வந்தாள்' என்னும் வினைச்சொல்லைத் தழுவி நிற்பதால், 'பொன்னால் ஆன வளையலை அணிந்த பெண்' எனப் பொருள் தருகிறது. எனவே, இத்தொடர், வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை எனப்படும்.

## சிறுவினாக்கள்

**1. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். – இப்பத்தியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளை எழுதுக.** (PTA-1, May - 22, Mar.-23)

| | சொல் | தொகைச்சொற்களின் வகைகள் | விரித்தல் |
|---|---|---|---|
| 1 | பூங்கொடி | வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை | பூவைப் போன்ற கொடி |
| 2 | ஆடுமாடு | உம்மைத்தொகை | ஆடும் மாடும் |
| 3 | தண்ணீர்த் தொட்டி | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை | தண்ணீரை உடைய தொட்டி |
| 4 | நீர் நிரப்பினாள் | இரண்டாம் வேற்றுமைத்தொகை | நீரை நிரப்பினாள் |
| 5 | குடிநீர் | வினைத்தொகை | குடிக்கின்ற நீர் |
| 6 | மணி பார்த்தாள் | இரண்டாம் வேற்றுமைத்தொகை | மணியைப் பார்த்தாள் |
| 7 | மல்லிகைப்பூ | இருபெயரொட்டுப் பண்புத்தொகை | மல்லிகை ஆகிய பூ |
| 8 | சுவர்க்கடிகாரம் | ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. | சுவரின்கண் உள்ள கடிகாரம் |

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பலவுள் தெரிக

1. 'பெரிய மீசை' சிரித்தார் – வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது? (Sep.-20,22)

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

**விடை : இ) அன்மொழித்தொகை**

## கூடுதல் வினாக்கள்

2. 'காலம் கரந்த பெயரெச்சம்' என்பது ______. (PTA - 1)

அ) வினைத்தொகை ஆ) உம்மைத்தொகை

இ) பண்புத்தொகை ஈ) அன்மொழித்தொகை

**விடை : அ) வினைத்தொகை**

3. 'தமிழ்த்தொண்டு' என்னும் தொடர் ______. (PTA - 5)

அ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஆ) அன்மொழித்தொகை

இ) உருபும் பயனும் உடன்தொக்க தொகை ஈ) வேற்றுமைத்தொகை

**விடை : இ) உருபும் பயனும் உடன்தொக்க தொகை**

4. கொடுக்கப்பட்ட அனைத்துச் சொற்களும் அமைந்த பொருத்தமான தொடரைத் தேர்க. (PTA - 1)
(மலை, மழை, மேகம், ஆறு, ஏரி, குளம்)

அ) மலைமீது மழை பெய்து, ஆற்று வெள்ளம் ஊரின் வழியே பெருக்கெடுத்து ஓடியது.

ஆ) கருத்த மேகம், மலைமீது மழையைப் பொழிய ஆறு, ஏரி, குளம் அனைத்தும் நீரால் நிரம்பின.

இ) திரண்ட மேகங்கள், மலையில் மாரியாகி ஆறு, ஏரி, குளங்களை நிறைத்தன.

ஈ) மலைமீது மழைபொழிய ஏரி, குளங்கள் நிறைந்து, பின் கடலில் சென்று கலந்தது.

**விடை : ஆ) கருத்த மேகம், மலைமீது மழையைப் பொழிய ஆறு, ஏரி, குளம் அனைத்தும் நீரால் நிரம்பின.**

5. 'சிவப்புச் சட்டை' பேசினார் – அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை எது? (PTA-2, Sep.-21)

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

**விடை : இ) அன்மொழித்தொகை**

6. குயில்களின் கூவலிசை, புள்ளினங்களின் மேய்ச்சலும் பாய்ச்சலும் இலைகளின் அசைவுகள், சூறைக்காற்றின் ஆலோலம் : (Sep.-20)

அ) மொட்டின் வருகை ஆ) வனத்தின் நடனம் இ) உயிர்ப்பின் ஏக்கம் ஈ) நீரின் சிலிர்ப்பு

**விடை : ஆ) வனத்தின் நடனம்**

7. தேர்ப்பாகன் – இத்தொடரில் அமைந்துள்ள தொகையைத் தெரிவு செய்க. (Mar.-23)

அ) வினைத்தொகை ஆ) உருபும் பயனும் உடன்தொக்க தொகை

இ) பண்புத்தொகை ஈ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

**விடை : ஆ) உருபும் பயனும் உடன்தொக்க தொகை**

8. 'மலர்க்கை' – தொகையின் வகையைத் தேர்க. (Mar.-24)

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) அன்மொழித் தொகை ஈ) உம்மைத்தொகை

**விடை :** ஆ) உவமைத்தொகை

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



9. தொகைநிலைத் தொடர் எத்தனை வகைப்படும் ?

அ) இரண்டு ஆ) நான்கு இ) ஐந்து ஈ) ஆறு

**விடை : ஈ) ஆறு**

10. கீழ்க்காணும் சொற்களில் உம்மைத்தொகை அல்லாத சொல் எது ?

அ) தேர்ப்பாகன் ஆ) அண்ணன்தம்பி இ) வெற்றிலைபாக்கு ஈ) இரவுபகல்

**விடை : அ) தேர்ப்பாகன்**

11. நிறம், வடிவம், சுவை, அளவு ஆகியவற்றில் ஒன்றை உணர்த்துவது ______.

அ) தொழிற்பெயர் ஆ) சினைப்பெயர் இ) குணப்பெயர் ஈ) முதற்பெயர்

**விடை : இ) குணப்பெயர்**

12. 'குணப்பெயரை' ______ எனவும் குறிப்பிடுவர்.

அ) நிறப்பெயர் ஆ) சுவைப்பெயர் இ) பண்புப்பெயர் ஈ) அளவுப்பெயர்

**விடை : இ) பண்புப்பெயர்**

13. மார்கழித்திங்கள், சாரைப்பாம்பு ஆகிய சொற்களில் இடம்பெறும் பொதுப்பெயர்கள் எவை ?

அ) மார்கழி, சாரை ஆ) திங்கள், பாம்பு இ) மார்கழி, பாம்பு ஈ) திங்கள், சாரை

**விடை : ஆ) திங்கள், பாம்பு**

14. சிறப்புப்பெயர், பொதுப்பெயர் ஆகியன வரும் தொகைச்சொல்,

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை

இ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஈ) உம்மைத்தொகை

**விடை : இ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை**

15. கரும்பு தின்றாள் – இத்தொடர் ______ வேற்றுமை தொகைநிலைத்தொடர்.

அ) இரண்டாம் ஆ) மூன்றாம் இ) நான்காம் ஈ) ஆறாம்

**விடை : அ) இரண்டாம்**

16. நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைக்கான சொல்,

அ) தேர்ப்பாகன் ஆ) தமிழ்த்தொண்டு இ) கரும்பு தின்றான் ஈ) மதுரை சென்றார்

**விடை : ஆ) தமிழ்த்தொண்டு**

17. இருபெயரொட்டுப் பண்புத்தொகைக்கான சொல்,

அ) மலர்க்கை ஆ) அண்ணன் தம்பி இ) மார்கழித்திங்கள் ஈ) தேர்ப்பாகன்

**விடை : இ) மார்கழித்திங்கள்**

## கற்பவை கற்றபின்

**வண்ணமிட்ட தொகைநிலைத் தொடர்களை வகைப்படுத்துக.**

1. **அன்புச்செல்வன்,** திறன்பேசியின் **தொடுதிரை**யில் படித்துக் கொண்டிருந்தார். (Mar.-23)

**அன்புச்செல்வன்** – இருபெயரொட்டுப் பண்புத்தொகை (அன்மொழித்தொகை)

**தொடுதிரை** – வினைத்தொகை

2. அனைவருக்கும் **மோர்ப்பானையைத்** திறந்து **மோர் கொடுக்கவும்.**

**மோர்ப்பானை** – இரண்டாம் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகை

**மோர் கொடுக்கவும்** – இரண்டாம் வேற்றுமைத் தொகை

3. **வெண்டைக்காய்ப்** பொரியல், **மோர்க்குழம்பு**க்குப் பொருத்தமாக இருக்கும்.

**வெண்டைக்காய்** – இருபெயரொட்டுப் பண்புத்தொகை

**மோர்க்குழம்பு** – இருபெயரொட்டுப் பண்புத்தொகை

4. **தங்கமீன்கள் தண்ணீர்த்தொட்டி**யில் விளையாடுகின்றன.

**தங்கமீன்கள்** – பண்புத்தொகை

**தண்ணீர்த்தொட்டி** – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## மொழியை ஆள்வோம்

**தமிழில் மொழிபெயர்த்துத் தலைப்பிடுக.**

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fill the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant. (PTA -1, May - 22)

தங்க நிறக் கதிர்களைப் பரப்பிக் காலையில் ஞாயிறு உதிக்கிறது. தன் பொன்னிறக் கதிர்களால் இருளை விரட்டுகிறது. வெண்மேகமானது அங்குமிங்கும் நகர, பல வண்ண நிறப் பறவைகள் தம் இனிய குரலில் கீதத்தை இசைக்கின்றன. சிறகுகள் படபடக்க வண்ணத்துப் பூச்சிகள், மலர்களைச் சுற்றி வந்து நடனமிடுகின்றன. மலர்களின் நறுமணம், காற்றை நிரப்புகிறது. தென்றல் காற்று எங்கும் மென்மையாக வீசி, இதமான சூழலை உருவாக்குகின்றது.

**சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.**

இன்சொல், எழுகதிர், கீரிபாம்பு, பூங்குழல் வந்தாள், மலை வாழ்வார், முத்துப்பல்.

எ–கா : இன்சொல் – பண்புத்தொகை – **இன்சொல்** கூறுதல் சான்றோர்க்கு அழகு. (May-22)

எழுகதிர் – வினைத்தொகை (PTA - 2, May-22)
அதிகாலையில் **எழுகதிர்** காண, நண்பருடன் சென்றேன்.

கீரிபாம்பு – உம்மைத்தொகை
**கீரியும்பாம்பும்** போல, அமெரிக்காவும் சீனாவும் உள்ளன.

பூங்குழல் வந்தாள் – அன்மொழித்தொகை.
எம் இல்லத் திருமணத்திற்குப் **பூங்குழல்** வந்தாள்.

மலைவாழ்வார் – ஏழாம் வேற்றுமைத்தொகை.
இருளர், **மலைப் பகுதியில் வாழ்வார்** இனத்தைச் சார்ந்தோராவர்.

முத்துப்பல் – உவமைத்தொகை (PTA-2)
**முத்துப்பல்** தெரியச் சிரிக்கும் ஸ்ரீகிருஷ்ணரின் வண்ணப்படம் என்னைக் கவர்ந்தது.

**செய்திகளைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**பூக்களைப் பற்றிய அரிய இலக்கியச் செய்திகள்.**

பூ உண்டு. ஆனால், கண்ணிற்குக் காட்சி தராமல் காண்டற்கு அரியனவாய் இருக்கும் மலர்கள் – ஆலமலர்; பலாமலர்.

மலர் உண்டு; பெயரும் உண்டு; ஆனால் இதுதான் அது என்று உறுதியாக அறிய இயலாதுள்ள நிலையில் இருக்கும் மலர்கள் – கள்ளி மலர், பாங்கர் மலர்.

அகவிதழ் முதலிய உறுப்புகள் இருந்து, அவை புறத்தே காட்சிப்படாமல் உள்ளேயே பொதிந்திருக்கும் மலர்கள் – அத்தி, ஆலம், கொழிஞ்சி, பலா.

பயன்பாடு, நாற்றம், மக்களது விருப்பில் இடம் பெறாமை, பொதுவில் ஒதுக்கப்பட்டமை கொண்டு, மலரில் சில எளியவை ஆகின்றன. அவையாவன : நெருஞ்சி, எருக்கு, பூளை, குரீஇப் பூளை, வேளை, ஊமத்தம், கள்ளி, முருங்கை.

இலுப்பைப் பூக்கள், இனிப்பானவை. கரடிகள் மரத்தின் மீதேறி, அவற்றைப் பறித்து உண்ணும். பாதிரிப் பூ, குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும். மூங்கில் பூவில் காய் தோன்றிக் கனியாகி, அதிலிருந்து ஒருவகை அரிசி தோன்றும். அது, மூங்கில் அரிசி எனப்படும்.

– கோவை. இளஞ்சேரன்

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



1. **மலர் உண்டு; பெயரும் உண்டு – இரண்டு தொடர்களையும் ஒரு தொடராக்குக.** (PTA - 2)
மலருக்குப் பெயரும் உண்டு.

2. **அரும்பாகி மொட்டாகிப் பூவாகி.... என்பதை ஒத்து அமைந்துள்ள தொடரைக் கண்டறிக.**
மூங்கில் பூவில் காய் தோன்றிக் கனியாகி அதிலிருந்து ஒருவகை அரிசி தோன்றும்.

3. **நீங்கள் அறிந்த இருபூக்களின் பெயர்களையும் பயன்களையும் எழுதுக.**
மூங்கில் பூ – மூங்கில் அரிசி கிடைக்கும்.
பாதிரிப் பூ – குடிநீரில் நறுமணத்தை உண்டாக்கும்.

4. **அரிய மலர் – இலக்கணக் குறிப்புத் தருக.**
குறிப்புப் பெயரெச்சம்.

5. **தொடரில் பொருந்தாப் பொருள்தரும் மயங்கொலி எழுத்துகளைத் திருத்துக.** (PTA - 2)
இலுப்பைப் பூக்கள், இனிப்பானவை. கரடிகள் **மறத்தின்** மீதேறி அவற்றைப் **பரித்து** உண்ணும். பாதிரிப்பூ குடிநீருக்குத் தன் **மனத்தை** ஏற்றும்.
**விடை :** மறத்தின் – மரத்தின்; பரித்து – பறித்து; மனத்தை – மணத்தை.

i. **கண்ணிற்குக் காட்சி தராமல் காண்டற்கு அரியனவாய் இருக்கும் மலர்கள் எவை?** (Sep.-22)
ஆலமலர்; பலாமலர்.

ii. **புறத்தே வெளிப்படாமல் உள்ளே பொதிந்திருக்கும் மலர்கள் எவை?**
அத்தி, ஆலம், கொழிஞ்சி, பலா.

iii. **இனிப்பான பூக்கள் எது?**
இலுப்பைப் பூக்கள்

iv. **எந்தப் பூ குடிநீருக்கு மணத்தை ஏற்றும்?**
பாதிரிப்பூ.

v. **மூங்கில் அரிசி என்றால் என்ன?**
மூங்கில் பூவில் காய் தோன்றிக் கனியாகி, அதிலிருந்து ஒருவகை அரிசி தோன்றும். அது, மூங்கில் அரிசி எனப்படும்.

**பூவின் நிலைகளை வரிசைப்படுத்தி எழுதுக.** (Sep.-22)

**அரும்பு** – பூவின் தோற்ற நிலை
**போது** – பூ விரியத் தொடங்கும் நிலை
**மலர்** – பூவின் மலர்ந்த நிலை
**வீ** – மரஞ்செடியினின்று பூ கீழே விழுந்த நிலை
**செம்மல்** – பூ வாடின நிலை

**வாழ்த்துமடல் எழுதுக : மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.** (PTA - 4)

கம்பர் தெரு,
18.02.2021.

அன்புத்தோழன் கலையரசனே,

வணக்கம். நான் நலம். நீ நலமா? உன் பெற்றோர் நலமா ? உன் இல்லத்திலுள்ள அனைவரின் நலமும் அறிய ஆவலாக உள்ளேன். உன் பேச்சாற்றலால் நீ பல போட்டிகளில் பங்குகொண்டு வருகிறாய். திறமையால் பல பரிசுகளைக் குவித்து வைத்திருக்கிறாய். அதனை எண்ணும்போது எனக்குப் பெருமையாக இருக்கிறது.

உன் திறமைக்கு மகுடம் சூட்டியதைப்போல் அண்மையில் மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் கலந்துகொண்டு நீ முதல் பரிசினைப் பெற்றிருப்பது, உன் அறிவுத் திறனுக்குக் கிடைத்த பரிசு என்று எண்ணி மகிழ்ச்சி அடைகின்றேன்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



நீ தொடர்ந்து போட்டியில் கலந்துகொள்ள வேண்டும். உன் முயற்சிகள் அனைத்தும் வெற்றிபெற வாழ்த்துகிறேன். இக்கடிதத்துடன் உனக்கு ஒரு நூலைப் பரிசாக அனுப்பியுள்ளேன். எதிர்வரும் விடுமுறையில் சந்திப்போம்.

இப்படிக்கு,
அன்புத் தோழன்,
மாரியப்பன்.

உறைமேல் முகவரி
மா. கலையரசன்,
த/பெ. மாணிக்கம்,
17, கபிலர் தெரு,
மதுரை – 15.

### பாரதியின் வசனநடை – சிட்டுக்குருவி

சிறிய தானியம் போன்ற மூக்கு; சின்னக்கண்கள்; சின்னத்தலை; வெள்ளைக் கழுத்து; அழகிய மங்கல் வெண்மை நிறமுடைய பட்டுப்போர்த்த வயிறு; கருமையும் வெண்மையும் கலந்த சாம்பல் நிறத்தாலாகிய பட்டுப்போர்த்த முதுகு; சிறிய தோகை; துளித்துளிக் கால்கள்; இத்தனையும் சேர்த்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப்பிடியிலே பிடித்துவிடலாம். இவ்விதமான உடலைச் சுமந்துகொண்டு, என் வீட்டிலே இரண்டு உயிர்கள் வாழ்கின்றன. அவற்றில் ஒன்று ஆண்; மற்றொன்று பெண்.

**– இதுபோன்று உங்களுக்குப் பிடித்த ஏதேனும் ஒன்றைப் பற்றி வசனநடையில் எழுதுக.**

### வசனநடை – முயல்

சிறிய கண்கள்; இருளில் பளிச்சென மின்னும் பார்வை; தடவினால் மென்மை; வெள்ளை போர்த்திய அற்புதம்; சிறிய மூக்கு; நீண்ட காதுகள், கைகளால் வருடித் தர வேண்டும் எனத் தூண்டும் முடிகள், சத்தம் கேட்டால் மின்னலென மறைந்து ஓடிவிடும். என் வீட்டுக்கு வரும் அவை இரண்டும் பெண் முயல்கள்.

## மொழியோடு விளையாடு

**சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க. (காடு, புதுமை, விண்மீன், காற்று, நறுமணம்)**

1. முதல் இரண்டை நீக்கினாலும், வாசனை தரும் – நீக்காவிட்டாலும் வாசனை தரும்.
   **விடை : நறுமணம்**
2. பழமைக்கு எதிரானது – எழுதுகோலில் பயன்படும். (Sep. - 22)
   **விடை : புதுமை**
3. இருக்கும்போது உருவமில்லை – இல்லாமல் உயிரினம் இல்லை.
   **விடை : காற்று**
4. நாலெழுத்தில் கண் சிமிட்டும் – கடையிரண்டில் நீந்திச் செல்லும்.
   **விடை : விண்மீன்**
5. ஒரெழுத்தில் சோலை – இரண்டெழுத்தில் வனம். (Sep. - 22)
   **விடை : காடு**

**நயமிகு தொடர்களைப் படித்து ஏற்ற தலைப்புகளை எடுத்தெழுதுக.**

(வானத்தின் நடனம், மிதக்கும் வாசம், காற்றின் பாடல், மொட்டின் வருகை, உயிர்ப்பின் ஏக்கம், நீரின் சிலிர்ப்பு) **எ – கா :**

1. கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது; வானம் இருண்டது; வாடைக்காற்று வீசியது.
   **விடை : காற்றின் பாடல்**
2. புவி சிலிர்த்து, மண்ணிலிருந்து சின்னஞ்சிறு மொட்டு முகிழ்த்தது; அச்செடியை வரவேற்கும் விதமாகப் பக்கத்துச் செடிகள், தலையாட்டி மகிழ்கின்றன.
   **விடை : மொட்டின் வருகை**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



3. சோலைக்குள் சத்தமில்லாமல் வீசியது தென்றல்; பூக்கள், அதன் வருகையை உணர்ந்து, நறுமணத்துடன் வரவேற்கின்றன. பூவாசம் கலந்த தென்றலில் வண்டுகள் மிதந்து சென்று, மலர்களில் அமர்கின்றன.

**விடை : மிதக்கும் வாசம்**

4. இரவின் இருளமைதியில் இரைச்சலாய்ச் சில சுவர்க்கோழிகள்; வறண்ட வானத்தின் இருண்ட புழுக்கம்; மழைக்கு ஏங்கும் புவி, வெப்பப் பெருமூச்சு விடும்; சுசுகசத்த உயிரினங்கள்.

**விடை : உயிர்ப்பின் ஏக்கம்**

5. நின்றுவிட்ட மழை தரும் குளிர்; சொட்டுச் சொட்டாக விளிம்புகளிலிருந்தும் மரங்களிலிருந்தும் விழும் மழைநீர்பட்டுச் சிலிர்க்கும் உயிரினம்.

**விடை : நீரின் சிலிர்ப்பு**

6. குயில்களின் கூவலிசை, புள்ளினங்களின் மேய்ச்சலும் பாய்ச்சலும்; இலைகளின் அசைவுகள்; சூறைக்காற்றின் ஆலோலம். **(Sep. - 20)**

**விடை : வானத்தின் நடனம்**

**அகராதியில் காண்க :**

**அகன்சுடர்** – சூரியன், பரந்து விரிந்த சுடர்.

**ஆர்கலி** – கடல், மழை, வெள்ளம், ஆரவாரம்.

**கட்புள்** – பறவை.

**கொடுவாய்** – வளைந்த வாய், புலி, குறளை, கூரிய கருவி.

**திருவில்** – வானவில், சிறப்பான வில்.

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.** **(PTA- 5)**



மரங்கள் நடச் சொன்னோம்!
மறுத்தார்கள்....
கரும் புகையைத் தவிர்க்கச் சொன்னோம்!
மறுத்தார்கள்...
மழைநீர் சேகரிக்கச் சொன்னோம்!
மறுத்தார்கள்...
இன்று நீரை விலைக்கு வாங்குகிறோம்!
நாளை காற்றையும் விலைக்கு வாங்குவோம்!

## நிற்க அதற்குத் தக

**வானொலி அறிவிப்பு : ஜல் புயல் சென்னைக்குத் தென்கிழக்கே 150 கி.மீ. தொலைவில் மையம் கொண்டுள்ளது. இன்று இரவு சென்னைக்கும் நெல்லூருக்கும் இடையே கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

புயலின்போது

| | |
|---|---|
| புயலின்போது வெளியே செல்ல வேண்டாம். | வெளியேற நேர்ந்தால், ஆரம்பகட்ட எச்சரிக்கையின்போதே வெளியேறவும். |
| தொலைபேசி, மின்சாதனங்கள் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். | மாடியில் இருப்பதைத் தவிர்த்துத் தளப்பகுதியிலேயே தங்கவும். |
| வானொலி அறிவிப்பைக் கேட்டுப் பின்பற்றவும். | காற்று அடிப்பது நின்றாலும், எதிர்த்திசையிலிருந்து மறுபடி வேகமாக வீச ஆரம்பிக்கும். எனவே, காற்றடிப்பது முடிந்துவிட்டதாக நினைக்க வேண்டாம். |
| மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்கவும். | வாகனத்தை ஓட்ட நேர்ந்தால், கடற்கரைப் பகுதிகளுக்குத் தொலைவிலும், மரங்கள் மின்கம்பிப் பாதைகள், நீர்வழிகள் ஆகியவற்றிலிருந்து விலகியும் வாகனத்தின் உள்ளேயே தங்கி யிருக்கவும். |

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**மேற்கொண்ட அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.**

1. வானொலி அறிவிப்பைக் கேட்டுப் பின்பற்றச் செய்வேன்.
2. புயலின்போது வெளியே செல்வதைத் தவிர்ப்பேன்.
3. தொலைபேசி, மின்சாதனங்கள் பயன்படுத்துவதைத் தடுப்பேன்.
4. மீனவ நண்பர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்கச் செய்வேன்.
5. மாடியில் இருப்பதைத் தவிர்த்துத் தரைப்பகுதியிலேயே தங்கச் செய்வேன்.
6. வாகனத்தை ஓட்ட நேர்ந்தால் கடற்கரைப் பகுதிகளுக்குத் தொலைவிலும், மரங்கள் மின்கம்பிகள் உள்ள பாதைகள், நீர்வழிகள் ஆகியவற்றிலிருந்து விலகியும், வாகனங்களைச் செலுத்தச் செய்வேன்.
7. காற்று அடிப்பது நின்றாலும், மறுபடி எதிர்த் திசையிலிருந்து வேகமாக வீச ஆரம்பிக்கும். எனவே, காற்றடிப்பது முடிந்து விட்டதாக நினைக்க வேண்டாம் என அறிவுறுத்துவேன்.

**கலைச்சொல் அறிவோம்**

**Storm** – புயல் (Mar.-23)
**Land Breeze** – நிலக்காற்று
**Tornado** – சூறாவளி
**Sea Breeze** – கடற்காற்று
**Tempest** – பெருங்காற்று
**Whirlwind** – சுழல்காற்று

**விடைக்கேற்ற வினா அமைக்க.**

கிரேக்க அறிஞர் 'ஹிப்பாலஸ்' என்பவர் பருவக் காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தினார் (Mar.-23)

பருவக்காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தியவர் யார்?

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# இயல் – 3

## உரைநடை உலகம்

# 1. விருந்து போற்றுதும்

### குறுவினாக்கள்

1. **‘தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குற்றியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி’ என்பது இலக்கியச் செய்தி. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.**

★ விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றாகக் கருதக்கூடாது.

★ விருந்தினருடன் இனிமையாகப் பேசுதலும் நன்றாக உபசரிப்பதும் அவசியம்.

★ நாம் கொடுக்கும் சுவையான உணவைவிட, இனிய சொற்களும் நல்ல உபசரிப்பும், பரந்த மனமும் சிறந்த பண்பாடும் மிகவும் அவசியமாகும்.

### கூடுதல் வினாக்கள்

2. **விருந்தோம்பல் என்றால் என்ன ?**

➤ வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று, உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து, அன்பு பாராட்டுவதே, ‘விருந்தோம்பல்’ எனப்படும்.

3. **‘மோப்பக் குழையும் அனிச்சம்’ என்ற குறள் கூறும் கருத்து யாது ?**

➤ அனிச்ச மலர், முகர்ந்த அளவில் வாடிவிடும். அதுபோல விருந்தினரை வித்தியாசமாக – வெறுப்பாக நோக்கும்போது அவர்கள் வாடிவிடுவர். எனவே, முகம் வேறுபடாமல், முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்பது குறள் கருத்தாகும்.

4. **இளங்கோவடிகள் உணர்த்தும் பழந்தமிழ் மரபு யாது ?**

➤ கோவலனைப் பிரிந்து வாழும் கண்ணகி, அவனைப் பிரிந்ததைவிட விருந்தினரைப் போற்ற முடியாத நிலையை எண்ணி வருந்துவதாக இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.

➤ இதன்மூலம் விருந்தினரைப் போற்றிப் பேணல், பழந்தமிழர் மரபு என்பதை, உணர்த்துகிறார்.

5. **சத்திரங்கள் உருவாக்கப்பட்டதன் நோக்கம் என்ன ?**

➤ புதியவர்களை விருந்தினரை வீட்டுக்குள் அழைத்து உணவிடும் பழக்கம் கால மாற்றத்தினால் குறைந்தது. விருந்தினரை உபசரித்து விருந்து படைக்கும் பண்பாடு குறைந்ததால் சத்திரங்கள் உருவாயின. தமிழகத்தில் நாயக்கர், மராட்டியர் ஆட்சிக் காலங்களில், வழிச் செல்வோர்க்காக மிகுதியான சத்திரங்கள் கட்டப்பட்டன.

6. **உலகம் நிலைபெற்றிருப்பதற்கான காரணங்கள் எவையென இளம்பெருவழுதி குறிப்பிட்டுள்ளார் ?**

➤ தனித்து உண்ணாமை என்பது, தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை.

➤ அமிழ்தமே கிடைத்தாலும் தாம் மட்டுமே தனித்து உண்ணாது, பிறருக்கும் கொடுக்கும் நல்லோர் உள்ளதால் உலகம் நிலைத்திருக்கிறது என, இளம்பெருவழுதி குறிப்பிட்டுள்ளார்.

### சிறுவினாக்கள்

1. **“பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ” – வினவுவது ஏன்?**

★ இல்லத்தின் பெரிய வாயிலை இரவில் மூடுவதற்கு முன்னர், புதியவர் (விருந்தினர்) எவரேனும் உளரா என அறிய “உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா?” என்று கேட்கும் வழக்கம், பழந்தமிழரிடையே இருந்ததைக் குறுந்தொகை கூறுகிறது.

★ அமுதமே கிடைத்தாலும் அதனைத் தாம் மட்டுமே தனித்து உண்ணாமல், பிறருடன் பகிர்ந்து உண்பதைப் பண்பாடாகக் கொண்ட தமிழர், பசித்தவர் முகம் கண்டு புதிதாக வந்தவருக்கும் உணவிட்டு மகிழ்ந்தனர்.

★ நம் முன்னோர்களோ, தங்கள் வீடுதேடி வந்தவர்கள், புதியவராயினும், பசித்து வந்தவருக்கு உணவும் தங்கிச் செல்ல இடமும் கொடுத்து உபசரிப்பதைச் சிறப்பாகக் கருதினர்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**2. புதியதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர். (PTA - 3)**
**திருவிழாக் காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காணமுடிகிறது.**
**இப்படியாகக் காலமாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த கருத்துகளை எழுதுக.**

★ அறிமுகம் இல்லாத புதியவர்களை விருந்தினர்களாக ஏற்பது இல்லை. திருவிழாக் காலங்களில் வீட்டிற்கு வரும் சுற்றத்தவர்களை அழைத்து, அன்போடு உணவிடுவதை விருந்தளிப்பதாகச் சொல்கின்றனர்.
★ பண்டைத் தமிழர் இல்லங்களிலும் உள்ளங்களிலும் விருந்தோம்பல் பண்பாடு செழித்திருந்தது. அந்த உயரிய தமிழ்ப் பண்பாடு, இன்றைய தமிழர்களிடம் குறைந்து வருகிறது.
★ நெருக்கமான சுற்றத்தவர்களை விருந்தினர் எனக் கூறுகின்றனர். பிறந்தநாள், நினைவுநாள் எனக் கொண்டாடும்போது அளிக்கும் உணவை விருந்து என்கின்றனர்.
★ வரவேற்பு, திருமணம் போன்ற நிகழ்வுகளில் இடப்படும் உணவை விருந்துணவு என்கின்றனர். விருந்தினரை உபசரிப்பதற்கும், விருந்து கொடுப்பதற்கும் உரிய வேறுபாடுகளை அறியாமல் கூறித் திரிகின்றனர்.

## கூடுதல் வினாக்கள்

**3. வாழை இலையில் விருந்து என்பது தமிழர் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்று என்பதை விளக்குக.**
**வாழை இலைப் பயன்பாடு : (PTA - 5)**

➤ தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு. தலைவாழை இலையில் விருந்தினர்க்கு உணவளிப்பது, நம் மரபாகக் கருதப்படுகிறது. நம் மக்கள், வாழை இலையின் மருத்துவப் பயன்களை அன்றே அறிந்திருந்தனர்.

**உணவு பரிமாறும் தமிழர் முறை :**

➤ வாழை இலையின் குறுகலான பகுதி உண்பவரின் இடப்பக்கமும், இலையின் விரிந்த பகுதி வலப்பக்கமும் வரவேண்டும். நாம் வலக்கையால் உணவு உண்ணும் பழக்கம் உடையவர்கள்.
➤ உப்பு, ஊறுகாய், இனிப்பு முதலான அளவில் சிறிய உணவு வகைகளை இலையின் இடப்பக்க ஓரத்திலும், காய்கறி, கீரை, கூட்டு முதலான அளவில் பெரிய உணவு வகைகளை வலப்பக்க ஓரத்திலும், நடுவில் சோறும் வைத்து எடுத்து உண்ண வசதியாகப் பரிமாறுவர்.
➤ உண்பவர் மனமறிந்து, அவர் விரும்பிச் சாப்பிடும் உணவு வகைகளைப் பரிவுடன் பரிமாறுவர்.

**4. மினசோட்டா தமிழ்ச்சங்கம் கொண்டாடும் “வாழையிலை விருந்து விழா”வைப் பற்றி எழுதுக.**

➤ அமெரிக்காவில் உள்ள மினசோட்டா தமிழ்ச் சங்கம், ஆண்டுதோறும், “வாழையிலை விருந்து விழா”வைக் கொண்டாடி வருகிறது. தமிழரின் பாரம்பரிய உணவு வகைகளைக் கொண்டு வாழையிலையில் விருந்து வைக்கின்றனர்.
➤ முருங்கைக்காய் சாம்பார், மோர்க்குழம்பு, வேப்பம்பூ ரசம், வெண்டைக்காய்க் கூட்டு, தினைப் பாயசம், அப்பளம் எனச் சுவையாக விருந்து கொடுக்கின்றனர். அங்கு வாழும் தமிழர் பலரும் இந்த விருந்தில் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றனர். தொடர்ந்து பல தமிழ்ப் பண்பாட்டு நிகழ்வுகளையும் நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

**5. வாழை இலையில் உணவு உண்பதால் கிடைக்கும் மருத்துவப் பயன் குறித்து அறிக.**

➤ வாழை இலையில் உணவு உண்பவர்களுக்கு நோய் வருவதில்லை. தொடர்ந்து வாழையிலையில் உணவு உட்கொண்டு வந்தால் தோல் பளபளப்பாகும். உடல் நலம் பெறும். மந்தம், வலிமைக்குறைவு, இளைப்பு போன்ற பாதிப்புகள் நீங்கும். பித்தம் தணியும்.
➤ வாழை இலையின்மேல் இருக்கும் பச்சைத் தன்மை, உணவை எளிதில் சீரணமடையச் செய்வதுடன், வயிற்றுப் புண்ணை ஆற்றும் தன்மை கொண்டது. நன்கு பசியைத் தூண்டும்.
➤ வாழையிலையில் உண்பவர், நோய்நொடியின்றி வாழ முடியும். இவையே வாழையிலையில் உண்பதால் கிடைக்கும் மருத்துவப் பயன்கள் ஆகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## நெடுவினா

**1. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக. (Mar.-23)**

**முன்னுரை :**

"வந்த விருந்தினரை முதலில் உண்ண வைத்துப் பின்னர் மீதியை உண்ணுபவனுடைய விளை நிலத்திற்கு விதையும் விதைக்க வேண்டுமோ" என்கிறது குறட்பா. வீட்டிற்கு வந்த விருந்தினரை உபசரித்தல், தமிழரின் இயல்பில் ஊறிய பண்பு என்பது இக்குறளால் விளங்கும்!

**இனிதே வரவேற்றல் :**

வீட்டிற்கு வந்த விருந்தினரிடம் "வாருங்கள், அமருங்கள், நலமா?" எனச் சில அன்பான வார்த்தைகளைக் கூறி, முகமலர்ச்சியுடன் வரவேற்றேன்.

**உணவும் உபசரிப்பும் :**

வீட்டிற்கு வந்த விருந்தினருக்கு அவர் விரும்பும் அறுசுவை உணவைத் தயார் செய்தபின்னர், அவரை உணவு உண்ண வருமாறு புன்முறுவலுடன் அழைத்துக் கை கால் கழுவத் தண்ணீர் கொடுத்தபின், உட்காரத் தடுக்கு போட்டு, அமர வைத்தேன்.

தமிழ்ப் பண்பாட்டை மறவாது தலைவாழை இலைவிரித்து, விருந்தினருக்கு உணவைப் பரிமாறத் தொடங்கினேன். விருந்தினரின் இடப்பக்கம் இலையின் குறுகலான பகுதியும், வலப்பக்கம் விரிந்த பகுதியும் இருக்குமாறு, வாழை இலையை விரித்து வைத்தேன்.

வாழை இலையின் குறுகலான இடப்பக்க ஓரத்தில் உப்பு, ஊறுகாய், இனிப்பு முதலான அளவில் சிறிய உணவு வகைகளை வைத்தேன். வாழை இலையின் விரிந்த வலப்பக்க ஓரத்தில் காய்கறி, கீரை, கூட்டு முதலான அளவில் பெரிய உணவு வகைகளையும், நடுவில் சோறும் வைத்துப் பரிமாறினேன். உண்பவரின் மனம் அறிந்து அவர் விரும்பிச் சாப்பிட்ட உணவு வகைகளை, மீண்டும் மீண்டும் பரிவுடன் பரிமாறினேன்.

**அன்பு வெளிப்பாடு :**

பருகுவதற்கு ஒரு குவளையில் நீரைக் கொண்டுவந்தேன். பருகியபின், குவளையில் எஞ்சிய நீரைக் கொண்டு அவர் கைகழுவ உதவினேன். பிறகு அவர் தன் கைகளைத் துடைத்துக் கொள்ளச் சிறு துண்டினைக் கொடுத்தேன். உணவு உண்டு மகிழ்ந்தவருக்கு ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு கொடுத்தேன். தன் வாய் சிவக்கச்சிவக்க, அவர் தாம்பூலம் தரித்துக் கொண்டார்.

'திருப்தியாக உணவு உண்டீர்களா?' என அன்புடன் விசாரித்தேன். அவர் வீட்டில் உள்ளவர்களுக்குக் கொண்டு செல்லச் சில பலகாரங்களை அவரிடம் கொடுத்தேன். அவர் விடைபெற்றுப் புறப்பட்டபோது அவருடன் ஏழடி நடந்து சென்று வழியனுப்பி வைத்தேன்.

**முடிவுரை :**

விருந்தினரைப் போற்றும் தமிழர் மரபு அறிந்து அன்போடும் பண்போடும் உபசாரம் செய்து முறையாக வழியனுப்பி வைத்தேன் என நினைக்கிறேன்.

## கூடுதல் வினா

**2. விருந்தினரைப் பேணுதல், பசித்தவருக்கு உணவிடல் போன்ற தமிழர் பண்பாடு, இன்றைய சூழலில் உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலையும், பசித்து வந்த ஒருவருக்கு நீங்கள் உணவிட்ட செயலையும் அழகுற விவரிக்கவும். (PTA - 1, Sep. -20)**

வைகறைப் பொழுதில் வீட்டு வாசலில் மகிழ்வுந்து ஒன்று வந்து நின்றது. என் தந்தை விரைந்து சென்று, அதில் வந்தோரைப் பரிவுடன் மலர்முகத்தோடு நோக்கி வாருங்கள் வாருங்கள் என, வரவேற்றார். அவர்களுடைய பொருள்களையும் பெட்டியையும் எடுத்துக்கொண்டு, வீட்டிற்குள் அழைத்து வந்தார். வீட்டில் இருந்த அம்மா, தங்கை, நான் என அனைவரும் வந்தவர்களை வாருங்கள் என்று வரவேற்று நலம் விசாரித்தோம். அவர்கள், காலைக்கடனை முடிக்க நான் உதவி செய்தேன்.

முகமலர்ச்சியோடு முன்அறையின் கூடத்தில் அமர்ந்தோம். அம்மா எல்லாருக்கும் தேநீர் கொடுத்து உபசரித்தார். சிறிது நேரம் கிராமத்து நிகழ்வுகள், உறவுகள் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தோம்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



கோடைக் காலமாதலால், குளிர்ந்த நீரில் குளிப்பதற்குத் தேவையானவற்றைக் கொடுத்து, நீராடச் செய்தோம். காலைச் சிற்றுண்டியாகப் பூப்போன்ற இட்லி, சட்னி, சாம்பார், பூரி, கிழங்கு ஆகியவற்றை விருப்பமறிந்து பரிமாறி மகிழ்ந்தோம். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்துக்கொண்டே, ஓய்வெடுக்க ஏற்பாடு செய்தோம்.

அறுசுவை உணவு மதியச் சாப்பாட்டுக்குத் தயாரானது. மிக எளிமையாகவே இருந்தது. மதிய உணவு – வாழையிலையில் முதலில் இனிப்புக்காக வெள்ளைச் சர்க்கரை, பொரியல், கூட்டு, கீரைவடை, மாங்காய்ப் பச்சடி, வடை, பாயசத்தோடு விருந்து அளித்தோம். விருந்தினர் தேவை அறிந்து பரிமாறி உபசரித்தோம். உண்ட களைப்பு தொண்டருக்கும் உண்டு அல்லவா! ஆதலால் சிறிது நேரம் ஓய்வெடுத்துத் தூங்கினர். எல்லாரும் எழுந்தவுடன், மாலைச் சிற்றுண்டி கொடுத்து, மகிழுந்தில் அடுத்த வேலைக்கு அனுப்பி வைத்தோம்.

நம் முன்னோர்களோ, தங்கள் வீடுதேடி வந்தவர்கள், புதியவராயினும், பசித்து வந்தவருக்கு உணவும் தங்கிச் செல்ல இடமும் கொடுத்து உபசரிப்பதைச் சிறப்பாகக் கருதினர். இதனை விருந்தோம்பல் என எல்லோரும் போற்றினர். அமுதமே கிடைத்தாலும் அதனைத் தாம் மட்டுமே தனித்து உண்ணாமல், பிறருடன் பகிர்ந்து உண்பதைப் பண்பாடாகக் கொண்ட தமிழர், பசித்தவர் முகம் கண்டு புதிதாக வந்தவருக்கும் உணவிட்டு மகிழ்ந்தனர்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் அறத்தைத் தலையாய அறமாகக் கருதிப் போற்றினர். இன்றைக்கும் பசியால் வாடுபவரைக் கண்டால் கேட்காமலே பசிபோக்கும் எண்ணம் தமிழராகிய என் போன்றவரிடம் உள்ளது. நேற்றுக்கூட பசியோடு வாடிய ஒருவருக்குக் காலைச் சிற்றுண்டி வாங்கிக் கொடுத்து உண்ணச் செய்தேன். அவர் பசி நீங்கி முகம் மலர்ந்ததைக் கண்டு, நானும் மகிழ்ச்சி அடைந்தேன்.

## பலவுள் தெரிக

1. பின்வருவனவற்றுள் முறையான தொடர் – **(PTA -4)**

அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.

ஆ தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.

இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.

ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.

**விடை : இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.**

2. 'விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு'. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை

அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து

இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து

**விடை : ஆ) இன்மையிலும் விருந்து**

## கூடுதல் வினாக்கள்

3. விடுபட்ட உணவு வகைகளை வரிசைப்படுத்துக. **(PTA -4)**

பச்சரிசியைக் கொண்டு ______ செய்து, பாசிப்பருப்பினை வறுத்து ______ பிடித்து, கேரட்டைத் துருவி நெய்யிட்டு ______ செய்து முடித்த அம்மா, இறுதியாக உருளைக்கிழங்கைச் ______ செய்து அனைவரையும் உணவு உண்ண அழைத்தார்.

அ) பொங்கல், உருண்டை, சீவல், அல்வா ஆ) சீவல், உருண்டை, அல்வா, பொங்கல்

இ) பொங்கல், உருண்டை, அல்வா, சீவல் ஈ) உருண்டை, சீவல், அல்வா, பொங்கல்

**விடை : இ) பொங்கல், உருண்டை, அல்வா, சீவல்**

4. "மருந்தே ஆயினும் விருந்தோடு உண்" என்னும் தொடர் இடம் பெற்ற நூல், **(PTA -1)**

அ) கொன்றை வேந்தன் ஆ) குறுந்தொகை இ) திருக்குறள் ஈ) நற்றிணை

**விடை : அ) கொன்றை வேந்தன்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



5. திருக்குறளில் 'விருந்தோம்பல்' என்ற அதிகாரம் இடம்பெற்றுள்ள இயல்,
அ) இல்லறவியல் ஆ) நட்பியல் இ) குடியியல் ஈ) ஊழியல்
**விடை : அ) இல்லறவியல்**

6. தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை,
அ) இன்மையிலும் விருந்து ஆ) அல்லிலும் விருந்து
இ) நிலத்திற்கேற்ற விருந்து ஈ) தனித்து உண்ணாமை
**விடை : ஈ) தனித்து உண்ணாமை**

7. "அமிழ்தமே கிடைத்தாலும் தமிழர்கள் தனித்து உண்ணாமல், பிறருக்கும் கொடுப்பர்" என்று புறநானூறு வழி கூறியவர்,
அ) கபிலர் ஆ) பரணர்
இ) கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி ஈ) இடைக்காடனார்
**விடை : இ) கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி**

8. பின்வருவனவற்றுள் முறையான தொடர்,
அ) தமிழர்கள் நன்கு அறிந்திருந்தனர் உணவு பரிமாறும் முறையை
ஆ) தமிழர்கள் அறிந்திருந்தனர் நன்கு உணவு பரிமாறும் முறையை
இ) தமிழர்கள் பரிமாறும் உணவு முறையை நன்கு அறிந்திருந்தனர்
ஈ) தமிழர்கள், உணவு பரிமாறும் முறையை நன்கு அறிந்திருந்தனர்.
**விடை : ஈ) தமிழர்கள், உணவு பரிமாறும் முறையை நன்கு அறிந்திருந்தனர்.**

9. "விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண
மேன்மேலும் முகமலரும் மேலோர் போல" எனக் கூறும் நூல்,
அ) சிலப்பதிகாரம் ஆ) திருக்குறள் இ) கலிங்கத்துப்பரணி ஈ) புறநானூறு
**விடை : இ) கலிங்கத்துப்பரணி**

10. நெய்தல் நிலத்தவர், பாணர்களை வரவேற்றுக் கொடுத்தவையாகச் சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுபவை எவை ?
அ) குழல்மீன் கறியும் பிறவும் ஆ) ஆரல் மீன் கறியும் உப்பும்
இ) உப்பும் முத்தும் ஈ) மீன் கறியும் நண்டும்
**விடை : அ) குழல்மீன் கறியும் பிறவும்**

11. விருந்தினரைப் போற்றிப் பேணல் பழந்தமிழர் மரபு என்பதை உணர்த்தியவர்,
அ) திருவள்ளுவர் ஆ) தொல்காப்பியர் இ) இளங்கோவடிகள் ஈ) செயங்கொண்டார்
**விடை : இ) இளங்கோவடிகள்**

12. கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள், விருந்தும் ஈகையும், செய்வதாகக் குறிப்பிட்டுள்ளவர் ______,
அ) கம்பர் ஆ) தொல்காப்பியர் இ) இளங்கோவடிகள் ஈ) செயங்கொண்டார்
**விடை : அ) கம்பர்**

13. விருந்தோம்பல் பற்றிய 17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம் காணப்படும் இடம்,
அ) சிதம்பரம் ஆ) மதுரை இ) மாமல்லபுரம் ஈ) திருச்சி
**விடை : அ) சிதம்பரம்**

14. "வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரெனவே புளித்த மோரும்" – எனப் பாடியவர்,
அ) ஔவையார் ஆ) தொல்காப்பியர் இ) கம்பர் ஈ) திருவள்ளுவர்
**விடை : அ) ஔவையார்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கற்பவை கற்றபின்

1. **வீட்டில் திண்ணை அமைத்த காரணம், விருந்தினர் பேணுதல், தமிழர் பண்பாட்டில் ஈகை, பசித்தவருக்கு உணவிடல் – இவை போன்ற செயல்கள் குறித்து உங்கள் வீட்டிலுள்ளவர்களிடம் கேட்டுத் தெரிந்து வந்து கலந்துரையாடல் செய்க.**

**மாணவர்கள்** : வணக்கம் ஐயா!

**ஆசிரியர்** : வணக்கம். அனைவரும் அமருங்கள். இன்று விருந்து போற்றுதும் பற்றி, நம் வகுப்பில் கலந்துரையாடல் செய்வோமா?

**மாணவர்கள்** : சரி ஐயா!

**ஆசிரியர்** : யார் யார் கலந்துரையாடலில் கலந்து கொள்ளப் போகிறீர்கள்? கையை உயர்த்துங்கள்!

**தேவி** : ஐயா, வீட்டில் ஏன் திண்ணை வைத்துக் கட்டினார்கள்?

**விஸ்வா** : ஒ.... எனக்குத் தெரியுமே!

**தேவி** : எங்கே... சொல்லுங்கள் பார்ப்போம்!

**விஸ்வா** : நம் வீட்டிற்கு யாராவது புதியவர் வந்தால் அமரவும், படுத்து ஓய்வு எடுத்துக் கொள்ளவும், திண்ணை அமைக்கப்பட்டது.

**பத்மா** : விருந்தினரைப் பேணும்முறை குறித்துக் கூறுங்கள்.

**தமிழ்மலர்** : விருந்தினர்க்கு இயன்ற அளவுக்கு நல்ல சுவையான உணவு அளித்து, அன்புடன் உபசரிப்பதுதான் நம் தமிழ்ப் பண்பாடு ஆகும்.

**தேவசேனாபதி** : வறியவருக்கு ஈதல், பசித்தவருக்கு உணவிடல் என்பன, நம்முடைய தமிழ்ப் பண்பாட்டின் முக்கியக் கூறுகளாகும்.

**கோபிகா** : வீடு தேடிப் பசியோடு வந்தவருக்கு இல்லை என்று சொல்லாமல், தம் வீட்டிலிருந்த விதை நெல்லைக் குத்திச் சமைத்துச் சோறு போட்ட பரம்பரை, நம் தமிழ்ப் பரம்பரை.

**முத்துக்குமார்** : பிறருக்கு உதவுதல், பசித்தவருக்கு உணவு கொடுத்தல், விருந்தினரை உபசரித்தல் போன்றவை, தமிழ்ப் பண்பாட்டின் அடையாளங்களாகும்.

**ஆசிரியர்** : சரியாகக் கூறினீர்கள் மாணவர்களே! நன்றி!

2. **“இட்டதோர் தாமரைப்பூ**
**இதழ்விரித் திருத்தல் போலே**
**வட்டமாய்ப் புறாக்கள்கூடி**
**இரையுண்ணும்.........” – பாரதிதாசனார்**

**இவ்வாறாகக் கவிதைகளில் பதிவு செய்யப்பட்டுள்ள பகிர்ந்துண்ணல் குறித்துப் பேசுக.**

“பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை”

என்பது நம் பாட்டன் நமக்கெனப் படைத்தளித்த அமுதக் குறள் இல்லையா?

“இருப்பதைப் பகிர்ந்து உண்டு பல உயிர்களையும் பாதுகாப்பது, நூல் எழுதியவர்கள் தொகுத்த அறங்களுள் எல்லாம் முதன்மையான அறமாகும்” என்பதுதானே அத்திருக்குறளின் கருத்து!

கிடைத்தற்கரிய அமிழ்தமே கிடைத்தாலும் தான்மட்டும் தனித்து உண்ணாமல் விருந்தினரோடு சேர்ந்து பகுத்துண்டவர்கள் தமிழர் என்பதை,

“இந்திரர் அமிழ்தம் இயைவ தாயினும்
இனிதெனத் தமியர் உண்டலும் இலரே” (புறம் – 182)

என்று புறநானூறு கூறுகிறது.

நண்பர்களுக்கும், நட்பின்றி, முன்பின் அறியாது புதிதாக வந்தவர்க்கும் நம்மிடம் உள்ளது சிறிதளவு உணவாக இருந்தாலும் அதனைப் பங்கிட்டுக் கொடுத்து உண்ணுதலே சிறந்ததாகும்.

அவ்வாறு இல்லாமல், வீட்டின் வாயிற்கதவை அடைத்துக்கொண்டு சமைத்த உணவைத் தாம்மட்டும் உண்டு வாழ்கின்ற மக்களுக்கு மேலுலகக் கதவு மூடப்படும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இதனைத்தான்,

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



'நட்டார்க்கும் நள்ளா தவர்க்கும் உளவரையால்
அட்டது பாத்து உண்டல் அட்டு உண்டல் – அட்டது
அடைத்திருந்து உண்டு ஒழுகும் ஆவதில் மாக்கட்கு
அடைக்குமாம் ஆண்டைக் கதவு''

என்கிறது நாலடியார்.

அகநானூற்றில் பெருந்தேவனார் பாடிய பாலைத்திணைப் பாடல், விருந்தோம்பலை 'இல்வாழ்க்கைத் தொழில்' என்றே கூறுகிறது. அச்செய்யுள், "நாளும்

மனைமுதல் வினையொடும் உவப்ப,
நினை – மாண்நெஞ்சம் நீங்குதல் மறந்தே''

என்கிறது அகநானூறு. பிறர் உயிருக்கும் மதிப்புக் கொடுத்து வாழ்வதே, பகிர்ந்துண்ணும் வாழ்வாகும்.

**விடைக்கேற்ற வினா அமைக்க**

1. நாயக்கர், மராட்டியர் ஆட்சிக் காலங்களில் மிகுதியான சத்திரங்கள், வழிச்செல்வோர்க்காகக் கட்டப்பட்டன. (PTA -2)

**விடை :** எவ்வெவர் ஆட்சிக் காலத்தில் வழிச்செல்வோர்க்காக மிகுதியான சத்திரங்கள் கட்டப்பட்டன?

2. அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச்சங்கம், 'வாழை இலை விருந்து விழாவை' ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது. (PTA -2)

**விடை :** ஆண்டுதோறும் எந்த விழாவை அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச்சங்கம் கொண்டாடி வருகிறது?

3. நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர். (Sep. -20)

**விடை :** நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்று எவற்றைக் கொடுத்து உபசரித்தனர்?

## கவிதைப்பேழை

# 2. காசிக்காண்டம்

**(அதிவீரராம பாண்டியர்)**

### குறுவினாக்கள்

1. **விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.**

★ வணக்கம். 'வருக! வருக!' என முகமலர்ச்சியுடன் அழைத்தல்.
★ அமருங்கள் என அன்பாகக் கூறி அருகில் அமர்தல்.
★ 'நலமாக இருக்கிறீர்களா?' என விசாரித்தல். 'வீட்டில் அனைவரும் நலமா?' என வினவுதல்
★ முதலில் நீர் பருகுங்கள் அல்லது தேநீர் அருந்துங்கள் என உபசரித்தல்.

### கூடுதல் வினாக்கள்

2. **அதிவீரராம பாண்டியர் – குறிப்புத் தருக.**

➤ முத்துக் குளிக்கும் கொற்கையின் அரசராகவும், தமிழ்ப் புலவராகவும் திகழ்ந்தவர். தென்காசியில் இருக்கும் சிவன் கோவிலைக் கட்டியவர். காசிக்காண்டம், நைடதம், லிங்கபுராணம், நறுந்தொகை, வாயு சம்கிதை, திருக்கருவை அந்தாதி, கூர்ம புராணம் ஆகிய நூல்களை இயற்றியவர்.

3. **காசிக்காண்டம் – குறிப்பு எழுதுக.**

➤ காசி நகரத்தின் பெருமைகளை எடுத்துரைக்கும் நூல் காசிக்காண்டம்.
➤ இதில் துறவு, இல்லறம், பெண்களுக்குரிய பண்புகள், வாழ்வியல் நெறிகள், மறுவாழ்வில் அடையும் நன்மைகள் ஆகியன இடம் பெற்றுள்ளன.

4. **'விருந்தினராக ஒருவன் வந்து எதிரின் வியத்தல்' – விளக்குக.**

➤ விருந்தினன் ஏழையாயினும், தன்னை ஒரு பொருட்டாய் மதிக்காவிட்டால், அத்தகையோரின் இல்லத்துள் காலடி எடுத்து வைக்கமாட்டான். அதனால்தான், விருந்தளிப்பவனிடம் இருக்க வேண்டிய ஒன்பது பண்புகளுள் முதலாவதாக 'வியத்தல்' என்பது வைக்கப்பட்டுள்ளது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**5. அதிவீரராம பாண்டியர் விருந்தினரை ஏன் திருந்துற நோக்க வேண்டும் என்கிறார் ?**

- அனிச்சப் பூவை முகர்ந்து பார்த்தால் வாடிவிடும். விருந்தினரை அன்பின்றி நோக்கினாலே, வாடிவிடுவர் என்கிறது திருக்குறள். அதனால்தான் அதிவீரராம பாண்டியர், விருந்தினரை விருந்தளிப்பவர் மனக்கோட்டமின்றி முகமலர்ச்சியுடன் நோக்கல் வேண்டும் என்கிறார்.

## கூடுதல் சிறுவினா

**1. பின்பற்றத்தக்க நன்னெறிகள் என அதிவீரராம பாண்டியர் கூறுவன யாவை ? (அல்லது) இல்லறத்தில் விருந்தோம்பல் செய்யும் முறைகளைக் கூறுக.** (Sep.-20)

- விருந்தினராய் ஒருவர் வந்து நின்றால், அவரை வியந்து உரைத்தல் வேண்டும்.
- நல்ல சொற்களை இனிமையாகப் பேசவேண்டும். முகமலர்ச்சியுடன் நோக்கவேண்டும்.
- உங்கள் வரவு நல்வரவாகட்டும் என, வாயாரக் கூறி வரவேற்க வேண்டும்.
- அவர் எதிர் நிற்றலும் மனம் மகிழுமாறு உரையாடுதலும் வேண்டும்.
- அவர் அருகே நெருக்கமாக அமர்ந்து, உணவு அளித்து உபசரித்தல் வேண்டும்.
- விடைபெற்றுப் புறப்படும்போது, சிறிது தூரம் அவருடன் செல்ல வேண்டும்.

## பலவுள் தெரிக

1. காசிக்காண்டம் என்பது ______. (Mar.-24)

அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல் ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்
இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல் ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

**விடை : இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்**

## கூடுதல் வினாக்கள்

2. ‘வெற்றி வேற்கை’ என்ற நூலின் வேறுபெயர்,

அ) நறுந்தொகை ஆ) நைடதம் இ) வாயுசம்கிதை ஈ) கூர்ம புராணம்

**விடை : அ) நறுந்தொகை**

3. கொற்கை ______ சிறப்புற்று விளங்கியது.

அ) கல்வியில் ஆ) வேளாண்மையில்
இ) மீன்பிடித்தலில் ஈ) முத்துக் குளித்தலில்

**விடை : ஈ) முத்துக் குளித்தலில்**

4. “உப்பில்லாக் கூழ் இட்டாலும் உண்பதே அமிர்தம் ஆகும்” என்ற பாடலடி இடம்பெற்றுள்ள நூல்,

அ) காசிக்கண்டம் ஆ) நைடதம் இ) விவேக சிந்தாமணி ஈ) வெற்றி வேற்கை

**விடை : இ) விவேக சிந்தாமணி**

5. விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கமாகக் காசிக்காண்டத்தில் கூறப்பட்டுள்ளவற்றின் எண்ணிக்கை,

அ) எட்டு ஆ) ஒன்பது இ) பத்து ஈ) பன்னிரண்டு

**விடை : ஆ) ஒன்பது**

6. காசிக்காண்டம்,

1) துறவு, இல்லறம் பற்றிக் கூறுகிறது.
2) பெண்களுக்குரிய பண்புகளைக் கூறுகிறது.
3) வாழ்வியல் நெறிகளைக் கூறுகிறது.
4) மறுவாழ்வில் அடையும் நன்மைகளைக் கூறுகிறது.

அ) அனைத்தும் சரி ஆ) 1, 2 சரி இ) 1, 3 சரி ஈ) 1 மட்டும் சரி

**விடை : அ) அனைத்தும் சரி**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



7. பொருத்துக.

i. நன்மொழி – 1. பெயரெச்சம்

ii. வியத்தல் – 2. வியங்கோள் வினைமுற்று

iii. வருக – 3. தொழிற்பெயர்

iv. உரைத்த – 4. பண்புத்தொகை

அ) 4 3 2 1 ஆ) 3 4 2 1 இ) 2 1 3 4 ஈ) 4 2 1 3

**விடை : அ) 4 3 2 1**

8. கொற்கை, ______ நாட்டின் துறைமுக நகரமாகும்.

அ) பாண்டியர் ஆ) சேரர் இ) சோழர் ஈ) பல்லவர்

**விடை : அ) பாண்டியர்**

9. நறுந்தொகை என்று அழைக்கப்படும் நூல் எது ?

அ) கொன்றை வேந்தன் ஆ) காசிக்கலம்பகம் இ) வெற்றிவேற்கை ஈ) காசிக்கண்டம்

**விடை : இ) வெற்றிவேற்கை**

10. ஒருவரை நலம் வினவிக் கூறும் விருந்தோம்பல் சொற்களே ______.

அ) வியந்து உரைத்தல் ஆ) வரவேற்றல் இ) விடைபெறுதல் ஈ) முகமன்

**விடை : ஈ) முகமன்**

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளி.**

விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே.

1. இப்பாடலின் ஆசிரியர் யார் ?

அ) கீரந்தையார் ஆ) பரஞ்சோதி முனிவர்

இ) மோசிக்கீரனார் ஈ) அதிவீரராம பாண்டியர்

**விடை : ஈ) அதிவீரராம பாண்டியர்**

2. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது ?

அ) நைடதம் ஆ) நறுந்தொகை இ) வெற்றிவேற்கை ஈ) காசிக்காண்டம்

**விடை : ஈ) காசிக்காண்டம்**

3. ‘முகமன்’ – சொல்லின் பொருள்,

அ) விருந்தோம்பல் சொல் ஆ) பரிந்துரை

இ) பாசமொழி ஈ) உபசாரம்

**விடை : அ) விருந்தோம்பல் சொல்**

4. இப்பாடலில் பயின்று வரும் அடியெதுகைச் சொற்களை எழுதுக.

அ) இனிது, இருத்தல், இவ்வொன்பான் ஆ) விருந்து, வியத்தல், உறைத்தல், இருத்தல்

இ) மகிழ்வன, மற்று, முகமன், போமெனில் ஈ) விருந்து, திருந்து, பொருந்து

**விடை : ஈ) விருந்து, திருந்து, பொருந்து**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## இலக்கணக்குறிப்பு

**நன்மொழி** – பண்புத்தொகை

**வியத்தல், நோக்கல், எழுதல், உரைத்தல், செப்பல், இருத்தல், வழங்கல்** – தொழிற்பெயர்கள்

ஒன்பான் ஒழுக்க**மும்** – முற்றும்மை

**பண்பே** – ஏ – ஈற்றசை

**வருக** – வியங்கோள் வினைமுற்று

## பகுபத உறுப்பிலக்கணம்

1. **உரைத்த – உரை + த் + த் + அ**

**உரை** – பகுதி

**த்** – சந்தி

**த்** – இறந்தகால இடைநிலை

**அ** – பெயரெச்ச விகுதி.

2. **வருக – வா (வரு) + க**

**வா** – பகுதி, '**வரு**' என ஆனது விகாரம்

**க** – வியங்கோள் வினைமுற்று விகுதி.

3. **பரிந்து – பரி + த் (ந்) + த் + உ**

**பரி** – பகுதி;

**த்** – சந்தி '**ந்**' ஆனது விகாரம்

**த்** – இறந்தகால இடைநிலை

**உ** – வினையெச்ச விகுதி.

4. **நோக்கல் – நோக்கு + அல்**

**நோக்கு** – பகுதி

**அல்** – தொழிற்பெயர் விகுதி.

## புணர்ச்சி விதிகள்

1. **இவ்வொன்பான் – இ + ஒன்பான்**

'முச்சுட்டின் முன்னர் உயிர் எய்தின் வவ்வும் தோன்றுதல் நெறி' என்னும் விதிப்படி,

(இ + வ் + ஒன்பான்)

'தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்' என்னும் விதிப்படி, (இவ்வ் + ஒன்பான்)

'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி, (இவ்வொன்பான்)

## கற்பவை கற்றபின்

1. **நெடுநாளாகப் பார்க்க எண்ணியிருந்த உறவினர் ஒருவர் எதிர்பாராத வகையில் உங்கள் வீட்டிற்கு வருகிறார். நீங்கள் அவரை எதிர்கொண்டு விருந்து அளித்த நிகழ்வினை விரிவாக எழுதிப் படித்துக் காட்டுக.**

நான் கடைத்தெருவில் நடந்து கொண்டிருந்தபோது, என் எதிரில் எதிர்பாராத விதமாக எனக்கு மிகவும் பிடித்த மாமா வந்து கொண்டிருந்தார். ஓடிப்போய் அவரைக் கட்டிப் பிடித்துக் கொண்டேன். "என்ன மாமா திடுதிப்புன்னு வந்திருக்கீங்க? ஒரு போன்கூட பண்ணல. போங்க மாமா" என்று, அவரை அன்போடு கோபித்துக்கொண்டு வீட்டிற்கு அழைத்து வந்தேன். உட்கார வைத்து அவருக்குக் குடிக்கத் தண்ணீர் தந்தேன். ஓடிப்போய்ப் பக்கத்துக் கடையிலிருந்து அவருக்குப் பிடித்தமான குளிர்பானம் வாங்கி வந்து கொடுத்தேன்.

என் அப்பாவும் அம்மாவும் மாமாவோடு பேசிக் கொண்டிருந்தார்கள். அதற்குள் குளியலறையில் அவர் குளிக்கக் குளியல் கட்டியும், துவட்டத் துண்டும் எடுத்து வைத்தேன். அவர் குளிக்கச் சென்றவுடன், அவர் அணிந்து வந்து கழற்றி வைத்த துணிகளைத் துவைத்துக் காயப்போட்டேன். குளித்தபின் அவர் அணியப் புதுத் துணிமணி கொடுத்தேன்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



அத்தை, அத்தைப் பெண் ஆகியோரைப் பற்றி அவரிடம் நலம் விசாரித்தேன். 'குறைந்தது ஒருவாரம் தங்க வேண்டும் மாமா' என அவரிடம் வாஞ்சையுடன் சொன்னேன். அம்மா தயாரித்த உணவை மாமாவுக்குப் பரிமாற, தலைவாழை இலை விரித்துப் பருக நீரும் வைத்தேன். என் மாமாவுக்கு உணவை நானே பரிமாறினேன். அவர் சுவைத்துச் சாப்பிட்டதை ஆவலோடு கண்டேன். அவர் விரும்பி உண்டவற்றை அடுத்தடுத்துப் பரிமாறினேன். உண்டு முடித்ததும் கை கழுவக் குவளையில் தண்ணீர் கொடுத்தேன். கை துடைக்கச் சிறு துண்டும் கொடுத்தேன்.

உண்டு களைத்த அவர், சிறிது நேரம் ஓய்வெடுக்க உதவினேன். எனக்காக என் மாமா நான்கு நாட்கள் தங்கி இருந்தார். அவர் ஊருக்குக் கிளம்பும்போது, நானும் என் அப்பாவும் பேருந்து நிறுத்தம்வரை சென்று வழியனுப்பி வைத்தோம்.

## கவிதைப்பேழை

# 3. மலைபடுகடாம்

(பெருங்கௌசிகனார்)

### குறுவினாக்கள்

1. 'இறடிப் பொம்மல் பெறுகுவீர்' – இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

★ 'தினைச்சோற்றை உணவாகப் பெறுவீர்' என்பது பொருள்.

### கூடுதல் வினாக்கள்

2. முல்லை நிலத்திலிருந்தும் மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருள்கள் யாவை? (PTA-3, 6)

**முல்லைநிலத்திலிருந்து கிடைக்கும் உணவு வகைகள் :** தினை, அவரை, வரகு, சாமை.

**மருதநிலத்திலிருந்து கிடைக்கும் உணவு வகைகள் :** செந்நெல், வெண்ணெல், கரும்பு, வாழை.

3. ஆற்றுப்படை கூறுவது யாது ?

➤ வள்ளலை நாடிவரும் கூத்தனை எதிர்கொண்டு, "யாம் இவ்வள்ளலிடத்தே சென்று இன்னவெல்லாம் பெற்று வருகின்றோம். நீயும் அந்த வள்ளலிடம் சென்று, வளம் பெற்று வாழ்வாயாக" என்று ஆற்றுப்படுத்தும் கூத்தன் கூறுதல் ஆற்றுப்படை கூறும் செய்தியாகும்.

4. பண்டைய தமிழ்க் கலைஞர்கள் யாவர் ?

➤ கூத்தர், பாணர், விறலியர் ஆகியோர், பண்டைய தமிழ்க் கலைஞர்களாவர்.

5. மலைபடுகடாமில் ஒளிரும் பூங்கொத்துகளுக்குக் கூறப்பட்ட உவமை யாது?

➤ மலைபடுகடாமில் ஒளிரும் பூங்கொத்துகளுக்கு எரியும் நெருப்பு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

6. "நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
மான விறல்வேள் வயிரியம் எனினே" – என்று, யார், யாரிடம் கூறினார் ?

➤ நன்னனைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்ற கூத்தர், பரிசில் பெறப்போகும் கூத்தரிடம் கூறினார்.

### சிறுவினாக்கள்

1. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது ? (PTA -1)

★ கூத்தன் ஒருவன், மற்றொரு கூத்தனை நன்னனிடம் செல்ல ஆற்றுப்படுத்துகிறான்.

★ பகலில் இளைப்பாறிச் செல்லுங்கள்; இரவில் சேர்ந்து தங்குங்கள். அசையும் மூங்கில்கள் ஓசை எழுப்பும் கடினப் பாதையில் சென்று, மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையுங்கள்.

★ அதன்பிறகு நீங்கள் உங்கள் வீட்டிற்குள் போவதுபோலவே அவர்களுடைய வீட்டுக்குள் உரிமையுடன் நுழையுங்கள். அவர்கள் உறவினர்போலவே உங்களுடன் பழகுவர். நீண்ட வழியைக் கடந்து வந்த உங்களின் துன்பம் தீர, இனிய சொற்களைக் கூறுவர்.

★ அங்கே, நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும், தினைச்சோற்றையும் உணவாகப் பெறுவீர்கள். இவையே கூத்தரை ஆற்றுப்படுத்தி கூத்தர் கூறிய நெறிகளாகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கூடுதல் வினாக்கள்

2. **மலைபடுகடாம், ஆற்றுப்படை – இவற்றின் பெயர்க்காரணங்களை எழுதுக.**

**மலைபடுகடாம் :**

- மலையை யானையாக உருவகம் செய்து, மலையில் எழும் பலவகை ஓசைகளை அதன் மதம் என்று விளக்குவதால், இதற்கு மலைபடுகடாம் எனக் கற்பனை நயம் வாய்ந்த பெயர் சூட்டப்பட்டுள்ளது.

**ஆற்றுப்படை :**

- ஆற்றுப்படுத்தும் கூத்தன், வள்ளலை நாடி எதிர்வரும் கூத்தனை அழைத்து, யாம் இவ்விடத்தே சென்று இன்னவெல்லாம் பெற்று வருகின்றோம். நீயும் அந்த வள்ளலிடம் சென்று, வளம் பெற்று வாழ்வாயாக என்று கூறுதல், ஆற்றுப்படை ஆகும்.

3. **"... நெய்க்கண் வேவையொடு குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்" – இடம் சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்** : பெருங்கௌசிகனார் பாடிய மலைபடுகடாம் என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது.

**பொருள்** : 'நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும், தினைச்சோற்றையும் உணவாகப் பெறலாம்' எனக் கூறி ஆற்றுப்படுத்தப்பட்டனர்.

**விளக்கம்** : நன்னனின் ஊர் சென்று பரிசு பெற்ற கூத்தன், பரிசு பெற விரும்பும் கூத்தனிடம், "செல்லும் வழியில் அங்கே நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும் தினைச்சோற்றையும் உணவாகப் பெறுவீர்" என்று கூறி, ஆற்றுப்படுத்தினான்.

4. **"அன்றுஅவண் அசைஇ, அல்சேர்ந்து அல்கி" – இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம்** : பெருங்கௌசிகனார் பாடிய மலைபடுகடாம் என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது.

**பொருள்** : "கானவர் குடியில் கிடைக்கும் உணவைப் பெற்று உண்டு அங்கு இளைப்பாறுங்கள். அன்றைய இரவுப் பொழுதில், அக்கானவரோடு சேர்ந்து தங்குங்கள்."

**விளக்கம்** : நீங்கள் செல்லும் வழியில் கானவர் வாழும் ஊர் இருக்கும். பெருஞ்சுற்றத்தாரோடு நெடுந் தொலைவு நடந்து வந்தமையாலும், உணவு உண்ணாமையாலும் நீங்கள் பெரிதும் வாடி இருப்பீர்கள். விருந்தோம்பலில் சிறந்த கானவர் தரும் உணவை உண்டு, பசியைப் போக்கிக் கொள்ளுங்கள். இரவிலும் அங்கே தங்கி, உடற்களைப்பினைப் போக்கிக் கொள்ளுங்கள். மறுநாள் உங்கள் பயணத்தைத் தொடங்குங்கள்" என்கிறான் ஆற்றுப்படுத்தும் கூத்தன்.

5. **'மலைபடுகடாம்' – நூற் குறிப்புத் தருக.**

பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று, மலைபடுகடாம்.

**வேறுபெயர்** – கூத்தராற்றுப்படை

**அடிகள்** – 583

**உருவகம்** – மலையை யானையாக உருவகம் செய்து, மலையில் எழும் ஒகைளைக் கடாஅம் எனச் சிறப்பித்தது.

**பாட்டுடைத் தலைவன்** – நன்னன் என்னும் குறுநில மன்னன்

**பாடியவர்** – இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்.

6. **பத்துப்பாட்டில் அமைந்த பிற ஆற்றுப்படை நூல்களையும் அவற்றின் ஆசிரியர் பெயர்களையும் எழுதுக.**

| நூல் | ஆசிரியர் |
|---|---|
| திருமுருகாற்றுப்படை | நக்கீரர் |
| பெரும்பாணாற்றுப்படை | கடியலூர் உருத்திரங்கண்ணனார் |
| சிறுபாணாற்றுப்படை | நல்லூர் நத்தத்தனார் |
| பொருநராற்றுப்படை | முடத்தாமக் கண்ணியார் |
| கூத்தராற்றுப்படை | பெருங்கௌசிகனார் |

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## நெடுவினா

**1. ஆற்றுப்படுத்துதல் என்பது, அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக. (PTA -3)**

**முன்னுரை :**

இன்றைய நிலையில் ஒருவன் தனக்குத் தேவையானவற்றைப் புத்திசாலித்தனமாகத் தேர்வு செய்யவும், வாழ்வின் இக்கட்டான தருணங்களில் செய்ய வேண்டியவை எவை என்பதைப் புரிந்துகொண்டு செயலாற்றிடவும் உதவுவதே 'நெறிப்படுத்துதல்' என்னும் வழிகாட்டுதல் பண்பாகும். பண்டைக் காலத்தில் இதனை 'ஆற்றுப்படுத்துதல்' என்றனர்.

**வழிகாட்டலின் பயன்கள் :**

கல்வி கற்றலில் வழிகாட்டல், ஆளுமை வளர வழிகாட்டல், தொழில் தேர்வில் வழிகாட்டல், உடல்நலம் சார்ந்தவற்றில் வழிகாட்டல், ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் செலவிட வழிகாட்டல், தனிநபர் பிரச்சினைக்குத் தீர்வு காண வழிகாட்டல், திருமணம் புரிய வழிகாட்டல் என, வழிகாட்டலில் பல பிரிவுகள் உள்ளன. அவற்றில் சிலவற்றை இங்குக் காண்போம்.

**கல்வியில் வழிகாட்டல் :**

நமது உளப்பண்புகளுக்கும், திறன்களுக்கும் ஏற்ற வகையில் கல்வியில் கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளவும், திறமையாகக் கற்கவும், படிப்பு சார்ந்த பிரிவுகளைத் தேர்ந்தெடுக்கவும் கல்வி வழிகாட்டல் துணைபுரிகிறது. புதிய படிப்புகளை அறியவும் அதற்குத் தேவையான தகுதிகளை வளர்த்துக் கொள்ளவும், கல்வி வழிகாட்டல் துணைபுரியும்.

**தொழில் தேர்விற்கு வழிகாட்டல் :**

வெவ்வேறு பணிகளைப் பெறக்கூடிய வாய்ப்புகள், அப்பணிகளைப் பெறுவதற்கான கல்வித் தகுதிகள், பயிற்சிகள், பணியில் முன்னேறக் கூடிய வாய்ப்புகள் பற்றிய தகவல்களை அளிப்பதே தொழில் தேர்விற்கு வழிகாட்டுதல். இஃது ஒரேயொரு தொழிலைத் தேர்ந்தெடுக்க உதவுவதற்குப் பதிலாகக் குறிப்பிட்ட தொழில்துறையைத் தேர்ந்தெடுக்க உதவி செய்வது ஆகும்.

**தனிநபர் வழிகாட்டுதல் :**

மனவெழுச்சியும், சமநிலையும், மனநலமும் சிறப்பாக அமையத் தனிநபர் வழிகாட்டுதல் தேவைப்படுகிறது. வீண் கவலைகளைத் தடுப்பதற்கும், மனப்போராட்டங்களைத் தவிர்ப்பதற்கும் இவ்வகை வழிகாட்டல் தேவைப்படுகிறது.

**முடிவுரை :**

இவ்வாறாக ஆற்றுப்படுத்தும் பழைய காலப் பண்பு, இன்று வழிகாட்டலாக ஒரு மிகப்பெரிய சேவைத் துறையாக வளர்ந்து நிற்கிறது. நிலம் வாங்குவது தொடர்பாக வழிகாட்டல், திருமணங்களைப் பேசி முடிப்பதற்கு வழிகாட்டல், வாகனங்களை விற்பது வாங்குவது தொடர்பான வழிகாட்டல், அரசு, தனியார் துறைகள் வழங்கும் சேவைகளைப் பெறுவது தொடர்பான வழிகாட்டல் என, இத்துறை செழித்து வளர்ந்து நிற்கிறது.

## பலவுள் தெரிக

1. 'சிலம்பு அடைத்திருந்த பாக்கம் எய்தி' என்னும் அடியில், பாக்கம் என்பது ______.

அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

**விடை : ஈ) சிற்றூர்**

## கூடுதல் வினாக்கள்

2. மலைபடுகடாம் என்ற நூலில் மலையானது ______ உருவகம் செய்யப்பட்டுள்ளது.

அ) மயிலாக ஆ) யானையாக இ) புலியாக ஈ) சிங்கமாக

**விடை : ஆ) யானையாக**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



3. "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" – இப்பழமொழி உணர்த்தும் பொருள், (PTA -6)

அ) காலம் வருமென்று காத்திருந்தால் செயல் கெட்டுவிடும்.

ஆ) உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாகச் செய்துவிட வேண்டும்.

இ) காலம் வரும்வரை முயன்றுகொண்டே இருக்க வேண்டும்.

ஈ) உரிய காலத்தை உணர்ந்து உரிய செயலைத் தேடவேண்டும்.

விடை : ஆ) உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாகச் செய்துவிட வேண்டும்.

4. மலைபடுகடாம் என்ற நூலின் வேறுபெயர்,

அ) கூத்தராற்றுப்படை ஆ) நெஞ்சாற்றுப்படை

இ) பெரும்பாணாற்றுப்படை ஈ) சிறுபாணாற்றுப்படை

விடை : அ) கூத்தராற்றுப்படை

5. மலைபடுகடாம் என்ற நூலை எழுதியவர்,

அ) நப்பூதனார் ஆ) மாங்குடி மருதனார்

இ) இரணிய முட்டத்துப் பெருங்கௌசிகனார் ஈ) கபிலர்

விடை : இ) இரணிய முட்டத்துப் பெருங்கௌசிகனார்

6. 'அலங்குகழை நரலும் ஆரிப் படுகர்' என்னும் தொடரில் 'கழை' என்பது,

அ) குச்சி ஆ) தடி இ) மூங்கில் ஈ) தண்டு

விடை : இ) மூங்கில்

7. மலைபடுகடாம், எத்தொகைநூல்களுள் ஒன்று?

அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு

இ) பதிற்றுப்பத்து ஈ) பதினெண்கீழ்க்கணக்கு

விடை : ஆ) பத்துப்பாட்டு

8. 'கன்று எரி' என்பதில் 'எரி' எனக் குறிப்பிடப்படுவது,

அ) நெருப்பு ஆ) கொம்பு இ) வால் ஈ) நீர்

விடை : அ) நெருப்பு

9. அசோக மரங்கள், எவ்வண்ணப் பூக்களைக் கொண்டது ?

அ) கருமை ஆ) சிவப்பு இ) வெண்மை ஈ) நீலம்

விடை : ஆ) சிவப்பு

10. 'சேட்புலம்பு அகல இனிய கூறி' என்னும் அடியில் 'சேட்புலம்' என்பது,

அ) வழி ஆ) நிலம் இ) நீண்ட வழி ஈ) வழித்தடம்

விடை : இ) நீண்ட வழி

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக. (PTA -3)

"அன்று அவண் அசைஇ, அல்சேர்ந்து அல்கி,
கன்று எரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி,
அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி
நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
மான விறல்வேள் வயிரியம் எனினே",

1. '**அசைஇ**' – இச்சொல்லின் இலக்கணக்குறிப்பு,

அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை

இ) சொல்லிசை அளபெடை ஈ) செய்யுளிசை அளபெடை

விடை : இ) சொல்லிசை அளபெடை

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2. ‘சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி’ – இவ்வடிகளில் **‘பாக்கம்’** என்னும் சொல்லின் பொருள்,
அ) சிற்றூர் ஆ) பேரூர் இ) கடற்கரை ஈ) மூதூர்
**விடை : அ) சிற்றூர்**

3. பாடலில் **கூத்தர்** என்பதனைக் குறிக்கும் சொல் ______.
அ) படுகர் ஆ) வயிரியம் இ) விறல்வேள் ஈ) ஒள்இனார்
**விடை : ஆ) வயிரியம்**

4. பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்கள்,
அ) அன்று, கன்று, அலங்கு, சிலம்பு ஆ) அன்று, அவண், அசைஇ, அல்கி
இ) சேந்த, செயலை, செப்பம், சிலம்பு ஈ) அல்கி, எய்தி, போகி, எனினே
**விடை : அ) அன்று, கன்று, அலங்கு, சிலம்பு**

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

“நும்இல் போல நில்லாது புக்கு,
கிழவிர் போலக் கேளாது கெழீஇச்
சேட்புலம்பு அகல இனிய கூறி
பருஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்”

1. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?
அ) காசிக்காண்டம் ஆ) முல்லைப்பாட்டு இ) மலைபடுகடாம் ஈ) புறநானூறு
**விடை : இ) மலைபடுகடாம்**

2. **‘இறடி’** – இச்சொல்லுக்குரிய பொருள் யாது?
அ) சோறு ஆ) தினை இ) இறைச்சி ஈ) அரிசி
**விடை : ஆ) தினை**

3. மலைபடுகடாம் இவ்வாறும் அழைக்கப்படுகிறது
அ) பொருநராற்றுப்படை ஆ) சிறுபாணாற்றுப்படை
இ) கூத்தராற்றுப்படை ஈ) பெரும்பாணாற்றுப்படை
**விடை : இ) கூத்தராற்றுப்படை**

4. **கெழீஇ** – இச்சொல்லில் உள்ள அளபெடை,
அ) உயிரளபெடை ஆ) ஒற்றளபெடை
இ) செய்யுளிசை அளபெடை ஈ) சொல்லிசை அளபெடை
**விடை : ஈ) சொல்லிசை அளபெடை**

## இலக்கணக்குறிப்பு

**அசைஇ, கெழீஇ** – சொல்லிசை அளபெடைகள்
**பருஉக், குரூஉக்கண்** – இன்னிசை அளபெடைகள்
**எய்தி, கூறி, புக்கு, மலைந்து, அல்கி, ஆடி** – வினையெச்சங்கள்
**பொழிந்த, சேர்ந்த** – பெயரெச்சங்கள்
**கன்றுஎரி, அலங்குகழை** – வினைத்தொகைகள்
**குறை, ஆரிப்படுகர்** – ஆகுபெயர்கள்
**பெறுகுவீர்** – முன்னிலைப் பன்மை வினைமுற்று

## பகுபத உறுப்பிலக்கணம்

1. **மலைந்து – மலை + த் (ந்) + த் + உ**
**மலை** – பகுதி
**த்** – சந்தி ‘ந்’ ஆனது விகாரம்
**த்** – இறந்தகால இடைநிலை
**உ** – வினையெச்ச விகுதி.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2. பொழிந்த – பொழி + த் (ந்) + த் + அ

**பொழி** – பகுதி

**த்** – சந்தி '**ந்**' ஆனது விகாரம்

**த்** – இறந்தகால இடைநிலை

**உ** – பெயரெச்ச விகுதி.

3. கூறி – கூறு + இ

**கூறு** – பகுதி

**இ** – வினையெச்ச விகுதி.

4. எய்தி – எய்து + இ

**எய்து** – பகுதி

**இ** – வினையெச்ச விகுதி.

5. புக்கு புகு + உ

**புகு** – பகுதி, '**புக்கு**' என ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது;

**உ** – வினையெச்ச விகுதி.

6. நில்லாது – நில் + ல் + ஆ + த் + உ

**நில்** – பகுதி

**ல்** – சந்தி

**ஆ** – எதிர்மறை இடைநிலை; **த்** – எழுத்துப்பேறு

**உ** – வினையெச்ச விகுதி.

7. பெறுகுவிர் – பெறு + கு + வ் + இர்

**பெறு** – பகுதி

**கு** – சாரியை

**வ்** – எதிர்கால இடைநிலை

**இர்** – முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி.

## புணர்ச்சி விதிகள்

1. அடைந்திருந்த – அடைந்து + இருந்த

'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்னும் விதிப்படி, (அடைந்த் + இருந்த)

'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி, (அடைந்திருந்த)

## கற்பவை கற்றபின்

1. உணவு, விருந்து குறித்த பழமொழிகளைத் திரட்டி, அவை சார்ந்த நிகழ்வுகளை எடுத்துரைக்க.

எ – கா : 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை'

அ) உப்பிட்டவரை உள்ளளவும் நினை :

அவர் பெயர் இராஜன். தற்போது அவர் இராஜஸ்தான் மாநிலத்தில் ஒரு மாவட்டத்தின் ஆட்சியர். ஆனால், இளமையில் அப்பா, அம்மாவை இழந்து அனாதையான அவரை, ஒரு மாடு மேய்க்கும் தொழிலாளி எடுத்து வளர்த்தார்; படிக்க வைத்தார்; மாவட்ட ஆட்சியர் ஆக்கினார். அந்த நன்றிக்காகத் திரு. இராஜன் அவர்கள், தம் வளர்ப்புப் பெற்றோரைத் தம் மாளிகையிலே தங்க வைத்துப் போற்றிப் பாதுகாக்கிறார். 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்ற பழமொழிக்குச் சான்றாக வாழ்கிறார் திரு. இராஜன்.

ஆ) கொட்டிய பாலை நினைத்துக் குமுறி அழாதே :

36% வட்டி தருவதாகக் கூறியதால், முருகேசன் தனது பணத்தையெல்லாம் ஒரு தனியார் நிதிநிறுவனத்தில் வைப்புநிதியாக முதலீடு செய்தான். மூன்று வருடங்களாகப் பொதுமக்களிடம் கோடிக்கணக்கில் பெற்ற அந்த நிறுவனம், திடீரெனக் காணவில்லை. அஃது எங்கே போனது என, எவருக்கும் தெரியவில்லை. பணத்தை அந்த நிறுவனத்தில் அதிக வட்டிக்காக வைப்புத் தொகையாகச் சேமித்த முருகேசனும் மற்றவர்களும் கதறி அழுதனர். கொட்டிய பாலை நினைத்துக் குமுறி அழாதே என்ற பழமொழியை, அவர்களுக்கு யார் சொல்வது?

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**இ) விருந்தும் மருந்தும் மூன்று வேளைக்கு :**

வசதியான வீடு, நல்ல மனிதர்கள், நல்ல உபசரிப்பு என்பதற்காக ஒருவருடைய வீட்டில் மூன்று வேளைகளுக்குமேல் உண்ணக்கூடாது. நோய்க்காகச் சாப்பிடும் மருந்தானாலும் அந்த நோய் மூன்று வேளைகளில் சரியாக வேண்டும். இல்லையெனில் அந்த மருந்தாலும் பயனில்லை.

**2. பத்தியைப் படித்து, வார இதழ் ஒன்றிற்கு அனுப்பும் வகையில் சமையல் குறிப்பாக மாற்றுக.**

**கம்மங்கூழ்**

பொசுக்குகிறது வெயில். ஒரு துளி மழை பட்டால் வறுத்த உளுந்தின் வாசம் பரப்பும் வறண்ட மண். வெடித்த நிலம். செழித்து விளைகிறது கம்மம் பயிர். உரலில் குத்தி, சுளகில் புடைக்க அதன் உமி நீங்கும். நீர் தெளித்துத் தெளித்து, மீண்டும் உரலில் இடிக்க, அது ஒன்றுடன் ஒன்று ஒட்டி மாவாகும். உப்புக் கலந்து, உலையில் ஏற்றி, கொதிக்கும் நீரில் கரையவிட்டுக் கிண்டக் கட்டியாகி அது சோறாகும். கம்மஞ் சோற்றை உருட்டி வைத்து, பின் மோர் விட்டுக் கரைத்தால், அது கம்மங்கஞ்சி அல்லது கம்மங்கூழ். மோர்மிளகாய் வற்றல், உப்பில் தோய்த்த பச்சை மிளகாய் அல்லது சின்ன வெங்காயம் கடித்துக் கஞ்சியைக் குடித்தால், உச்சி தொட்டு உள்ளங்கால்வரை தேகம் குளிர்ந்து போகும்; அனல் அடங்கும்; உயிர் வரும். கம்பு – கறுப்பு நிறக் கரிசல் மண்ணின் இயற்கைத் தங்கம்.

**சமையல் குறிப்பு – கம்மங்கூழ்**

**தேவையான பொருள்கள் :** கம்பு, உப்பு, மோர், வற்றல் மிளகாய், பச்சை மிளகாய், சின்ன வெங்காயம்.

**செய்முறை :** கம்பை உரலில் குத்தி, உமி நீங்கும்வரை புடைக்கவும். நீர் தெளித்து மாவாகும் வரை உரலில் இடிக்கவும். உப்புக் கலந்த நீரைக் கொதிக்க வைக்கவும். கம்பு மாவைக் கொட்டிச் சோறாக மாறும்வரை கிண்டவும். இந்தக் கம்புச் சோற்றை மோர்விட்டுக் கரைக்கவும். இது சுவையான கம்மங்கூழ். மோர் மிளகாய் வற்றல், உப்பில் ஊற வைத்த பச்சைமிளகாய், சின்ன வெங்காயத்துடன் கம்மங் கூழைக் குடிக்கலாம். உடல் குளிர்ந்து அனல் அடங்கும்.

## விரிவானம்

# 4. கோபல்லபுரத்து மக்கள்

**(கி. ராஜநாராயணன்)**

**நெடுவினா**

**1. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.** (PTA - 4, Sep.-21, May - 22)

**முன்னுரை :**

கோபல்லபுரத்து மக்கள் என்னும் சிறுகதையை எழுதியவர் கி. ராஜநாராயணன். இவர் சாகித்திய அகாதெமிப் பரிசினைப் பெற்றவர். அன்னமய்யா என்னும் பெயருக்கும், அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை இக்கதையில் காண்போம்.

**அன்னமய்யாவுடன் வந்த வாலிபன் :**

சுப்பையாவின் புஞ்சையில் அன்று அருகு எடுக்கும் வேலை. அன்னமய்யா, கஞ்சி குடிக்கும் வேளையில் ஓர் ஆளை அழைத்து வந்தார். அன்னமய்யாவுடன் வந்தது சன்யாசியோ, பரதேசியோ இல்லை. கிட்டே போய்ப் பார்த்த பிறகுதான் தெரிந்தது அவன் ஒரு வாலிபன். வாலிபனது தாடியும், அழுக்கு ஆடையும், தள்ளாட்டமும் அவனை வயோதிகனைப் போலவும், சாமியாரைப் போலவும் காட்டியது.

**நீச்சுத் தண்ணீர் :**

அன்னமய்யாவைப் பார்த்த அவ்வாலிபன், "குடிக்கத் தண்ணி கிடைக்குமா?" எனக் கேட்டான். அதற்கு அன்னமய்யா, "நீச்சுத் தண்ணீர் தரவா?" எனக் கேட்டார். கரிசல் மண்ணில் பாதி புதைக்கப்பட்டிருந்த கரிய மண் பாத்திரத்தின் வாய், கற்களால் மூடப்பட்டிருந்தது. அன்னமய்யா, மண்பாத்திரத்தின் மேலிருந்த கல்லை அகற்றினார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**ஜீவ ஊற்று :**

அன்னமய்யா கலசத்திலிருந்து நீச்சுத் தண்ணீரை ஊற்றிக் கொடுத்தார். அந்தத் தண்ணீரை வாலிபன் குடித்ததும், கலயத்தை அலசித் தெளிவு மறைந்த சோற்றின் கஞ்சியை வாலிபனுக்கு ஊற்றிக் கொடுத்தார் அன்னமய்யா. வாலிபனுக்குள் ஜீவ ஊற்றுப் பொங்கியது. அவன் உற்சாகம் அடைந்தான்.

**அன்னமய்யாவின் மனநிறைவு :**

கஞ்சியைக் குடித்த வாலிபன் வேப்ப மர நிழலைச் சொர்க்கமாய் நினைத்துத் தூங்கினான். இதைக்கண்ட அன்னமய்யாவிற்கும் மனநிறைவு ஏற்பட்டது. பால் குடித்துக் கொண்டிருக்கும்போதே வயிறு நிறைந்து அப்படியே தூங்கிவிடும் குழந்தையைப் போலவே அவ்வாலிபனையும் பார்த்தார்.

**பெயர்ப் பொருத்தம் :**

தூக்கம் தெளிந்து எழுந்த வாலிபன், "உன் பெயர் என்ன?" என்று அன்னமய்யாவிடம் கேட்டான். அதற்கு இவர், "அன்னமய்யா" என்றார். எவ்வளவு பொருத்தம்! "எனக்கு இன்று நீ இடும் அன்னம்தான் என் வாழ்வுக்கு மீண்டும் உயிர் கொடுத்தது" என, அந்த வாலிபன் தனக்குள் கூறிக்கொண்டான்.

**பரமேஸ்வரன் (மணி) :**

அன்னமய்யா அந்த வாலிபனின் பெயரைக் கேட்டார். அவன் தன் பெயர், பரமேஸ்வரன் என்றும், தற்போதைய பெயர் மணி என்றும் சொன்னான். சுப்பையா கம்மஞ்சோறும் துவையலும் கொடுத்தார். பசியில் அதையும் உண்டு உறங்கினான்.

**முடிவுரை :**

அன்னமய்யா என்ற பெயருக்கு ஏற்ப அன்னமிட்டு மனிதநேயம் காத்த அன்னமய்யாவின் பெயர் அவனுக்கே பொருத்தமுடையதாக அமைகிறது. கதையில் கம்மஞ்சோறும் துவையலும் கரிசல் மண்ணுடன் மணக்கின்றது.

## பலவுள் தெரிக

1. கி. ராஜநாராயணனின் எந்தப் படைப்பு, சாகித்திய அகாதெமி பரிசினைப் பெற்றது ?
   அ) கோபல்ல கிராமம் ஆ) கோபல்லபுரத்து மக்கள்
   இ) கரிசல் காட்டுக் கடுதாசி ஈ) கரிசல் வட்டார சொல்லகராதி
   **விடை : ஆ) கோபல்லபுரத்து மக்கள்**
2. கரிசல் இலக்கியம் என்பது, எந்த வட்டாரப் பகுதியைச் சார்ந்ததாகும் ?
   அ) கோவில்பட்டி ஆ) மதுரை இ) திருச்சி ஈ) தஞ்சாவூர்
   **விடை : அ) கோவில்பட்டி**
3. கரிசல் வட்டாரச் சொல்லகராதியை உருவாக்கிய கரிசல் எழுத்தாளர்,
   அ) கு. அழகிரிசாமி ஆ) பா. செயப்பிரகாசம் இ) கி. ராஜநாராயணன் ஈ) பூமணி
   **விடை : இ) கி. ராஜநாராயணன்**
4. கோபல்லபுரத்து மக்கள் என்ற நூல், ______ போராட்டத்தினைப் பின்னணியாகக் கொண்டது.
   அ) இந்திய விடுதலை ஆ) விவசாயிகளின்
   இ) தொழிலாளர்களின் ஈ) சிறுபான்மை மக்களின்
   **விடை : அ) இந்திய விடுதலை**
5. கோபல்லபுரத்து மக்கள் என்னும் கதையின் ஆசிரியர்,
   அ) கி. ராஜநாராயணன் ஆ) இந்திரா பார்த்தசாரதி
   இ) ஜெயமோகன் ஈ) ஜெயகாந்தன்
   **விடை : அ) கி. ராஜநாராயணன்**
6. கோபல்லபுரத்து மக்கள் என்னும் நூல், சாகித்திய அகாதெமிப் பரிசினைப் பெற்ற ஆண்டு,
   அ) 1988 ஆ) 1991 இ) 1994 ஈ) 1996
   **விடை : ஆ) 1991**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



7. வட்டார மரபு வாய்மொழிப் புனைகதைகள், எவ்விலக்கியங்கள் என்று அழைக்கப்படுகின்றன?

அ) நாஞ்சில் ஆ) கொங்கு இ) கரிசல் ஈ) நெய்தல்

**விடை : இ) கரிசல்**

8. வட்டார மரபு வாய்மொழிப் புனைகதைகளைத் தொடங்கியவர்,

அ) அகிலன் ஆ) இந்திரா பார்த்தசாரதி

இ) நாஞ்சில் நாடன் ஈ) கி. ராஜநாராயணன்

**விடை : ஈ) கி. ராஜநாராயணன்**

9. கி. ராஜநாராயணனுக்குமுன் எழுதத் தொடங்கிய கரிசல் மண்ணின் படைப்பாளி,

அ) கு.அழகிரிசாமி ஆ) பூமணி இ) பா. செயப்பிரகாசம் ஈ) சோ.தர்மன்

**விடை : அ) கு. அழகிரிசாமி**

## கற்பவை கற்றபின்

**1. பசித்தவருக்கு உணவிடுதல் என்ற அறச்செயலையும் விருந்தினருக்கு உணவிடுதல் என்ற பண்பாட்டுச் செயலையும் ஒப்பிட்டுப் பேசுக.**

பசித்தவருக்கு உணவிடுவது என்பது, ஜீவகாருண்ய செயல்களில் ஒன்று. வீடுதோறும் இரந்தும் பசியாறாது அயர்ந்தவரையும், நீடிய பிணியால் வருந்துவோரையும், ஈடில் மானிகளாய், ஏழைகளாய் நெஞ்சு இளைத்தோரையும் கண்டு வருந்தினார் வள்ளலார். இதனாலேயே வடலூரில் சத்திய தருமச் சாலையை நிறுவிச் சாதி, மத வேறுபாடின்றிப் பசித்தோர்க்கெல்லாம் உணவு என்ற அறச்செயல் நிகழ்த்தினார்.

வீட்டுக்கு வந்த விருந்தினரின் உள்ளம் குளிரும்படி உபசரித்து, அவர் சென்றதும் அடுத்த விருந்தினரின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருப்பவன், தேவர்களுக்குப் பிரியமானவன் என்கிறது வள்ளுவம். விருந்தினர் உண்டு மகிழத் தேன்குழலும், பண்ணியமும் கொடுத்தாள் எனவும், குடிப்பதற்குப் பாலும், மென்று தின்பதற்கு வெற்றிலையும் பாக்கும் வைத்தாள் என்கிறது பாவேந்தரின் பாடல். வாழை இலையின் அடி, உண்பவரின் வலப்பக்கத்தில் இருக்குமாறு இலையைப் போட்டுக் கறிவகைகள் சோற்றைச் சூழ்ந்து இருக்குமாறு வைத்துப் பரிமாற வேண்டும்.

விருந்தினருக்கு எந்த உணவு பிடிக்கும் என்பதை அறிந்து, போதுமான அளவு திருப்தியுடன் பரிமாற வேண்டும் என்கிறார் பாரதிதாசன். விருந்தோம்பல் என்பது தமிழரின் பண்பாடு. பசித்தோர்க்கு உணவிடல் என்பது, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்ற அறச்செயல். வீட்டிற்கு வரும் பசியுள்ளோரை எதையும் வினவாது, நாம் சாப்பிடும் உணவை அளிக்க வேண்டும். மீந்துள்ள கெட்டுப்போன பழைய உணவை அளிப்பது, மிக மோசமான செயல் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

**2. உங்கள் கற்பனையை இணைத்து நிகழ்வைக் கதையாக்குக.**

காலையில் வேப்ப மரத்தில் காக்கா கத்துவதை வைத்து அன்று வீட்டிற்கு விருந்தினர் வரப்போவதை அம்மா உணர்ந்து கொண்டாள். அப்போது பலாப்பழப் பருவம் என்பதால், அம்மாவின் தம்பி வருவார் என்று அப்பா கூறினார். சொன்னதுபோலவே ஊரிலிருந்து அறந்தாங்கி மாமா தலையில் பலாப்பழத்துடன் வந்து இறங்கினார். எங்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சி. அம்மாவின் மகிழ்ச்சியோ அளவிட முடியாததாய் இருந்தது.

தன் கூடப் பிறந்த தம்பி அல்லவா? அன்று என்ன சமையல் செய்வது, எப்படி உபசரிப்பது என்பதிலேயே அவரது எண்ணம் இருந்தது. காலை முழுவதும் விளையாடிவிட்டு, மதியம் பலாக்கொட்டைச் சாம்பாருடன் உணவை உண்டோம். பின்னர் மாலையில் அனைவரும் கோவிலுக்குச் செல்ல முடிவெடுத்தோம்.

அன்று முழுவதும் அப்பா என்ன சொன்னாலும், அம்மா தலையை ஆட்டினாள். எதிர்த்து ஒரு வார்த்தை பேசவில்லை. அப்பாவும் மாமாவும் எங்களை எதுவும் சொல்லவில்லை. அன்று வீடே கலகலப்பாக இருந்தது. இப்படியே ஒவ்வொரு நாளும் இருந்தால் எப்படி இருக்கும் என்று, என் மனம் ஆசைப்பட்டது. அன்றைய நாள் இனிதே கழிந்தது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# கற்கண்டு

# 5. தொகாநிலைத் தொடர்கள்

## குறுவினாக்கள்

1. **'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது என்றாள்' என அடுக்குத் தொடரானது. 'சிரித்துப் பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத்தொடராகும் ?**
   ★ 'சிரித்துச் சிரித்துப் பேசினார்' என அடுக்குத்தொடராகும்.

2. **பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை ?** (Sep.-22)
   ★ பாரதியார் கவிஞர் – பெயர்ப் பயனிலை
   ★ நூலகம் சென்றார் – வினைப் பயனிலை
   ★ அவர் யார்? – வினாப் பயனிலை

## கூடுதல் வினாக்கள்

3. **தொகாநிலைத் தொடர் என்றால் என்ன ?**
   ➤ ஒரு தொடரில் சொற்களுக்கு இடையில் சொல்லோ உருபோ மறைந்து வராமல் வெளிப்படையாகப் பொருளை உணர்த்துவது, தொகாநிலைத் தொடர் எனப்படும்.
   எ – கா : குயில் கூவியது

4. **தொகாநிலைத் தொடர் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?**
   ➤ தொகாநிலைத் தொடர் ஒன்பது வகைப்படும். **அவை :**
   - எழுவாய்த் தொடர்
   - விளித்தொடர்
   - வினைமுற்றுத் தொடர்
   - பெயரெச்சத்தொடர்
   - வினையெச்சத்தொடர்
   - வேற்றுமைத்தொடர்
   - இடைச்சொல்தொடர்
   - உரிச்சொல் தொடர்
   - அடுக்குத் தொடர்.

5. **எழுவாய்த் தொடரைச் சான்றுடன் விளக்குக.**
   ➤ எழுவாயுடன் பெயர், வினை, வினா ஆகிய பயனிலைகள் தொடர்வது எழுவாய்த் தொடர் ஆகும்.
   எ–கா : இனியன் கவிஞர் – பெயர்ப் பயனிலை
   காவிரி பாய்ந்தது – வினைப் பயனிலை
   பேருந்து வருமா ? – வினாப் பயனிலை

6. **விளித்தொடர் – சான்று தருக.**
   ➤ விளியுடன் வினை தொடர்வது விளித்தொடர் ஆகும்.
   எ–கா : கண்ணா வா

7. **வினைமுற்றுத் தொடரை விளக்குக.**
   ➤ வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது, வினைமுற்றுத் தொடர் ஆகும்.
   எ–கா : பாடினாள் கண்ணகி

8. **பெயரெச்சத் தொடரை விளக்குக.**
   ➤ முற்றுப் பெறாத வினையைப் பெயர்ச்சொல் தொடர்வது, பெயரெச்சத் தொடர் எனப்படும்.
   எ–கா : கேட்ட பாடல்

9. **வினையெச்சத் தொடர் – விளக்குக.**
   ➤ முற்றுப் பெறாத வினையை வினைச்சொல் தொடர்வது, வினையெச்சத் தொடர் ஆகும்.
   எ–கா : பாடி மகிழ்ந்தான்

10. **வேற்றுமைத் தொடரைச் சான்றுடன் விளக்குக.**
   ➤ வேற்றுமை உருபுகள் வெளிப்பட அமையும் தொடருக்கு, வேற்றுமைத் (தொகாநிலைத்) தொடர் என்று பெயர்.
   எ–கா : கட்டுரையைப் படித்தாள்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11. **இடைச்சொல் தொடரை விளக்குக.**

➤ இடைச்சொல்லுடன் பெயரோ வினையோ தொடர்வது, இடைச்சொல் தொடர் ஆகும்.

எ–கா : மற்றொன்று (மற்று + ஒன்று)

12. **உரிச்சொல் தொடரை விளக்குக.**

➤ உரிச்சொல்லுடன் பெயரோ வினையோ தொடர்வது, உரிச்சொல் தொடர் ஆகும்.

எ–கா : நனி நன்று

13. **அடுக்குத்தொடர் என்றால் என்ன ? சான்று தருக.**

➤ ஒரே சொல் இரண்டு மூன்று முறை அடுக்கி வந்து பொருள் தருமானால், அது அடுக்குத் தொடர் எனப்படும்.

எ–கா : வருக வருக, வருக வருக வருக

## சிறுவினாக்கள்

1. **'கண்ணே கண்ணுறங்கு!** (PTA -2, Sep.-21)

**காலையில் நீயெழும்பு!**

**மாமழை பெய்கையிலே**

**மாம்பூவே கண்ணுறங்கு!**

**பாடினேன் தாலாட்டு!**

**ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!' – இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.**

| | | |
|---|---|---|
| i) | கண்ணே! கண்ணுறங்கு | – விளித்தொடர் |
| ii) | காலையிலே நீ எழும்பு | – ஐந்தாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் |
| iii) | மாமழை பெய்கையிலே | – உரிச்சொல் தொடர் |
| iv) | மாம்பூவே! கண்ணுறங்கு | – விளித்தொடர் |
| v) | பாடினேன் தாலாட்டு | – வினைமுற்றுத் தொடர் |
| vi) | ஆடி ஆடி | – அடுக்குத்தொடர் |

## கூடுதல் வினாக்கள்

2. **கூட்டுநிலைப் பெயரெச்சத்தைச் சான்றுடன் விளக்குக.**

**கூட்டுநிலைப் பெயரெச்சம் :**

➤ ஒன்றிற்கு மேற்பட்ட எச்சங்கள் சேர்ந்து, பெயரைக்கொண்டு முடிவது கூட்டுநிலைப் பெயரெச்சம்.

**உருவாக்கம் :**

➤ வேண்டிய, கூடிய, தக்க, வல்ல முதலான பெயரெச்சங்களை, 'செய' என்னும் வாய்ப்பாட்டு வினை யெச்சத்துடன் சேர்ப்பதன்மூலம், கூட்டுநிலைப் பெயரெச்சங்கள் உருவாகின்றன.

சான்று : கேட்க வேண்டிய பாடல்
சொல்லத் தக்க செய்தி

3. **வேற்றுமைத் தொகாநிலைத் தொடரைச் சான்றுகளுடன் விளக்குக.**

வேற்றுமை உருபுகள் வெளிப்பட அமையும் தொடர்கள், **வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்கள்** ஆகும்.

| | |
|---|---|
| கட்டுரையைப் படித்தாள் | – இத்தொடரில் 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்பட வந்துள்ளது. |
| அன்பால் (ஆல்) கட்டினார் | – இத்தொடரில் 'ஆல்' என்னும் மூன்றாம் வேற்றுமை உருபு வெளிப்பட வந்துள்ளது. |
| அறிஞர்க்குப் பொன்னாடை | – இத்தொடரில் 'கு' என்னும் நான்காம் வேற்றுமை உருபு வெளிப்பட வந்துள்ளது. |

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## பலவுள் தெரிக

1. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில், பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது ______. (May - 22)

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

**விடை : அ) வேற்றுமை உருபு**

## கூடுதல் வினாக்கள்

2. அன்பால் கட்டினார், அறிஞருக்குப் பொன்னாடை ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக இருப்பது, (PTA -6)

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்
இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

**விடை : அ) வேற்றுமை உருபு**

3. கட்டுரையைப் படித்து, ஆசிரியர் மாணவர்களுக்குப் பரிசு வழங்கினார் – இத்தொடரில் இடம் பெற்றுள்ள வேற்றுமை உருபுகள் : (Sep. - 21)

அ) ஐ, ஆல் ஆ) ஆல், கு இ) ஐ, கு ஈ) இன், கு

**விடை : இ) ஐ, கு**

4. பாடி மகிழ்ந்தனர் – எவ்வகைத் தொடர் என்பதைத் தேர்ந்தெடுக்கவும். (Mar. - 23)

அ) பெயரெச்சத்தொடர் ஆ) வினையெச்சத்தொடர்
இ) வேற்றுமைத்தொடர் ஈ) விளித்தொடர்

**விடை : ஆ) வினையெச்சத்தொடர்**

5. 'குழந்தை வந்தது' என்ற எழுவாய்த் தொடரின் விளித் தொடரைத் தேர்க. (Mar.-24)

அ) குழந்தையுடன் வா ஆ) வந்த குழந்தை
இ) குழந்தையே வா! ஈ) குழந்தை வந்தது

**விடை : இ) குழந்தையே வா!**

6. 'கங்கை பாய்ந்தது' என்பது, எவ்வகைத் தொடர் ?

அ) விளித்தொடர் ஆ) எழுவாய்த்தொடர்
இ) பெயரெச்சத்தொடர் ஈ) வினைமுற்றுத் தொடர்

**விடை : ஆ) எழுவாய்த்தொடர்**

7. 'மன்னா கேள்!' என்பது,

அ) வினைமுற்றுத் தொடர் ஆ) வினையெச்சத் தொடர்
இ) விளித்தொடர் ஈ) பெயரெச்சத் தொடர்

**விடை : இ) விளித்தொடர்**

8. 'ஆடினாள் மாதவி' என்பது,

அ) எழுவாய்த்தொடர் ஆ) வினைமுற்றுத்தொடர்
இ) பெயரெச்சத்தொடர் ஈ) வேற்றுமைத்தொடர்

**விடை : ஆ) வினைமுற்றுத்தொடர்**

9. 'வரைந்த ஓவியம்' என்பது,

அ) பெயரெச்சத் தொடர் ஆ) வினையெச்சத் தொடர்
இ) வினைமுற்றுத் தொடர் ஈ) இடைச்சொல் தொடர்

**விடை : அ) பெயரெச்சத் தொடர்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



10. ‘விரைந்து சென்றான்’ என்பது,

அ) வேற்றுமைத்தொடர் ஆ) வினைமுற்றுத் தொடர்

இ) எழுவாய்த் தொடர் ஈ) வினையெச்சத் தொடர்

**விடை : ஈ) வினையெச்சத் தொடர்**

11. ‘மழை பெய்தும் புழுக்கம் குறையவில்லை’ என்ற தொடரில் அமைந்துள்ள தொகாநிலைத் தொடர்வகை யாது ?

அ) இடைச்சொல் தொடர் ஆ) உரிச்சொல் தொடர்

இ) வேற்றுமைத்தொடர் ஈ) வினைமுற்றுத் தொடர்

**விடை : அ) இடைச்சொல் தொடர்**

12. ‘கடிமணம்’ என்பது,

அ) இடைச்சொல் தொடர் ஆ) உரிச்சொல் தொடர்

இ) எழுவாய்த்தொடர் ஈ) வினைமுற்றுத் தொடர்

**விடை : ஆ) உரிச்சொல் தொடர்**

13. ‘வாழ்க ! வாழ்க !’ என்பது,

அ) உரிச்சொல் தொடர் ஆ) வேற்றுமைத்தொடர்

இ) அடுக்குத்தொடர் ஈ) வினைமுற்றுத் தொடர்

**விடை : இ) அடுக்குத்தொடர்**

14. பொருத்துக.

அ) வினைமுற்றுத் தொடர் – 1. உடைந்த நாற்காலி
ஆ) விளித்தொடர் – 2. வந்து நின்றான்
இ) பெயரெச்சத் தொடர் – 3. கண்ணா வா
ஈ) வினையெச்சத் தொடர் – 4. வந்தான் இராமன்

அ) 1 2 3 4 ஆ) 4 3 1 2 இ) 2 1 3 4 ஈ) 3 1 4 2

**விடை : ஆ) 4 3 1 2**

15. பொருத்துக.

i. பாடத்தைப் படித்தாள் – 1. இரண்டாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்
ii. இசையால் ஈர்த்தார் – 2. மூன்றாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்
iii. கயல்விழிக்குப் பரிசு – 3. ஐந்தாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்
iv. முருகனின் சட்டை – 4. நான்காம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்

அ) 1 2 3 4 ஆ) 2 1 4 3 இ) 1 2 4 3 ஈ) 4 3 2 1

**விடை : இ) 1 2 4 3**

16. வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது,

அ) எழுவாய்த் தொடர் ஆ) விளித்தொடர்

இ) வினையெச்சத்தொடர் ஈ) வினைமுற்றுத்தொடர்

**விடை : ஈ) வினைமுற்றுத்தொடர்**

17. ________ உருபுகள் வெளிப்பட அமையும் தொடர்கள், வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்கள் ஆகும்.

அ) உவம ஆ) வேற்றுமை இ) பண்பு ஈ) வினை

**விடை : ஆ) வேற்றுமை**

18. “வருக ! வருக ! வருக !” என்ற தொடரில் ஒரே சொல் அடுக்கி வரக் காரணமாக அமைவது,

அ) அச்சம் ஆ) கோபம் இ) விரைவு ஈ) மகிழ்ச்சி

**விடை : ஈ) மகிழ்ச்சி**

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கற்பவை கற்றபின்

1. இன்று நீங்கள் படித்த செய்தித்தாள்களில் உள்ள தொகாநிலைத் தொடர்களைத் தொகுத்து வருக.

முல்லை வந்தாள் – எழுவாய்த்தொடர்
முல்லை வா ! – விளித்தொடர்
பார்த்தேன் முல்லையை – வினைமுற்றுத்தொடர்
பாடிய பாட்டு – பெயரெச்சத்தொடர்
ஓடி வந்தான் – வினையெச்சத்தொடர்
வீட்டைக் கட்டினாள் – வேற்றுமைத்(தொகாநிலைத்) தொடர்
பாடகர்களும் போற்றும் பாடகர் – இடைச்சொற்றொடர்
மாநகரம் – உரிச்சொற்றொடர்
வாழ்க ! வாழ்க ! – அடுக்குத்தொடர்

2. கீழ்க்காணும் பத்தியில் உள்ள தொடர் வகைகளை எடுத்து எழுதுக.

மாடியிலிருந்து **இறங்கினார் முகம்மது. அவர் பாடகர்.** பாடல்களைப் **பாடுவதும் கேட்பதும்** அவருக்குப் பொழுதுபோக்கு. அவரது அறையில் **கேட்ட பாடல்களையும் கேட்காத பாடல்களையும்** கொண்ட குறுந் தகடுகளை **அடுக்கடுக்காக** வைத்திருப்பார்.

இறங்கினார் முகமது – வினைமுற்றுத்தொடர்
அவர் பாடகர் – எழுவாய்த்தொடர்
பாடுவ**தும்** கேட்ப**தும்** – இடைச்சொல்தொடர்
கேட்ட பாடல் – பெயரெச்சத்தொடர்
கேட்காத பாடல் – எதிர்மறைப் பெயரெச்சத்தொடர்
அடுக்கடுக்காக – அடுக்குத்தொடர்
பாடல்களைப் பாடுவதும் – இரண்டாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்
அவருக்குப் பொழுதுபோக்கு – நான்காம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்

3. வண்ணச் சொற்களின் தொடர்வகைகளை எழுதுக.

**பழகப் பழகப்** பாலும் புளிக்கும் – அடுக்குத்தொடர்
**வடித்த கஞ்சியில்** சேலையை அலசினேன் – பெயரெச்சத்தொடர்
மேடையில் **நன்றாகப் பேசினான்** – வினையெச்சத்தொடர்
**வந்தார் அண்ணன்** – வினைமுற்றுத்தொடர்
அரிய **கவிதைகளின் தொகுப்பு** இது – ஐந்தாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்

## மொழியை ஆள்வோம்

மொழி பெயர்க்க. (PTA -5)

Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



மதிப்பிற்குரிய தாய்மார்களே! பெரியோர்களே!

என் பெயர் இளங்கோவன், நான் பத்தாம் வகுப்பு படிக்கிறேன். நம் தமிழ்ப் பண்பாட்டைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற இங்கு நான் வந்துள்ளேன். சங்க இலக்கியங்கள், தமிழர்கள் பண்பாட்டிலும், நாகரிகத்திலும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிறந்திருந்தவர்கள் எனக் காட்டுகின்றன. மொழிக்கு இலக்கணம் வகுத்த தமிழர்கள், வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்தனர். இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து மற்றும் உலகெங்கும் வாழும் தமிழர்களின் வாழ்க்கை முறைகளில், தமிழ்க் கலாச்சாரம் வேர் ஊன்றியுள்ளது. நம் தமிழ்ப் பண்பாடு பழமையானதாக இருந்தாலும், தொடர்ந்து மேம்படுத்தப்படுகிறது. நம் பண்பாட்டை எண்ணி, நாம் பெருமிதம் கொள்ள வேண்டும்.

அனைவருக்கும் நன்றி!

**பழமொழிகளை நிறைவு செய்க.**

1. உப்பில்லாப் ______. (PTA -5, Sep.-22)

**விடை : உப்பில்லாப் பண்டம் குப்பையிலே.**

2. ஒரு பானைச் ______. (PTA -5, Sep.-22, Mar.-23)

**விடை : ஒரு பானைச் சோற்றுக்கு ஒருசோறு பதம்**

3. உப்பிட்டவரை ______.

**விடை : உப்பிட்டவரை உள்ளளவும் நினை**

4. விருந்தும் ______.

**விடை : விருந்தும் மருந்தும் மூன்று நாள்களுக்கு மட்டுமே**

5. அளவுக்கு ______. (Sep.-21, Mar.-23)

**விடை : அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சு**

**பத்தியைப் படித்துக் கருத்தைச் சுருக்கி எழுதுக.**

**பழையசோறு**

பச்சை நெல் வயலைக் கண்கள் முழுவதும் சுமந்து, இளநெல்லை நுகர்ந்து, அதன் பாலை ருசித்து, நீராவியில் அந்த நெல் அவியும் கதகதப்பான புழுங்கல் மணம்வரை சுவைத்தவள் நான். அவித்து, காய்ந்து, குத்திய அந்தப் புழுங்கல் அரிசியை, அதன் வழவழப்பை, கடுப்பு மணத்தை, சோறாகுமுன் கைநிறைய அள்ளி வாயில் போட்டு நெரித்து மென்றவள் சொல்கிறேன். பகலெல்லாம் உச்சி வெயிலுக்கு அது சுடச்சுடப் புழுங்கலரிசிச் சோறு. இரவு முழுவதும் அந்தச் சோறு நீரில் ஊறும். விடிந்த இந்தக் காலையில் அதன் பெயர் பழையசோறு அல்லது பழையது. காத்திருந்து, சின்ன வெங்காயம், பச்சை மிளகாய் கடித்து, நீராகாரம்போல் குடிப்பது ஒருவகை. வாழை இலையில் அந்தப் பழைய சோற்றைப் பிழிந்து போட்டால், வடுமாங்காய் அல்லது உப்பு நாரத்தங்காய் அதனுடன் சேர்ந்துகொள்ளத் துடிப்பது இன்னொரு வகை. சுண்டவைத்த முதல்நாள் குழம்பு இன்னும் உச்சம்! நல்ல பழையது மாம்பழ வாசம் வீசுமாம். பழைய சோறு – அது கிராமத்து உன்னதம்.

“மைக்கடல் முத்துக்கு ஈடாய் மிக்க நெல்முத்து” .....முக்கூடற்பள்ளு

கண்ணன், பிரசாந்தி சேகரம் – அடிசில் 2017

**பழையசோறு – உடம்புக்குப் பலம்**

நெல்லை அவித்து, காய வைத்துக் குற்றிய புழுங்கல் அரிசியைச் சோறாக்குமுன் மென்று தின்பதும் சுவையானது. பகலில் புழுங்கல் அரிசிச்சோறு. இரவு முழுவதும் நீரில் ஊறியபின் அதன் பெயர் பழைய சோறு. சின்ன வெங்காயம், பச்சை மிளகாயுடன் நீராகாரமாய்க் குடிக்கலாம். அச்சோற்றுடன் வடுமாங்காயோ உப்பு நாரத்தங்காயோ சேர்த்து உண்ணலாம். சுண்டக் குழம்புடன் உண்பதன் சுவையே தனி. மாம்பழ வாசம் வீசும் நல்ல பழையது!

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**கதையாக்குக.**

**மனித வாழ்வில் ஒவ்வொருவரும் நாளும் நாளும் புதுப்புது மனிதர்களைப் பார்க்கிறோம்; புதுப்புதுச் செய்திகள் கிட்டும்! கிட்டுகிற கருப்பொருள்களைத் திரட்டி, கற்பனை நயம் கூட்டிக் கதையாக்குவது ஒரு கலை. அது சிறுகதையாக இருக்கலாம். புதினமாக இருக்கலாம். அன்பை எதிர்பார்த்திருப்பவராக, யாருமற்றவராக... இருக்கும் ஒருவர் உங்களின் உதவியால் மனம் மகிழ்ந்த நிகழ்வினைக் கதையாக்குக.**

அன்று நான் வீட்டுக் கதவைத் திறந்தபோது, எங்கள் வீட்டுத் திண்ணையில் ஒரு வயதான பாட்டி அமர்ந்திருந்தார். யாரென விசாரித்தபோது, எங்கோ இருந்த என்னை, என் மகன் கொண்டு வந்து, இந்த ஊரில் விட்டுவிட்டுப் போய்விட்டான் என்றும், 'இதோ வருகிறேன்' என்று போனவன், ஒரு வாரமாக வரவில்லை என்றும் அழுதார். 'இனி அவன் வரமாட்டான்' என்றும், 'நான் அவனுக்கும் அவன் குடும்பத்திற்கும் பாரம்' என்றும் கூறியபடி அழுதார். அந்தப் பாட்டிக்கு எண்பது வயது இருக்கும். ஒரு வாரமாகச் சரியாகச் சாப்பிடவில்லை என்றார் அந்த மூதாட்டி.

என் அம்மாவும் அப்பாவும் அந்தப் பாட்டியை வீட்டிற்குள் அழைத்துவந்து, உணவு உண்ணச் சொன்னார்கள். அந்தப் பாட்டி மிகமிகக் குறைவாகவே உண்டார். அந்தப் பாட்டிக்குத் தேவையான நீரை ஒரு குவளையில் கொடுத்துக் கைகழுவச் சொன்னேன். கை கழுவிவிட்டு அமர்ந்திருந்த அவரிடம் என் அப்பா, "அம்மா! நீங்கள் இந்த வயதான காலத்தில் எங்கும் போகவேண்டாம். இங்கேயே இருங்கள்; உங்களை எங்கள் குடும்பம் நன்றாகக் கவனித்துக் கொள்ளும்" என்று கூறினார்.

அந்தப் பாட்டி, கையெடுத்து வணங்கினார்; அழுதார். நான் அவர்கள் கண்ணீரைத் துடைத்தேன். "பாட்டி, நீங்க இங்கேயே இருங்க, நான் உங்களுக்கு எல்லா உதவிகளையும் செய்யறேன்" என்றேன். அந்தப் பாட்டி, என் கன்னத்தில் முத்தமிட்டார்.

இன்றுவரை அந்தப் பாட்டிக்கு நாங்கள் எந்த வேலையும் கொடுப்பதில்லை. நான்தான் அந்தப் பாட்டிக்குத் தேவையான எல்லாவற்றையும் செய்து கொடுப்பேன். அந்தப் பாட்டிக்குப் பல் துலக்கக் குச்சி எடுத்துத் தருவது, குளிக்க வெந்நீர் கொண்டுபோய்த் தருவது, அவரின் ஆடைகளைத் துவைத்துத் தருவது, கழிவறைக்கு அழைத்துச் செல்வது, பாட்டி ஓய்வெடுக்கக் கட்டிலில் படுக்கை விரிப்பது என, அனைத்தையும் பார்த்துப் பார்த்துச் செய்வேன். என் தந்தை என்னைப் பாராட்டினார்.

இன்றளவும் அந்தப் பாட்டி எங்களோடு ஒன்றாய் வாழ்வது, மனத்திற்கு மகிழ்ச்சியாக உள்ளது.

**கடிதம் எழுதுக :** **(PTA -1, Sep.-21,22)**

**உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு, தரமற்றதாகவும், விலைகூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.**

அனுப்புநர்

அ. கலையரசன்,
எண் : 31, காந்தி சாலை,
திருச்சி – 2.

பெறுநர்

உணவுப் பாதுகாப்பு ஆணையர்,
உணவுப் பாதுகாப்பு மற்றும் தரப்படுத்துதல் ஆணையம்,
சென்னை – 15.

மதிப்பிற்குரிய ஐயா,

**பொருள்** : உணவு விடுதியில் தரமற்ற உணவு அளித்தது மற்றும் கூடுதல் விலை பெற்றது தொடர்பாக – விண்ணப்பம்.

வணக்கம்! நான் என் குடும்பத்தினருடன் திருச்சி சத்திரம் பேருந்து நிலையத்தின் அருகிலுள்ள உணவு விடுதியில், காலை உணவு உண்டேன். அங்கு எங்களுக்கு அளிக்கப்பட்ட உணவு தரமற்றதாக இருந்தது. அவ்வுணவினை உண்ட எங்களுக்கு வயிற்று வலியும், வாந்தியும் ஏற்பட்டன. மேலும், அவ்வுணவிற்குக் கூடுதல் கட்டணமும் வசூலித்தனர்.

உணவு தரமற்றதாகவும், அளவு குறைவாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது. அவ்வுணவு விடுதியில் தயாராகும் உணவினைத் தரப் பரிசோதனை செய்யும்படி உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இதனை அனைத்துத் தரப்பு மக்களின் வேண்டுகோளாக ஏற்கவும். அவ்வுணவு விடுதியினைப் பரிசோதித்துத் தக்க நடவடிக்கை எடுக்கும்படி உங்களைப் பணிந்து கேட்டுக் கொள்கிறேன்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



இக்கடிதத்துடன் தரமற்ற உணவிற்கான சான்றும், கூடுதல் விலைக்கான சான்றும் இணைக்கப்பட்டுள்ளன.

நன்றி.

இங்ஙனம்
உங்கள் உண்மையுள்ள,
அ. கலையரசன்.

இடம் : திருச்சி,
நாள் : 01.03.2022

உறைமேல் முகவரி

பெறுநர்

உணவுப் பாதுகாப்பு ஆணையர்,
உணவுப் பாதுகாப்பு மற்றும் தரப்படுத்துதல் ஆணையம்,
சென்னை – 15.

**நயம் பாராட்டுக.**

"கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போது அரிசிவரும் – குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓர்அகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்".

– **காளமேகப் புலவர்**

**ஆசிரியர் குறிப்பு** : திருவானைக்கா கோவிலில் வாழ்ந்த காளமேகப்புலவர், சைவ சமயம் சார்ந்த பாடல்களையும் சில பழக்கவழக்கங்களைப் பழித்துக் கேலிக்கு உள்ளாக்கிப் பழித்துப்பாடும் 'அங்கதம்' என்னும் நகைச்சுவைப் பாடல்களையும், சிலேடைப் பாடல்களையும் ஆசுகவிகளையும் பாடுவதிலும் வல்லவர்.

**திரண்ட கருத்து** : "நாகப்பட்டினத்தில் உள்ள காத்தான் சத்திரத்தில், வந்தவர்க்கு எல்லாம் சோறு போடுவார்கள். எப்படி? பொழுது சாயும் நேரத்தில் சத்திரத்திற்கு சமைக்க அரிசி வரும். அதனைக் குத்தித் தீட்டி உலையில் போடும்போது, ஊரே அடங்கிப் போகும். ஓர் அகப்பை உணவை இலையில் போடும்போது, விடிவெள்ளி முளைத்துவிடும்" என்பது பாடலின் திரண்ட செய்தி.

**மையக்கருத்து** : காளமேகப் புலவர் தம் பாடலில் 'நாகப்பட்டினத்திலுள்ள காத்தான் சத்திரத்தில் இலைபோட்டு உணவு பரிமாறும்முறை இருந்ததையும், உணவிடப்பட்ட முறையையும்' மையக்கருத்தாக வைத்துள்ளார்.

**மோனை** : அடிகளிலோ சீர்களிலோ முதலெழுத்து ஒன்றிவருவது மோனை.

**க**த்துகடல், **கா**த்தான்தன்
**அ**த்தமிக்கும், **அ**ரிசிவரும்
**உ**லையிலிட, **ஊ**ரடங்கும்
} சீர்மோனை

**எதுகை** : செய்யுள் அடிகளின் முதல் சீர்களின் முதலெழுத்து அளவு ஒத்திருக்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது அடிஎதுகைத் தொடையாகும்.

கத்துகடல், அத்தமிக்கும்
உ**லை**யிலிட, இ**லை**யிலிட
} அடிஎதுகை

க**த்**துகடல், கா**த்**தான்தன்
அ**த்**தமிக்கும், கு**த்**தி
} சீர்எதுகை

**அணிநயம்** : இப்பாடலில் நகைச்சுவையாகச் சமுதாயக் குறையைச் சுட்டிக்காட்டுவதனால் **அங்கதம்** பயின்று வந்துள்ளது.

**பாவகை** : இருவிகற்பம், **நேரிசை வெண்பா**வாக அமைந்து அங்கதச் சுவையைப் புலப்படுத்தும் செப்பலோசைச் செய்யுளாகும்.

**சுவை** : காத்தான் சத்திரத்தில் உணவு சமைத்தல், உணவு பரிமாறுதல் என்னும் செயல்களை **'எள்ளல் சுவை'** (அங்கதச் சுவை) தோன்றக் காளமேகப் புலவர் கூறுகிறார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## மொழியோடு விளையாடு

**விடுபட்ட எழுத்துகளை நிரப்பி அந்த எழுத்துகளைமட்டும் இணைத்து ஒளிந்துள்ள ஒரு நூலின் பெயரைக் கண்டுபிடிக்க.**

| | | | | |
|---|---|---|---|---|
| இ _ கு (பறவையிடம் இருப்பது) | – | இறகு | – | **ற** |
| கு _ தி (சிவப்பு நிறத்தில் இருக்கும்) | – | குருதி | – | **ரு** |
| வா _ (மன்னரிடம் இருப்பது) | – | வா**ள்** | – | **ள்** |
| அ _ கா (தங்கைக்கு மூத்தவள்) | – | அ**க்**கா | – | **க்** |
| ம _ (அறிவின் மறுபெயர்) | – | ம**தி** | – | **தி** |
| பட _ (நீரில் செல்வது) | – | பட**கு** | – | **கு** |

**ஒளிந்துள்ள நூலின் பெயர் –** திருக்குறள்.

**இருசொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

சிலை – சீலை, தொடு – தோடு, மடு – மாடு, மலை – மாலை, வளி – வாளி, விடு – வீடு.

**எ – கா :** **சிலை**யைத் திரைச்**சீலை**யால் மறைத்திருக்கிறார்கள். **(PTA -1)**

**தொடு – தோடு** : வீட்டில் **தொடு**கின்ற உயரத்தில் **தோடு** உள்ள பெட்டியை வைத்தாள்.

**மடு – மாடு** : **மடு**வில் **மாடு**, நீர் குடித்தது.

**மலை – மாலை** : கவின், இன்று **மாலை, மலை** ஏற்றப் பயிற்சிக்குச் செல்கிறான். **(PTA -1)**

**வளி – வாளி** : **வளி**மண்டல மேலடுக்குச் சுழற்சி காரணமாக மழை பொழிந்ததில் **வாளி**யில் நீர் நிரம்பியது.

**விடு – வீடு** : **வீடு**நோக்கிச் செல்கிறேன், என்னைத் தடுக்காதே **விடு.** **(May-22)**

**அகராதியில் கண்டு பொருள் எழுதுக.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **அ)** | **ஊண்** | – உணவு | | **ஆ)** | **திணை** | – ஒழுக்கம் |
| | **ஊன்** | – இறைச்சி, உடல் | | | **தினை** | – சிறுதானியம் |
| **இ)** | **அண்ணம்** | – மேல்வாய் | | **ஈ)** | **வெல்லம்** | – இனிப்பு |
| | **அன்னம்** | – உணவு | | | **வெள்ளம்** | – நீர்ப்பெருக்கு |

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.** **(Sep.-22)**



உண்ணும் உணவை
நாய்க்கும் தரும் உயிர்நேயம்!
குடிசையில் வாழ்ந்தாலும்
குபேர எண்ணம் சிறுமிக்கு!
பிறஉயிர் பசியைப் போக்கிடும்
அளவற்ற ஆவல்
சின்னஞ்சிறு பெண்ணாயினும்
பசிபோக்கும் உயர்ந்த உள்ளம்!

## செயல்திட்டம்

**உணவு, விருந்து சார்ந்த பழமொழிகளையும் விழிப்புணர்வுத் தொடர்களையும் திரட்டி, அகரவரிசைப்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.**

**எ – கா :** நொறுங்கத் தின்றால், நூறு வயது.

i. அளவறிந்து உண்டால் ஆரோக்கியமாய் வாழலாம்.
ii. ஆங்கிலேயன் மனத்தில் இடம் பிடிக்க, அறுசுவை உணவு படை.
iii. இனிப்புப் பண்டங்கள் பல்லுக்கு எதிரி.
iv. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
v. உப்பைத் தின்றவன், தண்ணீர் குடிப்பான்.
vi. ஒருசாண் வயிறு இல்லையெனில், உலகில் போரே இல்லை.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கலைச்சொல் அறிவோம்

செவ்விலக்கியம் – classical literature

வட்டார இலக்கியம் – Regional literature

காப்பிய இலக்கியம் – Epic literature (PTA - 5)

நாட்டுப்புற இலக்கியம் – Folk literature (PTA - 5)

பக்தி இலக்கியம் – Devotional literature

நவீன இலக்கியம் – Modern literature

பண்டைய இலக்கியம் – Ancient literature

## நிற்க அதற்குத் தக

"தம்பி... உனக்குப் பிடிச்ச காய் சொல்லு?"– "கேரட்"

"பிடிச்ச பழம்?" – "ஆப்பிள்"

"பிடிச்ச காலை உணவு?" – "நூடுல்ஸ்"

"மத்தியானத்துக்கு" – "ஃப்ரைடு ரைஸ்"

"ராத்திரி...?" – "பீட்ஸா அல்லது பாஸ்தா"

இது, ஏதோ ஆங்கிலப் படத்தின் வசனம் அல்ல. "சரியா சாப்பிட மாட்டேங்கிறான் டாக்டர்" என்று, என்னிடம் அழைத்து வரப்பட்ட ஒரு சிறுவனுடனான என் உரையாடல். ஒட்டுமொத்த இளைய தலைமுறையும், பாரம்பரிய உணவை விட்டு, வேகமாக விலகிச் சென்றது எப்படி? இட்லியும், சாம்பார் சாதமும் கத்தரிக்காய்ப் பொரியலும் இனி காணாமல் போய்விடுமா? அதிர்ச்சியான பதில், 'ஆம்; காணாமல் போய்விடும்!'. உங்கள் குழந்தைகள், "ஆடு மாடுகளைத் தவிர, மனுஷங்ககூட கீரையைச் சாப்பிடுவாங்களா மம்மி? என, எதிர்காலத்தில் கேட்கக்கூடும்!

**மருத்துவர் கு. சிவராமனின் இக்கருத்திற்குச் சமூக அக்கறையுடனான உங்களின் பதில் என்னவாக இருக்கும்?**

**பதில் :** நோய்கள் வராமல் இருக்கக் குப்பை உணவுகளை நீக்கிவிட்டு, இயற்கையாக அமைந்த நமது பாரம்பரிய உணவுகளை உண்ணுங்கள். சிறுவயதில் நோய்வாய்ப்படக் காரணம், பீட்ஸா போன்ற உணவுகளே! நமது பாரம்பரிய உணவான கடலை மிட்டாய், கம்பு, கேழ்வரகு, பழங்கள், கொட்டையுள்ள திராட்சை, மா, பலா, வாழை, கொய்யா, இட்லி போன்றவற்றைச் சாப்பிடலாம். கம்பு, கேழ்வரகை முளைகட்டி, உணவாகத் தயாரிக்கலாம். வீட்டுத் தோட்டத்தில் விளையும் கீரைகள், காய்கறிகள், தக்காளி, மிளகாய் போன்றவை, நமது உணவாக இருக்கவேண்டும். காலை, இரவு ஆகிய இருவேளைச் சிற்றுண்டியும், மதியம் ஒருவேளை மட்டும் முழுமையான உணவும் போதுமானது. இரவு அல்லது காலையில் சமைத்த உணவும், இயற்கையில் விளைந்த சமைக்காத உணவும் மிகவும் நல்லது. எதற்காகவும் காலை உணவைத் தவிர்க்கக் கூடாது. சிறுதானியப் பயறு வகைகள், பழங்கள், அளவாகச் சாப்பிட வேண்டும். எண்ணெயில் பொரித்த உணவைத் தவிர்ப்பது நல்லது. இயற்கை உணவே இனிய வாழ்வு!

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# வாழ்வியல்

# 6. திருக்குறள்

## குறுவினாக்கள்

1. ‘நச்சப் படாதவன் செல்வம்’ – இத்தொடரில் வண்ணமிட்ட சொல்லுக்குப் பொருள் தருக.
விரும்பப் படாதவன்.

2. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய (PTA - 5)
கோடிஉண் டாயினும் இல் – இக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக.
கொடுப்பதூஉம், துய்ப்பதூஉம் – இன்னிசை அளபெடைகள்

3. பொருளுக்கேற்ற அடியைப் பொருத்துக.

| | |
|---|---|
| உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும் | ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை. |
| ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது. | உயிரினும் ஓம்பப் படும். |
| ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர் | நடு ஊருள் நச்சுமரம் பழுத்தற்று. |

| | | |
|---|---|---|
| விடை : | உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும். | உயிரினும் ஓம்பப்படும். |
| | ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது. | நடு ஊருள் நச்சுமரம் பழுத்தற்று. |
| | ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர். | ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை. |

4. எய்துவர் எய்தாப் பழி – இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது ? (PTA - 1, Sep.-22)
அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள்
இ)தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு
விடை : அ) கூவிளம் தேமா மலர்

## கூடுதல் வினாக்கள்

5. உயிரினும் ஓம்பப்படுவது எது ? ஏன்?
   - உயிரினும் ஓம்பப்படுவது ஒழுக்கமாகும். ஏனெனில், ஒழுக்கம் தன்னை உடைவயருக்குச் சிறப்பைத் தரும்.

6. ஒழுக்கத்தால் எய்துவது எது ? இழுக்கத்தினால் எய்துவது எது ?
   - ஒழுக்கத்தால் எய்துவது மேன்மை; இழுக்கத்தால் எய்துவது அடையக் கூடாத பழி.

7. பலகற்றும் கல்லாதவராகக் கருப்படுபவர் யார் ?
   - உலகத்தோடு ஒத்து வாழக் கல்லாதவர், பல நூல்களைக் கற்றாராயினும், கல்லாதவராகவே கருதப்படுபவர்.

8. யாருக்கு இவ்வுலகமே உரிமை உடையதாகும் எனத் திருக்குறள் குறிப்பிடுகிறது ?
   - நடுநிலையாகக் கடமை தவறாமல் இரக்கம் காட்டுபவருக்கு, இவ்வுலகமே உரிமை உடையதாகும் எனத் திருக்குறள் குறிப்பிடுகிறது.

9. கெடுப்பார் இலானுங் கெடுபவர் யார் ? ஏன் ?
   - கெடுப்பார் இலானுங் கெடுபவர் பெரியாரைத் துணையாகப் பெறாத அரசர் ஆவார்.
   - குற்றம் கண்டபொழுது கடிந்து அறிவுரை கூறும் பெரியவர்களைத் துணையாகப் பெறாத அரசன், கெடுக்கும் பகைவர் இல்லாமல், தானே கெடுவான் என்பதனால்.

10. எப்பொருளைக் காண்பது அறிவு ?
   - எந்தப் பொருள் எந்த இயல்பினதாய்த் தோன்றினாலும், அந்தப் பொருளின் உண்மைப் பொருளைக் காண்பது அறிவு.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**11. நல்லார் தொடர்பைக் கைவிடல் எத்தன்மையது ?**

- நல்லார் தொடர்பைக் கைவிடல், தான் ஒருவனாக நின்று பலரோடு பகை மேற்கொள்வதைக் காட்டிலும், பல மடங்குத் தீமைகளைத் தரும். ஆகவே, நல்லோர் நட்பைக் கைவிடல் கூடாது.

**12. எம் மன்னன் நாட்டை இழக்க நேரிடும் ?**

- தன் நாட்டில் நிகழும் நன்மை தீமைகளை ஒவ்வொரு நாளும் ஆராய்ந்து ஆட்சி செய்யாத மன்னன், தன் நாட்டை நாள்தோறும் இழக்க நேரிடும்.

**13. நஞ்சைக் கொடுத்தாலும் உண்ணும் பண்பாளர் யார் ? ஏன் ?**

- விரும்பத்தக்க இரக்ககுணம் கொண்டவர், நஞ்சைக் கொடுத்தாலும் உண்ணும் பண்பாளர் ஆவார். ஏனெனில், பிறர் நன்மை கருதித் தமக்கு நஞ்சைக் கொடுத்தலால் அதை உண்பார்.

**14. ஒருவருக்குப் பெருமை தருவது எது ?**

- ஒரு செயலை முடிப்பதற்கு இயலாது என்று எண்ணிச் சோர்வடையக் கூடாது. அச்செயலை முயற்சியுடன் முடிப்பதே பெருமை தரும்.

**15. உயர்ந்த நிலையை எவ்வாறு அடைய முடியும் ?**

- விடாமுயற்சி கொள்ளுதல், பிறருக்கு உதவுதல் என்னும் பண்புகளைக் கடைப்பிடிப்பதால், உயர்ந்த நிலையை அடைய முடியும்.

**16. எப்போது செல்வம் பெருகும்? எப்போது வறுமை வரும் ?**

- முயற்சி செய்வதால் செல்வம் பெருகும்.
- முயற்சி செய்யாவிட்டால் வறுமை வந்து சேரும்.

**17. 'ஏமரா மன்னன்' என்று வள்ளுவர் யாரைக் குறிப்பிடுகிறார்? ஏன்?**

- குற்றம் கண்டபோது இடித்துக் கூறித் திருத்தக்கூடிய பெரியவரைத் துணையாகக் கொள்ளாத மன்னனை 'ஏமரா மன்னன்' என வள்ளுவர் குறிப்பிடுகிறார். அவனைக் கெடுப்பதற்குப் பகைவர் இல்லாமல் தானே கெடுவான் என்பதனால்.

**18. வழிப்பறி செய்வதற்கு நிகரானது எது?**

- ஆட்சி அதிகாரத்தைக் கொண்டுள்ள அரசன், தன் அதிகாரத்தைக் கொண்டு அதிக வரி விதித்து வசூலிப்பது வழிப்பறி செய்வதற்குச் சமமாகும் என்கிறார் வள்ளுவர்.

**19. கண்ணோட்டம் இல்லாக் கண்ணின் குற்றத்தை வள்ளுவர் எவ்வாறு விளக்குகிறார்?**

- பாடலோடு பொருந்தாத இசையால் பயனில்லாததுபோல, கண்ணோட்டம் (இரக்கம்) இல்லாத கண்ணால் பயனில்லை என வள்ளுவர் விளக்குகிறார்.

**20. பழி இன்மையும், பழியும் எவை?**

- ஐம்புலன்களில் ஏதேனும் குறை இருப்பினும் அது பழியாகாது. அறிய வேண்டியவற்றை அறிந்து முயற்சி செய்யாமையே பழியாகும்.

**21. ஊழையும் தோற்கடிப்பவர் யார்?**

- சிறிதும் சோர்வு இல்லாது முயற்சி செய்வோர், செய்யும் செயலுக்குத் தடையாக வரும் முன்வினையாகிய ஊழையும் தோல்வியடையச் செய்து வெற்றியை நிலைநாட்டுவர்.

**22. கோடி பெறினும் பயனடையாதவர் எவர்?**

- பிறருக்குக் கொடுக்காமலும் தானும் அனுபவிக்காமலும் இருப்பவர் கோடி கோடியாகச் செல்வத்தைப் பெற்றிருந்தாலும் அதனால் பயனடையார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## சிறுவினாக்கள்

**1. வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்** (Mar.-23)
**கோலொடு நின்றான் இரவு – குறளில் பயின்றுவரும் அணியை விளக்குக.**

**அணிசுட்டல்** : உவமையணி

**அணி விளக்கம்** : உவமானம் ஒரு தொடராகவும், உவமேயம் ஒரு தொடராகவும் இருக்க, இடையில் உவமஉருபு வெளிப்படையாக வருவது உவமையணி எனப்படும்.

**விளக்கம்** : ஆட்சியதிகாரத்தைக் கொண்டுள்ள அரசன் அதிகாரத்தைக் கொண்டு வரி விதித்தல், வேல்போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்வதைப் போன்றதாகும்.

**அணிப்பொருத்தம்**

**உவமை** : வேலொடு நின்றான் இடு என்றது. (வேல்போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்தல்.)

**உவமேயம்** : கோலொடு நின்றான் இரவு (அரசன், தன் அதிகாரத்தைக் கொண்டு வரி விதித்தல்.)

**உவம உருபு** : போலும்

(வேலொடு நின்றான் இடுஎன்றது) உவமானம் ஒரு தொடராகவும், (கோலொடு நின்றான் இரவு) உவமேயம் ஒரு தொடராகவும் இருக்க, இடையில் 'போலும்' என்னும் உவமஉருபு வெளிப்படையாக வந்துள்ளதால், இக்குறட்பாவில் 'உவமையணி' பயின்று வந்துள்ளது.

**2. கவிதையைத் தொடர்க.**



**தண்ணீர் நிறைந்த குளம்**
**தவித்தபடி வெளிநீட்டும் கை**
**கரையில் கைப்பேசி படமெடுத்தபடி**
இதுதான் உலகம்
இனிமேல் இங்கு இப்படித்தான்!
பொதுநலம் மறந்த சுயநலம்
நின்னுபோச்சு மூழ்கியவனின் மூச்சு!
செத்துப்போச்சோ மனித நேயம்!

## கூடுதல் வினாக்கள்

**3. நன்றி இல் செல்வமாவது யாது ?**

➤ நன்மை பயவாத செல்வம், தன்னைத் தேடியவனுக்கோ, மற்றவர்க்கோ பயன்பட்டு நன்மை விளைவிக்காது. அதாவது, தானும் அனுபவியாமலும், பிறர்க்கு ஈந்து மகிழாமலும் இறுகப் பற்றிச் சேர்க்கும் உலோபியின் செல்வமே, நன்றி இல் செல்வமாகும். ஒருவராலும் விரும்பப்படாதவர் பெற்ற செல்வமானது, ஊருக்கு நடுவில் நச்சு மரம் பழுத்தது போலாகும்.

**4. 'கொடுங்கோன்மை' என்ற அதிகாரத்தின்மூலம் ஒரு நாட்டின் மன்னனுக்கு வள்ளுவர் கூறும் அறிவுரைகள் யாவை ?**

**கொடுங்கோன்மையின் குற்றம் :**

➤ ஆட்சி அதிகாரத்தைக் கொண்டுள்ள அரசன், தன் அதிகாரத்தைக் கொண்டு வரி விதிப்பது, வேல்போன்ற ஆயுதங்களை ஏந்தியவன், அதனைக் காட்டி வழிப்பறி செய்வதற்கு நிகரானதாகும்.

**கொடுங்கோலன் எய்தும் குற்றம் :**

➤ நாட்டில் நிகழும் நன்மை தீமைகளை ஒவ்வொரு நாளும் ஆராய்ந்து ஆட்சி செய்யாத மன்னன், நாள்தோறும் தன் நாட்டை இழக்க நேரிடும். இவை நாட்டின் மன்னனுக்கு வள்ளுவர் கூறும் அறிவுரைகளாகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**5. ஒழுக்கமுடைமை குறித்து வள்ளுவர் கூறிய செய்தி யாது ?**

**ஒழுக்கத்தின் சிறப்பு :**

- ஒழுக்கம் எல்லோருக்கும் அனைத்துச் சிறப்புகளையும் தருவதால், அதை உயிரினும் மேலானதாகக் கருதிக் காத்தல் வேண்டும். ஒழுக்கமாக வாழ்வதனால் கிடைப்பது மேன்மை; ஒழுக்கம் தவறும் இழுக்கத்தினால் கிடைப்பது அடையக் கூடாத பழி.
- உலகத்தோடு பொருந்தி வாழக் கல்லாதவர், பல நூல்களைக் கற்றவராயினும், அறிவு இல்லாதவராகவே கருதப்படுவார்.

**6. மெய்யுணர்தல் குறித்துக் குறள் தரும் செய்திகளை எழுதுக.**

- எந்தப் பொருள் எந்த இயல்பினதாகத் தோன்றினாலும், அந்தப் பொருளின் உண்மைப் பொருளைக் காண்பதே அறிவு. ஆசை, சினம், அறியாமை என்னும் மூன்றையும் அழித்தால், அவற்றால் வரும் துன்பமும் அழியும்.

**7. பெரியாரைத் துணைக்கோடல் குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளை எழுதுக.**

- பெரியோரைப் போற்றித் துணையாக்கிக் கொள்ளுதல் கிடைப்பதற்கு அரிய பேறுகளுள் எல்லாம், பெரும்பேறாகும். குற்றம் கண்ட இடத்து இடித்துத் திருத்தும் பெரியாரின் பாதுகாப்பைத் தேடிக் கொள்ளாத மன்னன், தன்னைக் கெடுக்கப் பகைவர் இல்லையெனினும் தானே கெட்டழிவான்.
- நற்பண்புடைய பெரியோரின் நட்பைக் கைவிடுவதானது, பகைவர் பலரைத் தனியொருவனாக நின்று பகைத்துக் கொள்வதைக் காட்டிலும், பல மடங்குத் தீமைகளைத் தரும்.

**8. கண்ணோட்டம் குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளை எழுதுக.**

- பாடலோடு பொருந்தாத இசையால் பயன் ஏதும் விளையாது. அதுபோல், இரக்கமில்லாக் கண்களால் பயன் ஒன்று ஏற்படாது. நடுநிலையாகக் கடமை தவறாமல் இரக்கம் காட்டுபவருக்கு, இவ்வுலகமே உரிமை உடையதாகும். விரும்பத் தகுந்த இரக்க இயல்பைக் கொண்டவர், பிறரது நன்மைக்காகத் தனக்கு நஞ்சு கொடுத்தாலும் உண்ணும் பண்பாளர் ஆவார்.

**9. ஒருவனது செல்வம் பயனற்றதாய்ப் போவது எப்போது ?**

- பிறருக்குக் கொடுக்காமல் தானும் அனுபவிக்காமல் இருப்பவன் பெற்ற பல கோடிச் செல்வம் பயனற்றதாய்ப் போய்விடும். பிறருக்கு உதவி செய்யாததால், எவராலும் விரும்பப்படாத ஒருவன் பெற்ற செல்வம், ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றதாகும்.

**10. ஊழின் வலிமையையும் முயற்சியின் அருமையையும் குறள் வழி விளக்குக.**

- ஒருவனுக்கு ஐம்புலன்களில் ஏதேனும் குறை இருப்பினும் அது பழியன்று; அறிய வேண்டியவற்றை அறிந்து, தான் மேற்கொண்ட செயலில் முயற்சி செய்யாமையே பழியாகும்.
- விதிவசத்தால் கருதிய பயனைத் தரவில்லையாயினும், சிறிதும் தளர்ச்சியின்றி இடைவிடாது முயல்பவர், பயனை விலக்கவல்ல ஊழையும் தோற்கடித்து வெற்றி பெறுவர்.

**11. “பண்என்னாம் பாடற் கியைபின்றேல் கண்என்னாம்**
**கண்ணோட்டம் இல்லாத கண்” – இக்குறளில் பயின்று வரும் அணியைச் சுட்டி விளக்குக.**

**அணிசுட்டல்** : எடுத்துக்காட்டு உவமையணி.

**அணி விளக்கம்** : உவமானம் ஒரு தொடராகவும், உவமேயம் ஒரு தொடராகவும் இருக்க, உவம உருபு மறைந்து வருதல், எடுத்துக்காட்டு உவமையணி ஆகும்.

**அணிப்பொருத்தம்**

**உவமை (உவமானம்) :** பாடலோடு பொருந்தவில்லையெனில், இசையால் பயனில்லை.
(பாடற்கு இயை பின்றேல் பண்என்னாம்)

**உவமேயம் (பொருள்) :** இரக்கம் இல்லாவிட்டால் கண்களால் பயனில்லை.
(கண்ணோட்டம் இல்லாத கண்)
உவமானம், உவமேயம் இடையில் உவமை உருபு மறைந்து வந்திருப்பதால், இக்குறட்பா, எடுத்துக்காட்டு உவமையணிக்குப் பொருத்தமாயிற்று.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

12. **நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்**
**நச்சு மரம்பழுத் தற்று. – அணியைச் சுட்டி விளக்குக.**

**அணி சுட்டல்** : இதில் உவமை அணி அமைந்துள்ளது.

**அணி விளக்கம்** : உவமானம் ஒரு தொடராகவும் உவமேயம் ஒரு தொடராகவும் அமைய, இடையில் உவமஉருபு வெளிப்படையாக அமைவது உவமை அணி எனப்படும்.

**விளக்கம்** : ஒருவராலும் விரும்பப்படாதவர் பெற்ற செல்வம் என்பது, ஊருக்கு நடுவில் நச்சமரம் பழுத்தது போன்றதாகும்.

**அணிப்பொருத்தம்**

**உவமை** : (நச்சப் படாதவன் செல்வம்) எவராலும் விரும்பப்படாதவரிடம் உள்ள செல்வம்

**உவமேயம்** : (நடுஊருள் நச்சு மரம் பழுத்தது) ஊருக்கு நடுவில் நச்சுமரம் பழுத்திருப்பது

**உவமஉருபு** : (அற்று) போன்றது. எனவே, உவமை அணி ஆயிற்று.

## கூடுதல் நெடுவினா

1. **‘ஆள்வினை உடைமை’ குறித்து வள்ளுவர் கூறும் செய்திகள் யாவை?**

**முன்னுரை :**

சொல்லாலும் செயலாலும் இடைவிடாது முயற்சி செய்வதே ஆள்வினை உடைமை ஆகும். அம்முயற்சியே வாழ்வை உயர்த்தும்; புகழை நிலைநிறுத்தும்.

**முயற்சியது சிறப்பு :**

ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன்பே ‘அரியது’ என எண்ணி மனச்சோர்வு அடைதல் கூடாது. அச்செயலை இடைவிடாது முயன்று முடிப்பதே பெருமை தரும். விடாமுயற்சி என்னும் உயர் பண்பு உடையவர்களால்தான் பிறருக்கு உதவ முடியும்; உயர் நிலையையும் அடைய முடியும்.

**முயற்சிக் காண காரணம் :**

முயற்சி என்னும் செயலே ஒருவரது செல்வத்தைப் பெருக்கும். முயற்சி இல்லாவிட்டால் அவரை வறுமை வந்தடையும்.

**தெய்வத்தாலும் இடையூறு செய்ய முடியாது :**

ஐம்புலன்களில் ஏதேனும் குறை இருப்பது இழிவு ஆகாது. அறிய வேண்டியவற்றை அறிந்து முயற்சி மேற்கொள்ளாமையே இழிவாகிய பழியைத் தரும். மனச்சோர்வு இல்லாமலும் காலம் தாழ்த்தாமலும் முயற்சியை மேற்கொள்பவரின் செயலுக்கு தடையாக வரும் முன்வினையாகிய ஊழையும் தோற்கடித்து வெற்றி பெறுவர்.

**முடிவுரை :**

ஊழ் வினையையும் திட்டமிட்ட முயற்சியால் வென்று புகழ்பெற முடியும் என்பதை வள்ளுவர் உறுதிப் படுத்தியுள்ளார்.

## கூடுதல் பலவுள் தெரிக

1. தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே **(Mar.-24)**
வேளாண்மை என்னும் செருக்கு. – இக்குறட்பாவில் இடம்பெறும் அடி எதுகைச் சொற்களைத் தேர்க.

அ) தாளாண்மை – தகைமைக்கண் ஆ) தாளாண்மை – வேளாண்மை
இ) தகைமைக்கண் – தங்கிற்றே ஈ) வேளாண்மை – செருக்கு

**விடை : ஆ) தாளாண்மை – வேளாண்மை**

2. பிறருக்கு உதவுதல் என்ற உயர்ந்த நிலையை அடையக்கூடியவர் ______.

அ) ஒழுக்கம் உடையவர் ஆ) மெய்ப்பொருள் காண்பவர்
இ) பெரியாரைத் துணையாகக் கொள்பவர் ஈ) விடாமுயற்சி உடையவர்

**விடை : ஈ) விடாமுயற்சி உடையவர்**

3. துன்பத்தை அழிக்கக் கீழ்க்கண்டவற்றுள் ______ அழித்தல் வேண்டும்

அ) காமத்தை ஆ) வெகுளியை இ) மயக்கத்தை ஈ) இம்மூன்றையும்

**விடை : ஈ) இம்மூன்றையும்**

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



4. யாரைப் பாதுகாப்பற்ற மன்னன் என்று திருவள்ளுவர் கூறுகிறார் ?
அ) சிறந்த படைபலம் இல்லாதவனை ஆ) சிறந்த அமைச்சர் குழு இல்லாதவனை
இ) இடித்துக் கூறும் பெரியாரைத் துணையாகக் கொள்ளாதவனை
ஈ) சிறந்த குடிமக்களைப் பெறாதவனை
**விடை : இ) இடித்துக் கூறும் பெரியாரைத் துணையாகக் கொள்ளாதவனை**

5. கல்வி பலகற்றும் அறிவில்லாதவர் ______.
அ) மெய்ப்பொருள் காணாதவர்
ஆ) நற்பண்பு உடையவரின் நட்பை கைவிட்டவர்
இ) உலகத்தோடு ஒத்து வாழக் கல்லாதவர் ஈ) இரக்கம் இல்லாதவர்
**விடை : இ) உலகத்தோடு ஒத்து வாழக் கல்லாதவர்**

6. உயிரினும் ஓம்பப் படும் – இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது ?
அ) கருவிளம் தேமா மலர் ஆ) தேமாங்காய் தேமா மலர்
இ) தேமா கருவிளம் மலர் ஈ) கூவிளம் கருவிளம் நாள்
**விடை : அ) கருவிளம் தேமா மலர்**

7. நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத் தற்று – இக்குறளில் பயின்று வரும் அணி எது ?
அ) உவமையணி ஆ) எடுத்துக்காட்டு உவமையணி
இ) ஏகதேச உருவக அணி ஈ) உருவக அணி
**விடை : அ) உவமையணி**

8. உயிரினும் மேலானதாகக் கருதிப் பேணிகாக்க வேண்டியது,
அ) ஒழுக்கம் ஆ) மெய் உணர்தல் இ) கண்ணோட்டம் ஈ) கல்வி
**விடை : அ) ஒழுக்கம்**

9. பத்தடுத்த தீமைத்தே – எது?
அ) பல்லார் பகை கொளல் ஆ) கண்ணோட்டம் இல்லாமை
இ) நல்லார் தொடர் கைவிடல் ஈ) பொறி இன்மை
**விடை : இ) நல்லார் தொடர் கைவிடல்**

10. "கண்ணோட்டம் இல்லாத கண்" – 'கண்ணோட்டம்' என்பதன் பொருள் ______.
அ) அன்பு ஆ) கருணை இ) அறிவு ஈ) இரக்கம்
**விடை : ஈ) இரக்கம்**

11. 'நஞ்சுண்டமைவர்' என்னும் தொடர் ______ எனப் பிரியும்.
அ) நஞ்சுண் + டமைவர் ஆ) நஞ்சுண்டு + அமைவர்
இ) நஞ்சு + உண்டமைவர் ஈ) நஞ்சு + உண்டு + அமைவர்
**விடை : ஈ) நஞ்சு + உண்டு + அமைவர்**

12. "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்" என்பதில் அமைந்துள்ள தொடை,
அ) மோனை ஆ) எதுகை இ) முரண் ஈ) இயைபு
**விடை : ஆ) எதுகை**

13. "பெரியாரைப் பேணித் தமராக் கொளல்" – இதில் "தமர்" என்பதன் பொருள்,
அ) நண்பர் ஆ) துணைவர் இ) அமைச்சர் ஈ) அரியவர்
**விடை : ஆ) துணைவர்**

14. திருக்குறளைப் போற்றிப்பாடும் நூல் ______.
அ) நால்வர் நான்மணி மாலை ஆ) திருவள்ளுவமாலை
இ) இரட்டை மணிமாலை ஈ) நான்மணிக்கடிகை
**விடை : ஆ) திருவள்ளுவமாலை**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



15. ‘இலானும் கெடும்’ – இச் சீர்களுக்குப் பொருந்தும் வாய்பாடு எது?

அ) புளிமா மலர் ஆ) கூவிளம் மலர் இ) கருவிளம் மலர் ஈ) தேமா மலர்

விடை : அ) புளிமா மலர்

16. ‘ஊழ்’ என்னும் சொல்லின் பொருள்,

அ) சினம் ஆ) மயக்கம் இ) முன்வினை ஈ) காலம்

விடை : இ) முன்வினை

## இலக்கணக்குறிப்பு

**ஒழுக்கம், கொளல், இழுக்கம், இயைபு, முயற்சி, தாளாண்மை, வேளாண்மை, இன்மை, அறிவு, உலைவு** – தொழிற்பெயர்கள்

உயிரி**னும்**, ஊழை**யும்** – உயர்வு சிறப்பு உம்மைகள்

**ஓம்பப்படும், கெடும், ஆக்கும், விடும்** – ‘செய்யும்’ என்னும் வாய்பாட்டு வினைமுற்றுகள்

**எய்துவர்** – எதிர்காலப் பலர்பால் வினைமுற்று

**எய்தா, செய்யா** – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்

**கல்லார், அறிவிலாதார்** – எதிர்மறை வினையாலணையும் பெயர்கள்

**இலார்** – ‘இல்லாதவர்’ என்பதன் தொகுத்தல் விகாரம்

**தன்மைத்து** – ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்று

**கெட** – ‘செய’ என்னும் வாய்பாட்டு வினையெச்சம்

**பேணி, நாடி** – வினையெச்சங்கள்

**அரிய** – பலவின்பால் குறிப்பு வினையாலணையும் பெயர்

**தமரா** – தொகுத்தல் விகாரம்

**இடிப்பார், நின்றான், வேண்டுபவர், உஞற்றுபவர்** – வினையாலணையும் பெயர்கள்

**இல்லாத** – எதிர்மறைப் பெயரெச்சம்

**பல்லார் பகை, நல்லார் தொடர்** – ஆறாம் வேற்றுமைத்தொகைகள்

**தொடர்** – முதனிலைத் தொழிற்பெயர்

**இடு** – ஒருமை ஏவல்வினை

**நயத்தக்க** – பெயரெச்சம்

**அசாவாமை** – எதிர்மறைத் தொழிற்பெயர்

**தகைமை** – பண்புப்பெயர்

இன்**மை** புகுத்திவிடும் – இரண்டாம் வேற்றுமைத்தொகை

**அன்று** – எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று

**யார்க்கும்** – முற்றும்மை

**இன்றி** – வினையெச்சம்

கொடுப்ப**தூஉம்**, துய்ப்ப**தூஉம்** – இன்னிசை அளபெடைகள்

**கோடி** – எண்ணலளவை ஆகுபெயர்

**உலகத்தோடு** – இடவாகுபெயர்

## பகுபத உறுப்பிலக்கணம்

1. விழையான் – விழை + ய் + (ஆ) + ஆன்

**விழை** – பகுதி

**ய்** – உடம்படுமெய் சந்தி

**(ஆ)** – எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது

**ஆன்** – படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2. விழைவான் – விழை + வ் + ஆன்

**விழை** – பகுதி

**வ்** – எதிர்கால இடைநிலை

**ஆன்** – படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.

3. காண்பர் காண் + ப் + அர்

**காண்** – பகுதி

**ப்** – எதிர்கால இடைநிலை

**அர்** – படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதி.

## புணர்ச்சி விதிகள்

1. கண்ணோட்டம் – கண் + ஓட்டம்

'தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்' என்னும் விதிப்படி, (கண்ண் + ஒட்டம்)

'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி, (கண்ணோட்டம்)

2. தகைமைக்கண் – தகைமை + கண்

'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' என்னும் விதிப்படி, (தகைமை + க் + கண்) (தகைமைக்கண்)

## கற்பவை கற்றபின்

படங்கள் உணர்த்தும் குறளின் கருத்தினை மையமிட்டு வகுப்பில் கலந்துரையாடுக.

| | |
|---|---|
|  |  |
| முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும். | பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல்; கண்என்னாம் கண்ணோட்டம் இல்லாத கண். |

படம் – 1

**ஸ்ரீதர்** : முயற்சி திருவினை ஆக்கும், முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்.

**கோபாலன்** : ஒருவன் செய்யும் முயற்சியினால் செல்வம் பெருகும்; முயலாமையால் வறுமையில் வீழ நேரிடும்.

**கவின்** : முயற்சி செய்தாலும் தோல்வி ஏற்பட்டால்?

**ஸ்ரீதர்** : முயற்சி செய்யும்போதே செயலின் தன்மை நமக்குப் புரியத் தொடங்கும். தோல்வி ஏற்பட்டாலும் மறுபடி முயற்சி செய்ய வேண்டும் என்னும் ஊக்கத்தைத் தரும்.

**கவின்** : அதாவது, முயற்சி செய்யாவிடில் செயலை நம்மால் புரிந்துகொள்ள இயலாது. முயற்சி இன்மையால் நமக்குத் துன்பமே விளையும். அப்படித்தானே?

**ஸ்ரீதர்** : ஆமாம், முயற்சி செய்து உயர்ந்தவர்களே வரலாற்றில் இடம் பெற்றுள்ளனர். அவரவரும் தம்தம் செயலில் முயன்று வென்றதாலேயே வரலாற்றில் இடம் பெற்றனர்.

**கவின்** : உண்மையே! தளர்வு கொள்ளாமல் முயன்றதாலேயே மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி என்னும் ஒரு மனிதன், 'மகாத்மா' ஆக முடிந்தது.

**கோபாலன்** : 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்பது பழமொழியல்லவா?

**இனியதர்ஷினி** : ஆமாம்! முயற்சி என்பது மூலதனமாகும். அது நம்மை மேலும் மேலும் உயர்த்தும்.

**அனைவரும்** : முயற்சி செய்வோம்! வெற்றி பெறுவோம்! முன்னேறுவோம்!

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



படம் – 2

**கோமதி** : இந்தத் திருக்குறள் நமக்கு என்ன செய்தியை உணர்த்துகிறது ?

**செல்வி** : பாட்டோடு இசை பொருந்தாவிடில், அந்தப் பொருந்தா இசையால் எந்தப் பயனுமில்லை. இசையானது பாட்டுடன் சேர்ந்து அமைய வேண்டும்.

**பூங்கோதை** : ஆமாம், அஃது உண்மையே. சரி, அதனைக் கொண்டு நமக்கு எதனை உணர்த்துகிறார்?

**செல்வி** : பாட்டோடு பொருந்தாத இசையால் எந்தப் பயனுமில்லை. அதுபோலக் கண்ணோட்டம் என்னும் தாட்சண்யம், பரிவு உணர்வு கண்களில் தோன்றாவிடில், அந்தக் கண்களால் எந்தப் பயனுமில்லை என்பதனை உணர்த்துகிறார்.

**பூங்கோதை** : புரிகிறது. இசையும் வேண்டும்; தாட்சண்யமும் வேண்டும். எனினும், தாட்சண்யம் அவசியம் தேவை.

**அனைவரும்** : ஆமாம்! தாட்சண்யம் என்பது ஆறறிவு படைத்த மனிதனுக்குத் தேவை.

**2. கதைக்குப் பொருத்தமான குறளைத் தேர்வு செய்து காரணத்தை எழுதுக.**

“சின்னச்சாமி.....யாரோ மரத்தோரமா நிற்கிறாங்க.....யாராய் இருக்கும்.....”மாட்டு வண்டிய ஒட்டிக்கிட்டே அப்பா கேட்டார்.

“தெரியலப்பா....”

“இறங்கி யாருன்னு பாரு....”

வாட்டசாட்டமாய், கண்ணாடியும் அலைபேசியும் கையுமாய் சாலையோரத்தில் வண்டியுடன் ஒருவர் நின்றிருந்தார்.

“ஐயா.. நீங்க...”

“வெளியூருப்பா.... வண்டி நின்னு போச்சு....!”

“அப்படியா... வண்டியத் தூக்கி மாட்டு வண்டியில வச்சுட்டு வாங்க. மழை வர்ற மாதிரியிருக்கு... ஊரு ரொம்ப தூரம்...வேற வண்டியும் வராது....”

அவர் உடையையும், உழைத்துக் களைத்த வியர்வை பொங்கிய உடலையும் பார்த்து வரலைன்னுட்டார். மூன்று நான்கு பேர்தான் வண்டியில இருந்தோம்... சிறிது தூரம் போறதுக்குள்ள மழை கொட்டு கொட்டுன்னு கொட்டிருச்சு.. நாங்க வீட்டுக்குப் போயிட்டோம்.

இரவுல தூங்கப் போறப்ப.... அப்பா சொன்னார். தம்பி.... அந்தச் சூட்டுக்காரர், மழை தாங்காம நடந்திருக்காரு. தேங்கா விழுந்து மண்ட உடைஞ்சு.... வேற யாரோ தூக்கிட்டு வந்திருக்காங்க. நம்ம ஊரு ஆசுபத்திரியில... கட்டுப் போட்டுக்கிட்டு இருந்தாங்க... பாவம் படிச்சவரா இருக்காரு.... சூழ்நிலை புரியாம... வரமாட்டேன்னு சொன்னாரு, இப்ப வேதனைப்படறாரே.....

அ) உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

ஆ) பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

இ) ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்
தாழாது உஞற்று பவர்.

**விடை** : அ) உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

**காரணம்** : கிராமத்தில் வாழ்வோர் இயற்கைச் சூழ்நிலையைக் கண்டு மழை பெய்யுமா பெய்யாதா எனக் கணித்துவிடுவர். அவ்வாறே அறிந்து அவ்இளைஞரைத் தம்முடன் வர அழைத்தும், அவர் அழைத்தவர்களுடன் செல்ல மறுக்கிறார். காரணம், நாகரிகம் மிகுந்த நகரில் வாழ்ந்த அவர் மனம், கிராமத்து மக்களுடன் பயணம் செய்ய உடன்படாததே. மேலும், அவர் அந்த வழியில் இனி வண்டிகள் வாரா என்று சொன்னதைப் புரிந்து கொள்ளவில்லை. அவர் மெத்தப் படித்தவராயினும், பிறருடன் சேர்ந்து வாழக் கற்று உடன்படாமையே, மண்டை உடையவும் துன்பம் அடையவும் காரணம்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# இயல் – 6

## உரைநடை உலகம்

# 1. பன்முகக் கலைஞர்

### குறுவினாக்கள்

1. **"கலைஞர், பழுமரக் கனிப் பயன் கொள்ளும் பேச்சாளர். படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர்" – பேராசிரியர் அன்பழகனார். இக்கூற்றை அயற்கூற்றாக எழுதுக.**

கலைஞர், பழுமரக் கனிப் பயன் கொள்ளும் பேச்சாளர் எனவும், படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர் எனவும் பேராசிரியர் அன்பழகனார் கூறினார்.

### கூடுதல் வினாக்கள்

2. **கலைஞர் கருணாநிதி பள்ளிப் பருவத்திலேயே தொடங்கிய அமைப்புகள் என்னென்ன?**
   - பள்ளிப் பருவத்திலேயே மாணவர்களுக்குப் பேச்சுப் பயிற்சி அளிப்பதற்காகச் 'சிறுவர் சீர்திருத்தச் சங்கம்', 'தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்' ஆகிய அமைப்புகளைக் கலைஞர் கருணாநிதி தொடங்கினார்.
3. **கலைஞருக்கு அரசியல் அரிச்சுவடியாக அமைந்த நூல் கூறும் செய்தி என்ன?**
   - கலைஞருக்கு அரசியல் அரிச்சுவடியாக அமைந்த நூல், 1921இல் சென்னை மாகாணத்திற்கு நீதிக்கட்சியின் சார்பில் முதல் அமைச்சராக இருந்த பனகல் அரசரின் சாதனைகளைக் கூறியது.
4. **கலைஞரின் கதை, வசனங்களில் பகுத்தறிவு பேசிய படங்கள் எவை?**
   - கலைஞரின் கதை, வசனங்களில் பகுத்தறிவு பேசிய படங்கள் பராசக்தி, ராஜகுமாரி, மலைக்கள்ளன் ஆகியவை ஆகும்.
5. **ஐயன் திருவள்ளுவர்மீது கலைஞருக்கிருந்த தீராத பற்றினை எவ்வாறு வெளிப்படுத்தினார்?**
   - ஐயன் திருவள்ளுவர்மீது தமக்கிருந்த தீராத பற்றின் காரணமாகக் கலைஞர், தமிழகத்தின் தலைநகராம் சென்னையில் வள்ளுவர் கோட்டமும், தெற்கெல்லையான குமரியில் 133 அடி உயர வள்ளுவர் சிலையும் அமைத்தார்.
6. **அரசியல் பேசிய கலைஞரின் படங்கள் எவை?**
   - கலைஞர் கதை வசனங்களில் வெளிவந்த புதுமைப்பித்தன், குறவஞ்சி, அரசிளங்குமரி, வண்டிக்காரன் மகன் ஆகியவை அரசியல் பேசிய படங்களாகும்.
7. **கலைஞர் எழுதிய நாடகங்கள் சிலவற்றைக் கூறுக.**
   - பழநியப்பன், சாம்ராட் அசோகன், மணிமகுடம், வெள்ளிக்கிழமை, காகிதப்பூ, தூக்குமேடை முதலானவை கலைஞர் எழுதிய நாடகங்கள்.
8. **கலைஞர் எழுதிய 'உடன் பிறப்புகளுக்கு' கடிதங்களின் தாக்கம் எப்படி இருந்தது?**
   - கலைஞரின் உரையை நேரில் கேட்டுச் சுவைத்தவர்கள், எத்தகைய உணர்வினை அடைவார்களோ, அதே உணர்வினை அடையும் வகையில் கலைஞரின் 'உடன் பிறப்புகளுக்கு எழுதிய கடிதங்கள் ஏற்படுத்தின.
9. **சமூகக் கருத்துகளைப் பேசிய கலைஞரின் படங்களைக் குறிப்பிடுக.**
   - கலைஞரின் மருதநாட்டு இளவரசி, பணம், நாம், திரும்பிப்பார் என்பன சமூகக் கருத்துகளைப் பறைசாற்றிய படங்களாகும்.
10. **கல்வித்துறையில் கலைஞர் செய்த சாதனை என்ன?**
    - கல்வித் துறையைப் பள்ளிக் கல்வி, உயர்கல்வி என இரண்டாகப் பிரித்தார்.
    - தமிழ் வளர்ச்சித்துறை எனப் புதிதாக ஒரு துறையையும் உருவாக்கினார்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11. **இலக்கியம் பேசும் கலைஞரின் படங்கள் எவை?**

➤ கலைஞரின் அபிமன்யு, பூம்புகார், உளியின் ஓசை என்பன இலக்கியம் பற்றிப் பேசுபவையாகும்.

12. **பெண்கள் முன்னேற்றம் குறித்துப் பேசும் கலைஞரின் திரைப்படங்கள் என்னென்ன?**

➤ கலைஞரின் மணமகள், ராஜாராணி, இருவர் உள்ளம், பாசப் பறவைகள் போன்ற திரைப்படங்கள் பெண்கள் முன்னேற்றம் குறித்துப் பேசிய படங்களாகும்.

13. **பள்ளிப் பருவத்திலேயே மாணவர்களுக்காகக் கலைஞர் தொடங்கிய அமைப்புகள் எவை?**

➤ பகுத்தறிவுக் கருத்துகளில் ஈர்ப்பும், மேடைப் பேச்சில் பெருவிருப்பும் கொண்ட கிராமத்து இளைஞரான கலைஞர், பள்ளிப் பருவத்திலேயே மாணவர்களுக்குப் பேச்சுப் பயிற்சி அளிப்பதற்காகச் 'சிறுவர் சீர்திருத்தச் சங்கம்', மாணவர்களிடையே ஒற்றுமை உணர்வை வளர்த்தெடுக்க 'தமிழ்நாடு மாணவர் மன்றம்' ஆகிய அமைப்புகளைத் தொடங்கினார்.

14. **கலைஞருடைய முத்தான பேச்சுக்கு முத்திரையாக அமைந்தது எது?**

➤ தமக்கே உரிய நடையில் பேசும் கலைஞருடைய முத்தான பேச்சுக்கு, "இளைய தலைமுறையே, எழுவாய்! செயப்படுபொருள், பயனிலையேல் விழுவாய்! அறிவில் மூத்தோரை தொழுவாய்! அரிய பயன் காண, ஆழ உழுவாய்!" என்னும் உரையை ஒரு முத்திரையாகச் சான்று காட்டலாம்

15. **இளமைப் பருவத்தில் கலைஞரை ஈர்த்தனவும் கவர்ந்ததும் எவை?**

➤ ஈர்த்தவை தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கருத்துகள்;

➤ கவர்ந்தது, பட்டுக்கோட்டை அழகிரி, அறிஞர் அண்ணா ஆகியோரின் பேச்சாற்றல்.

16. **கிராமத்து இளைஞர் பலராலும் எதற்காகப் பாராட்டப்பட்டார் ?**

➤ மேடைப்பேச்சில் பெருவிருப்பு கொண்ட கிராமத்து இளைஞர், 'நட்பு' என்னும் தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவுக்காகப் பலராலும் பாராட்டப்பட்டார்.

17. **கலைஞர் தம் ஆயுளை எவ்வாறு, எதற்குச் செலவிட்டார்?**

➤ கலைஞர் தாம் சென்ற இடமெல்லாம், செறிவாகத் தமிழ் பேசித் தன்மானத்தை, தமிழ் உணர்வை, தமிழ் இலக்கியத்தை, பகுத்தறிவை, மத ஒருமைப்பாட்டை, சமூக நல்லிணக்கத்தை மக்களுக்கெல்லாம் ஊட்டியதோடு தமிழ், தமிழர், தமிழ்நாடு என்ற சிந்தனையிலேயே தம் ஆயுளைச் செலவிட்டார்..

## சிறுவினாக்கள்

1. **தமிழ்மொழிக்காகக் கலைஞர் செய்த சிறப்புகளுள் நீங்கள் அறிந்துகொண்ட இரண்டினை எழுதுக.**

★ தமிழ்மீது தீராத பற்றுக்கொண்டவர் கலைஞர். பல சிறுகதைகளையும், சில புதினங்களையும் படைத்துள்ளார். தம் வாழ்க்கை வரலாற்றை, 'நெஞ்சுக்கு நீதி' என்னும் தலைப்பில் ஆறு பாகங்களாக எழுதியுள்ளார்.

★ புனைவுகளில் மட்டுமல்லாது, தமிழார்வம் காரணமாகப் பழந்தமிழ் இலக்கியங்களுக்கும் அவர் உரை எழுதியுள்ளார். அவற்றுள் சங்கத் தமிழ், குறளோவியம், தொல்காப்பியப் பூங்கா ஆகியவை குறிப்பிடத் தக்கவை.

## கூடுதல் வினாக்கள்

2. **கலைஞர் மு. கருணாநிதியின் பன்முகத் திறனைப் பேராசிரியர் க. அன்பழகனார் விவரிப்பதை எழுதுக.**

➤ படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர்; கலைத்துறையில் வாகை சூடிய படைப்பாளர்; தொட்டது துலங்கத் துறைதோறும் தம் முத்திரை பதிக்கும் திறமையாளர்; முத்தமிழிலும் வல்ல வித்தகர்; செந்தமிழுக்கொரு தீமை எனில் தம்முயிரும் தந்திடத் துணியும் தியாகத் திருவுருவம் எனக் கலைஞர் கருணாநிதியின் பன்முகத் திறனைக் குறித்து பேராசிரியர் புகழுரை சாற்றியுள்ளார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



3. **கலைஞரின் கவிதைப் படைப்பிற்கோர் எடுத்துக்காட்டு தந்து விளக்குக.**

- பாமரரும் புரிந்து கொள்ளும் எளிமையும், இதயம் தொடும் இனிய சந்தமும் வாய்ந்தவை கலைஞரின் கவிதைகள். சிலப்பதிகாரத்தைப் பற்றிக் கலைஞர் எழுதிய கவிதை ஒன்று:

“இந்த
எட்டுச் சுவை
பிட்டுத் தமிழ்
கட்டித் தயிர்
வட்டில் நிறை
கொட்டித் தரப்
பட்டுக் கொடிக்
கொற்றக் குடை
முத்துச்சரச்
சோழனூர் வருவீரே!”

- இந்தக் கவிதையைக் கண்ணால் காணும்போதே நெஞ்சில் சந்தம் எழும். சிறுசிறு சொற்களால் அமைந்த கவிப்பூ இது!

4. **‘பராசக்தி’ படம் பாரெல்லாம் பேசப்பட்டதன் சிறப்புகளை எழுதுக.**

- பாவலர் பாலசுந்தரத்தின் ‘பராசக்தி’ கதைக்குக் கலைஞர் திரைக்கதை, வசனம் எழுதியது தமிழ்த் திரையுலகில் திருப்புமுனையாக அமைந்தது.
- படம் வெளிவந்த மறுநாள் பாரெங்கும் பராசக்தி பற்றிப் பேசப்பட்டது. முதல் படத்திலேயே புகழின் உச்சத்தைத் தொட்ட சிவாஜிகணேசன், கலைஞரின் நீதிமன்றக் காட்சி உட்பட, அவரது கருத்தாழமும் கலைநயமும் மிக்க வசனங்களுக்குத் தம் நடிப்பாலும், உச்சரிப்பாலும் உயிர்கொடுத்தார்.
- அதனால், தாம் ஏற்கெனவே ஏறிய புகழ்மலையின் சிகரத்தைக் கலைஞர் தொட்டார்.

5. **கலைஞரின் எழுத்துக் கூர்மையைக் காலத்திற்கும் எடுத்துச் செல்லக்கூடிய வசனங்கள் எவை?**

- “மனசாட்சி உறங்கும்போது, மனக்குரங்கு ஊர் சுற்றக் கிளம்பி விடுகிறது” என்னும் ‘பூம்புகார்’ பட வசனமும், ‘ராஜாராணி’ படத்தில் சாக்ரட்டீஸ் பேசுவதாக வரும் “நாற்றமெடுத்த சமுதாயத்தில் நறுமணம் கமழ்விக்க இதோ, சாக்ரட்டீஸ் அழைக்கிறேன்! ஓடி வாருங்கள்!” என்ற வசனமும்,
- ‘மனோகரா’ படத்தில் “பொறுத்தது போதும் மனோகரா! பொங்கி எழு” என்ற வசனமும் கலைஞரின் எழுத்துக் கூர்மையைக் காலத்திற்கும் எடுத்துச் செல்லக் கூடியவை எனலாம்.

6. **கலைஞர் எக்கூற்றுக்குச் சான்றாக வாழ்ந்தார்?**

- தமிழ்மொழியின் பெருமிதங்களையும் விழுமியங்களையும் மீட்டெடுக்க, அதற்கான பணிகளைக் கலைஞர் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தார்.
- இலட்சக் கணக்கான பக்கங்கள் எழுதினார்; ஆயிரக்கணக்கான மேடைகளில் பேசினார்.
- ‘உடல் மண்ணுக்கு! உயிர் தமிழுக்கு!’ என்னும் கூற்றுக்குச் சான்றாக வாழ்ந்து, 94ஆம் வயதில் தமிழர் நெஞ்சில் என்றும் நிலைத்து நிற்கும் காவியமானார்.

7. **கலைஞர் எழுதிய கடிதங்களின் சிறப்பு குறித்து எழுதுக.**

- தம் எழுத்துகள்மீது அளவற்ற நம்பிக்கை கொண்ட தலைவரான கலைஞர், அதனை ஆயுதமாக்கித் தமது விருப்பத்தை, எண்ணத்தைக் கடைக்கோடித் தமிழனுக்கும் கொண்டு சேர்க்க, ‘உடன் பிறப்புகளுக்கு!’ கடிதங்களை எழுதினார்.
- படிப்பவர்களைத் தம் வசப்படுத்தும் ஆற்றல் கொண்ட அக்கடிதங்கள், கலைஞரின் உரையை நேரில் கேட்டுச் சுவைக்கும் உணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருந்தன!
- தமிழ்நாட்டின் வரலாற்றை ஆய்வு செய்ய விரும்புவார்க்குக் கருத்துகளை வழங்கும் கருவூலமாகத் திகழ்வது அக்கடிதங்களின் சிறப்பு எனலாம்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**8. கலைஞரின் செம்மனத்தைச் சிறப்புடன் காட்டுவது எது?**

➤ எழுத்தை ஆயுதமாக்கித் தம் எண்ணத்தை, விருப்பத்தைக் கடைக்கோடித் தமிழனுக்கும் தெரிவித்த கலைஞர், எழுத்துகளின் ஒற்றுமையைக் கூறவந்த இடத்தில், தமிழர்கள் தமக்குள் பிளவுபட்டு இருப்பதை "வல்லினம், மெல்லினம், இடையினம் ஒன்றுபட்டுத் 'தமிழ்' என்றே தகத்தகாய ஒளி பரப்பிடும்போது, தமிழர்கள் பல கூறுகளாகப் பிளவுபட்டு, பாழ்பட்டுக் கிடப்பது நியாயம் தானா?" எனக் கூறிய விதம், அவருடைய செம்மனத்தைச் சிறப்புடன் காட்டும்.

## நெடுவினா

**1. நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.**

பொம்மலாட்டம், ஒரு பொழுதுபோக்குக் காட்சிக்கலை. இக்காட்சிக் கலையைப் பொருள் பொதிந்த, அறிவுசார்ந்த கலையாக்கிய மாணவர்கள் பாராட்டுக்குரியவர்கள். சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது நமது கடமை. அச்சூழலைக் கெடுக்கும் நெகிழியோ ஆபத்தானது. நெகிழிப்பைகளைக் கால்நடைகள் உண்பதால் அவற்றின் உணவுக்குழல் பாதிப்படையும். குப்பையாக மண்ணில் போடுவதால் மண்ணுக்குக் கேடு விளையும்.

மழைநீர் ஊடுருவ வழியின்றி, நிலத்தடிநீர் குறைந்துவிடும். கழிவுநீரில் கலந்து கால்வாய்களை அடைத்து விடுவதால், கழிவுகள் தேங்கி நோய்கள் உண்டாகும். நீர் மாசுபடுவதால் புற்றுநோய் ஏற்படுகிறது. நெகிழிப்பைகளை எரிப்பதால், நச்சு வாயு காற்றில் கலக்கிறது.

இவற்றிற்கெல்லாம் உச்சம் என்னவென்றால், நெகிழிப்பைகளால் நோய்கள் உண்டாகின்றன. இச்செய்தியை அழகாகவும் நேர்த்தியாகவும் பொம்மலாட்டமாய் நிகழ்த்திய நண்பர்களை எத்தனைமுறை பாராட்டினாலும் தகும். ஆண்டுவிழா என்பது ஆண்டின் நிறைவு விழா. மாணவர்களுக்கோ இது அறிவுறுத்தலையும் ஆனந்தத்தையும் தரும் விழா.

**2. போராட்டக் கலைஞர் – பேச்சுக் கலைஞர் – நாடகக் கலைஞர் – திரைக் கலைஞர் – இயற்றமிழ்க் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.**

**போராட்டக் கலைஞர் :**

தாம் பிறந்த திருக்குவளையில் தொடக்கக் கல்வியை நிறைவு செய்தார் கலைஞர். திருவாரூரில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். அங்குதான் அரசியலின் அரிச்சுவடியை அறிந்துகொண்டார். பள்ளி முடிந்த மாலை வேளைகளில் தாம் எழுதிய 'வாருங்கள் எல்லோரும் போருக்குச் சென்றிடுவோம்' என்று தொடங்கும் பாடலை முழங்கியபடி, இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராட மாணவர்களைத் திரட்டி ஊர்வலம் நடத்தினார். இப்படியாகப் போராட்டப் பண்புடனே வளர்ந்தவர் கலைஞர்.

**பேச்சுக் கலைஞர் :**

கிராமத்து இளைஞரான கலைஞர், 'நட்பு' என்னும் தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவு பலராலும் பாராட்டப்பட்டது. பட்டுக்கோட்டை அழகிரி, அறிஞர் அண்ணா ஆகியோரின் பேச்சாற்றல் அவரைக் கவர்ந்ததால், பாராட்டத்தக்க சொற்பொழிவை ஆற்ற முடிந்தது. தமிழ், தமிழர், தமிழ்நாடு என்ற சிந்தனையோடு வாழ்நாளைச் செலவிட்டவர் கலைஞர். தாம் சென்ற இடமெல்லாம் செறிவாகத் தமிழ் பேசித் தன்மானத்தை, தமிழ் உணர்வை, தமிழிலக்கியத்தை, பகுத்தறிவை, மத ஒருமைப்பாட்டை, சமூக நல்லிணக்கத்தை ஊட்டினார்.

**நாடகக் கலைஞர் :**

தமக்கே உரிய தனிநடையால் தமிழரை மேடை நாடகங்களின் பக்கம் ஈர்த்தார் கலைஞர். அவரின் முதல் நாடகம், 'பழனியப்பன்', 1944ஆம் ஆண்டு அரங்கேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து 'சாம்ராட் அசோகன், மணிமகுடம், வெள்ளிக்கிழமை, காகிதப்பூ' உட்பட பல நாடகங்களை எழுதினார். தாம் எழுதிய 'தூக்குமேடை' என்னும் நாடகத்தில், மாணவர் தலைவராக நடித்தார். அந்த நாடகத்தின் பாராட்டு விழாவின் போதுதான் அவருக்குக் 'கலைஞர்' என்னும் சிறப்புப் பெயர் வழங்கப்பட்டது. அதுவே பின்னாளில் மக்கள் அன்புடன் அழைக்கும் பெயரானது.

**திரைக் கலைஞர்:**

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். முதன்முதலாக நடித்த 'ராஜகுமாரி' படத்துக்கான முழு வசனத்தையும் எழுதினார் கலைஞர். தொடர்ந்து எம். ஜி. ஆர். நடிப்பில் வெளிவந்த பல படங்களுக்குக் கதை வசனம் எழுதினார். தமிழ்த் திரையுலகின் திருப்புமுனையாக அமைந்த படம், சிவாஜி கணேசன் முதல் படமாக நடித்த 'பராசக்தி'. இந்தப் படத்திலும் நீதிமன்றக் காட்சி உட்பட அவரது கருத்தாழமிக்க, கலைநயமிக்க

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



வசனங்கள் மிகவும் பேசப்பட்டன. 'மனோகரா' படத்தில் வரும் 'பொறுத்தது போதும் மனோகரா! பொங்கி எழு' என்ற வசனம் கலைஞரின் எழுத்துக் கூர்மைக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது. 'மந்திரிகுமாரி' தொடங்கிப் பல படங்களுக்குப் பாடல்களும் எழுதியுள்ளார். 'மறக்க முடியுமா' என்னும் திரைப்படத்தில் அமைந்த 'காகித ஓடம் கடல் அலை மேலே' என்னும் பாடல் காலத்தால் மறக்க முடியாத, மக்கள் மனத்தில் இடம்பெற்றுள்ள பாடலாகும்.

**இயற்றமிழ்க் கலைஞர் :**

அனைத்து இந்தியருக்கும் இருந்த ஆங்கிலேய எதிர்ப்புணர்வைத் தமது இருபத்து இரண்டாவது வயதில் எழுதிய 'கயிற்றில் தொங்கிய கணபதி' என்ற சிறிய கட்டுரை மூலம் வெளிப்படுத்தினார். தமிழ்மீது தீராத பற்றுக்கொண்ட கலைஞர், இலக்கியப் படைப்புகளைத் தந்து தமிழுக்கு அணி சேர்த்தார். 'நளாயினி, சித்தார்த்தன் சிலை, சந்தனக் கிண்ணம், தாய்மை, புகழேந்தி, அணில் குஞ்சு' உள்ளிட்ட சிறுகதைகளைத் தந்துள்ளார். 'ரோமாபுரி பாண்டியன், பொன்னர் சங்கர், தென்பாண்டிச் சிங்கம், ஒரே ரத்தம்' உள்ளிட்ட புதினங்களையும் எழுதியுள்ளார். பழந்தமிழ் இலக்கியங்களுக்கும் உரை தந்துள்ளார் கலைஞர். அவற்றுள் சங்கத்தமிழ், குறளோவியம், தொல்காப்பியப் பூங்கா ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

## கூடுதல் வினா

**2. வானொலியில் கலைஞர் பாடிய இரங்கற்பா செய்தி யாது?**

அறிஞர் அண்ணா மறைந்தபின், கலைஞர் வானொலியில் இரங்கற்பா ஒன்றைப் படித்தார். அதன் உள்ளடக்கம், அனைவர் உள்ளத்தையும் உருக்கியது. அண்ணாவிடம் கலைஞர் கொண்டிருந்த பற்றைப் பறை சாற்றியது. "கண்மூடிக்கொண்டு, நீ சிந்திக்கும் பேரழகைப் பார்த்துள்ளேன்! இன்று, மண்மூடிக்கொண்டு, உன்னைப் பார்க்காமல் தடுப்பது, என்ன கொடுமை?"

"கொடுமைக்கு முடிவு கண்டாய்! எமைக் கொடுமைக்கு ஆளாக்கி ஏன் சென்றாய்?" என்னும் வரிகள் பிரிவுத் துன்பத்தைப் புலப்படுத்துகின்றன. "எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" என்பது அண்ணா அடிக்கடி தம் தொண்டர்களுக்கு கூறும் அறிவுரை. இக்கவிதையில் வரும் அந்த அடியை நோக்கும்போது, நிரந்தரப் பிரிவுத் துன்பத்தை எவராலும் தாங்க முடியாது என்பது புலப்படுகிறது! "இயற்கையின் சதி எமக்குத் தெரியும் அண்ணா!" என்னும் அடியில் பொதிந்துள்ள செய்தி விவரிப்பதற்கு அரியதாகும்.

"இரவலாக உன் இதயத்தைத் தந்திடு அண்ணா....! நான் வரும்போது கையோடு கொணர்ந்து அதை உன் கால் மலரில் வைப்பேன்" என்னும் அடிகள் உணர்வின் உச்சம் தொடுகிறது. அண்ணாவின் வழி நடந்த கலைஞரின் இக்கவிதை அடிகள், கலைஞரது அன்பு உள்ளத்து உணர்வை வெளிப்படுத்துகிறது.

## பலவுள் தெரிக

1. கூற்று 1 : போராட்டப் பண்புடனே வளர்ந்தவர் கலைஞர்.
   கூற்று 2 : அவருக்குள் இருந்த கலைத்தன்மை வளர அது உதவியது.
   அ) கூற்று 1 சரி 2 தவறு   ஆ) கூற்று 1 மற்றும் 2 தவறு
   இ) கூற்று 1 தவறு 2 சரி   ஈ) கூற்று 1 மற்றும் 2 சரி
   **விடை : ஈ) கூற்று 1 மற்றும் 2 சரி**

2. தூக்குமேடை என்னும் நாடகத்தின் பாராட்டு விழாவில்தான், கலைஞர் என்ற சிறப்புப்பெயர் வழங்கப்பட்டது – இத்தொடருக்கான வினா எது?
   அ) தூக்குமேடை நாடகத்தில் நடித்தவர் யார்?
   ஆ) கலைஞர் என்ற சிறப்புப் பெயர் எப்போது வழங்கப்பட்டது?
   இ) தூக்குமேடை என்பது திரைப்படமா? நாடகமா?
   ஈ) யாருக்குப் பாராட்டுவிழா நடத்தப்பட்டது?
   **விடை : ஆ) கலைஞர் என்ற சிறப்புப் பெயர் எப்போது வழங்கப்பட்டது?**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கூடுதல் வினாக்கள்

3. திருவாரூர் மாவட்டத்தின் எழில் சூழ்ந்த சிற்றூர் திருக்குவளை ______.
   அ) மூன்று தலைமுறைகளைச் சேர்ந்த இசைக்கலைஞர்கள் வாழ்ந்த ஊர்
   ஆ) இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுக்கும் பெருமை சேர்த்த ஊர்
   இ) ஏரால் நிலத்தையும் நாவால் தமிழையும் பண்படுத்திய கலைஞர் வாழ்ந்த ஊர்
   ஈ) இசை முகிழ்த்த புலமும் வேளாண்மை செழித்த நிலமும் கொண்ட ஊர்
   **விடை : ஈ) இசை முகிழ்த்த புலமும் வேளாண்மை செழித்த நிலமும் கொண்ட ஊர்**

4. இவரின் பகுத்தறிவுக் கருத்துகள், கலைஞரை ஈர்த்தன.
   அ) பெரியாரின் ஆ) அறிஞர் அண்ணாவின்
   இ) பட்டுக்கோட்டை அழகிரியின் ஈ) டாக்டர் அம்பேத்கரின்
   **விடை : அ) பெரியாரின்**

5. ஏரால் நிலத்தையும் நாவால் தமிழையும் பண்படுத்திய விவசாயக் கவிஞர் ______.
   அ) கலைஞர் கருணாநிதி ஆ) பேராசிரியர் அன்பழகன்
   இ) பேரறிஞர் அண்ணா ஈ) முத்துவேலர்
   **விடை : ஈ) முத்துவேலர்**

6. முத்துவேலருக்கும் அஞ்சுகம் அம்மையாருக்கும் மூன்றாவது ______ ஆகப் பிறந்தவர் கலைஞர் கருணாநிதி.
   அ) மகளாக ஆ) மகனாக இ) மகவாக ஈ) பிள்ளையாக
   **விடை : இ) மகவாக**

7. இளைய தலைமுறையே ______.
   செயப்படுபொருள் பயனிலையேல் ______.
   அறிவில் மூத்தோரை ______.
   அரிய பயன்காண ஆழ ______.
   எது சரியான வரிசை
   அ) தொழுவாய், உழுவாய், எழுவாய், விழுவாய் ஆ) விழுவாய், தொழுவாய், உழுவாய், எழுவாய்
   இ) எழுவாய், விழுவாய், தொழுவாய், உழுவாய் ஈ) தொழுவாய், எழுவாய், உழுவாய், விழுவாய்
   **விடை : இ) எழுவாய், விழுவாய், தொழுவாய், உழுவாய்**

8. தொடர் 1 : 'நட்பு' என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரை பலராலும் பாராட்டப்பட்டது.
   தொடர் 2 : இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடத் திருவாரூர் வீதிகளில் ஊர்வலம் வந்தபோது அவருக்கு வயது பதினான்கு.
   அ) தொடர் 1 மற்றும் 2 தவறு ஆ) தொடர் 1 தவறு, தொடர் 2 சரி
   இ) தொடர் 1 சரி, தொடர் 2 தவறு ஈ) தொடர் 1 மற்றும் 2 சரி
   **விடை : ஆ) தொடர் 1 தவறு, தொடர் 2 சரி**

9. கருத்தாழமிக்க நீதிமன்றக் காட்சி இடம்பெற்ற திரைப்படம் ______.
   அ) மந்திரி குமாரி ஆ) மனோகரா
   இ) பராசக்தி ஈ) மருதநாட்டு இளவரசி
   **விடை : இ) பராசக்தி**

10. வள்ளுவர் கோட்டம் அமைந்த இடம் ______.
   அ) சென்னை ஆ) கன்னியாகுமரி இ) காஞ்சிபுரம் ஈ) திருவாரூர்
   **விடை : அ) சென்னை**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11. உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு நடந்த ஆண்டு, இடம் ______.

அ) 1968, சென்னை ஆ) 1981, மதுரை இ) 2010, கோவை ஈ) 1995, தஞ்சாவூர்

**விடை : இ) 2010, கோவை**

12. கூற்று 1 : இலக்கண நூலுக்கு இலக்கியச் சுவையாய் எழுந்த நூல் 'தொல்காப்பியப் பூங்கா'.

கூற்று 2 : நெல்லுக்குள்ளிருந்து அரிசி தலை காட்டுவதுபோல் – உவமைத்தொடர்.

அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

இ) இரண்டும் தவறு ஈ) இரண்டும் சரி

**விடை : ஈ) இரண்டும் சரி**

13. கலைஞருக்குள் வளர்ந்த போராட்டப் பண்பே அவருக்குள் இருந்த ______ வளர்த்தது.

அ) புதினம் எழுதுதலை ஆ) அரசியல் அரிச்சுவடியை

இ) கலைத்தன்மையை ஈ) மேடைப் பேச்சில் விருப்பத்தை

**விடை : இ) கலைத்தன்மையை**

14. கலைஞர் எழுதிய தொலைக்காட்சித் தொடர் ______.

அ) பொன்னர் சங்கர் ஆ) இராமானுஜர் இ) நெஞ்சுக்கு நீதி ஈ) தூக்குமேடை

**விடை : ஆ) இராமானுஜர்**

15. எதுகை, மோனை என்பது ______.

அ) சந்த நயம் ஆ) பொருள் நயம் இ) தொடை நயம் ஈ) உவமை நயம்

**விடை : இ) தொடை நயம்**

16. கூற்று 1 : முதல்வர் கலைஞரால் திறந்து வைக்கப்பட்டது எம். ஜி. ஆர். நூற்றாண்டு வளைவு.

கூற்று 2 : தமிழ் வளர்ச்சித்துறை எனப் புதிதாக ஒரு துறையை உருவாக்கியவர் கலைஞர்.

அ) இரண்டும் சரி ஆ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

இ) இரண்டும் தவறு ஈ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

**விடை : ஆ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி**

17. "இருவருக்குமான கலைஉறவு நீண்டகாலம் தொடர்ந்தது". இத்தொடரில் 'இருவர்' எனக் குறிப்பிடப்பட்டவர் ______.

அ) ஏ. எஸ். ஏ. சாமி, மக்கள் திலகம் ஆ) மக்கள் திலகம், பாவலர் பாலசுந்தரம்

இ) கலைஞர், மக்கள் திலகம் ஈ) சிவாஜிகணேசன், மக்கள் திலகம்

**விடை : இ) கலைஞர், மக்கள் திலகம்**

18. 'மனசாட்சி உறங்கும்போது மனக்குரங்கு ஊர் சுற்றக் கிளம்பிவிடுகிறது' இவ்வசனம் இடம்பெற்ற திரைப்படம் ______.

அ) பராசக்தி ஆ) மனோகரா இ) மறக்கமுடியுமா? ஈ) பூம்புகார்

**விடை : ஈ) பூம்புகார்**

19. 'மாணவ நேசன்' என்பது கலைஞர் நடத்திய ______.

அ) திங்களிதழ் ஆ) கையெழுத்து ஏடு இ) வார ஏடு ஈ) நாளேடு

**விடை : ஆ) கையெழுத்து ஏடு**

20. கலைஞரின் கதை வசனங்களில் ______ பேசிய படங்கள் பராசக்தி, ராஜகுமாரி, மலைக்கள்ளன்.

அ) சமூகக் கருத்துகள் ஆ) மகளிர் முன்னேற்றம் இ) அரசியல் ஈ) பகுத்தறிவு

**விடை : ஈ) பகுத்தறிவு**

21. அபிமன்யு, பூம்புகார், உளியின் ஓசை ஆகிய கலைஞரின் கதை வசனப் படங்கள் ______ பற்றிப் பேசின.

அ) அரசியல் ஆ) இலக்கியம் இ) சமூகக்கருத்து ஈ) பகுத்தறிவு

**விடை : ஆ) இலக்கியம்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



22. யாரை அடையாளப்படுத்தித் தன்னைப் பெருமைப்படுத்திக் கொண்டது கலை?

அ) கலைஞர் மு. கருணாநிதி ஆ) மக்கள் திலகம் எம். ஜி. ஆர்

இ) நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஈ) நடிகவேள் எம். ஆர். ராதா

**விடை : அ) கலைஞர் மு. கருணாநிதி**

23. தொடர் 1 : 'வாருங்கள் எல்லோரும் போருக்குச் சென்றிடுவோம்' என்பது பாடல் வரி.

தொடர் 2 : 'மலேயா கணபதி' என்பவர் ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்டார்.

அ) தொடர் 1 தவறு, தொடர் 2 சரி ஆ) தொடர் 1 சரி, தொடர் 2 தவறு

இ) இரண்டும் தவறு ஈ) இரண்டும் சரி

**விடை : ஈ) இரண்டும் சரி**

24. 'இலக்கண நூலுக்கு இலக்கியச் சுவை' தோன்றுமாறு அமைந்த கலைஞரின் 'புதுமை நூல்' ______.

அ) சங்கத்தமிழ் ஆ) குறளோவியம்

இ) தொல்காப்பியப் பூங்கா ஈ) நெஞ்சுக்கு நீதி

**விடை : இ) தொல்காப்பியப் பூங்கா**

25. 'செம்மொழியான தமிழ்மொழியாம்' எனத் தொடங்கும் பாடலுக்கு இசையமைத்தவர் ______.

அ) இளையராஜா ஆ) தேவா

இ) ஏ. ஆர். ரஹ்மான் ஈ) யுவன் சங்கர் ராஜா

**விடை : இ) ஏ. ஆர். ரஹ்மான்**

26. தெருக்கூத்தைத் தமிழ்க்கலையின் முக்கிய அடையாளமாக்கியவர் ______.

அ) கூத்துக் கலைஞர் சு. செல்லப்பா ஆ) கூத்துப்பட்டறை ந. முத்துசாமி

இ) நாடகக் கலைஞர் மனோகர் ஈ) கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்

**விடை : ஆ) கூத்துப்பட்டறை ந. முத்துசாமி**

27. கூற்று 1 : இவரது நாடகங்கள் பெரும்பாலும் பொழுதுபோக்கு அம்சங்களைக் கொண்டிருந்தன.

தொடர் 2 : இந்தியாவில் மட்டுமன்றி உலகின் பல்வேறு நகரங்களிலும் இவரது நாடகங்கள் நடத்தப்பட்டன.

அ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி ஆ) இரண்டும் சரி

இ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஈ) இரண்டும் தவறு

**விடை : அ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி**

28. இந்திய அரசின் ______ விருதைப் பெற்றவர் ந. முத்துசாமி

அ) இந்திய மாமணி ஆ) தாமரையணி

இ) தாமரைத் திரு ஈ) தாமரைச் செவ்வணி

**விடை : இ) தாமரைத் திரு**

29. கூற்று 1 : தமிழ் ஆர்வம் காரணமாகப் பழந்தமிழ் இலக்கியங்கள் சார்ந்து கலைஞர் எழுதியவற்றுள் குறிப்பிடத்தக்கவை சங்கத்தமிழ், குறளோவியம், தொல்காப்பியப் பூங்கா ஆகியன.

கூற்று 2 : தம் வாழ்க்கை வரலாற்றை 'உடன் பிறப்புகளுக்கு' என்னும் தலைப்பில் ஆறு பாகங்களாக எழுதியுள்ளார்.

அ) கூற்று 1, 2 சரி ஆ) கூற்று 1, 2 தவறு

இ) கூற்று 1 சரி, 2 தவறு ஈ) கூற்று 1 தவறு, 2 சரி

**விடை : இ) கூற்று 1 சரி, 2 தவறு**

30. கூற்று 1 : வள்ளுவர் கோட்டத்தில் அமைந்துள்ள அரங்கம், 'குறள் மணிமாடம்' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

கூற்று 2 : சிலப்பதிகாரக் காட்சிகள் 'பூம்புகார்க் கலைக்கூட'த்தில் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன.

அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று 1 தவறு 2 சரி

இ) இரு கூற்றுகளும் சரி ஈ) இரு கூற்றுகளும் தவறு

**விடை : இ) இரு கூற்றுகளும் சரி**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கற்பவை கற்றபின்

1. **பன்முகக் கலைஞரின் கலைப் பண்புகளுள் உங்களுக்குப் பிடித்த கலைப்பண்பு குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.**

**ஆசிரியர் :** வணக்கம். மாணவக் கண்மணிகளே!

**மாணவர்கள் :** வணக்கம் ஐயா!

**ஆசிரியர் :** இன்று கற்பித்தலுக்குப் பதிலாகக் கலந்துரையாடல் மூலமாகச் சில செய்திகளைத் தெரிந்துகொள்ள இருக்கிறோம். தமிழகத்தின் முன்னாள் முதல்வர், முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதியைப் பற்றிய செய்திகளைப் பகிர்ந்து கொள்வோமா? கலைஞர் பன்முகம் கொண்ட கலைச்சிற்பி. அவர் தொட்டதெல்லாம் நல்ல திட்டங்களாக மலர்ந்து, நாட்டை வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு சென்றதை நாமறிவோம்; நாடும் அறியும். அவருடைய கலைப் பண்புகளுள் உங்களுக்குப் பிடித்த கலைப்பண்பு குறித்துப் பதிவு செய்யலாம். முதலாவதாக, செல்வி தமிழ்ப்பாவையைத் தொடங்கி வைக்க அழைக்கிறேன்.

**தமிழ்ப்பாவை :** வாய்ப்புக்கு நன்றி ஐயா! கலைஞர் மிகச் சிறந்த கவிஞர். அறிஞர்கள் கூடும் கவியரங்கத்தை, மக்கள் கூடும் கவியரங்கமாக்கியவர். கலைஞரின் கவிதைகள் வசன கவிதைகளாகவும், இனிய சந்தமும் எதுகை, மோனை என்னும் தொடைநயங்களும் நிறைந்த கவிதைகளாகவும் ஒளிவீசின. 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதைப்போல ஒரு கவிதைச் சான்றைச் சொல்லி நிறைவு செய்கிறேன்! அறிஞர் அண்ணா மறைந்தபொழுது, வானொலியில் கலைஞர் பாடிய இரங்கற்பா என்னை மிகவும் கவர்ந்தது.

"எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்றாய்
இதையும் தாங்க ஏதண்ணா எமக்கிதயம் ?
கடற்கரையில் காற்று
வாங்கியது போதுமண்ணா
எழுந்து வா எம்மண்ணா!
வரமாட்டாய், வரமாட்டாய்..."

என முடியும் அந்த நீள் கவிதை! அவருடைய கலைப்பண்புகளுள் கவிதைக்கலைப் பண்பு எனக்கு மிகவும் பிடிக்கும் எனக் கூறி முடிக்கிறேன்.

**ஆசிரியர் :** மிகவும் அருமை! கவிதைக் கலைஞரை நமக்குக் காட்டினார் தமிழ்ப்பாவை! அடுத்து செழியா, உனக்குப் பிடித்த கலைப்பண்பை உரைக்கலாம்.

**செழியன் :** அனைவருக்கும் வணக்கம்! கலைஞர் அவர்களிடத்தில் நான் பார்த்த வித்தியாசமான கலைப்பண்பு, அவர் நிறுவிய நினைவுச் சின்னங்களும், வரலாற்றுப் பதிவுகள் அடங்கிய கலைக்கூடங்களுமாகும். சென்னையில் ஐயன் திருவள்ளுவருக்குக் கோட்டம் என்றால், கன்னியாகுமரியில் வள்ளுவருக்கு உயர்ந்தோங்கிய சிலையும் அமைத்தார்.

'பூம்புகார் கலைக்கூடம்' நிறுவிச் சிலப்பதிகாரக் காட்சிகளைச் சிற்பங்களாக வடித்துக் காட்டினார். 'அண்ணா நூற்றாண்டு நூலகம்' என்றோர் அரிய பெரிய நூலகக் கட்டடத்தை எழுப்பினார்.

சென்னை அறிஞர் அண்ணா நினைவிடம்முதல், கன்னியாகுமரி காமராஜர் நினைவு மண்டபம் ஈறாகக் கலைஞர் எழுப்பிய கட்டுமானங்கள் அவரின் கட்டடக் கலைப் பண்பை வியக்கச் செய்கின்றன.

**ஆசிரியர் :** மிகவும் அருமை! கலைஞர் கட்டுமான ஆர்வலர் என்பதை வித்தியாசமான பண்பாகக் கூறினார் செழியன். அடுத்து, பொற்செல்வி பேசட்டும்!

**பொற்செல்வி :** பன்முகக் கலைஞரில், 'இதழியல் கலைஞரை' நான் வியந்து பார்க்கிறேன்!

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



இளம் வயதிலேயே 'மாணவ நேசன்' என்னும் கையெழுத்து ஏட்டை நடத்தினார். 'திராவிட நாடு' இதழில் கட்டுரைகளை இளம்பருவத்திலேயே எழுதினார். 'முரசொலி' ஏட்டைக் கையெழுத்து இதழாகத் தொடங்கி, வார இதழாக்கி, நாளேடாக்கினார். அது இன்றளவும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

எழுத்தைத் தமது ஆயுதமாகக் கொண்டு, அதன்மீது அளவற்ற நம்பிக்கை கொண்ட தலைவராகத் திகழ்ந்தவர் கலைஞர். கலைஞரின் உரையை நேரில் கேட்டுச் சுவைத்தவர்கள், எத்தகைய உணர்வினை அடைவார்களோ, அதே உணர்வினை அடையும்வகையில் அவரது 'உடன்பிறப்புகளுக்கு' எழுதிய கடிதங்களும் அமைந்திருக்கும்.

திராவிட இயக்கத் தலைவர்கள் பெரும்பாலோர் இதழாசிரியர்களாக இருந்திருக்கின்றனர். அந்த வரிசையில் கலைஞரை இதழியல் கலைஞராகப் பார்த்துப் பெருமைப்படுகிறேன்.

**ஆசிரியர்** : பொற்செல்வி, கலைஞரின் இதழியல் கலைப்பண்பு குறித்துக் கூறியது நன்று! அடுத்து, முருகு விரும்பும் கலைப்பண்பு கலைஞர் குறித்துக் கேட்போம்!

**முருகு** : பன்முகக் கலைஞரின் கலைப்பண்புகளுள் எனக்குப் பிடித்த பண்பு தமிழைச் செம்மொழியாக்கிய பெருமைதான் என்பேன்!

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் முத்திரை பதித்ததால், அவர் 'முத்தமிழ் அறிஞர்' என்று போற்றப்பட்டார். தாம் முதலமைச்சராக இருந்த காலத்தில் தமிழ்மொழிக்குப் பெருமை சேர்க்கும் பல பணிகளை மேற்கொண்டார். குறிப்பாக, மனோன்மணீயம் சுந்தரனாரின் 'நீராருங் கடலுடுத்த' என்னும் பாடலை அரசு விழாக்கள் அனைத்திலும் தொடக்கப் பாடலாகப் பாடுவதற்கு விதி செய்தார்!

2010ஆம் ஆண்டு கோவையில் 'உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை' நடத்தினார். தமிழின் பெருமிதங்களையும் விழுமியங்களையும் மீட்டெடுக்க எண்ணிய கலைஞர், அதற்கான பணிகளைத் தம் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தார். எனவே, கலைஞரை நான் 'செம்மொழிக் கலைஞரா'கவே பார்க்கிறேன்.

**ஆசிரியர்** : பன்முகக் கலைஞரின் கலைப்பண்புகளுள் நான்கினை நால்வரும் நயம்பட உரைத்தீர்கள்! பாராட்டுகள்!

## கவிதைப்பேழை

# 2. பூத்தொடுத்தல்

**(உமா மகேஸ்வரி)**

### குறுவினாக்கள்

1. **சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்
சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள் – இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக. (PTA-3)**

★ மலர், மென்மைத்தன்மை உடையது. மெல்லிய தண்டுகளை உடையது.

★ பல வண்ணங்களில் உள்ள மலர்களைக் காண்பது மனத்திற்கு இன்பம் தருவதுபோலப் பெண்கள், இவ்வுலகத்தையே அமைதிப் பூங்காவாகக் காட்டுகின்றனர்.

### கூடுதல் வினாக்கள்

2. **ஒல்லித் தண்டுகள் எதைச் சுமக்கின்றன ?**

➤ ஒல்லித் தண்டுகள், சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்றன.

3. **"இந்தப் பூவை எப்படித் தொடுக்க முடியும்?" என்ற வினாவிற்கு ஆசிரியரின் பதில் யாது?**

➤ தன்னுடைய மனமே, அன்பெனும் நூலாக மாறும் நுட்பத்தை அறிந்தால்தான் இந்தப் பூவைத் தொடுக்க முடியும் என ஆசிரியர் கூறுகிறார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**4. கவிஞர் உமா மகேஸ்வரி – சிறுகுறிப்பு வரைக.**

- கவிஞர் உமா மகேஸ்வரி மதுரை மாவட்டத்தில் பிறந்தவர்.
- தற்போது, தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில் வாழ்ந்து வருகிறார்.
- நட்சத்திரங்களின் நடுவே, வெறும் பொழுது, கற்பாவை என்பன, இவருடைய படைப்புகள்.
- புதினம், சிறுகதை, கவிதை ஆகிய தளங்களில், இவர் படைப்புகள் உள்ளன.

**5. 'பூத்தொடுத்தல்' என்னும் கவிதையில், 'பூவை' என்ற சொல் யாரைக் குறிக்கிறது ? அப்பூவைத் தொடுப்பது எப்படி ?**

- 'பூத்தொடுத்தல்' என்னும் கவிதையில், பூவை என்ற சொல், பெண்ணைக் குறிக்கிறது.
- மனமாகிய நுட்பமான நூலால்மட்டுமே பூவைத் தொடுக்க முடியும்.

**6. இறுக்கி முடிச்சிட்டால் (PTA -3)**
**காம்புகளின் கழுத்து முறியும்**
**தளரப் பிணைத்தால்**
**மலர்கள் தரையில் நழுவும்**
**வாசலில் மரணம் நிற்பதறிந்தும்**
**வருந்தாமல் சிரிக்கும் – இப்பாடலில் அமைந்துள்ள இயைபுத்தொடை நயங்களை எடுத்தெழுதுக.**

- கழுத்து முறியும், தரையில் நழுவும், வருந்தாமல் சிரிக்கும் என, இப்பாடலில் இயைபு நயம் சிறப்பாக அமைந்துள்ளது.

## சிறுவினா

**1. நவீன கவிதையில் வெளிப்படும் நுண்மை உள்ளம், பூத்தொடுக்கும் நாட்டுப்புறப்பாடலில் வெளிப்படுகிறது. ஒப்பிட்டு எழுதுக. (PTA - 5)**

| | |
|---|---|
| இறுக்கி முடிச்சிட்டால்,<br>காம்புகளின் கழுத்து முறியும்.<br>தளரப் பிணைத்தால்,<br>மலர்கள் தரையில் நழுவும்.<br>வாசலில் மரணம் நிற்பதறிந்தும்,<br>வருந்தாமல் சிரிக்கும்<br>இந்தப் பூவை<br>எப்படித் தொடுக்க நான்?<br>– நவீன கவிதை. | கையாலே பூவெடுத்தா – மாரிக்குக்<br>காம்பழுகிப் போகுமின்னு<br>விரலாலே பூவெடுத்தா – மாரிக்கு<br>வெம்பி விடுமென்று சொல்லி<br>தங்கத் துரட்டி கொண்டு – மாரிக்குத்<br>தாங்கி மலரெடுத்தாள்.<br>– நாட்டுப்புறப்பாடல். |

**நவீன கவிதை :**

★ பூக்களின் காம்புகளை இறுக்கி முடிச்சிட்டால், பூக்கள் காம்புகளிலிருந்து துண்டிக்கப்பட்டு விடும். தளர முடிச்சிட்டால், பூக்கள் நழுவிக் கீழே விழுந்துவிடும்.

★ தன் வாழ்நாளின் முடிவை அறிந்திருந்தும், வருந்தாமல் சிரிக்கின்ற இம்மலர்களைப்போல பெண்களும் துன்பங்களைச் சுமையாகக் கருதாமல் குடும்பத்தைக் காப்பாற்றுகிறார்கள்.

**நாட்டுப்புறப்பாடல் :**

★ மாரியம்மனுக்கு வேண்டிய மலர்களைக் கையால் எடுத்தால், காம்பழுகிப் போய்விடுமோ என எண்ணி, விரலாலே எடுக்கலாம் என்றால், வெம்பி விடுமென்று மாரியாகிய பெண் தங்கத்தால் ஆன துரட்டியைப் பயன்படுத்திப் பூக்களை எடுப்பதாக நாட்டுப்புறப்பாடல் கூறுகிறது.

★ இரு பாடல்களுமே பூக்கள் மென்மையானவை என்பதால், அவற்றை நுட்பமாகக் கையாள வேண்டும் என்று கூறுகின்றன.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



### கூடுதல் வினா

**2. "வாசலில் மரணம் நிற்பதறிந்தும் வருந்தாமல் சிரிக்கும் இந்தப் பூ" என்ற பாடலடிகள் மூலமாக ஆசிரியர் கூறும் கருத்துகள் யாவை?**

➤ பூச்செடியில் உள்ள மொட்டுகள் மலரத் தொடங்கும்போதே, அதன் முடிவும் தொடங்குகிறது. மலர்ந்து மணம் வீசும் மலர்கள் உதிர்ந்து விடலாம் அல்லது காய்ந்து விடலாம் அல்லது மனிதர்கள் பறித்துவிடலாம். எப்படியாயினும் தன் முடிவை அறிந்திருந்தும்கூட, அழகாக மலர்ந்து மணம் வீச, மலர்கள் மறப்பதுமில்லை; மறுப்பதுமில்லை. எத்தகைய துன்பங்கள் நேரிட்டாலும் அதனைத் தயங்காமல் எதிர்கொள்ள வேண்டும். வருத்தத்துடன் நம்மைச் சுருக்கிக் கொள்ளக்கூடாது.

### பலவுள் தெரிக

1. மலர்கள் தரையில் நழுவும் – எப்போது? **(PTA - 1)**

அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்

இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

**விடை : ஆ) தளரப் பிணைத்தால்**

### கூடுதல் வினாக்கள்

2. சாந்தமான பிரபஞ்சம் என்று, ஆசிரியர் 'பூத்தொடுத்தல்' கவிதையில் குறிப்பிடுவது எது ?

அ) மலர் ஆ) காம்பு இ) தண்ட ஈ) பூச்செடி

**விடை : அ) மலர்**

3. வாசலில் மரணம் நிற்பதறிந்தும் வருந்தாமல் சிரிப்பவை,

அ) பறவைகள் ஆ) மரங்கள் இ) மலர்கள் ஈ) வண்டுகள்

**விடை : இ) மலர்கள்**

4. 'இந்தப் பூவைத் தொடுப்பது எப்படி?' என்ற கவிதையை எழுதியவர்,

அ) உமா மகேஸ்வரி ஆ) இரா. மீனாட்சி

இ) இந்திரா பார்த்தசாரதி ஈ) தாமரை

**விடை : அ) உமா மகேஸ்வரி**

5. எப்போது காம்புகளின் கழுத்து முறியும் ?

அ) திருகும்போது ஆ) இறுக்கி முடிச்சிட்டால்

இ) தளர பிணைத்தால் ஈ) மனத்தை நூலாக்கினால்

**விடை : ஆ) இறுக்கி முடிச்சிட்டால்**

6. 'பிணைத்தல்' என்பதன் பொருள்,

அ) நழுவுதல் ஆ) இணைத்தல் இ) கட்டுதல் ஈ) அமைத்தல்

**விடை : இ) கட்டுதல்**

7. 'நுண்மை' என்பதன் பொருள்,

அ) இணைத்தல் ஆ) நுட்பம் இ) உலகம் ஈ) கட்டுதல்

**விடை : ஆ) நுட்பம்**

### இலக்கணக்குறிப்பு

**தளர, தொடுக்க, இறுக்கி, நிற்பது** – வினையெச்சங்கள்

**சுமக்கின்றன** – படர்க்கைப் பலவின்பால் வினைமுற்று.

### பகுபத உறுப்பிலக்கணம்

1. **தொடுக்க – தொடு + க் + க் + அ**

**தொடு** – பகுதி

**க்** – சந்தி

**க்** – எதிர்கால இடைநிலை

**அ** – வினையெச்ச விகுதி.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2. இறுக்கி – இறுக்கு + இ

**இறுக்கு** – பகுதி

**இ** – வினையெச்ச விகுதி.

3. சிரிக்கும் – சிரி + க் + க் + உம்

**சிரி** – பகுதி

**க்** – சந்தி

**க்** – எதிர்கால இடைநிலை

**உம்** – 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று விகுதி.

4. தொடுப்பது – தொடு + ப் + ப் + அ + து

**தொடு** – பகுதி

**ப்** – சந்தி

**ப்** – எதிர்கால இடைநிலை

**அ** – சாரியை

**து** – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி.

## புணர்ச்சிவிதி

1. ஒல்லித்தண்டுகள் – ஒல்லி + தண்டுகள்

'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' என்னும் விதிப்படி, (ஒல்லி + த் + தண்டுகள்) ஒல்லித்தண்டுகள்.

2. நிற்பதறிந்தும் – நிற்பது + அறிந்தும்

"உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" என்னும் விதிப்படி, (நிற்பத் + அறிந்தும்)

"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" என்னும் விதிப்படி, நிற்ப (த் + அ) றிந்தும் நிற்பதறிந்தும்.

## கற்பவை கற்றபின்

1. ஒவ்வொரு நாளும் நீங்கள் பார்க்கும் காட்சிகளின் / எதிர்கொள்ளும் நிகழ்வுகளில் கண்டுணரும் அழகை மூன்று நிமிடங்கள் சொற்களில் விவரிக்க.

**சூரியனிடம் உணர்ந்தது :**

எந்தச் சூழ்நிலையிலும், எல்லா நாள்களிலும், தவறாது சரியான நேரத்தில் உதிக்கிறது சூரியன். இந்த நிகழ்வுமூலம் நேரந்தவறாமையை உணர்ந்து கொண்டேன். காலையில் சூரியன் உதிக்கும்போது அதன் முழு வடிவத்தையும் கண்ணால் காண்பது அழகு. நல்லவன் கெட்டவன் என்றோ, ஏழை பணக்காரன் என்றோ பாராமல், தன் ஒளியை அனைவருக்கும் ஒரே மாதிரியாக வாரி வழங்கும் கதிரவன், ஏற்றத்தாழ்வு பார்க்கக்கூடாது என்ற கருத்தை நமக்குக் கூறாமல் கூறுகிறான்.

**பள்ளிக்கூடத்துச் சிறுவனிடம் கண்டுணர்ந்தது :**

அது ஒரு குறும்படம். சிறுவன் ஒருவன் பள்ளி நோக்கிச் சென்று கொண்டிருக்கிறான். வழியில் ஒருவர் அவனிடம் பிச்சை கேட்கிறார். அவனிடம் பணம் காசு இல்லை. ஆனால், உதவும் எண்ணம் இருந்தது. அந்தப் பிச்சைக்காரருக்கு உதவ முடிவு செய்தான் சிறுவன். அருகிலிருந்த மகிழுந்து உரிமையாளரைச் சந்தித்து, மகிழுந்தைச் சுத்தம் செய்ய அனுமதி கேட்டான். அவரும் சம்மதித்தார். மகிழுந்தை மிக நேர்த்தியாகத் துடைத்தான். அதன் உரிமையாளர் அந்தச் சிறுவனுக்கு ஐம்பது ரூபாய் பணம் கொடுத்தார். நன்றி சொல்லிய சிறுவன், அந்தப் பணத்தைப் பிச்சைக்காரருக்குக் கொடுத்து மகிழ்ந்தான்.

இந்தக் குறும்படம், இரண்டு நிகழ்ச்சிகளைச் சொல்கிறது. ஒன்று, 'பிச்சையெடுத்தாவது உதவி செய்' என நமக்குக் கூறுகிறது. 'சம்பாதிக்கும் வழி ஒரு சிறுவனுக்குத் தெரிந்திருக்கிறது, உனக்கு ஏன் தெரியவில்லை?' எனப் பிச்சைக்காரனுக்குக் கூறுகிறது. எனவே, இக்குறும்படம் என் மனத்தை விட்டு அகலவில்லை.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## கவிதைப்பேழை

# 3. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

(குமரகுருபரர்)

### கூடுதல் குறுவினாக்கள்

1. **செங்கீரைப் பருவம் – குறிப்பு எழுதுக.**
   - செங்கீரைச்செடி காற்றில் ஆடுவதுபோன்று ஐந்து மற்றும் ஆறாம் மாதங்களில் இருகை ஊன்றி, ஒருகாலை மடக்கி, ஒருகால் நீட்டிக் குழந்தை தலைநிமிர்ந்து ஆடும் பருவம்.
   - இப்பருவத்தில் குழந்தை தலைநிமிர்ந்தும் முகமசைத்தும் ஆடும்.
2. **ஆண்பால் பிள்ளைத்தமிழுக்கு உரிய பருவங்கள் யாவை ?**
   - காப்பு • செங்கீரை • தால் • சப்பாணி • முத்தம்
   - வருகை • அம்புலி • சிற்றில் • சிறுபறை • சிறுதேர்.
3. **பெண்பாற் பிள்ளைத்தமிழுக்குரிய பருவங்கள் யாவை ?**
   - காப்பு • செங்கீரை • தால் • சப்பாணி • முத்தம்
   - வருகை • அம்புலி • கழங்கு • அம்மானை • ஊசல்.
4. **ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்கும் பெண்பாற் பிள்ளைத்தமிழுக்கும் உரிய பொதுவான பருவங்கள் எத்தனை? அவை யாவை ?**
   - ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்கும், பெண்பாற் பிள்ளைத்தமிழுக்கும் பொதுவான பருவங்கள் ஏழு. அவை : காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி.
5. **சந்தப் பாடல்களின் சிறப்பினைக் கூறுக.**
   - சந்தப் பாடல்களில் உயிர்ப்பு அதிகம் என்பதால், கேட்போருக்கு ஈர்ப்பு மிகும். இசை நயமுடைய சந்தப் பாடல்கள் தமிழ் மொழிக்குப் பெருமை சேர்த்தன. ஏற்றம் இறைக்கும் போதும், நடவு செய்யும்போதும், உரலில் நெல் குத்தும்போதும் சந்த இசைப்பாடல்களே இசைக்கப்பட்டன.
6. **பிள்ளைத்தமிழின் இலக்கணம் யாது ?**
   - இறைவனையோ, தலைவரையோ, அரசனையோ, பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அவர்களைக் குழந்தையாகப் பாவித்துப் பாடுவது பிள்ளைத்தமிழ். பாட்டுடைத் தலைவரின் செயற்கரிய செயல்கள் பிள்ளைத்தமிழில் பாடப்படும். பத்துப் பருவங்களில் நூறு பாடல்கள் பாடப்படும். இது ஆண்பால் பிள்ளைத்தமிழ், பெண்பால் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும்.

### சிறுவினா

1. **வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.** (PTA - 2)
   - ★ வைத்தியநாதபுரி முருகனின் திருவடியில் அணிந்த, சிறு செம்பொன் கிண்கிணிகளோடு சிலம்பு களும் சேர்ந்து ஆடின.
   - ★ இடையில், அரைஞாண் மணியோடு ஒளிவீசுகின்ற அரைவடங்கள் ஆடின.
   - ★ பசும்பொன் என ஒளிரும் தொந்தியுடன் சிறுவயிறு சரிந்தாடியது.
   - ★ பட்டம் கட்டிய நெற்றியில் விளங்குகின்ற பொட்டுடன் வட்டவடிவமான சுட்டி பதிந்தாடியது!
   - ★ கம்பிகளால் உருவான குண்டலங்களும் காதின் குழைகளும் அசைந்தாடின.
   - ★ உச்சிக் கொண்டையும் ஒளியுள்ள முத்துகளோடு ஆடின.
   - ★ இவற்றுடன் அழகிய பவளம் போன்ற திருமேனியும் ஆட, வைத்தியநாதபுரி குழந்தை முருகன் செங்கீரை ஆடி மகிழ்கிறார்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கூடுதல் வினாக்கள்

**2. பிள்ளைத்தமிழ் – குறிப்பு வரைக.**

- பிள்ளைத்தமிழ் என்பது, தொண்ணூற்றாறுவகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. அஃது இறைவனையோ தலைவரையோ அரசனையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அவரைக் குழந்தையாகக் கருதிப் பாடப்படுவது. பாட்டுடைத் தலைவரின் செயற்கரிய செயல்களை எடுத்தியம்புவது பிள்ளைத்தமிழ்.
- பத்துப் பருவங்கள் அமைத்து, பருவத்திற்குப் பத்துப்பாடல் என, நூறு பாடல்களால் பாடப்பெறும். இஃது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என, இருவகையாகப் பாடப்பெறும்.

**3. குமரகுருபரர் – சிறுகுறிப்பு வரைக.**

**ஆசிரியர் பெயர்** : குமரகுருபரர்

**காலம்** : கி. பி. 17ஆம் நூற்றாண்டு

**புலமை பெற்ற மொழிகள்** : தமிழ், வடமொழி, இந்துஸ்தானி

**இயற்றிய நூல்கள்** : கந்தர்கலி வெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், சகலகலாவல்லிமாலை, நீதிநெறி விளக்கம், திருவாரூர் மும்மணிக் கோவை.

**4. முத்துக்குமரனுக்கு அணிவிக்கப்பட்டிருந்த அணிகள் யாவை?**

- காலில் கிண்கிணியுடன், சிலம்பும், இடையில் அரைஞாண், அரைமணி, அரைவடம் ஆகியனவும் அணிவிக்கப்பட்டிருந்தன. கழுத்தில் தங்கச் சங்கிலி அணிவிக்கப்பட்டிருந்தது.
- நெற்றியில் வட்டச்சுட்டி, நெற்றிச்சுட்டி ஆகியன அணிவிக்கப்பட்டிருந்தன. காதுகளில் குண்டலம், குழை ஆகியன அணிவிக்கப்பட்டிருந்தன. உச்சிக் கொண்டையில் ஒளிமிக்க முத்துவடம் அணிவிக்கப்பட்டிருந்தது.

## கூடுதல் பலவுள் தெரிக

1. குண்டலமும் குழைகாதும், ஆடுக. – இச்சொற்களுக்கான இலக்கணக்குறிப்பைக் கண்டறிக. **(Sep.-20)**

அ) எண்ணும்மை, வினையெச்சம் ஆ) எண்ணும்மை, வியங்கோள் வினைமுற்று.

இ) முற்றும்மை, வினையெச்சம்

ஈ) உம்மைத்தொகை, வியங்கோள் வினைமுற்று

**விடை : ஆ) எண்ணும்மை, வியங்கோள் வினைமுற்று.**

2. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழின் ஆசிரியர்,

அ) குமரகுருபரர் ஆ) சேக்கிழார் இ) கம்பர் ஈ) ஒட்டக்கூத்தர்

**விடை : அ) குமரகுருபரர்**

3. பிள்ளைத்தமிழ் ______ வகைப்படும்.

அ) இரண்டு ஆ) மூன்று இ) ஏழு ஈ) பத்து

**விடை : அ) இரண்டு**

4. பிள்ளைத்தமிழில் இருபாலருக்கும் பொதுவான பருவங்கள்,

அ) மூன்று ஆ) ஏழு இ) ஒன்பது ஈ) பத்து

**விடை : ஆ) ஏழு**

5. குழந்தையின் 5 – 6ஆம் மாதங்களுக்கு உரிய பருவம்,

அ) காப்பு ஆ) செங்கீரை இ) தால் ஈ) சப்பாணி

**விடை : ஆ) செங்கீரை**

6. கீழ்க்கண்டவற்றில் காதில் அணியும் அணிகலன்,

அ) சூழி ஆ) குழை இ) கிண்கிணி ஈ) சுட்டி

**விடை : ஆ) குழை**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



7. சிறுசெம்பொன் கிண்கிணிகளோடு சேர்ந்து ஆடுவது,

அ) சிலம்பு ஆ) அரைவடங்கள் இ) சுட்டி ஈ) குண்டலங்கள்

விடை : அ) சிலம்பு

8. பிள்ளைத்தமிழ் என்பது, ______ வகைகளுள் ஒன்றாகும்.

அ) காப்பிய ஆ) சிற்றிலக்கிய இ) கீழ்க்கணக்கு ஈ) மேற்கணக்கு

விடை : ஆ) சிற்றிலக்கிய

9. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், சகலகலாவல்லி மாலை, திருவாரூர் மும்மணிக்கோவை முதலான நூல்களை இயற்றியவர்,

அ) குமரகுருபரர் ஆ) இராமலிங்க அடிகள்

இ) தாயுமானவர் ஈ) ஞானியாரடிகள்

விடை : அ) குமரகுருபரர்

10. பிள்ளைத்தமிழில் இருபாலருக்கும் இடையே வேறுபடும் பருவங்கள்,

அ) ஆறு ஆ) மூன்று இ) ஏழு ஈ) ஐந்து

விடை : ஆ) மூன்று

11. ‘சிறு பண்டி சரிந்தாடப்’ என்பதில் ‘பண்டி’ என்பதன் பொருள்,

அ) வயிறு ஆ) பெருக்கம் இ) தலை ஈ) சுருக்கம்

விடை : அ) வயிறு

12. பிள்ளைத்தமிழ், ______ பாடல்களால் பாடப்படும்.

அ) பத்து ஆ) இருநூறு இ) நூறு ஈ) ஐம்பது

விடை : இ) நூறு

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

“செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்”

1. இப்பாடலின் ஆசிரியர்

அ) கீரந்தையார் ஆ) குமரகுருபரர்

இ) நம்பூதனார் ஈ) செய்குதம்பிப் பாவலர்

விடை : ஆ) குமரகுருபரர்

2. இப்பாடல் இடம்பெற்றுள்ள பிள்ளைத்தமிழ்ப் பருவம்,

அ) அம்மானை ஆ) சப்பாணி இ) சிறுதேர் ஈ) செங்கீரை

விடை : ஈ) செங்கீரை

3. ‘குண்டல**மும்** குழைகா**தும்**’ – இலக்கணக்குறிப்புத் தருக.

அ) எண்ணும்மை ஆ) உம்மைத்தொகை இ) பண்புத்தொகை ஈ) அடுக்குத்தொடர்

விடை : அ) எண்ணும்மை

4. கிண்கிணி, அரைஞாண், சுட்டி என்பன முறையே,

அ) காலில் அணிவது, இடையில் அணிவது, தலையில் அணிவது

ஆ) தலையில் அணிவது, இடையில் அணிவது, நெற்றியில் அணிவது

இ) காலில் அணிவது, இடையில் அணிவது, நெற்றியில் அணிவது.

ஈ) இடையில் அணிவது, காதில் அணிவது, தலையில் அணிவது

விடை : இ) காலில் அணிவது, இடையில் அணிவது, நெற்றியில் அணிவது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



5. பாடலின் இலக்கிய வகை : (Sep.-20)

அ) பத்துப்பாட்டு ஆ) சிற்றிலக்கியம்

இ) எட்டுத்தொகை ஈ) பதினெண்கீழ்க்கணக்கு

**விடை : ஆ) சிற்றிலக்கியம்**

6. சீர் எதுகைச் சொற்களைக் குறிப்பிடுக : (Sep.-20)

அ) பட்ட, பொட்டொடு ஆ) செம்பொன், பைம்பொன்

இ) சரிந்தாட, பதிந்தாட ஈ) பண்டி, குண்டலம்

**விடை : அ) பட்ட, பொட்டொடு**

## இலக்கணக்குறிப்பு

**செம்பொன், பைம்பொன், சிறுபண்டி, செங்கீரை, சிறுகிங்கிணி, வட்டச்சுட்டி** – பண்புத்தொகைகள்

**திகழ் அரைவடம், பொலிபொட்டு** – வினைத்தொகைகள்

**பவழத்திருமேனி** – உவமைத்தொகை

**ஆடுக** – வியங்கோள் வினைமுற்று

குண்டல**மும்** குழைகா**தும்** – எண்ணும்மை

**பதிந்து** – வினையெச்சம்

**கட்டிய** – பெயரெச்சம்

## பகுபத உறுப்பிலக்கணம்

1. **பதிந்து – பதி + த் (ந்) + த் + உ**

**பதி** – பகுதி

**த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்

**த்** – இறந்தகால இடைநிலை

**உ** – வினையெச்ச விகுதி

2. **ஆடுக – ஆடு + க**

**ஆடு** – பகுதி

**க** – வியங்கோள் வினைமுற்று விகுதி.

## புணர்ச்சி விதி

1. **பைம்பொன் – பசுமை + பொன்**

"ஈறுபோதல்" என்னும் விதிப்படி, (பசு + பொன்)

"அடியகரம் ஐ ஆதல்" என்னும் விதிப்படி, (பைசு + பொன்)

"இனமிகல்" என்னும் விதிப்படி, பைசும் + பொன்

"இனையவும் பண்பிற்கு இயல்பே" என்னும் விதிப்படி, (பைம் + பொன்) (பைம்பொன்)

2. **வட்டச்சுட்டி – வட்டம் + சுட்டி**

"மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் ஆகும்" என்னும் விதிப்படி, (வட்ட + சுட்டி)

"இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" என்னும் விதிப்படி,

(வட்ட + ச் + சுட்டி) (வட்டச்சுட்டி)

3. **செங்கீரை – செம்மை + கீரை**

"ஈறுபோதல்" என்னும் விதிப்படி, (செம் + கீரை)

"முன்னின்ற மெய்திரிதல்" என்னும் விதிப்படி, (செங் + கீரை) (செங்கீரை)

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# கவிதைப்பேழை

# 4. கம்பராமாயணம்

(கம்பர்)

## குறுவினாக்கள்

1. **உறங்குகின்ற கும்பகன்ன 'எழுந்திராய் எழுந்திராய்'** (PTA -6)
**காலதூதர் கையிலே 'உறங்குவாய் உறங்குவாய்'**
**கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?(Sep.-20)**

★ "உறங்குகின்ற கும்பகருணனே! உடனே எழுந்திருப்பாயாக!" "காற்றாடிபோல் எல்லா இடங்களிலும் திரிகின்ற வில்லைப் பிடித்த காலனுக்குத் தூதரானவர் கையில் நிரந்தரமாக இனிப் படுத்து உறங்குவாயாக" என்றும் கூறி எழுப்புகிறார்கள்.

## கூடுதல் வினாக்கள்

2. **கோசல நாட்டில் உண்மையும் வெண்மையும் இல்லை என எதனால் கம்பர் கூறுகிறார் ?**

➤ கோசல நாட்டில் பொய்யுரை இல்லாமையால் உண்மையில்லை எனவும், பலவகைக் கேள்விச் செல்வம் மிகுந்திருப்பதால் வெண்மை (அறியாமை) இல்லை எனவும் கம்பர் கூறுகிறார்.

3. **கம்பர் இயற்றிய நூல்கள் யாவை ?**

- சரஸ்வதி அந்தாதி
- சடகோபர் அந்தாதி
- திருக்கை வழக்கம்
- ஏரெழுபது
- சிலையெழுபது
- கம்பராமாயணம்.

4. **கம்பரைப் போற்றும் தொடர்களை எழுதுக.**

- கல்வியில் பெரியவர் கம்பர்.
- கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்.
- விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்.

5. **கம்பராமாயணம் எத்தனை காண்டங்களை உடையது ? அவை யாவை?**

➤ கம்பராமாயணம், ஆறு காண்டங்களை உடையது. **அவை :**

- பாலகாண்டம்
- அயோத்தியா காண்டம்
- ஆரண்ய காண்டம்
- கிட்கிந்தா காண்டம்
- சுந்தர காண்டம்
- யுத்த காண்டம்.

6. **சரயு ஆறு எவ்விடங்களில் எல்லாம் பரவிப் பாய்ந்ததாகக் கம்பர் கூறுகிறார்?**

➤ மகரந்தம் சிந்துகின்ற சோலைகள், செண்பகக் காடுகள், புதுமணல் தடாகங்கள், அரும்புகள் மலரும் பொய்கைகள், கமுகந் தோட்டங்கள், நெல் வயல்கள் ஆகிய இடங்களில் எல்லாம் சரயு ஆறு, பரவிப் பாய்ந்து, அவற்றிற்கு உயிரூட்டியதாகக் கம்பர் கூறுகிறார்.

7. **கோசல நாட்டில் எவையெல்லாம் இல்லை? ஏன்?**

➤ கோசல நாட்டில், வறுமை இல்லாததால், அங்கே கொடை இல்லை.

➤ நேருக்கு நேர் போர் புரிபவர் இல்லாததால், உடல் வலிமையை எடுத்துக்காட்ட வாய்ப்பில்லை.

➤ பொய்ம்மை இல்லாததால், மெய்ம்மை தனித்து விளங்கவில்லை.

➤ கேள்விச் செல்வம் மிகுந்திருப்பதால், அறியாமை சிறிதும் இல்லை.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**8. கம்பர் – சிறுகுறிப்பு வரைக.**

- கம்பர், சோழநாட்டுத் திருவழுந்தூரில் பிறந்தார். அவர் தந்தை ஆதித்தர். அவரை ஆதரித்தவர் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல். கல்வியில் பெரியவர் கம்பர், கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்பன கம்பர் பெருமையை பறைசாற்றும் தொடர்கள்.
- விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன், சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி, திருக்கை வழக்கம், ஏரெழுபது, சிலையெழுபது முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

**9. "ஐயோ! இவன் வடிவு என்பதொர் அழியா அழகுடையான்" என்று கம்பர் இராமனின் மேனிழகைக் கூறக் காரணம் என்ன?**

- இராமனது மேனி நிறத்திற்கு மை, மரகதம், மறிகடல், மழைமுகில் என்னும் நான்கனை உவமைகளாகக் கூறியும், அவன் மேனி நிறம் அவற்றுள் அடங்காமல் மேலோங்கி நிற்பதால் அதிசய உணர்ச்சி தோன்ற, "ஐயோ! இவன் வடிவு என்பதொர் அழியா அழகுடையான்" என்று கம்பர், இராமனின் மேனியழகை அனுபவித்துக் கூறுகிறார்.

## கூடுதல் சிறுவினாக்கள்

**1. கம்பராமாயணம் – நூற்குறிப்பு வரைக.** (May - 22)

- கம்பர், இராமனது வரலாற்றைத் தமிழில் வழங்கி "இராமாவதாரம்" என்று பெயரிட்டார். எனவே, இது கம்பராமாயணம் என வழங்கப்பெறுகிறது.
- இது பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்னும் ஆறு காண்டங்களை உடையது.
- இந்நூல் விருத்தம் என்னும் செய்யுள் வகையால் பாடப்பட்டது. பாடல்கள் சந்தநயம் மிக்கவை. அவற்றுள் அழகுணர்ச்சிமிக்க சில கவிதைகள் பாடப்பகுதியாக அமைந்துள்ளன.

**2. இயற்கை கொலு வீற்றிருக்கும் காட்சியைக் கலைநிகழ்வோடு ஒப்பிட்டுக் கம்பன் கவி படைத்த திறம் குறித்து எழுதுக.**

- குளிர்ந்த சோலைகளில் மயில்கள் அழகாக நடனம் ஆட, தாமரை மலர்கள் விளக்குகள் ஏற்றியது போன்று தோன்ற, சூழும் மேகங்கள் மத்தளமாய் ஒலிக்க, கண்விழித்து நோக்குவதுபோலக் குவளை மலர்கள் மலர்ந்திருக்க, நீர்நிலைகளின் அலைகள் திரைச்சீலைகளாய் விரிய, மகரயாழின், தேன் ஒத்த இசைபோல் வண்டுகள் ரீங்காரம் பாட மருதநிலம் வீற்றிருந்தது என, இயற்கை நிகழ்வுகளை கலைநிகழ்வோடு ஒப்பிட்டுக் கம்பர் பாடல் இயற்றியுள்ளார்.

**3. இராமனின் உடல்அழகை வருணனை செய்யும் கம்பரின் கவித்திறனை விளக்குக.**

- 'இராமனின் வடிவழகை விளக்க வார்த்தைகள் போதவில்லையே ஏன்?' எனத் தம்மையே வினவிக் கொள்கிறார் கம்பர். பகலவனின் பட்டொளி இராமனின் நீலமேனியில் பட்டதால், கதிரொளியை இல்லை என்றாக்கி விட்டது.
- 'ஒப்பற்ற அழகிய வடிவம் கொண்ட இராமனின் நிறம் மையோ? பச்சை மரகதமோ? மறிக்கின்ற நீலக்கடலோ? கார்மேகமோ? எதுவென்று உரைப்பது?' என்கிறார் கம்பர்.

**4. இராமனது எளிவந்த தன்மையை எண்ணிக் குகன் வியந்து கூறியது யாது?**

- முன்பு ஒருமுறை இராமன் குகனிடம், "யாதினும் இனிய நண்ப!" என்றும், மற்றுமொரு முறை "என்னுயிர் அனையாய், நீ என் இளவல்" என்றும் சகோதர உரிமை பாராட்டிக் கூறினார்.
- இராமன் அரச குலத்தைச் சேர்ந்த சக்கரவர்த்தியின் திருமகனாய் இருந்தும், எளிய வேடனாகிய தன்னை இழிவாகக் கருதாது, தோழமை பாராட்டிய மொழிகளை எண்ணும் போதெல்லாம் குகனது மனம், அன்பால் நெகிழ்ந்து உருகுகிறது.
- அதனால் குகன், 'தோழமை என்று அவர் சொல்லிய சொல், ஒரு சொல் – ஒப்பற்ற சொல் – அன்றோ' என்று, இராமபிரானின் எளிவந்த தன்மையை எண்ணி வியந்து கூறுகிறான்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## நெடுவினா

**1. 'சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன்' என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக. (Sep.-20)**

அன்பும் பண்பும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கை கொலுவீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் காட்டும் கவி, "தண்டலை மயில்கள் ஆட...."

**இவ்வுரையைத் தொடர்க!**

"தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கண் முழவி னேங்கக் குவளை கண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ"

என்பது கம்பன் காட்டும் வருணனை! அதாவது, வயல்களின் கரையில் அமைந்துள்ள சோலையே நாடக அரங்கு. மயில் நாடக மகள். வயல்களில் பூத்துள்ள தாமரை அரும்புகளே, விளக்குகள். மேக முழக்கமே மத்தளம். வண்டுகளின் இன்னிசையே யாழொலி. வயல்களில் உள்ள நீரில் எழும்பும் அலையே திரைச்சீலை. இக்காட்சியை மருதமாகிய மன்னன் குவளைக் கண்களால் நோக்கியவாறு வீற்றிருக்கிறான் என்பது, இக்கவிதையின் உள்ளடக்கம்.

இடத்திற்கு ஏற்ப ஓசைநயம் அமையப் பாடுவதில் கம்பர் மிகவும் வல்லவர். வீரமா, காதலா, கோபமா, வியப்பா, அவலமா, எதுவாயினும், ஓசை அமைப்பாலேயே படிப்பவர்க்கும் கேட்பவர்க்கும் அந்த உணர்ச்சி தோன்றச் செய்திடுவார். இராமன் உள்ளத்தைக் கவர அழகிய நங்கையாய் உருமாறிச் சூர்ப்பனகை நடந்து வருகிறாள். அதனை,

"பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்"

என்று வருணிக்கிறார் கம்பர். அவள் நடையோடு போட்டியிடும் நடையழகுடையதாய் உவகைச்சுவை அமைந்துள்ள இப்பாடல், பாடிப்பாடிச் சுவைத்து மகிழ்வதற்குரியதன்றோ?

இராமனின் மாநிற மேனி அழகை வருணிக்கத் தொடங்கும் கம்பன் மை, மரகதம் என்றெல்லாம் உவமை சொல்லி நிறைவு கொள்ள இயலவில்லை. எனவே, அந்த இயலாமையை 'ஐயோ' என்ற சொல்லால் வெளிப்படுத்தும் அழகே சிறப்பு. அதனை,

சீதையும் தம்பியும் தொடர இராமன் கானகம் செல்வதை,
"வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோவெனு மிடையாளொடும் இளையானொடும் போனான்
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோஇவன் வடிவென்பதொர் அழியாஅழ குடையான்"

என வருணிக்கும் கம்பர், வியப்புச்சுவையைச் சொல்லடுக்கிலும் ஓசையமைப்பிலும் எத்துணை அழகாகப் புலப்படுத்தியுள்ளார்?

காவியக் கட்டுக்கோப்பிலே கம்பராமாயணம், மிகமிகச் சிறந்து விளங்கும் காப்பியமாகும். அதில் அகக்கண் கொண்டு நிகழ்ச்சிகளையும் வருணனைகளையும் சித்திரம்போல் கண்டுகளிக்கக் காட்டுவதால், கம்பருடைய பாடல்கள் ஒவ்வொன்றும் 'கம்பச் சித்திரம்' எனப் பாராட்டப்படுகின்றன.

கம்பராமாயணத்திலுள்ள பன்னீராயிரம் பாடல்களுள் சந்தக்கவிகள் எத்தனையோ கண்சிமிட்டி மின்னுகின்றன. அவற்றை நாம் தேடிச் சுவைத்து இன்புறுவோம்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பலவுள் தெரிக

1. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன? (PTA - 4, Sep.-21,22, Mar.-23)
அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்
**விடை : ஈ) அங்கு வறுமை இல்லாததால்**

## கூடுதல் வினாக்கள்

2. ஓர் உயிர் பல உடல்களில் ஊடுருவுவது போலப் பல இடங்களில் பாயும் ஆறு,
அ) சரயு ஆறு ஆ) கங்கை ஆறு இ) யமுனை ஆறு ஈ) சரஸ்வதி ஆறு
**விடை : அ) சரயு ஆறு**
3. 'தண்டலை மயில்களாட' என்ற பாடலில், எந்த நிலத்தின் பெருமையைக் கம்பர் கூறியுள்ளார் ?
அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்
**விடை : இ) மருதம்**
4. விளக்குகள் ஏற்றியதுபோலக் காணப்பட்ட மலர்களாகக் கம்பர் குறிப்பிட்டவை,
அ) தாமரை ஆ) குவளை இ) அல்லி ஈ) சண்பகம்
**விடை : அ) தாமரை**
5. 'வறுமையின்மையால் வண்மையில்லாத நாடு' என்று கம்பர் குறிப்பிடுவது,
அ) அயோத்தி ஆ) மகதம் இ) இலங்கை ஈ) கோசலநாடு
**விடை : ஈ) கோசலநாடு**
6. "ஏழைமை வேடன் இறந்திலன்" – இக்கூற்றுக்கு உரியவன்
அ) குகன் ஆ) அனுமன் இ) இராமன் ஈ) இலக்குவன்
**விடை : அ) குகன்**
7. 'கம்பன் இசைத்த கவியெல்லாம் நான்' என்று பெருமைப்படுபடுகிறவர்,
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கண்ணதாசன் ஈ) கம்பதாசன்
**விடை : அ) பாரதியார்**
8. 'ஆழ நெடுந்திரை ஆறு கடந்துஇவர் போவாரோ?
வேழ நெடும்படை கண்டு நடுங்கிடும் வில்ஆளோ?' – இப்பாடலில் அமைந்த நயங்கள் யாவை?
அ) அடிஎதுகை, சீர்மோனை ஆ) அடிமோனை, சீர் எதுகை
இ) அடிமுரண், சீர்முரண் ஈ) அந்தாதி, இயைபு
**விடை : அ) அடிஎதுகை, சீர்மோனை**
9. கம்பராமாயணத்திலுள்ள காண்டங்கள்,
அ) ஆறு ஆ) ஏழு இ) எட்டு ஈ) ஒன்பது
**விடை : அ) ஆறு**
10. 'தோழமை' என்ற சொல்லைச் சொன்னவன்,
அ) இலக்குவன் ஆ) குகன் இ) இராமன் ஈ) அனுமன்
**விடை : இ) இராமன்**
11. 'கறங்கு போல விற்பி டித்த கால தூதுர் கையிலே, உறங்குவீர்' என்று, கம்பர் யாரைக் கூறுகின்றார்?
அ) குகன் ஆ) கும்பகருணன் இ) பரதன் ஈ) இராமன்
**விடை : ஆ) கும்பகருணன்**
12. 'ஐயோ இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகு உடையான்' – இவ்வரிகளில் குறிக்கப்படுபவன் யார்?
அ) இராமன் ஆ) பரதன் இ) குகன் ஈ) கும்பகருணன்
**விடை : அ) இராமன்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



13. 'மையோ? மரகதமோ? மறிகடலோ? மழைமுகிலோ?' இவ்வரி, கம்பராமாயணத்தில் எந்தப் படலத்தில் இடம்பெறுகிறது ?

அ) கங்கைப்படலம் ஆ) கங்காகாண் படலம் இ) நாட்டுப் படலம் ஈ) ஆற்றுப்படலம்

**விடை : அ) கங்கைப்படலம்**

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

"தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கண் முழவி னேங்கக் குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்,
வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கும் மாதோ?"

1. மேலுள்ள பாடலடிகளில் 'தண்டலை' என்பது ______ எனப் பிரியும்.

அ) தண் + டலை ஆ) தண்டு + அலை இ) தண் + தலை ஈ) தண்மை + தலை

**விடை : ஈ) தண்மை + தலை**

2. இப்பாடலில் வருணிக்கப்பட்ட நிலம் ______.

அ) காடு ஆ) மருதம் இ) புன்செய் ஈ) நன்செய்

**விடை : ஆ) மருதம்**

3. 'கொண்டல்கள்' – இத்தொடரின் பொருள்,

அ) குளிர்ந்த சோலை ஆ) மேகங்கள் இ) உலகம் ஈ) மலர்கள்

**விடை : ஆ) மேகங்கள்**

4. பாடலில் அமைந்துள்ள அடிஎதுகைச் சொற்கள்,

அ) தண்டலை, கொண்டல்கள் ஆ) தாமரை, குவளைக்கண்
இ) தேம்பிழி, மருதம் ஈ) மகரயாழின், இருக்கும் மாதோ

**விடை : அ) தண்டலை, கொண்டல்கள்**

## இலக்கணக்குறிப்பு

இடையாளொ**டும்** இளையானொ**டும்** – எண்ணும்மை

**நெடுந்திரை, நெடும்படை, தண்டலை, புதுமணல்** – பண்புத்தொகைகள்

**வில்பிடித்த** – இரண்டாம் வேற்றுமைத்தொகை

**காலதூதர்** – நான்காம் வேற்றுமைத்தொகை

**விரிசோதி, மறிகடல்** – வினைத்தொகைகள்

**சண்பகக்காடு** – இருபெயரொட்டுப் பண்புத்தொகை

**கிடந்து, கடந்து, விழித்து** – வினையெச்சங்கள்

**எழுந்திராய்! எழுந்திராய்!, உறங்குவாய்! உறங்குவாய்!** – அடுக்குத்தொடர்கள்

**ஓதிய, சொல்லிய** – பெயரெச்சங்கள்

**அழியா** – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**எலாம்** – 'எல்லாம்' என்பதன் இடைக்குறை

## பகுபத உறுப்பிலக்கணம்

1. **ஓதிய – ஓது + இ (ன்) + ய் + அ**

**ஓது** – பகுதி

**இ (ன்)** – இறந்தகால இடைநிலை, 'ன'கரம் புணர்ந்து கெட்டது

**ய்** – உடம்படுமெய், சந்தி

**அ** – பெயரெச்ச விகுதி.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2. **விழித்து – விழி + த் + த் + உ**

**விழி** – பகுதி

**த்** – சந்தி

**த்** – இறந்தகால இடைநிலை

**உ** – வினையெச்ச விகுதி.

3. **சொல்லிய – சொல் + இ (ன்) + ய் + அ**

**சொல்** – பகுதி

**இ (ன்)** – இறந்தகால இடைநிலை, 'ன'கரம் புணர்ந்து கெட்டது

**ய்** – உடம்படுமெய், சந்தி

**அ** – பெயரெச்ச விகுதி.

4. **கடந்து – கட + த் (ந்) + த் + உ**

**கட** – பகுதி;

**த்** – சந்தி 'ந்' ஆனது விகாரம்

**த்** – இறந்தகால இடைநிலை

**உ** – வினையெச்ச விகுதி.

5. **கிடந்து – கிட + த் (ந்) + த் + உ**

**கிட** – பகுதி

**த்** – சந்தி 'ந்' ஆனது விகாரம்

**த்** – இறந்தகால இடைநிலை

**உ** – வினையெச்ச விகுதி.

6. **உறங்குவாய் – உறங்கு + வ் + ஆய்**

**உறங்கு** – பகுதி

**வ்** – எதிர்கால இடைநிலை

**ஆய்** – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.

7. **உறங்குகின்ற – உறங்கு + கின்று + அ**

**உறங்கு** – பகுதி

**கின்று** – நிகழ்கால இடைநிலை

**அ** – பெயரெச்ச விகுதி.

## புணர்ச்சி விதிகள்

1. **விளக்கந்தாங்க – விளக்கம் + தாங்க**

"மவ்வீறு ஒற்று... வன்மைக்கு இனமாத் திரிபவும்" என்னும் விதிப்படி, (விளக்கந் + தாங்க) (விளக்கந்தாங்க)

2. **பொய்யுரை – பொய் + உரை**

"தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்" என்னும் விதிப்படி, (பொய் + ய் + உரை)

"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" என்னும் விதிப்படி, (பொய் (ய் + உ) ரை) (பொய்யுரை)

3. **நெடுந்திரை – நெடுமை + திரை**

"ஈறுபோதல்" என்னும் விதிப்படி, (நெடு + திரை)

"இனமிகல்" என்னும் விதிப்படி, (நெடு + ந் + திரை) (நெடுந்திரை)

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



### கற்பவை கற்றபின்

**1. கம்பராமாயணக் கதைமாந்தர்களுள் எவரேனும் ஒருவர் குறித்து வகுப்பில் உரையாற்றுக.**

கம்பராமாயணக் கதைமாந்தர்களுள் ஒருவன் இலக்குவன். இராமனின் இளைய சகோதரன். இராமனின் மாறா அன்பினைப் பெற்றவன். இராமன்மீதும் சீதைமீதும் பக்தி கொண்டவன் இலக்குவன். தனது தாயின் மீதும் தந்தைமீதும் அளவற்ற பக்தி கொண்டவன்.

நாட்டில் மட்டுமல்ல காட்டிலும் இராமனுக்குப் பாதுகாவலனாய் இருந்து தொண்டாற்றியவன் இலக்குவன். திருமணமான இலக்குவன், இராமனுக்குத் தொண்டாற்றப் பதினான்கு ஆண்டுகள் தன் மனைவியைப் பிரிந்து, இராமனுக்குப் பாதுகாப்புக் கவசமாய் இருந்தான். இராமன் உறங்கும் போதும் இலக்குவன் விழித்திருந்து இராமனைப் பாதுகாத்தான்.

“அம்மா! அண்ணன் இராமனோடு காட்டிற்குச் சென்று வருகிறேன்” என்று, தாய் சுமித்திரையிடம் இலக்குவன் கூறியபோது, “அண்ணனுக்கு ஏதேனும் குறை என்றால், கானகத்தில் முதலில் நீ இறந்த செய்திதான் என் காதில் விழவேண்டும்” என்று, விடை கொடுத்தாள். அந்தச் செயல்திறத்தில் வெளிப்பட்ட தியாகத்திற்காகவும் தொண்டிற்காகவும்தான் இலக்குவனை நான் பெரிதும் நேசிக்கிறேன்.

## விரிவானம்

# 5. பாய்ச்சல்

**(சா. கந்தசாமி)**

### கூடுதல் வினாக்கள்

**1. சா. கந்தசாமியின் ‘பாய்ச்சல்’ கதையில் வரும் ‘அனுமார்’ என்ற கலைஞனின் கலைத்திறனை விளக்குக.**

**முன்னுரை :**

நவீன எழுத்தால் தனது புகழைத் தமிழ் உலகில் முத்திரை பதித்துச் சாகித்திய அகாதெமி விருது பெற்ற சா. கந்தசாமியின் ‘பாய்ச்சல்’ கதையில் வரும் அனுமார்க் கலைஞனின் கலைத்திறனைப் பற்றி இங்கு ஆராய்வோம்.

**தெருமுனை :**

வீதியில் தினந்தோறும் எத்தனையோ கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நடுத்தர மக்களை நம்பித் தங்கள் வாழ்வாதாரத்தைப் பெருக்கிக்கொள்ள, அனுமார் வேடமிட்டு ஒருவன் அனைவரையும் மகிழ்விக்கிறான்.

**திறமைகள் :**

குரங்குபோல ஓடிவந்தான். இரண்டு கால்களையும் மாறிமாறித் தலையில் அடித்துக்கொண்டு, வேகமாகக் கைகளை வீசி நடந்தான். கொஞ்சம் தூரம் சென்று, கடையில் இருந்த வாழைத்தாரிலிருந்து பழங்களைப் பறித்து, அருகில் இருந்தவர்களுக்கெல்லாம் கொடுத்துத் தானும் ஒரு பழம் சாப்பிட்டான்.

**பக்க வாத்தியம் :**

சதங்கை, மேளம், தாளம், நாகசுரம் ஒலிக்க, அதற்கு ஏற்றாற்போலக் குறுக்கும் நெடுக்குமாகப் பாய்ந்தோடினான். நீண்ட வாலை மேலே சுழற்றித் தரையில் அடித்துப் புழுதியைக் கிளப்பினான்.

**அனுமார் ஆட்டம் :**

இசைக்கேற்ப ஆடியவன் தன்னையே மறந்து, கைகளை மார்போடு அணைத்துக் கொண்டான். தான் உண்மை அனுமாராகவே மாறியதை எண்ணிக் ‘கீச் கீச்’ என்று கத்திக்கொண்டே, பந்தற்காலைப் பற்றிக் கொண்டு மேலே ஏறினான்.

திடீரென மேளமும் நாதசுரமும் ஒலிக்கத் தொடங்கியபோது, கூட்டம் திகைத்தது. கண்மூடி கண் திறப்பதற்குள், அனுமார் கீழே குதித்தான். வாலில் பெரிய தீப்பந்தம் கண்டு, கூட்டம் பின்வாங்கியது.

அனுமார், கால்களைத் தரையில் அடித்து உடம்பைக் குலுக்கினான். நெருப்பு அலை பாய்ந்தது. கைகளைத் தட்டிக் குட்டிக்கரணம் போட்டான். கூட்டம் பாய்ந்தோடியது. அனுமார் தன் கம்பீரமான தோற்றத்தோடு நின்று சிரித்தான். கூட்டமும் அமைதியானது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**அனுமார் அருகில் அழகு வரல் :**

அனுமாரால் வாலை வெகுநேரம் சுமக்க முடியாததால், அழகு கையில் கொடுத்துவிட்டு, நடக்க ஆரம்பித்தான். வாலைத் தூக்கிக்கொண்டு, அழகாலும் ஓட முடியவில்லை. வெட்கத்தோடு வாலைப் போட்டு விட்டு வெளியேறினான்.

காரில் வந்தவர் ஹாரன் அடிக்க, ஒருவன் காரை மறித்தான். அனுமார் எரிச்சலுற்று, அவனை வாலால் பின்னுக்கு இழுத்தான். கார் முன்னே வந்து அனுமாருக்குப் பணம் கொடுக்க, அனுமார் அதை வாங்காமல் மேளக்காரனைப் பார்க்க, மேளக்காரன் வாங்கி, மடியில் வைத்துக் கொண்டான்.

**ஆற்றங்கரை ஓரம் :**

ஆட்டமில்லாமல் அனுமார் நடக்க ஆரம்பித்தபோது, கூட்டம் குறைய ஆரம்பித்தது. மேளக்காரன் தவிலைக் கீழே இறக்கி வைத்தான். ஆட்டம் முடிந்தது என்று தீர்மானம் செய்து, கூட்டம் முற்றிலும் கலைந்தது. அனுமார், வாயால் மூச்சுவிட்டு ஆலமரத்தில் சாய்ந்துகொண்டான்.

மேளக்காரன், பணத்தைப் பங்குபோட்டுப் பிரித்துக் கொடுத்தான். அனுமார் அதை வாங்கிக்கொண்டு, ஆற்றங்கரை ஓரமுள்ள கோவில்தூணில் சாய்ந்துகொண்டு அமர்ந்தான்.

**முடிவுரை :**

இக்கதையில் கூட்டத்தினரை மகிழ்விக்க வந்த அனுமாரின் ஆட்டத்தைக் கண்டு மயங்கி, அனுமாரைப் போலத் தானும் ஆடினான் அழகு. அனுமாரோடு ஒன்றிப் போனான். கலை கலைக்காகவே என்பதுபோல், ஒரு கலைஞன் இன்னொரு கலைஞனை உருவாக்க முடியும் என்பதைப் 'பாய்ச்சல்' கதையில் வரும் அனுமார் மூலம் அறிய முடிகிறது.

**2. "பாய்ச்சல்" சிறுகதையில் அழகுவின் கதாபாத்திரம் போல், நீங்கள் கண்டு மகிழ்ந்த பகல்வேடக் கலைஞர் குறித்த நிகழ்வுகளை ஒப்பிட்டும் அவர்கள் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகள் குறித்தும் விரிவாக எழுதுக.** **(PTA - 1)**

தெருவில் 'டும்டும்' என்று மேளம் அடிக்கும் ஒலிகேட்டு, வீட்டிலிருந்து தெருவுக்கு ஓடினேன். அங்கே ஒரு சிறுவன் மத்தளம்போன்ற கருவியைக் கொம்பினால் தட்டிக் கூட்டம் சேர்த்துக் கொண்டிருந்தான். என்னைப்போலச் சிறுவர்களும், வேலையற்ற பெரியவர்களும் அங்கே வேடிக்கை பார்க்கத் திரண்டிருந்தனர். வேடிக்கை பார்க்க வந்த அனைத்து மக்களும் வட்டமாகத் திரண்டு நின்றனர்.

சிறிது நேரத்தில் பாசிமணி, ஊசி விற்கும் ஆண், பெண் வேடம் அணிந்த இருவர் வந்தனர். அவ்வாறு வேடம் அணிந்த இருவர், தோளில் டப்பா ஒன்றை மாட்டித் தட்டிக்கொண்டு 'ஐயாலோ...ஆயாலோ...' என்பது தொடங்கி என்னென்னமோ பாடி ஆடினார்கள். திரண்டிருந்த மக்கள், சிலவேளைகளில் கைதட்டி ஆரவாரம் செய்தனர். நானும் அவர்களில் ஒருவனாகத்தான் இருந்தேன்.

சென்ற வாரம் இதே கும்பல் பக்கத்துத் தெருவில் இராமன், இலக்குவன் வேடம் அணிந்து, காட்டில் சீதையைத் தேடி அலைவதுபோல் நடித்தார்கள். அதையும் நான் முந்தையநாள் பார்த்ததையும் நினைத்துக் கொண்டேன். இவர்கள்தானே அவர்கள் என்று எண்ணினேன். சிறிதுநேரத்தில் காட்சி முடிந்தது. அந்த வேடதாரிகளை நெருங்கிச் சென்று, என் ஆவலைப் பூர்த்தி செய்துகொள்ள முயன்றேன். அவர்களில் சிறுவர்களும் இருந்தார்கள். அவர்களில் பெரியவராக இருந்த ஒருவரை அணுகி, "ஏன் நீங்கள் இந்த வேலை செய்கிறீர்கள்?" என்றேன். "தம்பீ, நீ சொல்வது உண்மைதான். இந்தக் காலத்தில் எங்கே வேலை கிடைக்கிறது? வேலை கிடைத்தாலும் கூலி கிடைப்பதில்லை. இது எங்கள் பரம்பரைத் தொழில். சொல்வதானால் இது ஒருவகைக் கலைப்பணி. இந்த வேடமணிந்து ஆடுவதால், மக்களை மகிழ்ச்சி அடையச் செய்ய முடிகிறது. வசதி படைத்தவர்கள்போல் பொழுதுபோக்கை அனுபவிக்க முடியாதவர்களுக்கு, நாங்கள் மகிழ்ச்சி அளிக்கிறோம்" என்றார்.

"ஏன் உங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்கக் கூடாது" என்றேன். "முடியாது. நாங்கள் ஓர் இடத்தில் தங்கி இருக்க முடியாது. ஊர் ஊராகச் சென்றால்தான் பிழைப்பு நடத்தமுடியும். பள்ளிப் படிப்பை முடித்துத் தொடர்ந்து படிக்க முடியாது. அந்தப் படிப்புக்குக் கூலிவேலைதான் செய்யமுடியும். அதற்கு இதுவே மேல். "பரம்பரையாக நாங்கள் செய்துவரும் கலைப்பணியால் ஏழை மக்களை மகிழ்ச்சி அடையச் செய்ய முடிகிறது. எங்கள் வயிற்றுப் பிழைப்பும் நடைபெறுகிறது. வருகிறோம் தம்பி" என்று சொல்லிவிட்டு நகர்ந்தார்கள்.

நான், அவர்களின் எதார்த்தமான பதிலை எண்ணிச் சிந்தித்தபடி, மக்களாட்சி நடைபெறும் நாட்டில் இது குறையா, நிறையா என எண்ணியபடி நடந்தேன்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



3. **'பாய்ச்சல்' கதையில் அழகு தன்னை மறந்து ஆடியதைப்போன்று உங்கள் தெருக்களில் நீங்கள் கண்டு மகிழ்ந்த பகல் வேடக் கலைஞரைக் குறித்து அழகுற விளக்கி எழுதுக.** (Sep - 20)

நாங்கள் வசிக்கும் பகுதி புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ளது. அது நகரின் சிறு வளர்ச்சிகளையும், பழைய கிராமத்தின் சாயலையும் கொண்ட பகுதி. அதனால் பட்டின நாகரிகத்தையும் கிராமத்தின் மணத்தையும் அனுபவிக்க முடியும். அந்தப் பகுதியில், பழைய கிராமப் பகுதியை ஒட்டி ஒரு பகல் வேடக் கலைஞர் வாழ்ந்து வந்தார். அவர் அதிகம் படிக்காதவர். ஆனால் கேள்வி அறிவால் பல்வேறு செய்திகளை விரிவாகப் பேசக்கூடியவர். அவர்தம் குடும்ப வாழ்க்கையை நடத்த, அன்றன்று கிடைக்கும் சிறு கூலி வேலைகளைச் செய்வார். எல்லா நாள்களிலும் வேலை கிடைக்காததால், சிலநாள்களில் தாம் பரம்பரையாகச் செய்துவந்த பகல் வேடக் காட்சி அணிந்து மக்களை மகிழ்ச்சியூட்டி, அதனால் கிடைக்கும் சிறுதொகை கொண்டு வாழ்வு நடத்துவதைச் சிறப்பாகச் செய்து வந்தார். தம் வறுமையைக் கூறி, யாரிடத்திலும் பிச்சை கேட்பதில்லை. அதைத் தமக்கு மரியாதைக் குறைவாகக் கருதினார். இவற்றை எல்லாம் நான் அவரிடம் உரையாடியதால் அறிந்து கொண்டேன்.

அவர், ஒருநாள் அனுமான் வேடமணிந்து, ஒரு கதாயுதத்துடன் தெருவில் நாடகத்தைத் தொடங்கினார். திரண்டிருந்த மக்களுக்கு இராமன் பெருமைகளை எடுத்துக் கூறினார். இராமனைப் பற்றி முழுமையாக அறியாத மக்கள், அவர் கூறியதை ஆவலுடன் கேட்டனர். எனக்கே அவர் கூறிய புதிய பல செய்திகள் திகைப்பைத் தந்தன. அனுமன் இராமனைச் சந்தித்ததுமுதல் அயோத்திக்கு வந்ததுவரை அனைத்துச் செய்திகளையும், கேட்போர் ஆவலைத் தூண்டுவதுபோலக் கூறினார். நிகழ்ச்சி முடிந்ததும் மக்கள் கொடுத்த சிறுதொகையை மகிழ்ச்சியோடு பெற்றுக்கொண்டு நன்றி கூறிவிட்டுப் புறப்பட்டார். இதுபோல் பல நாள்கள் பல நிகழ்ச்சிகளைக் கண்டு நான் மகிழ்ந்ததுண்டு!

இன்னொருநாள் கண்ணனின் நண்பர் குசேலன்போல் வேடமணிந்துவந்து, கிருஷ்ணனின் வரலாற்றைக் கூறி, திரண்டிருந்த மக்களை மகிழச் செய்து கொண்டிருந்தார். நிகழ்ச்சியை நடத்தியபோது அவர் எழுப்பிய சில வினாக்கள் என்னை வியப்புக்கு உள்ளாக்கின. கண்ணனிடம் குசேலன் கேட்கிறான். "ஏ கண்ணா, நீ வசுதேவருக்கும் தேவகிக்கும் மகனா? நந்தகோபனுக்கும் யசோதைக்கும் மைந்தனா? அந்த இரு தம்பதியரும் உன்னை உரிமை கொண்டாடுகின்றனர். நீ எல்லாரையும் ஏமாற்றுகிறாய்; என்னையும் அதுபோல் ஏமாற்றாதே! ஏ, கண்ணா நீ குருகுலவாசத்தில் என்னோடு விரும்பி உண்ணும் அவல் கொண்டு வந்திருக்கிறேன் வேண்டுமா? வேண்டாமா?" எனக் கேட்டதெல்லாம் மகிழ்ச்சி அளித்தது. மக்களும் வியப்போடு பேசிக் கொண்டார்கள்.

இதுபோல் மட்டுமில்லை! திடீரென்று ஒருநாள் பகல் வேடமணிந்து வந்தவர், விசித்திரமாக, "நான் கோவிட் வந்திருக்கிறேன். உங்கள் கண்ணுக்குத் தெரிகிறேனா? தெரியமாட்டேன். கடவுளைத் தேடுகிறீர்கள். அவனை உங்களால் காண முடிகிறதா? முடியாது. ஏதோ சிலர் கண்டதாகக் கூறுவர். அது அவர்களின் பக்தியின் உன்னதமான முயற்சி. நானும் உங்கள் கண்ணுக்கும் தெரியமாட்டேன்! ஆனால், விரும்பினால் யாருக்கு வேண்டுமானாலும் மோட்சம் கொடுப்பேன். என்னிடமிருந்து தப்பிக்க விரும்பினால் வாய், மூக்குப் பகுதிகளைப் பாதுகாப்பாக மூடிக் கொண்டால் தப்பிக்கலாம். கோவிட் தடுப்பு ஊசியும், பூஸ்டர் ஊசியும் போட்டுக் கொள்ளுங்கள். இல்லையானால் என் மீது குறை சொல்லாதீர்கள். உயிர் பிழைக்க விரும்பினால், என்னிடமிருந்து தப்பிக்க விரும்பினால் எப்போதும் முகக்கவசம் போட்டுக் கொள்ளுங்கள்" என்று பேசினார். இந்த நிகழ்ச்சியை மக்கள் எல்லாரும் பாராட்டினார்கள். இப்படிச் சமுதாய விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளையும் அந்தக் கலைஞர் நடத்துவார்.

படித்துவிட்டுத் தகுதியான வேலை கிடைக்கவில்லை என்று சுற்றித் திரியும் இளைஞர்களைவிடத் தமக்குத் தெரிந்த கலைநிகழ்ச்சியை நடத்தி, மக்களுக்கு மகிழ்ச்சி தருவதோடு, சுயதொழில் செய்வதை எண்ணி நான் மகிழ்ந்தேன். அவரை எப்போது கண்டாலும் நான் பாராட்டிப் பேசி மகிழ்வேன்; "வெறுங்கை என்பது மூடத்தனம்!" என்பதை நிரூபிப்பவர் அல்லவா அவர்?

## கூடுதல் பலவுள் தெரிக

1. சா. கந்தசாமிக்கு எழுத்துலகில் புகழைப் பெற்றுத் தந்த புதினம்,

அ) சாயாவனம் ஆ) சூர்ய வம்சம்

இ) சாந்தகுமாரி ஈ) தொலைந்து போனவர்கள்

**விடை : அ) சாயாவனம்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2. ‘பாய்ச்சல்’ என்னும் சிறுதையின் ஆசிரியர்,
அ) ஜெயகாந்தன் ஆ) சா. கந்தசாமி இ) ஜெயமோகன் ஈ) அகிலன்
**விடை : ஆ) சா. கந்தசாமி**

3. ‘பாய்ச்சல்’ என்னும் சிறுகதை, எந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது?
அ) சா. கந்தசாமியின் கதைகள் ஆ) தக்கையின்மீது நான்கு கண்கள்
இ) சுடுமண் சிலைகள் ஈ) தொலைந்து போனவர்கள்
**விடை : ஆ) தக்கையின்மீது நான்கு கண்கள்**

4. சா. கந்தசாமியின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல்,
அ) விசாரணைக் கமிஷன் ஆ) சாந்தகுமாரி இ) சாயாவனம் ஈ) சூர்ய வம்சம்
**விடை : ஈ) விசாரணைக் கமிஷன்**

5. சா. கந்தசாமி, எந்தக் குறும்படத்திற்கு அனைத்துலக விருதைப் பெற்றுள்ளார்?
அ) தொலைந்து போனவர்கள் ஆ) சூர்ய வம்சம்
இ) சாந்தகுமாரி ஈ) சுடுமண் சிலைகள்
**விடை : ஈ) சுடுமண் சிலைகள்**

### கற்பவை கற்றபின்

**மேடைக் கலைஞர்களும் பகல்வேடக் கலைஞர்களும் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகள் குறித்து வகுப்பறையில் விவாதிக்க.**

**ஆசிரியர் :** மாணவர்களே! மேடைக் கலைஞர்களும் பகல்வேடக் கலைஞர்களும் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகள் குறித்து உங்கள் கருத்துகளைக் கூறுங்கள்.

**மாணவர்கள் :** நிகழ்ச்சிகள் நடக்கும் ஊர்களுக்கு அடிக்கடி செல்வதால், தங்கள் குடும்பத்தைக் கவனிக்க இயலாது. உடல்நிலை சரியில்லாத காலத்தில் வருமானமும் இருக்காது.

**மாணவிகள் :** இரவில் கண் விழித்து நடிப்பதால், பகல் நேரத்தில் ஆழ்ந்து உறங்குவார்கள். எனவே, அவர்கள் வேறு வேலைக்குச் செல்ல இயலாது. பொருளாதார நெருக்கடிகள் இருக்கும்.

**ஆசிரியர் :** நிகழ்ச்சி நடத்தப் பல ஊர்களுக்கும் செல்வதால், எளிதில் நோய்த்தொற்றுக்கு ஆளாவார்கள். மருத்துவச் செலவு அவர்களை அச்சுறுத்தும். சமுதாயத்தில் அவர்களுக்குப் பெரிய மரியாதை ஒன்றும் இருக்காது. கூத்தாடிகள் என்றே அழைக்கப்படுவார்கள்.

## கற்கண்டு

# 6. அகப்பொருள் இலக்கணம்

### குறுவினாக்கள்

1. **காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு, மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.** (PTA - 2)

முதற்பொருள் : **நிலம்** – காடு
**சிறுபொழுது** – மாலை
**பெரும்பொழுது** – கார்காலம் (மழைக்காலம்)

கருப்பொருள் : உணவு– வரகு. (வரகில் சமைத்த உணவு)
இவை அனைத்தும் முல்லை நிலத்திற்கு உரியவை.

2. **கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.**
**உழவர்கள் மலையில் உழுதனர்.**
**முல்லைப் பூச்செடியைப் பார்த்தவாறே, பரதவர் கடலுக்குச் சென்றனர்.**
உழவர்கள் வயலில் உழுதனர்.
நெய்தல் பூச்செடியைப் பார்த்தவாறே, பரதவர் கடலுக்குச் சென்றனர்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கூடுதல் வினாக்கள்

**3. ஐவகைத் திணைகளுக்கு உரிய தெய்வங்கள் யாவை ?**

- குறிஞ்சி–முருகன்
- முல்லை – திருமால்
- மருதம் – இந்திரன்
- நெய்தல்– வருணன்
- பாலை – கொற்றவை.

**4. கார்காலத்திற்கு உரிய மாதங்கள் யாவை?**

- ஆவணி
- புரட்டாசி.

**5. அன்பின் ஐந்திணைகள் யாவை?**

- குறிஞ்சித்திணை
- முல்லைத்திணை
- மருதத்திணை
- நெய்தல்திணை
- பாலைத்திணை.

**6. பொருள் இலக்கணம் என்றால் என்ன? அஃது எத்தனை வகைப்படும்?**

➤ பொருள் என்பது ஒழுக்கமுறையைக் குறிக்கிறது.

➤ வாழ்வியலை விளக்குவது பொருள் இலக்கணம் ஆகும்.

➤ பொருள் இலக்கணம் அகம், புறம் என, இரண்டு வகைப்படும்.

**7. பெரும்பொழுது மற்றும் சிறுபொழுது என்றால் என்ன?**

➤ பெரும்பொழுது – ஓராண்டின் ஆறு பொழுதுகளாகும்.

➤ சிறுபொழுது – ஒருநாளின் ஆறு பொழுதுகளாகும். (யாமம், வைகறை)

**8. ஆறு பெரும் பொழுதுகளையும் கொண்ட திணைகள் யாவை?**

➤ மருதம், நெய்தல் ஆகிய இரு திணைகளும், ஆறு பெரும் பொழுதுகளையும் கொண்டுள்ளன.

**9. அகத்திணை என்றால் என்ன?**

➤ அன்புடைய தலைவன், தலைவி இடையிலான உறவுநிலைகளைக் கூறுவது அகத்திணை ஆகும்.

**10. சிறுபொழுதிற்குரிய கூறுகள் எத்தனை? அவை யாவை?**

➤ சிறுபொழுதிற்குரிய கூறுகள் ஆறு. **அவை :**

- காலை
- நண்பகல்
- எற்பாடு
- மாலை
- யாமம்
- வைகறை.

**11. பெரும்பொழுதிற்குரிய கூறுகள் எத்தனை? அவை யாவை?**

➤ பெரும்பொழுதிற்குரிய கூறுகள் ஆறு. **அவை :**

- கார்காலம், குளிர்காலம்
- முன்பனிக்காலம்
- பின்பனிக்காலம்
- இளவேனிற்காலம்
- முதுவேனிற் காலம்.

**12. ஐவகைத் திணைகளுக்குமுரிய அமைவிடங்களைக் கூறுக.**

- **குறிஞ்சி** – மலையும் மலை சார்ந்த இடமும்
- **முல்லை** – காடும் காடு சார்ந்த இடமும்
- **மருதம்** – வயலும் வயல் சார்ந்த இடமும்
- **நெய்தல்** – கடலும் கடல் சார்ந்த இடமும்
- **பாலை** – சுரமும் சுரம் சார்ந்த இடமும்

**13. ஐவகை நிலத்திற்குரிய பறைகள் யாவை?**

- **குறிஞ்சி** – தொண்டகப்பறை
- **நெய்தல்** – மீன்கோட்பறை
- **முல்லை** – ஏறுகோட்பறை
- **பாலை** – துடி
- **மருதம்** – மணமுழா, நெல்லரிகிணை

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



14. **ஐவகை நிலத்தின் மக்கள் பெயர்கள் யாவை?**

- **குறிஞ்சி** – வெற்பன், குறவர், குறத்தியர்.
- **முல்லை** – தோன்றல், ஆயர், ஆய்ச்சியர்.
- **மருதம்** – ஊரன், உழவர், உழத்தியர்.
- **நெய்தல்** – சேர்ப்பன், பரதன், பரத்தியர்.
- **பாலை** – எயினர், எயிற்றியர்

15. **ஐவகை நிலத்திற்குரிய தொழில்கள் யாவை?**

- **குறிஞ்சி** – தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல்.
- **முல்லை** – ஏறு தழுவுதல், நிரை மேய்த்தல்.
- **மருதம்** – நெல்லரிதல், களை பறித்தல்.
- **நெய்தல்** – மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல்.
- **பாலை** – வழிப்பறி, நிரை கவர்தல்.

16. **ஐவகை நிலத்திற்குரிய ஊர்கள் எவை ?**

- **குறிஞ்சி** – சிறுகுடி
- **முல்லை** – பாடி, சேரி
- **மருதம்** – பேரூர், மூதூர்
- **நெய்தல்** – பட்டினம், பாக்கம்
- **பாலை** – குறும்பு.

## சிறுவினா

1. **‘கடற்கரையில் உப்புக் காய்ச்சுதல் நடைபெறுகிறது; மலைப்பகுதிகளில் மலைப்பயிர்களும் நிலப்பகுதி களில் உழவுத்தொழிலும் நடைபெறுகின்றன.’ – காலப்போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்தபோதிலும், பண்டைத் தமிழரின் திணைநிலைத் தொழில்கள் இன்றளவும் தொடர்வதையும் அவற்றின் இன்றைய வளர்ச்சியையும் எழுதுக.** (PTA - 3)

★ பழந்தமிழ் நாட்டின் மிகப்பெரிய சந்தைக்குரிய உற்பத்திப் பொருளாக உப்பு விளைகிறது. மரக்காணம், இந்தியாவின் மூன்றாவது பெரிய உப்பளமாக விளங்குகின்றது. வேதாரண்யம்முதல் கோடியக்கரைவரையில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள உப்பளங்களில், உப்பு உற்பத்தி நடைபெற்று வருகிறது.

★ மிளகு, ஏலம், இலவங்கம், பலா, முந்திரி, தேயிலை, காப்பி, பாக்கு, கோகோ போன்றவை குறிப்பிடத் தக்கவை. நீலகிரி, கோயம்புத்தூர், கம்பம், தேனி, திருநெல்வேலி, அரியலூர், கடலூர், சேலம் ஆகிய மாவட்டங்களில் அதிக அளவில் பயிர் செய்யப்பட்டு, ஏற்றுமதியும் செய்யப்படுகின்றன.

★ இந்தியாவின் முதுகெலும்பு கிராமங்கள்தாம் என்றாலும், விளைநிலங்களை வீடுகளாக்கி விட்டனர். மக்கள்தொகைப் பெருக்கத்திற்கு ஏற்றாற்போல, விவசாயம் நடைபெறவில்லை. கிராமப்புற மக்கள்தாம் விவசாயம் செய்ய வேண்டும் என்ற நிலை இல்லாமல், அறிவியல் முறையில் ஆய்வு நிகழ்த்தி விவசாயம் செய்ய, நகர்ப்புற மாணவர்களும் முன்வர வேண்டும்.

## கூடுதல் வினாக்கள்

2. **ஐவகைத் திணைகளுக்குமான உணவுகளை எழுதுக.**

- **குறிஞ்சி** : மலைநெல், தினை
- **முல்லை** : வரகு, சாமை
- **மருதம்** : செந்நெல், வெண்ணெல்
- **நெய்தல்** : மீன், உப்பு விற்றுப் பெற்ற பொருள்கள்
- **பாலை** : சூறையாடலால் வரும் பொருள்கள்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



3. பெரும்பொழுதிற்குரிய காலங்களை எழுதி, அக்காலங்களுக்கான மாதங்களையும் எழுதுக.

| பெரும்பொழுது | மாதம் |
|---|---|
| கார்காலம் | ஆவணி, புரட்டாசி |
| குளிர்காலம் | ஐப்பசி, கார்த்திகை |
| முன்பனிக்காலம் | மார்கழி, தை |
| பின்பனிக்காலம் | மாசி, பங்குனி |
| இளவேனிற்காலம் | சித்திரை, வைகாசி |
| முதுவேனிற்காலம் | ஆனி, ஆடி |

4. சிறுபொழுதிற்குரிய கூறுகளையும், அதற்குரிய நேர அளவுகளையும் குறிப்பிடுக.

| சிறுபொழுது | நேரம் |
|---|---|
| காலை | காலை 6–10 மணி |
| நண்பகல் | காலை 10 – மதியம் 2 மணி |
| எற்பாடு | பிற்பகல் 2– மாலை 6 மணி |
| மாலை | மாலை 6 – முன்னிரவு 10 மணி |
| யாமம் | முன்னிரவு 10–பின்னிரவு 2 மணி |
| வைகறை | பின்னிரவு 2 – காலை 6 மணி |

. குறிஞ்சி நிலத்திற்குரிய நிலம், பெரும்பொழுது, சிறுபொழுது, கருப்பொருளை விளக்குக.

நிலம் : மலையும் மலை சார்ந்த இடமும்
பெரும்பொழுது : குளிர்காலம், முன்பனிக்காலம்
சிறுபொழுது : யாமம்

குறிஞ்சி நிலத்தின் கருப்பொருள்.

தெய்வம் : முருகன்
மக்கள் : வெற்பன், குறவன், குறத்தியர்
உணவு : மலைநெல், தினை
விலங்கு : புலி, கரடி, சிங்கம்
பூ : குறிஞ்சி, காந்தள்
மரம் : அகில், வேங்கை
பறவை : கிளி, மயில்
ஊர் : சிறுகுடி
நீர் : அருவிநீர், சுனைநீர்
பறை : தொண்டகம்
யாழ் : குறிஞ்சியாழ்
பண் : குறிஞ்சிப்பண்
தொழில் : தேனெடுத்தல்

## பலவுள் தெரிக

1. குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் ______. (PTA - 3, Mar.-24)

அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள்
ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
இ) குறிஞ்சி, மருதம் நெய்தல் நிலங்கள்
ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

விடை : இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கூடுதல் வினாக்கள்

2. பொருத்துக. (PTA - 4)

| | | |
|---|---|---|
| அ) குறிஞ்சி | – | 1. உப்பு விளைவித்தல் |
| ஆ) முல்லை | – | 2. நெல்லரிதல் |
| இ) மருதம் | – | 3. நிரைமேய்த்தல் |
| ஈ) நெய்தல் | – | 4. தேனெடுத்தல் |

அ) 4 3 2 1 ஆ) 3 2 4 1 இ) 1 3 2 4 ஈ) 4 1 2 3

**விடை : அ) 4 3 2 1**

3. வரகு, சாமை ஆகிய உணவுப் பொருள்கள், எத் திணைக்குரியவை ?

அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்

**விடை : ஆ) முல்லை**

4. பட்டினம், பாக்கம் ஆகிய ஊர்கள், எத் திணைக்குரியவை ?

அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்

**விடை : ஈ) நெய்தல்**

5. ஆறு பெரும் பொழுதுகளும் எவ்வகைத் திணைகளுக்கு உரியவை ?

அ) குறிஞ்சி, முல்லை ஆ) முல்லை, மருதம் இ) மருதம், நெய்தல் ஈ) நெய்தல், பாலை

**விடை : இ) மருதம், நெய்தல்**

6. கடலும் கடல் சார்ந்த இடமும் எவ்வகை நிலமாகும் ?

அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) நெய்தல் ஈ) பாலை

**விடை : இ) நெய்தல்**

7. அகத்திணை ஒழுக்கமுறை, கீழ்க்கண்ட எதனுடன் தொடர்புடையது ?

அ) அன்பின் ஐந்திணை ஆ) போர் செய்தல் இ) புறப்பொருள் ஈ) நானிலம்

**விடை : அ) அன்பின் ஐந்திணை**

8. கொற்றவை, எத்திணைக்குரிய தெய்வம் ஆகும் ?

அ) குறிஞ்சி ஆ) மருதம் இ) நெய்தல் ஈ) பாலை

**விடை : ஈ) பாலை**

9. பின்பனிக்காலம் என்ற பெரும்பொழுது எத்திணைக்குரியது ?

அ) முல்லை ஆ) மருதம் இ) நெய்தல் ஈ) பாலை

**விடை : ஈ) பாலை**

10. குறிஞ்சி நிலத்திற்குரிய பறை எது ?

அ) ஏறுகோட்பறை ஆ) தொண்டகம் இ) மணமுழா ஈ) துடி

**விடை : ஆ) தொண்டகம்**

11. முல்லை நிலத்திற்குரிய பெரும்பொழுதினைத் தேர்ந்தெடு.

அ) கார்காலம் ஆ) குளிர்காலம் இ) முன்பனி ஈ) பின்பனி

**விடை : அ) கார்காலம்**

12. முன்னிரவு 10 மணிமுதல் பின்னிரவு 2 மணிவரை உள்ள சிறுபொழுது,

அ) எற்பாடு ஆ) மாலை இ) யாமம் ஈ) வைகறை

**விடை : இ) யாமம்**

13. விளரியாழ், எத்திணைக்கு உரியது ?

அ) குறிஞ்சி ஆ) மருதம் இ) நெய்தல் ஈ) பாலை

**விடை : இ) நெய்தல்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



14. முல்லைநில மக்களின் உணவுப் பொருட்கள்,
அ) வெண்நெல், வரகு ஆ) மலைநெல், தினை இ) வரகு, சாமை ஈ) மீன், செந்நெல்
**விடை : இ) வரகு, சாமை**

15. வைகறைக்குரிய கால நேரம்,
அ) பின்னிரவு 2 மணிமுதல் காலை 6 மணிவரை ஆ) காலை 6 மணிமுதல் 10 மணிவரை
இ) காலை 10 மணிமுதல் 2 மணிவரை ஈ) இரவு 10 மணிமுதல் இரவு 2 மணிவரை
**விடை : அ) பின்னிரவு 2 மணிமுதல் காலை 6 மணிவரை**

16. இளவேனிற் காலத்திற்குரிய மாதங்கள்,
அ) ஆவணி, புரட்டாசி ஆ) சித்திரை, வைகாசி இ) ஆனி, ஆடி ஈ) மார்கழி, தை
**விடை : ஆ) சித்திரை, வைகாசி.**

17. சுரமும் சுரம் சார்ந்த இடமும் எத்திணைக்குரியது ?
அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) நெய்தல் ஈ) பாலை
**விடை : ஈ) பாலை**

18. ஆனி, ஆடி முதலான மாதங்கள்,
அ) கார்காலம் ஆ) குளிர்காலம் இ) இளவேனிற்காலம் ஈ) முதுவேனிற்காலம்
**விடை : ஈ) முதுவேனிற்காலம்**

## கற்பவை கற்றபின்

**1. பண்டைத் தமிழரின் திணைநிலை வாழ்க்கை முறையையும் இன்றைய தமிழரின் வாழ்க்கை முறையையும் ஒப்பிட்டு ஒவ்வொருவர் கருத்தையும் பதிவு செய்து பொதுக்கருத்தை அறிக.**

★ காலங்கள் கடந்தாலும் தெய்வபக்தி மாறவில்லை. அதே சமயம் கடவுள் மறுப்புக் கோட்பாடும் வலுவடைந்து வருகிறது. பண்டைய சாதி முறைகள் மெல்ல அழிந்து, அனைவரும் சமம் என்னும் கோட்பாடு உருவாகியுள்ளது. சமுதாய அறம் கடைப்பிடிக்கப்படுகிறது. எனினும் ஆங்காங்கே சமுதாயத்தில் குற்றங்கள் பெருகியுள்ளன. எனவே, காவல் நிலையங்களும், நீதி மன்றங்களும் அதிகரித்துள்ளன. இருந்தும் பெரும்பாலான மக்களுக்கு நீதி கிட்டவில்லை.

★ கல்வி பெருகியுள்ளது. கல்வி கற்கும் பெண்களின் எண்ணிக்கை கூடியுள்ளது. பெண்கள் வேலைக்குச் செல்வதால் பொருளாதாரச் சுதந்திரம் பெற்றுக் கௌரவமாக நடமாடுகிறார்கள். சுற்றுச்சூழல் தூய்மை கெட்டுள்ளது. நோய்கள் பெருகியுள்ளன. எனவே, மருத்துவர்களின் தேவை அதிகரித்துள்ளது. மருத்துவ வசதிகள் பெருகி இருப்பினும் பொருளாதாரத் தட்டுப்பாட்டால் மருத்துவம் பார்க்க இயலாத நிலை மக்களிடத்தில் நிலவி வருகிறது.

★ சமைத்து உண்பது குறைந்து விட்டது. உணவுத் தானியம் முன்புபோலப் பயன்படவில்லை. விரைவு உணவகங்களில் மக்கள்கூட்டம் அலைமோதுகிறது. தொழில்நுட்ப வசதி பெருகியுள்ளது. வறுமை நிலையில் இருந்து, மக்கள் மெல்ல முன்னேற்றமடைந்துள்ளனர். எனினும், சமுதாயத்தில் பட்டினிப் போராட்டம் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

## மொழியை ஆள்வோம்

**மொழிபெயர்க்க.** (Sep.-22)

Kalaignar Karunanidhi is known for his contributions to Tamil literature. His contributions cover a wide range: poems, letters, screenplays, novels, biographies, historical novels, stage-plays, dialogues and movie songs. He has written Kuraloviam for Thirukkural, Tholkaappiya Poonga, Poombukar, as well as many poems, essays and books. Apart from literature, Karunanidhi has also contributed to the Tamil language through art and architecture. Like the Kuraloviyam, in which Kalaignar wrote about Thirukkural, through the construction of Valluvar Kottam he gave an architectural presence to Thiruvalluvar, in Chennai. At Kanyakumari, Karunanidhi constructed a 133-foot-high statue of Thiruvalluvar in honour of the scholar.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



கலைஞர் கருணாநிதியின் தமிழிலக்கியப் பணிகள் எல்லோரும் அறிந்தவைதாம். கவிதைகள், கடிதங்கள், திரைக்கதை வசனங்கள், புதினங்கள், வாழ்க்கை வரலாறுகள், வரலாற்றுப் புதினங்கள், நாடகங்கள் மற்றும் திரைப்படப் பாடல்கள் ஆகியவை அவர் தமிழிலக்கியத்திற்குத் தந்த பங்களிப்பாகும். இவை தவிர திருக்குறள் உரையாகக் 'குறளோவியம்', தொல்காப்பிய உரையாகத் 'தொல்காப்பியப் பூங்கா' போன்ற உரைநடை நூல்களையும் கலைஞர் படைத்துள்ளார்.

கலைஞர் தமிழிலக்கியத்திற்குப் பங்களித்ததைப் போல, கலை மற்றும் பண்பாடு சார்ந்த கட்டுமானச் சான்றுகளையும் நிறுவியுள்ளார். சென்னையில் ஐயன் திருவள்ளுவருக்கு அழகிய கலைநயத்தோடு கூடிய வள்ளுவர் கோட்டம் அமைத்தார். தமிழகத்தின் தென்கோடியான கன்னியாகுமரியில் ஐயன் திருவள்ளுவருக்கு 133 அடி உயரச் சிலையை நிறுவிப் பெருமைப்படுத்தியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## தொடர்களை அறிவோம், தொடர்ந்து செய்வோம்.

### அ. தனிச் சொற்றொடர் :

ஓர் எழுவாயோ, பல எழுவாய்களோ இருந்து, ஒரு பயனிலை பெற்று முடிவது தனிச்சொற்றொடர் ஆகும்.

எ – கா : i. மேரி, பேருந்திற்காகக் காத்திருந்தார்.

(ஓர் எழுவாய் – மேரி) (ஒரு பயனிலை – காத்திருந்தார்) – தனிச்சொற்றொடர்.

ii. மேரியும் கனகாவும் பேருந்தில் ஏறினர்.

(பல எழுவாய்கள் – மேரி / கனகா) (ஒரு பயனிலை – ஏறினர்) – தனிச்சொற்றொடர்.

### ஆ. தொடர் சொற்றொடர் :

ஓர் எழுவாய், ஒன்றுக்கு மேற்பட்ட பயனிலைகளைப் பெற்று அமைவது, தொடர் சொற்றொடர் ஆகும்.

எ – கா : i. இனியநிலா பேச்சுப்போட்டியில் பங்கேற்றார்; வெற்றி பெற்றார்; பரிசைத் தட்டிச் சென்றார்.

(ஓர் எழுவாய் – இனியநிலா) (பல பயனிலைகள்–பங்கேற்றார், வெற்றி பெற்றார், தட்டிச்சென்றார்)–தொடர் சொற்றொடர்.

ii. அன்வர், அரங்கத்திற்கு வந்து, நாடகம் பார்த்து, மகிழ்ச்சி அடைந்தார்.

(ஓர் எழுவாய்– அன்வர்) (பல பயனிலைகள்–வந்து, பார்த்து, அடைந்தார். – (தொடர் சொற்றொடர்)

### இ. கலவைச் சொற்றொடர் :

கருத்து முழுமை பெற்ற ஒரு முதன்மைத் தொடரும், கருத்து முழுமை பெறாத துணைத் தொடர்களும் கலந்து வருவன, கலவைத் தொடர் ஆகும்.

எ – கா : மழை கொட்டிக் கொண்டிருந்தாலும், பகலவன் பள்ளிக்கு நடந்து வந்தான்.

'பகலவன் பள்ளிக்கு நடந்து வந்தான்' என்பது முதன்மைத்தொடர்.

'மழை கொட்டிக் கொண்டிருந்தாலும்' என்பது துணைத்தொடர்.

முதன்மைத் தொடரும் துணைத்தொடரும் இணைந்து வந்துள்ளதால் கலவைச்சொற்றொடர் ஆயிற்று.

### தொடர்களை அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.

எ – கா : அழைப்புமணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தார்.

(தனிச்சொற்றொடர்களைக் கலவைச் சொற்றொடராக மாற்றுக)

அழைப்புமணி ஒலித்ததால், கயல்விழி கதவைத் திறந்தார்.

1. இன்னாசியார், புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்கங்களில் அடுக்கி வைத்தார். புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக்கொடுத்தார். **(தொடர் சொற்றொடராக மாற்றுக)**

**விடை :** இன்னாசியார், புத்தகங்களை வரிசைப்படுத்தி, புத்தக அடுக்கங்களில் அடுக்கிவைத்து, புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக்கொடுத்தார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2. கலைஞர் எழுத்தைத் தமது ஆயுதமாகக் கொண்டு வாழ்ந்தார். கலைஞர், எழுத்துவழியாகத் தமது எண்ணங்களைக் கடைக்கோடித் தமிழனுக்கும் கொண்டு சென்றார். **(கலவைச் சொற்றொடராக மாற்றுக)**

கலைஞர் எழுத்தைத் தமது ஆயுதமாகக் கொண்டு, அந்த எழுத்துவழியாகத் தமது எண்ணங்களைக் கடைக்கோடித் தமிழனுக்கும் கொண்டு சென்றார்.

3. முரசொலி ஏட்டைக் கையெழுத்து இதழாகத் தொடங்கி, வார இதழாக்கி, நாளேடாக்கினார் கலைஞர். **(தனிச்சொற்றொடர்களாக மாற்றுக)**

முரசொலி ஏட்டைக் கையெழுத்து இதழாகக் கலைஞர் தொடங்கினார்.

பின் அதனைக் கலைஞர் வார இதழாக்கினார்.

அதையே பின்னர்க் கலைஞர் நாளேடாக்கினார்.

4. ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சுத் தடைப்பட்டது. (தனிச் சொற்றொடர்களாக மாற்றுக) **(PTA - 5)**

ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றது. அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைப்பட்டது.

**நாட்டுப்புறப் பாடலுக்கேற்ற சூழலை எழுதுக.**

| | |
|---|---|
| பாடல் | ஆத்துக்கு அந்தண்டையே அண்ணன் வச்ச தென்னம்புள்ளே!<br>அண்ணன் புள்ள வாடினாலும் யம்மாடி! யம்மாடி!<br>தென்னம்புள்ள வாடலாமோ? யம்மாடி! யம்மாடி!<br>வாய்க்காலுக்கு மேற்குப்புறம் வஞ்சி வெச்ச வாழைமரம்<br>வஞ்சி மனம் வாடினாலும் யம்மாடி<br>வாழைமரம் வாடலாமோ யம்மாடி! யம்மாடி! |
| பாடல் எழுந்த சூழல் | அண்ணன் நட்டு வைத்த தென்னம்பிள்ளைக்கு நீர் பாய்ச்ச, தோப்புக்கு வரும் பெண்ணொருத்தி குழந்தையை இடுப்பிலிருந்து இறக்கிவிடுகிறாள். தென்னம் பிள்ளைக்கு நீரூற்றுகிறாள்; குழந்தை அழுகிறது; பாடலைப் பாடியவாறே குழந்தையின் அழுகையை நிறுத்தி நிரூற்றுதலைத் தொடர்கிறாள். |

| பாடல் | பாடல் எழுந்த சூழல் |
|---|---|
| பாடறியேன் படிப்பறியேன் – நான்தான்<br>பள்ளிக்கூடம் தானறியேன்<br>ஏடறியேன் எழுத்தறியேன் – நான்தான்<br>எழுத்துவகை தானறியேன்<br>படிக்க நல்லா தெரிஞ்சிருந்தா – நான்தான்<br>பங்காளிய ஏன் தேடுறேன்<br>எழுத நல்லா தெரிஞ்சிருந்தா – நான்தான்<br>எதிராளிய ஏன் தேடுறேன்<br>நாலெழுத்துப் படிச்சிருந்தா – நான்தான்<br>நாலு தேசம் போய்வருவேன்<br>நாலு பக்கம் வரப்புக்குள்ளே – தெனமும்<br>நான் பாடுறேன் தெம்மாங்குதான். | படிப்பறிவற்ற ஒரு பாமரனின் ஏக்கத்தைச் சித்திரிக்கும் விதமாகப் பாடல் அமைந்துள்ளது. எழுதப் படிக்கத் தெரியாததால் ஒருவன் பிறரைச் சார்ந்தோ, எதிர்பார்த்தோ வாழும் சூழல் ஏற்படுகிறது. படிப்பறிவு இருந்திருந்தால், பிறநாடுகளுக்குச் சென்று வரலாம். படிப்பறிவு இல்லாமையால் வயலில் வேலை செய்ய வேண்டிய கட்டாயம். இந்தச் சூழலில் தனது நிலையை எண்ணி வருத்தப்பட்டு, ஒருவன் இவ்வாறு பாடுகிறான். |

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச்சொற்களாக மாற்றி எழுதுக.** (PTA - 6)

**புதிர் :** உங்களிடம் ஏழு கோல்டு பிஸ்கட் உள்ளது. அதில் ஒன்று மட்டும் எடை குறைவானது. உங்களிடம் உள்ள ஒரு தராசை இரு முறைகள் மட்டுமே யூஸ் பண்ணி, வெயிட் குறைந்த கோல்டு பிஸ்கட்டைக் கண்டுபிடிக்கவும்.

**விடை :** தராசின் இரண்டு தட்டுகளிலும் மூன்று மூன்று கோல்டு பிஸ்கட்டுகளை வையுங்கள். இரண்டு தட்டுகளும் ஈக்வலாக இருந்தால், கையில் மிச்சம் உள்ள பிஸ்கட்டே வெயிட் குறைவானது. பட், ஒரு பக்கத் தராசுத் தட்டு உயர்ந்தால், அதில் உள்ள மூன்று பிஸ்கட்டுகளில் ஒன்று வெயிட் குறைவானது. அந்த மூன்று பிஸ்கட்டுகளை மட்டும் எடுத்துவைத்துக் கொள்ளுங்கள். இரண்டு தட்டுகளிலும் ஒவ்வொரு பிஸ்கட்டைப் போட்டு, இதே எக்ஸ்பெரிமெண்ட்டை ரிப்பீட் செய்து, ஆன்சரைக் கண்டுபிடியுங்கள்! ஆல் தி பெஸ்ட்!

**விடை :**

| பிறமொழிச்சொல் | தமிழ்ச்சொல் |
|---|---|
| கோல்டு பிஸ்கட் | தங்கக் கட்டி |
| யூஸ் (பண்ணி) | பயன்படுத்தி |
| வெயிட் | எடை |
| ஈக்வல் | சமமாக |
| எக்ஸ்பெரிமெண்ட்டை ரிப்பீட் செய்து | சோதனையை மீண்டும் செய்து |
| ஆல் தி பெஸ்ட் | வாழ்த்துகள் / எல்லாம் நன்மைக்கே |
| ஈக்வலாக | சரிசமமாக |
| பட் | ஆனால் |
| ஆன்சரை | விடையை |

## கூடுதல் பலவுள் தெரிக

**பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைத் தேர்க.** (Sep.-20)

தராசின் இரண்டு தட்டுகளிலும் மூன்று மூன்று கோல்டு பிஸ்கட்டுகளை ஈக்வலாக வையுங்கள்.

அ) தங்க பிஸ்கட்டுகளைச் சரியாக ஆ) தங்கக் கட்டிகளை ஈக்வலாக

இ) தங்கக் கட்டிகளைச் சரிசமமாக ஈ) தங்கக் கட்டிகளை முறையாக

**விடை : இ) தங்கக் கட்டிகளைச் சரிசமமாக**

**பத்தியைப் படித்து வினாவிற்கு விடையளிக்க. (பத்தி காண்க – புத்தகம் பக்கம் எண் : 150)**

**வினாக்கள் :**

அ) **நிகழ்த்து கலைகள் எத்தகைய சிறப்புகளைக் கொண்டவை ?**

கண்ணுக்குக் காட்சியையும் சிந்தைக்குக் கருத்தினையும் கலைத்திறனோடு சிறப்புகளைத் தந்து இன்றளவும் தொடர்வன நிகழ்த்து கலைகள்.

ஆ) **மரபார்ந்த கலைவடிவங்கள் எவை ?**

தலையில் கரகம் என்னும் குடத்தை வைத்துக்கொண்டு ஆடும் கரகாட்டமும், தோளில் காவடியைச் சுமந்தவாறு ஒய்யாரமாக ஆடும் காவடியாட்டமும் மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைவடிவங்களாகும்.

இ) **நிகழ்த்து கலைகளில் முத்தமிழும் உள்ளடங்கி உள்ளன – கருத்தை விளக்குக.**

நிகழ்த்து கலைகளில் தெருக்கூத்து, தோற்பாவைக் கூத்து என்பன இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் உணர்த்தும் கலைகளை உள்ளடக்கியுள்ளது. இயல், வசனம், ஆடல், பாடல், மெய்ப்பாடு ஆகியவை இணைந்த வடிவமே தெருக்கூத்து. இதைப் போன்றே கதை பாடல், ஆடல்களுடன் தோலால் செய்த வெட்டு வரைபடங்களைத் திரைச்சீலையில் ஒளி ஊடுருவும் வகையில் பொருத்தி, நாடகம்போல் நிகழ்த்துவது தோற்பாவைக் கூத்து ஆகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**ஈ) பத்தியில் இருந்து இரண்டு வினாக்களை உருவாக்குக.**

1. குழந்தைகள்முதல் பெரியவர்கள்வரை அனைவரையும் கவரும் கலை எது?
2. கரகாட்டம், காவடியாட்டம் எப்படி நிகழ்த்தப் பெறும்?

**உ) நிகழ்த்து கலைகளைப் பாதுகாக்க நம்மால் செய்ய இயலும் எவையேனும் இரண்டு செயல்பாடுகளைக் குறிப்பிடுக.**

1. ஊர்த் திருவிழாக்கள், பொது விழாக்கள், அரசு விழாக்களிலும்கூட நிகழ்த்து கலைகளுக்கு வாய்ப்பளித்து ஊக்கப்படுத்தலாம். இதன்மூலம் இக்கலைகள் நலிவடையாமல் பாதுகாக்கலாம்.
2. நிகழ்த்து கலைஞர்களின் வாழ்வியலை மேம்படுத்த, அக்கலைகளுக்குத் தேவையான கருவிகளை வாங்க உதவி (மானியம்) வழங்கலாம். கலைஞர்களுக்குப் பரிசுகள் வழங்கி ஊக்கப்படுத்தலாம்.

**மனிதனுக்கும் மலருக்குமான மணம் வீசும் இந்த நயவுரையைத் தொடர்க.**

**வண்டுகளை ஈர்க்கும் வாசனையில்**
**பூக்களிடம் வசப்படுவது மனிதர்களே!**
**பூச்சியைக் கவரும் வண்ணங்களில்**
**பூக்களிடம் விழுவது மனிதர்களே!**
இயற்கையைத் தழுவிடும் மென்மையில்
பரவசப்பட்டவர் மனிதர்களே!
உலகை அழகாக்கும் முயற்சியில்
பிரமித்து நிற்பவர் மனிதர்களே!
தென்றலோடு மௌனமாய்ப் பேசிடும்போது
தம்மை மறந்தவர் மனிதர்களே!

**கட்டுரை எழுதுக : :உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்றுவந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.** **(PTA - 2,5)**

அரசுப் பொருட்காட்சி, போஸ் மைதானம், சேலம்.

நேற்று மாலை நானும் என் சகோதரரும் சேலம் போஸ் மைதானத்தில் நடைபெறும் அரசுப் பொருட்காட்சியைக் காண, நுழைவுச் சீட்டை வாங்கிக் கொண்டு உள்ளே சென்றோம். வண்ண விளக்குகளால் போஸ் மைதானம் ஒளிவீசியது. அரசின் பல்வேறு துறை சார்ந்த அரங்குகள், பொருட்காட்சியில் இடம்பெற்றிருந்தன.

குழந்தைகள் விளையாடி மகிழ, அரங்கத்தின் பல்வேறு பகுதிகளிலும் விளையாட்டுச் சாதனங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதில் விளையாடி மகிழ்வதற்காக நூற்றுக்கணக்கான குழந்தைகள், தங்கள் பெற்றோருடன் வந்திருந்தனர். பொருட்காட்சிக்கு வருவோர் உண்டு மகிழ, விதவிதமான தின்பண்டங்கள் விற்பனை செய்யும் கடைகள் ஆங்காங்கே செயல்பட்டன.

வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் விற்கப்பட்டன. ஒவ்வொரு துறையும் தம்தம் துறைசார்ந்த பொருட்களை விற்பனை செய்ய அரங்குகளை அமைத்திருந்தன. வேளாண்மைத் துறையின் சார்பாக அனைவருக்கும் இலவசமாக வேப்பமரக் கன்றுகளை வழங்கினர். உடல்நலம் பேணும் சிறுதானிய உணவு, அங்கு விற்பனை செய்யப்பட்டது.

சுகாதாரத்துறை சார்பில் அனைவருக்கும் இலவச முகக்கவசம் வழங்கப்பட்டது. கோவேக்சின், கோவிஷீல்டு போன்ற தடுப்பூசிகளைப் போட்டுக்கொள்வதால் என்ன பயன் என்பதை, ஓர் அரசு மருத்துவர் விளக்கினார். மாலைநேரத்தில் தெருக்கூத்து நிகழ்ச்சிகளான கரகாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம் ஆகிய நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

தமிழகத்தின் முன்னணிப் பேச்சாளர்களின் சிறப்புரைகள் நடத்தப்பட்டன. நாங்கள் சென்ற அன்று சுகி. சிவம் அவர்களின் சொற்பொழிவு நடைபெற்றுக் கொண்டிருந்தது. மாலை ஆறு மணிக்குச் சென்ற நாங்கள், பத்து மணிவரை உல்லாசமாகப் பொருட்காட்சியைக் கண்டுகளித்தோம். நேரம் போனதே தெரியவில்லை. மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினோம்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கூடுதல்

**உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரையாக்குக.** (PTA - 5)

**முன்னுரை – பொருட்காட்சி நடைபெறும் இடம் – பல்வேறு விளையாட்டு அமைப்புகள் – பலவிதமான வணிகம் – அரசின் நலத்திட்ட அரங்குகள் – மகிழ்வூட்டும் மக்கள் கூட்டம் – பாரம்பரிய நிகழ்கலைகள் – முடிவுரை.**

### முன்னுரை :

பொருள்களை மக்கள் பலரும் காணும் வகையில் காட்சிப்படுத்தி வைப்பதனைப் பொருட்காட்சி என்பர். அங்குப் பொருள்கள் மட்டும் காட்சிப்படுத்தப்படுவது இல்லை. அரசின் நலத்திட்டங்கள், சமூகத்திற்குப் பயன்படும் பல அரிய செயல்கள், விளையாட்டுகள், கலை நிகழ்ச்சிகள் எனப் பலவும் நடத்தப்படும் இடமாகப் பொருட்காட்சி அமைகிறது.

### பொருட்காட்சி நடைபெறும் இடம் :

தமிழகத்தின் தலைநகர் சென்னையில், தமிழ்நாடு அரசு சுற்றுலாத்துறை, வர்த்தகப் பொருட்காட்சியை, ஆண்டுதோறும் பொங்கல் திருநாளை ஒட்டி நடத்துகிறது. சென்னையின் மையப்பகுதியான தீவுத்திடலில் இக்கண்காட்சி நடத்தப்படுகிறது. சென்னைத் துறைமுகத்தின் அருகில், தலைமைச் செயலகம் அமைந்துள்ள கோட்டைப் பகுதிக்குப் பக்கத்தில் கூவம் நதிக்கரை கடலோடு கலக்கும் இடத்தில் அமைந்துள்ள தீவுபோன்ற பகுதியில் நடத்தப்படுகிறது. இங்குச் சாலை வழியாகவும், தொடர்வண்டிமூலமும் வந்துசெல்ல வாய்ப்பு இருப்பதால், மக்கள் பொருட்காட்சியைக் காண வந்துசெல்ல முடிகிறது. இப்பொருட்காட்சி, தொடர்ந்து அறுபது நாள்கள்வரைகூட நடைபெறுவது உண்டு.

### பல்வேறு விளையாட்டு அமைப்புகள் :

மக்கள் அன்றாட வாழ்வின் களைப்பைப் போக்க விளையாட்டு உதவுகிறது. கண்காட்சிகளில் அமைந்துள்ள விளையாட்டுகள் உடலுக்கும் உள்ளத்துக்கும் விருந்தாக அமைவதோடு சிந்தனைக்கும் செயல்படுத்துவதற்கும் துணையாகின்றன. அவற்றுடன் தமிழகத்தின் தொன்மையான விளையாட்டுகளான சிலம்பம், ஒயிலாட்டம், மயிலாட்டம் முதலியனவும் செயல்படுத்திக் காட்டப்பட்டன. பலூனை துப்பாக்கியால் சுடுதல், வளையங்களை வீசிப் பொருள்களைப் பெறுதல் முதலான விளையாட்டுகளும் விளையாட வாய்ப்பு இருந்தது.

### பலவிதமான வணிகம் :

இக்கண்காட்சியுள் பெரும்பகுதி வணிகப்பகுதியாக அமைக்கப்பட்டிருக்கிறது. சிறுவர்கள் விரும்பி உண்ணும் சோளப்பொறி, பனிக்கூழ்க் கடைகள் உள்ளன; சிற்றுண்டிக் கடைகளும் அமைக்கப்பட்டிருக்கும். வடநாட்டு உணவுவகைகள், வெளிநாட்டு உணவு வகைகள் விற்கப்படும் கடைகளும் உண்டு. துணிமணி என, மக்கள் தேவை உணர்ந்து பல பொருள்கள் விற்கும் அங்காடிகளும் உண்டு.

### அரசின் நலத்திட்ட அரங்குகள் :

காவல்துறை, சுற்றுலாத்துறை, வணிகத்துறை, மின்துறை, விவசாயத்துறை, தொழில்துறை, மீன்வளத்துறை எனப் பலதுறைசார்ந்த விளக்கங்களைத் தரும் அமைப்புகள் ஆங்காங்கே நிறுவப்பட்டு, பொதுமக்கள் அவை சார்ந்த தெளிவான செயல்பாடுகள் குறித்து அறிய உதவும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. அரசு, மக்களுக்கு வழங்கும் நலத்திட்டங்கள் குறித்த சுகாதாரத்துறை, சுற்றுச்சூழல்துறை எனப் பலதுறை சார்ந்த நடைமுறை விளக்கங்களைக் காட்சிப்படுத்தி வைத்திருப்பர். அதனால் அரசு எவ்வெவ் வகையான திட்டங்களை வகுத்து, மக்கள் நலத்திற்காகச் செயல்படுத்துகிறது என்பதை அறியமுடிகிறது.

### மகிழ்வூட்டும் மக்கள் கூட்டம் :

நாள்தோறும் உழைப்பிலும் களைப்பிலும் துன்புறும் மக்கள், தங்கள் நிலை மறந்து மகிழ்ச்சி அடைய, இத்தகைய பொருட்காட்சிகள் உதவுகின்றன. மக்கள் திரண்டு ஒருவரையொருவர் கண்டு, கலந்து உரையாடியும் உறவாடியும் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றனர். அரசின் நலத் திட்டங்கள் குறித்து அறிந்துகொள்கின்றனர். கலைநிகழ்ச்சிகளைக் கண்டு மகிழ்கின்றனர்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**பாரம்பரிய நிகழ்கலைகள் :**

திரைப்படம், சின்னத்திரை நாடகங்கள் என்பவற்றை மட்டுமே நாள்தோறும் கண்டு பொழுதுபோக்கிய மக்கள், இக்கண்காட்சியில் கரகாட்டம், ஒயிலாட்டம், பறைஆட்டம், பொய்க்கால்குதிரை எனப் பலவகை நிகழ்கலைகளைக் கண்டு மகிழ முடிகிறது. தமிழ்ப்பண்பாட்டுடன் கலந்த சிலம்பம், குத்துச்சண்டை, கோலாட்டம், கும்மி என்னும் பாரம்பரிய நிகழ்கலைகள், காண்பவரின் மனத்தை மகிழ்வடையச் செய்கின்றன.

**முடிவுரை :**

பொருட்காட்சிக்குச் சென்றால் மனமகிழ்ச்சிக்கான பல நிகழ்ச்சிகளைக் காணமுடிகிறது. பலவேறு அங்காடிகளையும், பலவேறு பண்பாட்டுக் கூறுகளையும், அரசின் செயல்முறைகளையும் தெளிவாக அறிந்து கொள்ளவும் முடிகிறது.

## மொழியோடு விளையாடு

**தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக.**

1. வானம் ______ தொடங்கியது; மழை வரும்போலிருக்கிறது. (PTA - 3)

   **விடை :** வானம் **கருக்கத்** தொடங்கியது; மழை வரும்போலிருக்கிறது.

2. அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் ______. (PTA - 3)

   **விடை :** அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் **சிவந்தது.**

3. ______ மனம் உள்ளவரை, அப்பாவி என்கிறோம்.

   **விடை :** **வெள்ளை** மனம் உள்ளவரை, அப்பாவி என்கிறோம்.

4. கண்ணுக்குக் குளுமையாக இருக்கும் ______ புல்வெளிகளில், கதிரவனின் ______ வெயில் பரவிக் கிடக்கிறது. (PTA - 3)

   **விடை :** கண்ணுக்குக் குளுமையாக இருக்கும் **பச்சைப்** புல்வெளிகளில், கதிரவனின் **மஞ்சள்** வெயில் பரவிக் கிடக்கிறது.

5. வெயிலில் அலையாதே; உடல் ______.

   **விடை :** வெயிலில் அலையாதே; உடல் **கறுத்துவிடும்.**

**பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.**

| |
|---|
| தங்கும், மரம் வீடு, அவிழும், தயங்கும், மரவீடு, தோற்பாவை, விருது, தோற்பவை, கவிழும், விருந்து. |

1. விரட்டாதீர்கள் – பறவைக்கு மரம் **வீடு.**
   வெட்டாதீர்கள் – மனிதருக்கு அவை தரும் **மரவீடு.**

2. காலை ஒளியினில் மலரிதழ் **அவிழும்.**
   சோலைப் பூவினில் வண்டினம் **கவிழும்.**

3. மலைமுகட்டில் மேகம் **தங்கும்;** அதைப்
   பார்க்கும் மனங்கள் செல்லத் **தயங்கும்.**

4. வாழ்க்கையில் ______ மீண்டும் வெல்வர் – இதைத்
   தத்துவமாய்ப் ______ முயற்சி மேற்கொள்வர்.

   **விடை :** தோற்பவர், பார்ப்பவர்

5. கைதட்டலே கவிஞர்க்கு ______ – அவையோரின்
   ஆர்வமே அவருக்கு ______.

   **விடை :** விருது, விருந்து

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**அகராதியில் காண்க.**

**தால்** – நாக்கு

**உழுவை** – புலி

**அகவுதல்** – அழைத்தல், ஒலித்தல், பாடுதல்.

**ஏந்தெழில்** – மிகுந்த அழகு

**அணிமை** – அண்மை, அருகு, பக்கம்.

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



ஓடியாடி ஆடும் கூத்து
ஒயிலாட்டம் எனும் ஆட்டம்
ஆடவர் ஆடும் ஆட்டம்
சேர்ந்தே இயங்கும் பாட்டு
பறைஒலி பேசும் பாட்டு
வண்ணம் மாறாத ஆடையில்
அரிதாரம் பூசிக் கொண்டு
கலந்து ஆடும் களிப்பாட்டம்!

## நிற்க அதற்குத் தக

தமிழ், தமிழர், தமிழ்நாடு என்று வாழ்ந்து மறைந்தவர் கலைஞர். அவர் எழுதியது தமிழின் சுவையை; அவர் எண்ணியது தமிழரின் உயர்வை; அவர் உயர்த்தியது தமிழ்நாட்டின் கலைகளை! நீங்கள் படித்து முடித்தப்பின் உங்கள் துறையின் அறிவைக்கொண்டு தமிழுக்குச் செய்யக்கூடிய தொண்டுகளை வரிசைப்படுத்துக.

1. என் துறையில் வல்லுநரானபின், அத்துறையினைப் பற்றிய நூல்களைத் தமிழாக்கம் செய்வேன்.
2. என் துறையில் இருக்கும் கலைச்சொற்களைத் தமிழில் மாற்றி மக்களின் பொதுப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவேன்.
3. என் துறையைத் தமிழ், தமிழர், தமிழ்நாடு சார்ந்ததாக மாற்றி அமைப்பேன்.
4. என் துறையின் அலுவலர்களிடையே தமிழில் கலந்துரையாடும் வழக்கத்தை நடைமுறைப் படுத்துவேன்.
5. என் துறையின் சுற்றறிக்கைகளைப் பெரும்பாலும் தமிழிலேயே அமையுமாறு நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவேன்.
6. ‘தமிழுக்குத் தொண்டு செய்வேன் துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்தே!’

## கலைச்சொல் அறிவோம்

**Aesthetics** – அழகியல், முருகியல் (PTA - 4)

**Terminology** – கலைச்சொல்.

**Artifacts** – கலைப் படைப்புகள்.

**Myth** – தொன்மம் (PTA - 4)

**விடைக்கேற்ற வினா அமைக்க.**

தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது புலி ஆட்டமாகும். (Mar.-23)

தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது எது?

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# காலாண்டுத்தேர்வு வினாத்தாள்

## மொழிப்பாடம் – பகுதி I – தமிழ்

கால அளவு : 3 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 100

### பகுதி – I

(மதிப்பெண்கள் : 15)

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 8 × 1 = 8

1. தென்மொழி, தமிழ்சிட்டு ஆகிய இதழ்களின் வாயிலாகத் தமிழுணர்வை ஊட்டியவர் யார்?
   அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆ) க. சச்சிதானந்தன்
   இ) பாரதியார் ஈ) நப்பூதனார்
2. வேர்க்கடலை, மிளகாய்விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை ______.
   அ) குலைவகை ஆ) மணிவகை இ) கொழுந்துவகை ஈ) இலைவகை
3. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' – இத்தொடர் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே ______.
   அ) பாடிய ; கேட்டவர் ஆ) பாடல் ; பாடிய இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்
4. 'விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தாள்' என்கிறது புறநானூறு இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை ______.
   அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து
   இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து
5. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
   அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா
6. மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும் என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி,
   அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
   ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
   இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
   ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
7. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ______ ஆவார்; இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ______ ஆவார்.
   அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன்
   இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்
8. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா?" என்று வழிப்போக்கர் கேட்பது ______ வினா.
   "அதோ அங்கே நிற்கும்" என்று மற்றொருவர் கூறுவது ______ வினா.
   அ) ஐயவினா, வினா எதிர்வினாதல் ஆ) அறிவினா, மறைவிடை
   இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை
9. மலர்கள் தரையில் நழுவும் எப்போது?
   அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்
   இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்
10. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
    அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
    இ) அரசன் கொடுங்கோல் ஆட்சிப் புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11. ‘பெரியமீசை’ சிரித்தார் – வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை ______.
அ) வேற்றுமைத்தொகை ஆ) அன்மொழித்தொகை
இ) உம்மைத்தொகை ஈ) பண்புத்தொகை

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி. (12, 13, 14, 15)**

“செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழுரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதப்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்
கட்டிய சூழியு மச்சியு முச்சிக் கதிர்முத் தொடுமாட
வம்பவ ளத்திரு மேனியுமாடிட ஆடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குக னாடுக செங்கீரை”

12. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?
அ) காசிக்காண்டம் ஆ) கொய்யாக்கனி
இ) சிலப்பதிகாரம் ஈ) முத்துக்குமாரசாமிப் பிள்ளைத்தமிழ்

13. குண்டலமும் குழைக்காதும் – இலக்கணக்குறிப்புத் தருக.
அ) எண்ணும்மை ஆ) உம்மைத்தொகை இ) முற்றும்மை ஈ) முற்றெச்சம்

14. செங்கீரை – பிரித்து எழுதுக.
அ) செங் + கீரை ஆ) செம் + கீரை இ) செம்மை + கீரை ஈ) செ + கீரை

15. பண்டி – பொருள் தருக.
அ) இடை ஆ) தலையுச்சிக் கொண்டை
இ) வயிறு ஈ) நெற்றி

## பகுதி – II

**(மதிப்பெண்கள் : 18)**

### பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண். 21க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** $4 \times 2 = 8$

16. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
17. விடைகளுக்கேற்ற வினா அமைக்க.
அ) பாரதியார் சிந்துக்குத் தந்தை எனப் போற்றப்படுகிறார்.
ஆ) மொழிபெயர்ப்பின் மூலம் இலக்கியத் திறனாய்வுக் கொள்கைகளைப் பெற்றிருக்கிறோம்.
18. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
19. நமக்கு உயிர் காற்று
காற்றுக்கு வரம் மரம்
மரங்களை வெட்டி எறியாமல்
நட்டு வளர்ப்போம் – இத்தொடர்களைப் போலவே உலக காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்கள் எழுதுக.
20. செயற்கை நுண்ணறிவு என்றால் என்ன?
21. ‘முயற்சி......’ எனத் தொடங்கும் திருக்குறளை பிழையின்றி எழுதுக.

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



### பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** $5 \times 2 = 10$

22. 'உடுப்பதூஉம் உண்பதூஉம்' – இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி அதன் இலக்கணம் தருக.

23. கீழ்க்காணும் சொற்களின் கூட்டப் பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.

அ) புல் ஆ) ஆடு

24. "கிளர்ந்த" பகுபத உறுப்பிலக்கணம் தருக.

25. பழமொழிகளை நிறைவு செய்க.

அ) உப்பிட்டவரை ______. ஆ) விருந்தும் மருந்தும் ______.

26. கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.

அ) கொடு – கோடு ஆ) விதி – வீதி

27. வல்லினம் ஒன்றை இட்டும் நீக்கியும் எழுதுக.

காகத்திற்கு காது உண்டா? அதற்கு காது கேட்குமா?

28. அகராதியைக் காண்க.

அ) மன்றல் ஆ) மருள்

## பகுதி – III

### (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** $2 \times 3 = 6$

29. பாவை குறித்த செய்திகள் சங்ககாலம் முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரையான தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. திருக்குறளில் மரப்பாவையைப் பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது. திருவாசகத்திலும் பட்டினத்தார் பாடலிலும் தோற்பாவைக் கூத்துப் பற்றி செய்திகளைக் காணமுடிகிறது. ஊர் ஊராகச் சென்று நிகழ்த்துகிற கூட்டுக் குடும்பக் கலையாகத் தோற்பாவைக் கூத்து விளங்குகிறது. தோற்பாவைக் கூத்து கையுறைப் பாவைக் கூத்து, பொம்மலாட்டம் என்பனவாகவும் மாற்றம் பெற்றுள்ளது.

அ) மரப்பாவையைப் பற்றி குறிப்பிடும் நூல் எது?

ஆ) பாவை குறித்த செய்திகள் அடங்கிய இலக்கிய காலம் எது?

இ) தோற்பாவைக் கூத்தின் மாற்று வடிவங்கள் எவை?

30. சோலை (பூங்கா) காற்றும் மின்விசிறி காற்றும் பேசுவதுபோல் ஒரு உரையாடல் அமைக்க.

31. புதிதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்க திண்டும் அமைத்தனர். திருவிழாக் காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காணமுடிகிறது. இப்படி காலமாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்து கருத்துகளை எழுதுக.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். (வினா எண் 34க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)** $2 \times 3 = 6$

32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

33. வள்ளுவம் சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதை குறள்வழி விளக்குக.

34. 'வாளால் அறுத்து' எனத் தொடங்கும் பெருமாள் திருமொழிப் பாடலை பிழையின்றி எழுதுக.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2 × 3 = 6**

35. மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலைமீது ஏறுவேன்; ஒரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன்; சுற்றும் முற்றும் பார்ப்பேன்; மனம் அமைதி எய்தும் – இத்தொடரில் உள்ள வினைமுற்றுகளைத் தனியே எடுத்தெழுதித் தொழிற்பெயர்களாக மாற்றுக.

36. "வேலொடு நின்றான் இடுவென்றது போலும்
கோலொடு நின்றான் இரவு" – இக்குறளில் வரும் அணியினைச் சுட்டி விளக்கம் தருக.

37. "முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்" – இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

## பகுதி – IV

## (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 5 × 5 =25**

38. அ) மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

(அல்லது)

ஆ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

39. அ) மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று, முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

(அல்லது)

ஆ) பள்ளி ஆண்டு விழா மலருக்காக நீவிர் நூலகத்தில் படித்த ஒரு கவிதை நூலுக்கு மதிப்புரை எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. நிறைமதி என்பவர் விழுப்புரம் மாவட்டம் மயிலம் ஊரில் உள்ள கிளை நூலகத்தில் உறுப்பினராகச் சேர்வதற்கு சென்றுள்ளார். தேர்வர் தன்னை நிறைமதியாகப் பாவித்து, கொடுக்கப்பட்டுள்ள நூலக உறுப்பினர் படிவத்தினை நிரப்புக.

42. அ) புயலின்போது செயல்படுத்த வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பலவற்றுள் ஐந்தினை எழுதுக.

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க.

Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி – V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 3 × 8 =24**

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரை குறிப்புகளை எழுதுக.

(அல்லது)

ஆ) போராட்டக் கலைஞர் – பேச்சுக் கலைஞர் – நாடகக் கலைஞர் – திரைக் கலைஞர் – இயற்றமிழ்க் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கவிதையின் வாயிலாக விளக்குக.

(அல்லது)

ஆ) 'உனக்குப் படிக்கத் தெரியாது' என்னும் தொடர் மேரிஜேன் வாழ்வில் ஏற்படுத்திய மாற்றத்தினைப் புதிய நம்பிக்கை என்னும் சிறுகதையின் வழிநின்று விளக்குக.

45. அ) குமரிக்கடல் முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ்த்தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்குப் பிள்ளைத்தமிழ் பேசி, சதகம், பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலா வந்து, அந்தாதி கூறி, கோவை அணிவித்து சிற்றிலக்கியங்களை எல்லாம் அணியாகப் பூட்டி, அழகு கூட்டி அகம்மிக மகிழ்ந்தனர். செந்நாப்புலவர்கள். இக்கருத்தைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

(அல்லது)

ஆ) குறிப்புகளைக் கொண்டு விண்வெளியும் கல்பனா சாவ்லாவும் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

(முன்னுரை – பிறப்பும் கல்வியும் – முதல் விண்வெளிப்பயணம் – கொலம்பியா விண்கல நிகழ்வு – முடிவுரை)

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# அரையாண்டுத்தேர்வு வினாத்தாள்

## மொழிப்பாடம் – பகுதி I – தமிழ்

கால அளவு : 3 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 100

### பகுதி – I

(மதிப்பெண்கள் : 15)

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 8 × 1 = 8

1. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே –

அ) பாடிய ; கேட்டவர் ஆ) பாடல் ; பாடிய இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்

2. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?

அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

3. மலர்கள் தரையில் நழுவும் எப்போது?

அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்

இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

4. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்

அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

5. "நாகப்பட்டினம்" என்ற ஊர்ப்பெயரின் மரூஉவைத் தேர்ந்தெடுக்க.

அ) நாகூர் ஆ) நாவலூர் இ) நாகை ஈ) நாகையூர்

6. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா?" என்று வழிப்போக்கர் கேட்டது ______ வினா.

அ) ஐயவினா, வினா எதிர் வினாதல் ஆ) அறிவினா, மறைவிடை

இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை

7. காசிக்காண்டம் என்பது ______

அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல் ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்

இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல் ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

8. புதிரை விடுவிப்பதற்கான சொல்லைத் தேர்க.

புதிர் : நாலெழுத்தில் கண்சிமிட்டும் – கடையிரண்டில் நீந்திச் செல்லும்.

அ) நறுமணம் ஆ) புதுமை இ) காற்று ஈ) விண்மீன்

9. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது ______.

அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல் ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்

இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

10. எதிர்மறையாக மாற்றுக.

எழுதாக் கவிதை ______.

அ) எழுதிய கவிதை ஆ) பாடிய கவிதை

இ) பேசிய கவிதை ஈ) கூறிய கவிதை

11. வேர்க்கடலை, மிளகாய்விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை ______.

அ) குலைவகை ஆ) மணிவகை

இ) கொழுந்துவகை ஈ) இலைவகை



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி. (12, 13, 14, 15)

“நும்இல் போல நில்லாது புக்கு,
கிழவிர் போலக் கேளாது கெழீஇ
சேட் புலம்பு அகல இனிய கூறி
பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேலையொடு
குரூஉக்கன் இறடிப் பொம்மல் பெறுகுவிர்”

12. பாடல் இடம்பெற்ற நூலைத் தேர்க.

அ) இரட்டுற மொழிதல் ஆ) முல்லைப்பாட்டு
இ) மலைபடுகடாம் ஈ) நீதிவெண்பா

13. பாடலில் இடம்பெற்றுள்ள “இறடிப் பொம்மல்” என்பதன் பொருளைத் தேர்ந்தெடுக்க.

அ) தினைச்சோறு ஆ) மாமிசப் பொரியல்
இ) நெய்ச்சோறு ஈ) கம்மங்கூழ்

14. செய்யுள் அடிகளில் இடம்பெற்றுள்ள அளபெடைச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.

அ) கேளாது ஆ) பெறுகுவீர் இ) நில்லாது ஈ) கெழீஇ

15. பாடலிலிருந்த அடிமோனைச் சொற்களைத் தேர்க.

அ) நும்இல் – நில்லாது ஆ) பொழிந்த – பொம்மல்
இ) இறடி – பெறுகுவிர் ஈ) புலம்பு – அகல

## பகுதி – II

## (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு – 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண். 21க்கு கட்டாயமாக விடையளிக்கவும். $4 \times 2 = 8$

16. காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?

17. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

18. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ) நூலானது அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு பயனுக்காக இருத்தல் வேண்டும்.
ஆ) தமிழ், இந்திய இலக்கியங்களை மட்டுமன்றி, சோவியத், பிரெஞ்சு இலக்கியங்களையும் தானே படித்து உணர்ந்தவர் ஜெயகாந்தன்.

19. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?

20. ‘நமக்கு உயிர் காற்று
காற்றுக்கு வரம் மரம் – மரங்களை
வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்’ – இது போன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.

21. ‘செயல்’ என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு – 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். $5 \times 2 = 10$

22. சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்திச் சரியாக எழுதுக.

‘தேனிலே ஊறிய செந்தமிழின் – சுவை
தேரும் சிலப்பதி காரமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் – நிதம்
ஓதி யுனர்ந்தின் புருவோமே”

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



23. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும் – இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையை எழுதுக.

24. வல்லின ஒற்றை இட்டும் நீக்கியும் எழுதுக.
எல்லா பறவைகளுக்கும் காது உண்டு. செவி துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்றப்படி பாலூட்டிகளில் உள்ளது போல் புறசெவிமடல் இருக்காது. காகத்திற்கு காது உண்டு. காது கேட்கும்.

25. மலைந்து – பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.

26. பொருத்தமான நிறுத்தற் குறியிடுக.
சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும்பெயர் சூட்டிக் கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

27. கலைச்சொல் தருக.
அ) Discussion ஆ) Document

28. ‘வேங்கை’ என்பதைத் தொடர் மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

## பகுதி – III

### (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** $2 \times 3 = 6$

29. மொழிபெயர்ப்பின் பயன்கள் மூன்றை எழுதுக.

30. ‘புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது’ இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.
‘சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாகவும் நான் இலக்கிய அறிவு பெற்றேன். அப்போது அவர்கள் வெளியிடும் சிறந்த கருத்துகளை ஏடுகளில் குறித்து வைத்துக் கொள்வேன்’ என்றார் ம. பொ. சி. ஒருவன் அறிவு விளக்கம் பெறுவதற்கு இரண்டு வழிகள் உள்ளன என்றும், அவை ஒன்று கல்வி; மற்றொன்று கேள்வி என்றும் எடுத்துக் கூறுகிறார். தான் முறையாக ஏட்டுக் கல்வி பெற இயலாமல் போனதால் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்யக் கேள்வி ஞானத்தைப் பெறுவதிலே மிகுந்த ஆர்வத்தைக் காட்டியதாகவும் ம. பொ. சி. குறிப்பிடுகிறார். ம. பொ. சி.யின் அன்னையார் இளமையில் அவருக்குப் பயிற்றுவித்த பாக்கள் அவரது இலக்கியப் பயிற்சிக்கான தொடக்கப் பாடங்களாக அமைந்ததாகவும் ம. பொ. சி. கூறுகிறார்.

**வினாக்கள் :**

1. சொற்பொழிவுகளைக் கேட்டதனால் ம. பொ. சி. பெற்ற பயன்களை எழுதுக.
2. ம. பொ. சி. யின் தொடக்கப் பாடங்களாக அமைந்தது எது?
3. ஒருவன் அறிவு விளக்கம் பெறுவதற்கான இரண்டு வழிகள் என்று ம. பொ. சி. குறிப்பிடுவன எவை?

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். (வினா எண் 34க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)** $2 \times 3 = 6$

32. மன்னன் இடைக்காடனார் என்ற புலவருக்குச் சிறப்பு செய்தது ஏன்? விளக்கம் தருக.

33. கூத்தனை கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

34. அடிபிறழாமல் எழுதுக.
அ) ‘வாளால் அறுத்துச்’ எனத் தொடங்கும் பெருமாள் திருமொழிப் பாடல் (அல்லது)
ஆ) நவமணி வடக்கயில்போல்’ எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடல்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** $2 \times 3 = 6$

35. சுட்டுவிடை, மறைவிடை, நேர்விடை இவை எவ்வகை விடைகள் என்பதைக் குறிப்பிட்டு, எடுத்துக்காட்டுகள் தருக.

36. நாள்தோறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும் – இக்குறட்பாவை அலகிட்டு வாய்பாடு தருக.

37. தீவக அணியை விளக்கி அதன் வகைகளை எழுதுக.

## பகுதி – IV

## (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** $5 \times 5 = 25$

38. அ) மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

(அல்லது)

ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

39. அ) வெள்ளத்தில் சிக்கிய குழந்தையைக் காப்பாற்றியதற்கு மாவட்ட ஆட்சியரிடம் பாராட்டு பெற்ற நண்பனை வாழ்த்தியும் பாராட்டியும் கடிதம் ஒன்று எழுதுக.

(அல்லது)

ஆ) பல்பொருள் அங்காடி ஒன்றில் வாங்கிய உணவுப்பொருள் குறிப்பிட்ட நாள் முடிவுபெற்றதாக இருந்தமைக்கு அந்த அங்காடி மீது நடவடிக்கை எடுக்குமாறு உணவுப்பொருள் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. தமிழ்வேந்தன் என்வரின் மகள் வான்மலர் அரசு உயர்நிலைப்பள்ளி, விருத்தாசலம், கடலூர் மாவட்டத்தில் 10ஆம் வகுப்பு முடித்திருக்கிறார். அதே ஊரில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பு சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை வான்மலராகக் கருதி, கொடுக்கப்பட்ட மேல்நிலை சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினை நிரப்புக.

42. அ) அருகிவரும் நிகழ்கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் மென்மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்ய விரும்பும் செயல்கள் ஐந்தைப் பட்டியலிடுக.

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க.

1. If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart - Nelson Mandela.
2. Education is what remains after one has forgotten what one has learned in School. – Albert Einstein.
3. Tomorrow is often the busiest day of the week. – Spanish Proverb.
4. It is during our darkest moments that we must focus to see the light. – Aristotle.
5. Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts. – Winston Churchill.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்றுவினா.

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

ஒரு மொழி பொதுமக்களாலும் அதன் இலக்கியம், புல மக்களாலும் அமையப்பெறும். தமிழ்ப் பொதுமக்கள் உயர்ந்த பகுத்தறிவுடையவர். எத்தனையோ ஆராய்ச்சி நடந்துவரும் இக்காலத்தில் எத்தனையோ மொழிகளின்று கடன் கொண்ட ஆங்கில மொழியிலும் நூலிலும் இலையைக் குறிக்க Leaf (லீஃப்) என்னும் ஒரே சொல் உள்ளது. ஆங்கில நூல்களிலும் வேறு பல வகைகளில் இலைகளைப் பாகுபாடு செய்தனரேயன்றி, தமிழ்ப் பொதுமக்களைப் போல வன்மை மென்மை பற்றித் தாள், இலை, தோகை, ஓலை எனப் பாகுபாடு செய்தாரில்லை. இத்தகைய பாகுபாடு ஏனைய உறுப்புகளுக்குள்ளும் செய்யப்பட்டது. தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடையதென்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும்.

வினாக்கள் :

i. தமிழ் மக்கள் இலைகளை எவ்வாறு பாகுபாடு செய்தனர்?

ii. மொழி ஆய்விற்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.

iii. ஒரு மொழியும், அதன் இலக்கியமும் எவ்வாறு அமையும்?

iv. தமிழ்நாட்டின் பொருள் வளத்தினை எவ்விதம் விளங்கிக் கொள்ளலாம்?

v. இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

## பகுதி – V

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 3 × 8 =24

43. அ) வீட்டில் திண்ணை அமைத்த காரணம், விருந்தினர் பேணுதல், தமிழர் பண்பாட்டில் ஈகை, பசித்தவருக்கு உணவிடல் – இவை போன்ற செயல்கள் பண்டைய தமிழர் வாழ்வியல் நெறியாக இருந்தன என்பதையும், அவை இன்றும் தொடர்கிறதா? என்பதையும் குறித்து விரிவாக எழுதுக.

(அல்லது)

ஆ) சங்க இலக்கியங்களில் காணப்படும் நான்கு அறக்கருத்துகளைக் குறிப்பிட்டு, அவை இன்றும் தேவை என்பதை நிறுவுக.

44. அ) ‘கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே’ என்கிறது வெற்றி வேற்கை, மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்கள் கருத்துகளை விவரித்து எழுதுக.

(அல்லது)

ஆ) அழகிரிசாமியின் ‘ஒருவன் இருக்கிறான்’ சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

45. அ) குறிப்புகளைக் கொண்டு அரசுப் பொருட்காட்சி குறித்து கட்டுரை எழுதுக.
குறிப்புகள் : முன்னுரை – அரசுப் பொருள்காட்சி அமைவிடம் – அரசின் பல்துறை அரங்குகள் – பல்பொருள் விற்பனை அங்காடிகள் – விளையாட்டுத் திடல் – உணவு விற்பனையகம் – முடிவுரை.

(அல்லது)

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பிடுக.
முன்னுரை – மழைவெள்ளம் – இயற்கை மாற்றம் – மழைநீர் சேகரிப்பு – மழைநீர் வடிகால் அமைப்பு – நமது கடமை – முடிவுரை.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# பொதுத்தேர்வு வினாத்தாள்

## மொழிப்பாடம் – பகுதி I – தமிழ்

## மார்ச் – 2024

கால அளவு : 3 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளனவா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கறுப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன் படுத்த வேண்டும்.

**குறிப்பு :** i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.

ii) விடைகள் தெளிவாகவும். குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி – I

### (மதிப்பெண்கள் : 15)

**குறிப்பு** : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். $15 \times 1 = 15$

1. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' – இத்தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே :

அ) பாடிய ; கேட்டவர் ஆ) பாடல் ; பாடிய இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்

**விடை : ஈ) பாடல்; கேட்டவர்**

2. 'மலர்க்கை' – தொகையின் வகையைத் தேர்க.

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) அன்மொழித் தொகை ஈ) உம்மைத்தொகை

**விடை : ஆ) உவமைத்தொகை**

3. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது ?

அ) வானத்தையும், பாட்டையும் ஆ) வானத்தையும், புகழையும்

இ) வானத்தையும், பூமியையும் ஈ) வானத்தையும், பேரொலியையும்

**விடை : ஈ) வானத்தையும் பேரொலியையும்**

4. தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு. – இக்குறட்பாவில் இடம்பெறும் அடி எதுகைச் சொற்களைத் தேர்க.

அ) தாளாண்மை – தகைமைக்கண் ஆ) தாளாண்மை – வேளாண்மை

இ) தகைமைக்கண் – தங்கிற்றே ஈ) வேளாண்மை – செருக்கு

**விடை : ஆ) தாளாண்மை – வேளாண்மை**

5. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா?" என்று வழிப்போக்கர் கேட்டது ______ வினா.
"அதோ, அங்கே நிற்கும்" என்று மற்றொருவர் கூறியது ______ விடை.

அ) ஐயவினா, வினா எதிர்வினாதல் ஆ) அறிவினா, மறைவிடை

இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை

**விடை : இ) அறியாவினா, சுட்டுவிடை**

6. 'குழந்தை வந்தது' என்ற எழுவாய்த் தொடரின் விளித் தொடரைத் தேர்க.

அ) குழந்தையுடன் வா ஆ) வந்த குழந்தை இ) குழந்தையே வா ! ஈ) குழந்தை வந்தது

**விடை : இ) குழந்தையே வா !**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

7. குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்களைத் தேர்க.

அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

**விடை : இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்**

8. மேன்மை தரும் அறம் என்பது :

அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது

ஆ) மறுபிறப்பில் பயன்பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

இ) புகழ்கருதி அறம் செய்வது ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

**விடை : அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது.**

9. காசிக் காண்டம் என்பது :

அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல் ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்

இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல் ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

**விடை : இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்**

10. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி

அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

**விடை : அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.**

11. உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு :

அ) சிங்கப்பூர் ஆ) மலேசியா இ) இந்தியா ஈ) இலங்கை

**விடை : ஆ) மலேசியா**

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல, நிமிர்ந்த மாஅல் போல,
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு
கோடு கொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி"

12. பாடல் இடம்பெற்ற நூலைத் தேர்க.

அ) சிலப்பதிகாரம் ஆ) காசிக்காண்டம் இ) நற்றிணை ஈ) முல்லைப்பாட்டு

**விடை : இ) முல்லைப்பாட்டு**

13. 'நனந்தலை உலகம்' என்பதன் சரியான பொருளைத் தேர்க.

அ) சிறிய உலகம் ஆ) குளிர்ந்த உலகம்

இ) அகன்ற உலகம் ஈ) வெப்பமான உலகம்

**விடை : ஈ) அகன்ற உலகம்**

14. 'தடக்கை' – இச்சொல்லின் இலக்கணக் குறிப்பைத் தேர்க.

அ) உரிச்சொல் தொடர் ஆ) பண்புத்தொகை

இ) வினைத்தொகை ஈ) வேற்றுமைத்தொடர்

**விடை : அ) உரிச்சொல் தொடர்**

15. பாடலின் ஆசிரியரைத் தேர்க :

அ) தமிழழகனார் ஆ) நப்பூதனார் இ) கீரந்தையார் ஈ) இளங்கோவடிகள்

**விடை : ஆ) நப்பூதனார்**

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி – II

(மதிப்பெண்கள் : 18)

### பிரிவு – 1

குறிப்பு : எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 21–வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும். $4 \times 2 = 8$

16. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

★ "ஐயா பகலுணவும் இரவுணவும் எவ்வாறு இருந்தன?" என்று, பாவாணரிடம் ஒருவர் கேட்டார். "பகலுணவு, பல் உணவாகவும் இரவுணவு இரா உணவாகவும் இருந்தன" என்று, கூறினார்.

★ பகலில் கிடைத்த சிறிதளவு உணவையே அனைவரும் பகுத்துண்ண நேர்ந்ததெனவும், அனைவரும் உணவின்றி இரவைக் கழிக்க வேண்டியிருந்ததால், இரா உணவு என்பதும் பொருள்.

17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்கவும்.

அ) அறிவியலின் வளர்ச்சி மனிதனின் அறிவை விரிவாக்குகிறது.

மனிதனின் அறிவை விரிவாக்குவது எது ?

ஆ) பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலர்வது குறிஞ்சி.

குறிஞ்சிப் பூ எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் ?

18. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம. பொ. சி. என்பதற்குச் சான்று தருக.

★ வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்ட ம. பொ. சி., உணவுக்காக வைத்திருக்கும் பணத்தில் பழைய புத்தகங்களை வாங்கிவிட்டுப் பல வேளைகளில் பட்டினி கிடந்திருக்கிறார்.

★ சிறந்த கருத்துகளை ஏடுகளில் குறித்து வைத்துக் கொள்வார். சொற்பொழிவுகளைக் கேட்பதன்மூலம் இலக்கிய அறிவைப் பெற்றார்.

19. பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார் ? ஏன் என்பதை எழுதுக.

பெரிய கத்தி, இரும்பு ஈட்டி, உழைத்ததால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்

★ உழைத்ததால் கிடைத்த ஊதியத்தைக் கூரான ஆயுதம் என்று, செந்நாப்போதார் கூறுகிறார்.

★ ஏனென்றால், அதுவே பகைவரின் ஆணவத்தை அறுத்து அழிக்கும் கருவியாகும்.

20. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக எழுதுக.

- அருளைப் பெருக்குவோம்!
- அறிவைச் சீராக்குவோம்!
- மயக்கம் அகற்றுவோம்!
- அறிவைத் தெளிவாக்குவோம்!
- கல்வியைப் போற்றுவோம்!
- அறியாமை அகற்றுவோம்!

21. 'முயற்சி' – எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

### பிரிவு – 2

குறிப்பு : எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். $5 \times 2 = 10$

22. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.

ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.

ஒரு சீப்பில் பல வழைப்பழங்கள் உள்ளன.

மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.

★ ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.

★ ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.

★ பிழைக்கான காரணம் : சீப்பு என்பது வாழைத்தாற்றின் பகுதி

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



23. இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்கவும்.

அ) கொடு – கோடு

**கோடு** வரைந்த இடத்திற்கு அப்பால் சென்று, அவர்களுக்கு உணவைக் **கொடு.**

ஆ) இயற்கை – செயற்கை

பாதை தெரியாத **இயற்கை**க் காடுகளில் பயணிக்கச் **செயற்கை**க் கருவிகள் பயன்படுகின்றன.

24. பகுபத உறுப்பிலக்கணம் தருக.

மயங்கிய

**மயங்கிய – மயங்கு + இ (ன்) + ய் + அ**

**மயங்கு** – பகுதி

**இன்** – இறந்தகால இடைநிலை, 'னகரம்' புணர்ந்து கெட்டது

**ய்** – உடம்படுமெய் சந்தி

**அ** – பெயரெச்ச விகுதி.

25. கலைச்சொற்கள் தருக.

அ) Biotechnology ஆ) Myth

Biotechnology – உயிரித் தொழில்நுட்பம்

Myth – தொன்மம்

குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.

குறிப்பைப் பயன்படுத்தி விடை தருக.

குறிப்பு : எதிர்மறையாக மாற்றுக.

அ) பார்த்த படம் – பார்க்காத படம்

ஆ) எழுதாக்கவிதை – எழுதிய கவிதை

26. குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பதைப் போன்று வினாத் தொடர்கள் அமைக்கவும்.

குறிப்புகள் : (1) சுவைக்காத இளநீர் (2) விடுமுறை நாள்

(1) சுவைக்காத இளநீர் – சுவைக்காத இளநீர் உண்டோ ?

(2) விடுமுறை நாள் – விடுமுறை நாள் கண்டு மகிழாத மாணவர் உண்டோ ?

27. "சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்க மாட்டான்" என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார். – இதில் உள்ள வழுவமைதிகளைத் திருத்தி எழுதுக.

- "சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் **கேட்கும்.**
- புதியவர்களைப் பார்த்துக் குரைக்குமே தவிரக் கடிக்காது.".
- **விளக்கம்** : 'கேட்பான்', 'கத்துவான்', 'கடிக்க மாட்டான்' என்பன, உயர்திணைக்கு உரிய வினைச் சொற்கள். இங்கு உவகை கருதி, அஃறிணை உயர்திணையாகக் கூறப்பட்டுள்ளது.

28. 'வேங்கை' என்பதைத் தொடர் மொழியாகவும், பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

**தனிமொழி** : வேங்கை – ஒருவகை மரம்.

**தொடர்மொழி** : வேம்+கை – 'வேகும் கை'.

**பொதுமொழி** : வேங்கை என்னும் தனிமொழி, 'வேம் + கை' எனப் பிரிந்து நின்று 'வேகும் + கை' என்றானது. ஒரு சொல் தனிமொழியாகவும் தொடர் மொழியாகவும் அமைவது, பொதுமொழியாகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி – III

### (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு – 1

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** $2 \times 3 = 6$

**29. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.**

- இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள், மனிதனை மேம்படுத்துகின்றன. அதாவது,
- வங்கிகளில் வாடிக்கையாளர்களுடன் உரையாடுவது.
- வாடிக்கையாளருக்கான சேவைகளை இணையம்மூலம் அளிப்பது.
- உரிமையாளரின் முகத்தைக் கண்டு, திறன்பேசியைத் திறப்பது.
- நோயாளிகளையும், முதியவர்களையும் கவனித்துக்கொள்வது.
- கொடிய நோய்களைத் தொடக்க நிலையிலேயே கண்டறிவது.

**30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக் காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி, வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

**அ) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது ?**

தொடர்ந்து பெய்த மழையால்.

**ஆ) பத்தியில் உள்ள அடுக்குத் தொடர்களை எடுத்து எழுதுக.**

மீண்டும் மீண்டும்

**இ) பெய்த மழை – வினைத்தொகையாக மாற்றுக.**

பெய்மழை

**31. நீங்கள் அறிந்த நிகழ்கலைக் கலைஞர் ஒருவரைப் பற்றியும் அவரது கலைத்திறன் பற்றியும் எழுதுக.**

(நீக்கப்பட்ட பாடம்.)

### பிரிவு – 2

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 34–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** $2 \times 3 = 6$

**32. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார் ?**

- நான் உயிர் பிழைக்கும் வழி அறியேன்.
- நினைவிற்கேற்றவாறு உறுப்புகள் இயங்குதல் இல்லாத உடலின் தன்மையை அறியேன்.
- உடலுக்கு வேண்டிய உணவுகளைத் தேடும் வழிவகைகளை அறியேன்.
- காட்டில் செல்வதற்கான வழிகளையும் அறியேன் எனக் கருணையன் கூறுகிறார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**33. நெடுநாளாகப் பார்க்க எண்ணியிருந்த உறவினர் ஒருவர் எதிர்பாராத வகையில் உங்கள் வீட்டிற்கு வந்தால் அவரை விருந்தோம்பல் செய்வதைக் குறித்து எழுதுக.**

'விருந்து' என்று கூறிய அளவில் குடும்ப விழாக்களிலோ, சமூக விழாக்களிலோ அளிக்கப்படும் பலவகை சுவையான உணவே நினைவிற்கு வரும். 'விருந்தோம்பல்' என்பது தமிழர் பண்பு எனக் கூறுவர். இங்கு 'விருந்தினர்' என்பது புதிதாக வந்தவர்களை உபசரிப்பதைக் குறிக்கும்.

தாம் படிப்பதற்கும் வாழ்வில் முன்னேறியதற்கும் துணை நின்ற உறவினர் ஒருவரைப் பற்றி என் தந்தை அடிக்கடி குறிப்பிடுவார். அத்துடன், "அவர் என்றேனும் ஒருநாள் நம் வீட்டிற்கு வருவார். பார்த்து மகிழலாம்" என்பார். அவரைக் காணவேண்டும், விருந்து உபசரிக்க வேண்டும். விருந்தளித்துப் போற்றலாம் என்ற எண்ணமும் உறுதிபெற்றது.

அந்த நாளும் வந்தது. ஒருநாள், நான் எதிர்பார்த்த விருந்தினர் வர இருப்பதை என் தந்தை அறிவித்தார். ஒருநாள் திடீரென்று அவர் என் வீட்டுக் கூடத்தில் அமர்ந்திருந்தார். மிகமிக எளிமையாக உடை உடுத்தி "இவரா அவர்?" எனத் திகைப்பை ஏற்படுத்தினார். என் மனத்தை மிகவும் கவர்ந்தார். அம்மாவும் அப்பாவும் அவரை உபசரிக்க உரிய பணிகளை மேற்கொண்டிருந்தார்கள். அவர் எங்கள் குடும்பத்து அங்கத்தினருள் ஒருவர்போலப் பேசிப் பழகினார். எங்கள் வாழ்க்கைமுறை, அப்பா செய்யும் தொழில், என் படிப்பு குறித்து எல்லாம் விசாரித்தார். வீட்டில் செய்திருந்த இட்டலி சாம்பாரைச் சாப்பிட்டு, காப்பியைக் குடித்துத் திருப்தி அடைந்தார். மிகவும் சுவையாக இருப்பதாகக் கூறினார்.

புறப்படும்போது என்னை அருகில் அழைத்தார். "தம்பீ! அம்மா கொடுத்த சிற்றுண்டி அமுதம்போல் இனித்தது. உன் தந்தை, நான் என்றோ செய்த சிறு உதவியைப் பெரிதாகப் பாராட்டிக்கொண்டு இருக்கிறார். அதுபோல் உன்னைப் பிற்காலத்தில் பலர் போற்றும் வகையில், பிறருக்குப் பயன்பட வாழப் பழகிக்கொள். அதுதான் நீ எனக்குப் படைக்கக் கூடிய விருந்து" என்று சொன்னார். அவர் அன்று கூறிய அறிவுரை என் மனக்கண்ணைத் திறந்தது. 'பிறருக்கு இயன்றவரை பயன்பட வாழ வேண்டும்' என்று முடிவு செய்து கொண்டேன்.

**34. அடிபிறழாமல் எழுதுக.**

**"தென்னன் மகளே" – எனத் தொடங்கி "முடிதாழ வாழ்த்துவமே" – என முடியும் அன்னை மொழியே பாடல்.**

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

**(அல்லது)**

**"வாளால் அறுத்துச் சுடினும்" – எனத் தொடங்கும் பெருமாள் திருமொழிப் பாடல்.**

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.

## பிரிவு – 3

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். $2 \times 3 = 6$**

**35. 'அறிந்தது, அறியாதது, புரிந்தது புரியாதது, தெரிந்தது தெரியாதது, பிறந்தது, பிறவாதது இவை அனைத்தையும் யாம் அறிவோம். அதுபற்றி உமது அறிவுரை எமக்கும் தேவையில்லை. எல்லாம் எமக்குத் தெரியும்'. – இக்கூற்றில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.**

| வினைமுற்று | தொழிற்பெயர் | வினைமுற்று | தொழிற்பெயர் |
|---|---|---|---|
| அறிந்தது | அறிதல் | அறியாதது | அறியாமை |
| புரிந்தது | புரிதல் | புரியாதது | புரியாமை |
| தெரிந்தது | தெரிதல் | தெரியாதது | தெரியாமை |
| பிறந்தது | பிறத்தல் | பிறவாதது | பிறவாமை |

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**36. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்**

**பொருளல்ல தில்லை பொருள். – இத்திருக்குறளில் பயின்றுவரும் அணியைக் குறிப்பிட்டு விளக்குக.**

**அணிசுட்டல்** : சொல்பின்வரு நிலையணி.

**அணிவிளக்கம்** : ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல் மீண்டும் மீண்டும் வந்து, வெவ்வேறு பொருளைத் தருவது சொல்பின்வரு நிலையணி ஆகும்.

**அணிப்பொருத்தம்** : இக்குறட்பாவில் 'பொருள்' என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து, 'பொருட்டு', 'செல்வம்' ஆகிய வெவ்வேறு பொருள்களைத் தருகிறது. எனவே இக்குறட்பா, சொல் பின்வரு நிலையணிக்குச் சான்றாகிறது.

**37. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்**

**கல்லார் அறிவிலா தார். – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.**

| | | |
|---|---|---|
| உல / கத் / தோ | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| டொட் / ட | நேர் நேர் | தேமா |
| வொழு / கல் | நிரை நேர் | புளிமா |
| பல /கற் / றும் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| கல் / லார் | நேர் நேர் | தேமா |
| அறி / விலா | நிரை நிரை | கருவிளம் |
| தார். | நேர் | நாள். |

## பகுதி – IV

**(மதிப்பெண்கள் : 25)**

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடை யளிக்கவும்.** 5 × 5 = 25

**38. அ) தமிழர் மருத்துவ முறைக்கும், நவீன மருத்துவ முறைக்கும் உள்ள தொடர்பு குறித்து விவரித்து எழுதுக.**

**அறுவை மருத்துவ முறை :**

பண்டைத் தமிழர் அறுவை மருத்துவத்தில் சிறந்து விளங்கினர். மணிமேகலையில் சுதமதியின் தந்தையின் சரிந்த குடலைப் புத்தத் துறவியர் ஒருவர் சரி செய்தமை குறித்துக் கூறப்பட்டுள்ளது.

"உடம்பிடை தோன்றிற் றொன்றை அறுத்ததன் உதிரம் ஊற்றி
அடலுறச் சுட்டு வேறோர் மருந்தினால் துயரம்தீர்வர்"

என்ற கம்பர் வாக்கும், அறுவை மருத்துவம், தமிழரிடையே இருந்ததை மெய்ப்பிக்கிறது.

**தமிழரின் மருத்துவ அறிவு :**

'மருந்து' என்ற ஓர் அதிகாரத்தையே திருவள்ளுவர் தம் நூலில் படைத்துள்ளார்.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்பது நினைவில் நிற்கும் குறள்.

**பொருள் :**

குணம், குறிகளால் நோய் இன்னதென்று அறிந்து, அதன் முதன்மைக் காரணத்தையும் தெளிந்து, அதைத் தீர்க்கும் வழியையும் அறிந்து, பிழையில்லாமல் மருத்துவம் செய்ய வேண்டும்.

"உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்"

என்பது மருத்துவம் செய்யும் முறையை விளக்கும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**பொருள் :**

மருத்துவத்தைக் கற்றறிந்தவன் நோயுற்றவனுடைய வயதையும், நோயின் தன்மையையும், காலத்தின் இயல்பையும் நன்கு அறிந்த பின்னரே, மருத்துவம் செய்ய வேண்டும். இவை அனைத்துமே நவீன மருத்துவ முறைக்குச் சற்றும் குறைந்த செயல்கள் இல்லை என்பதை நாம் தெளியலாம்.

## சித்த மருத்துவம்

பதினெண் சித்தர்கள் கண்டறிந்த மருத்துவம் சித்த மருத்துவமாகும். உலகில் பின்விளைவுகளற்ற ஒரே மருத்துவம், சித்த மருத்துவம் ஆகும்.

தமிழரின் உணவே, மருந்தாகும் தன்மையுடையதாகும். அதனால் நோய் வருவதற்கே வாய்ப்பு இல்லை எனவும், நோய் எதிர்ப்புச் சக்தி இயல்பாகவே உண்ணும் உணவில் உருவாகிவிடும் எனவும் அறியலாம்.

| | | |
|---|---|---|
| i | மஞ்சள் | சளியை நீக்கும் |
| ii | கொத்துமல்லி, இஞ்சி | பித்தத்தை நீக்கும் |
| iii | சீரகம் | உடல் சூட்டைத் தணிக்கும் |
| iv | பூண்டு, பெருங்காயம் | வயிற்றுப் பொருமலை நீக்கும் |
| v | வெங்காயம் | குளிர்ச்சியைத் தரும். |
| vi | கீரைகள் | உடலுக்கு வலுவூட்டும். |
| vii | கீழாநெல்லி | மஞ்சள் காமாலையைப் போக்கும். |

## நவீன மருத்துவம்

இது உடலில் ஏற்படும் நோய்களையும், உடலின் உள்ளுறுப்புகளில் ஏற்படும் பிரச்சினைகளையும் அறிவியல் தொழில்நுட்பம் மூலம் உடனுக்குடன் கண்டறிந்து, மருத்துவம் செய்யும் முறையாகும்.

இம்முறையில் ஒவ்வொரு நாளும் புதிய புதிய கண்டுபிடிப்புகள் பெருகிக்கொண்டே உள்ளன. நவீன மருத்துவம் என்பது, சோதனைமூலம் கிடைத்த முடிவுகளை அடிப்படையாகக் கொண்டது. பிளேக் நோய், பெரியம்மை, போலியோ, வெறிநாய்க்கடி, ரணஜன்னி போன்றவற்றிற்குத் தீர்வு கண்டது நவீன மருத்துவம்.

நவீன மருத்துவம் கண்டறிந்த தடுப்பூசிகளினால், குழந்தைகள் இறப்பு பெருமளவு குறைந்துள்ளது.

நவீன மருத்துவத்தின்மூலம் உடல் உறுப்புகளை இழந்தவர்களுக்குச் செயற்கை உறுப்புகள் பொருத்தப் படுகின்றன. மாற்று இதய அறுவை சிகிக்சை மூலம் இதய நோயாளி குணமடைகிறார். மாற்றுச் சிறுநீரக அறுவை சிகிச்சைமூலம் சிறுநீரகம் பாதிப்படைந்தவர் குணமடைகிறார். கண் மாற்று அறுவை சிகிச்சைமூலம் பார்வையை இழந்தவர், பார்வையைப் பெறுகிறார். இவ்வாறு ஏராளமானவற்றைக் கூறிக்கொண்டே செல்லலாம்.

**முடிவுரை :**

தமிழர் மருத்துவ முறை, நவீன மருத்துவ முறை இரண்டுமே சிறந்தன. எனினும், நவீன மருத்துவமுறையில் சில சமயங்களில் பக்க விளைவுகள் ஏற்படுகின்றன. தமிழர் மருத்துவ முறையில் பக்க விளைவுகள் இல்லை. அவசரச் சிகிச்சை எனும்போது நவீன மருத்துவ முறையையே நாடுகிறார்கள்.

(அல்லது)

**ஆ) 'பெரியாரைத் துணைக்கோடல்' என்ற வள்ளுவரின் கூற்றினை விளக்கி, உங்கள் கருத்தை எழுதுக.**

- பெரியோரைப் போற்றித் துணையாக்கிக் கொள்ளுதல் கிடைப்பதற்கு அரிய பேறுகளுள் எல்லாம், பெரும்பேறாகும்.
- குற்றம் கண்டபோது இடித்துக் கூறித் திருத்தக்கூடிய பெரியவரைத் துணையாகக் கொள்ளாத மன்னனை 'ஏமரா மன்னன்' என வள்ளுவர் குறிப்பிடுகிறார். அவனைக் கெடுப்பதற்குப் பகைவர் இல்லாமல் தானே கெடுவான் என்பதனால்.
- நற்பண்புடைய பெரியோரின் நட்பைக் கைவிடுவதானது, பகைவர் பலரைத் தனியொருவனாக நின்று பகைத்துக் கொள்வதைக் காட்டிலும், பல மடங்குத் தீமைகளைத் தரும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**39. அ) புதிதாகத் திறன்பேசி வாங்கியிருக்கும் உங்கள் தம்பிக்கு, அதனை முறையாகப் பயன்படுத்தும் வழிமுறைகளை விளக்கி, அறிவுரைகள் கூறிக் கடிதம் ஒன்று எழுதுக.**

மதுரை.
04.04.2023

என் அன்புக்குரிய தம்பிக்கு,

அண்ணன் முருகன் எழுதும் கடிதம். இங்கு நான் நலம். அங்கு அம்மா, அப்பா அனைவரும் நலமெனக் கருதுகிறேன். மற்றவர்களைக் கொண்டு உனக்கு அறிவுரைகளை கூறுவதைவிட, நானே உனக்கு நல்ல அறிவுரையைக் கூறுவது நலம் எனக் கருதியே இந்தக் கடிதத்தை உனக்கு எழுதுகிறேன்.

நீ உன் தேவைக்காகத் 'திறன்பேசி' வாங்கி இருப்பதாக அறிந்தேன். அது குறித்து, அதனைப் பயன்படுத்த வேண்டிய முறைகள் குறித்துச் சில அறிவுரைகளை உனக்குக் கூற விரும்புகிறேன். 'இளங்கன்று பயம் அறியாது' என்று சொல்வார்கள். உன் கையிலுள்ள திறன்பேசி இன்றைய அறிவியல் வளர்ச்சியின் உன்னதமான படைப்பு. தொலைபேசி, தொலைக்காட்சி, காலம் காட்டி, நாள்காட்டி எனப் பலவற்றை இது பயனிழக்கச் செய்துவிட்டது. இத்திறன்பேசி உலகையே சிறியதொரு கிராமமாக மாற்றியுள்ளது எனலாம். அதுமட்டுமா? இதனைச் சரியான வகையில் பயன்படுத்தவில்லை என்றால், பல தீய விளைவுகளை ஏற்படுத்தவும் வாய்ப்பு உண்டு. வாழ்வில் நாம் உயர நல்ல அடிப்படைத் திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். நல்லொழுக்கமும் நற்பண்புகளுமே ஒருவனுக்குச் சமுதாயத்தில் பெருமை தேடித் தரும். ஒவ்வொருவரும் சுதந்திரமாகச் சிந்திக்கவும், சமுதாயப் பொறுப்புணர்ந்து செயல்படும் தகுதியை உருவாக்கிக் கொள்ளவும் வேண்டும். கற்கும் பாடப்பொருள் தொடர்பான செய்திகளைச் சேகரிக்க மட்டும் திறன்பேசியைப் பயன்படுத்தினால் நற்பயன் ஏற்படும். நீ கற்கும் கல்வி வளம் பெறும். தவறி அதிலுள்ள தீய பக்கத்தில் உன் சிந்தையைச் சிதறவிட்டால், கல்வியும் கெடும், உன் வாழ்வின் முன்னேற்றத்திற்குத் தடையும் ஏற்படும்; சமுதாயத்தில் உன் நற்பெயரும் கெட வாய்ப்பு உண்டு. எனவே, வாழ்விற்குப் பயன்தரக்கூடிய, உன் கல்விக்குத் துணைபுரிய மட்டுமே உதவும் கருவியாத் திறன்பேசியைப் பயன்படுத்து. மாணவப் பருவம் என்பது கிடைத்தற்கு அரிய பருவம். இப்பருவத்தில் தவறிழைத்து விட்டால் வாழ்வே கெட்டுவிடும். இதற்குமேல் உனக்குப் புரியும் எனக் கருதுகிறேன். உன் முன்னேற்றத்தில் பெரிதும் எதிர்ப்பார்ப்புடைய

உன் அண்ணன்,
மா. முருகன்

உறைமேல் முகவரி
செல்வன் முத்து குமாரசாமி,
8, காந்தி தெரு,
கலைஞர் கருணாநிதி நகர்.
சென்னை – 600 078.

(அல்லது)

**ஆ)நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

னுப்புநர் :
க. அன்புவிழி,
15/3, தெற்குச் சித்திரை வீதி,
திருவரங்கம்,
திருச்சி – 621 001.

பெறுநர்
ஆசிரியர்
'தினமணி',
29, 2ஆவது பிரதான சாலை,
அம்பத்தூர் தொழிற்பேட்டை,
சென்னை – 600 058.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : தினமணி நாளிதழ் – பொங்கல் மலர் – கட்டுரை – வெளியிட வேண்டுதல்.

வணக்கம். தமிழக அரசியல் சூழல், வணிகம், நாட்டு நடப்பு, திரைப்படம், உலகச் செய்திகள், தன்னம்பிக்கைக் கட்டுரைகள் எனப் பல நல்ல செய்திகளை நேர்மையோடும் துணிவோடும் தருகிறது உங்களின் 'தினமணி' நாளிதழ். பெரும்பாலான மக்களால் விரும்பி வாசிக்கப்படும் தரமான நாளிதழ் தினமணி!

அந்நாளிதழ் 'பொங்கல் மலர்' வெளியிடுவதாக அறிந்தேன். அம்மலருக்காக 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதி அனுப்பியுள்ளேன். பொங்கல்மலரில் வெளியிடும் தகுதி எனது கட்டுரைக்கு இருக்குமானால், வெளியிட வேண்டுகிறேன். நன்றி.

இங்ஙனம்,
உங்கள் உண்மையுள்ள,
க. அன்புவிழி.

இடம் : திருவரங்கம்,
நாள் : 10.04.2022.
உறைமேல் முகவரி :
'தினமணி',
29, 2ஆவது பிரதான சாலை,
அம்பத்தூர் தொழிற்பேட்டை,
சென்னை – 600 058.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



கனியைக் கொடுப்பது மரம்!
நிழலைக் கொடுப்பது மரம்!
மழையை வருவிப்பது மரம்!
பிராணனைத் தருவது மரம்!
மண்ணரிப்பைத் தடுப்பது மரம்!
குளிர்ச்சியைத் தருவது மரம்!
இத்தனையையும் தரும் மரத்தை
பேணி வளர்ப்பது அறம்!

**41. தமிழ்வேந்தன் என்பவரின் மகள் வான்மலர் அரசு உயர்நிலைப் பள்ளி, விருத்தாசலம், கடலூர் மாவட்டத்தில் 10-ஆம் வகுப்பு முடித்திருக்கிறார். அதே ஊரில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் 11-ஆம் வகுப்பு சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை வான்மலராகக் கருதி, கொடுக்கப்பட்ட மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினை நிரப்புக.**

**மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பப் படிவம்**

சேர்க்கை எண் : தேதி : வகுப்பும் பிரிவும் :
1596 28.05.2024 மேனிலை முதலாமாண்டு, 'அ' பிரிவு

1. மாணவ / மாணவியின் பெயர் : வான்மலர்
2. பிறந்த தேதி : 25.04.2008
3. தேசிய இனம் : இந்தியன்
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் : தமிழ்வேந்தன் / கமலா
5. வீட்டு முகவரி : 1, தேசிகர் தெரு, சென்னை.
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு : பத்தாம் வகுப்பு
7. பயின்ற மொழி : தமிழ் / ஆங்கிலம்
8. பெற்ற மதிப்பெண்கள் : 494/500
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி : அரசு மேல்நிலைப் பள்ளி, சென்னை.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



| தேர்வின் பெயர் | பதிவு எண் – ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு | 148521 / 2019 | தமிழ் | 95 |
| | | ஆங்கிலம் | 99 |
| | | கணிதம் | 99 |
| | | அறிவியல் | 95 |
| | | சமூக அறிவியல் | 100 |
| | | மொத்தம் | 488 |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம்.
11. தாய்மொழி : தமிழ்.
12. சேர விரும்பும் பாடப் பிரிவும், பயிற்று மொழியும்: அறிவியல் / தமிழ்.

மாணவ / மாணவியின் கையொப்பம்

பெற்றோர் கையொப்பம்.

42. அ) மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் அட்டவணைப்படுத்துக.

| நாம் பின்பற்ற வேண்டுவன (அறங்கள்) : | அறங்கள்தரும் நன்மைகள் : |
|---|---|
| நல்ல சொற்களையே தேர்ந்தெடுத்துப் பேசுதல். | நல்ல நண்பர்களைப் பெறலாம்; எதிரிகளையும் நண்பராக்கலாம். |
| ஒருவரைப் பற்றி இன்னொருவரிடம் மாற்றிப் பேசாதிருத்தல். | நட்பு தொடரும். |
| பழிவாங்கும் எண்ணத்தைக் கைவிடல். | மன அமைதி கிடைக்கும். |
| கோபத்தைக் கைவிடல் | ஒற்றுமை பெருகும். |

(அல்லது)

ஆ) மொழி பெயர்க்கவும்.

Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas. (நீக்கப்பட்ட பாடத்தில் உள்ள பகுதி)

குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு. தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது. நம் மக்களை வாழை இலையின் மருத்துவப் பயன்களை அன்றே அறிந்திருந்தனர். உண்பவரின் மனமறிந்து உணவு வகைகளைப் பரிமாறுவர்.

i) தமிழர் பண்பாட்டில் எதற்கு தனித்த இடமுண்டு ?
வாழை இலைக்கு

ii) யாருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது ?
விருந்தினருக்கு உணவளிப்பது

iii) நம் மக்கள் வாழை இலையின் எந்தப் பயன்களை அறிந்திருந்தனர் ?
மருத்துவப் பயன்களை

iv) உண்பவரின் எந்த நிலையை அறிந்து உணவு பரிமாறுவர் ?
மனமறிந்து

v) இப்பத்திக்கு ஏற்ற தலைப்பினை தருக.
தமிழர் விருந்தோம்பல்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி – V

## (மதிப்பெண்கள் : 24)

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். $3 \times 8 = 24$

43. அ) ஒரு குழந்தையைத் தூக்கவும், கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா ? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா ? இக்கருத்துகளை ஒட்டிச் 'செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்' என்ற தலைப்பில் விவரித்து எழுதுக.

**முன்னுரை :**

எந்தவொரு புதிய தொழில்நுட்பமும் ஒரே நாளில் உருவாகி விடுவதில்லை. 1980களில் ஒவ்வொருவருக்குமான தனிநபர் கணினிகளின் வளர்ச்சியும், இணையப் பயன்பாட்டின் பிறப்பும் இன்றைய மின்னணுப் புரட்சிக்கு வித்திட்ட காரணங்களாக உள்ளன. அவற்றுள் இவ்வுலகை மிகுதியாக ஆளக்கூடிய ஒரு தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு ஆகும்.

**செயற்கை நுண்ணறிவின் எதிர்காலம் :**

செயற்கை நுண்ணறிவு என்பது, ஒரு மென்பொருள் அல்லது கணினிச் செயல்திட்ட வரைவு ஆகும். அது தானாகக் கற்றுக்கொள்ளக் கூடியது. இந்த அறிவைக்கொண்டு தனக்கு வரும் புதிய புதிய சூழ்நிலைகளில் மனிதரைப்போல, தானே முடிவெடுக்கும் திறனுடையது. எனவே, ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேநீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளும்.

செயற்கை நுண்ணறிவு பொதிந்த இயந்திரங்களுக்கு ஓய்வு தேவையில்லை. செயற்கை நுண்ணறிவால் பார்க்கவும் கேட்கவும் புரிந்துகொள்ளவும் முடியும். மனிதனால் முடியும் செயல்களையும் கடினம் என்று கருதும் செயல்களையும் செய்ய முடியும். எனவே, வெறும் வணிகத்துடன் அது நின்றுவிடாது. எதிர்காலத்தில் நாம் கட்டளையிடுகிற செயல்களைச் செயல்பட வைக்கும். நாம் கேட்பதை உலாவியில் தேடும். நாம் விரும்பும் கவிதையை இணையத்தில் தேடித் தரும். படிப்பதற்கு உரிய நூல்களைப் பட்டியலிடும்.

**மருத்துவத் துறையில் ரோபோக்கள் :**

மருத்துவரிடம் ஒரு நோயாளியின் நிலையைச் சொல்லி, குறிப்பிட்ட மருந்தைக் கொடுக்கலாமா எனக் கேட்கும். 2016இல் ஐ. பி. எம். நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவுக் கருவியான வாட்சன், சில நிமிடங்களில் கோடிக்கணக்கான தரவுகளை அலசி, நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது. எதிர்காலத்தில் மிகக் கடினமான அறுவை சிகிச்சைகளை ரோபோக்களே மேற்கொள்ளும்.

**சீனாவில் இயந்திர மனிதர்கள் :**

சீனாவில் ஐம்பதுக்கும் மேற்பட்ட மருத்துவ மனைகள், இயந்திர மனிதர்களைப் பணியில் அமர்த்தியுள்ளன. அங்கு வரும் நோயாளியின் குரலையும் முகத்தையும் அடையாளம் கண்டு, அவர்களின் கேள்விகள் அனைத்திற்கும் அவை பதில் சொல்கின்றன. சீன மொழியின் வெவ்வேறு வட்டார வழக்குகளையும் கூட அவை புரிந்துகொண்டு பதில் அளிக்கின்றன. எனவே, புதிய சூழ்நிலைக்கு ஏற்றவாறு செயற்கை நுண்ணறிவின் செயல்பாடுகள் அமைந்திருக்கும் என்பதை உறுதியாகக் கூறலாம்.

**முடிவுரை :**

இதுநாள்வரை இவ்வுலகை மென்பொருள் ஆண்டு கொண்டிருந்தன. இனி எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவுதான் இந்த உலகத்தை ஆளப்போகிறது.

(அல்லது)

ஆ) எவரேனும் ஓர் அறிஞர் / சான்றோர் / புகழ்பெற்ற சாதனையாளர் வாழ்வில் நடந்த நிகழ்வுகளில் ஒன்றை அவரே சொல்வதைப் போன்று தன்வரலாறாக மாற்றி எழுதுக.

**புகழ்பெற்ற சாதனையாளர் (ஐடா ஸ்கட்டர்)**

**முன்னுரை :**

பரிணாம வளர்ச்சியில் மனிதப் பிறவி என்பது உன்னதமானது. உலகம் உயிர்ப்புடன் இயங்க யார் காரணம்? நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை அல்லவா? நல்லோர் சிலர் வாழ்வதால்தான் உலகில் உயிர் இயக்கம் நடைபெறுகிறது. இவ்வகையில் உயிர் இயக்கத்திற்கு உதவிய எனக்குப் பிடித்த புகழ் வாய்ந்த சாதனையாளர் ஒருவரை நான் சந்தித்தேன். அவர் என்னோடு உரையாடினார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**நான்தான் ஐடா ஸ்கட்டர் :**

தம்பீ! நான்தான் மருத்துவர், ஐடா ஸ்கட்டர். என் தந்தை மருத்துவர் ஜான் ஸ்கட்டரும் என் தாயார் சோபியா ஸ்கட்டரும் தமிழகத்தில் மருத்துவப் பணியும் சமயப் பணியும் ஆற்றுவதற்காக அமெரிக்காவிலிருந்து இந்தியா வந்தனர். நான் 1870ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒன்பதாம் நாளில் ஐந்தாவது மகளாகப் பிறந்தேன். சற்று வளர்ந்ததும் அமெரிக்காவுக்குக் கல்வி கற்கச் சென்றேன். அமெரிக்காவில் தங்கி வாழவே விரும்பினேன். எனினும் இறைவனின் எண்ணம் வேறாக இருந்துள்ளது.

**சந்தித்த அரிய சோதனை :**

என் தாய் திடீரென நோயுற்றதால் அவருக்குத் துணையாக இருப்பதற்காக, நான் உடனே புறப்பட்டுத் தமிழ் நாட்டுக்கு வந்தேன். என் தந்தை திண்டிவனம் பகுதியில் மருத்துவப் பணியும், மிஷினரிப் பணியும் புரிந்து கொண்டிருந்தார். ஒருநாள் இரவு பிராமணர் ஒருவர் எங்கள் வீட்டுத் கதவைத் தட்டி, என்னை மருத்துவராக நினைத்து, தம் மனைவிக்குப் பிள்ளைப்பேறு பார்க்க அழைத்தார். என் தந்தைதான் மருத்துவர் என்றதும் "ஆண்கள் எங்கள் வீட்டுப் பெண்ணுக்கு மருத்துவம் பார்க்க முடியாது" என்று கூறிச் சென்றார். அன்றே, விடியலில் இஸ்லாமியர் ஒருவர் வந்து அழைத்தார். அவரும் அந்த பிராமணரைப் போலவே "தேவை இல்லை. முடியாது" என்று கூறிவிட்டுச் சென்றார். அடுத்து விடியலில், இன்னொருவர் மகப்பேறுக்கு உதவி வேண்டி வந்து சென்றார். இரவு முழுவதும் எனக்குத் தூக்கமில்லை. இந்த மக்களிடம் ஏன் இந்த அறியாமை! இத்தகைய அறியாமையிலிருந்து இவர்களை விடுவிக்க என்ன வழி என மனம் வருந்தினேன். "இந்த நாட்டில் பிரசவம் பார்க்கப் பெண் மருத்துவர்களே இல்லையா? இது ஈடுசெய்ய முடியாத இழப்பை ஏற்படுத்துமே! இத்தகைய குறையைப் போக்க என்ன செய்யலாம்? நான் என்ன செய்யமுடியும்?" என எண்ணினேன்.

**நினைவும் நிகழ்வும் :**

அமெரிக்கா சென்று மருத்துவர் ஆவதற்கான கல்வி பயின்றேன். என் வாழ்நாளை தமிழ்நாட்டுப் பெண்களின் நல்வாழ்வுக்காக அர்ப்பணிக்க முடிவு செய்தேன். 1900 ஜனவரி முதல் தேதி வேலூருக்கு பெண் மருத்துவராகத் திரும்பி வந்தேன். 1901ஆம் ஆண்டு ஒரு சிறு மருத்துவமனையைத் தொடங்கி, சுற்றிலும் இருந்த சிற்றூர்களுக்கு நடந்துசென்றும், மாட்டுவண்டியில் பயணம் செய்தும் மக்கட்பேறு மருத்துவம் பார்த்தேன். நான் மேற்கொண்ட பணியை இறைபணியோடு இணைத்துச் செய்து வந்தேன். 1902ஆம் ஆண்டில்மட்டும் சுமாராக 21 பெரிய அறுவை சிகிச்சைகளும் 428 சிறு அறுவை சிகிச்சைகளும் ஆக மொத்தமாக 12,359 நோயாளிகளுக்கு மருத்துவம் செய்து திருப்தி அடைந்தேன். மருத்துவப் பணியில் பிற உதவி செய்ய சில மகளிர் தேவை என உணர்ந்து, மருத்துவச் செவிலியர்களை உருவாக்க ஒரு மருத்துவப் பள்ளியை 1920இல் நிறுவினேன். மருத்துவக் கல்வியோடு வேதாகமக் கல்வியும் கற்றிருந்ததால், 1921இல் வேதாகமக் கல்லூரி ஒன்றையும் நிறுவினேன். 1922இல் அனாதைப் பிள்ளைகள் தங்கிக் கல்வி கற்க ஒரு விடுதியையும் பள்ளியையும் நிறுவி எல்லாரும் எல்லாக் கல்வியும் கற்க உதவி செய்தேன்.

**எடுத்ததை முடிப்பேன் :**

வேலூரில் 1923இல் கிறிஸ்டியன் மருத்துவக் கல்லூரியை உருவாக்கி எல்லாரும் மருத்துவம் கற்கவும், மருத்துவர்களை உருவாக்கவும் வழிவகுத்தேன்.1928இல் வேலூருக்கு வந்த மகாத்மா காந்தி, நான் உருவாக்கி நடத்தி வந்த மருத்துவக் கல்லூரியையும் என் மருத்துவப் பணியையும் பாராட்டினார். முடிந்தவரை நல்ல தரமான மருத்துவ உதவி மக்களுக்குக் கிடைப்பதற்கு என்னாலான செயல்களைச் செய்ததில் நான் திருப்தி அடைந்தேன். இறைவன் எனக்கு அதற்குரிய மனவலிமையைக் கொடுத்ததை எண்ணி நன்றி செலுத்தி வாழ்ந்தேன். எனக்குப் பலவகையிலும் துணை நின்ற, இறைவன் அழைப்பை ஏற்று என் 89ஆம் வயதில் 1960இல் அவருக்குப் பணி செய்யச் சென்றேன்.

**முடிவுரை :**

தமிழ்நாட்டின் வேலூர் பகுதியில் தம் மருத்துவப் பணியைத் தொடங்கி மருத்துவச் செவிலியர் பள்ளியையும் மருத்துவக் கல்லூரியையும் தொடங்கி, இன்றளவும் உலகப் புகழ் வாய்ந்த மருத்துவமனையாகத் திகழும் ஒரு நிறுவனத்தை உருவாக்கிய மருத்துவர் ஐடா ஸ்கட்டரை நான் எண்ணி வியக்கிறேன். "கருணை இருந்தால் வள்ளல் ஆகலாம்! கடமை இருந்தால், வீரனாகலாம்! பொறுமை இருந்தால், மனிதனாகலாம்! இவை மூன்றும் இருந்தால் தலைவனாகலாம்!" என்னும் பாடல் அடிகளை மனத்துள் பதித்து வாழ முயல்வோமாக.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**44. அ) அழகிரி சாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.**

'ஒருவன் இருக்கிறான்' என்ற சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் இருவர். ஒருவர் வீரப்பன், மற்றொருவர் ஆறுமுகம்.

**வீரப்பன் :**

குப்புசாமியின் உயிர் நண்பன் வீரப்பன். வீரப்பன், கட்டட மேஸ்திரியாகக் கூலி வேலை செய்யும் ஏழைத் தொழிலாளி. குப்புசாமி, தாய்மாமன் வீட்டில் தங்கியிருந்தபோது நோய் காரணமாக வேலையை இழந்துவிட்டான். தாய்மாமன் வீட்டில் அவனைச் சரியாகக் கவனிக்கவில்லை. அதனால் துன்பப்பட்ட குப்புசாமியை அழைத்து வந்து, வீரப்பன் சாப்பாடு போடுவான்.

குப்புசாமி, காஞ்சிபுரத்திலிருந்து சென்னைக்குத் தன் சித்தி வீட்டிற்கு வந்த பின்பும் வீரப்பன் அவனை மறக்கவில்லை. சென்னைக்கு ஒரு வேலையாக வந்த ஆறுமுகத்திடம் ஒரு கடிதத்தையும் மூன்று ரூபாயையும் குப்புசாமிக்காகக் கொடுத்தனுப்புகிறான். அந்தக் கடிதத்தில் அவன் எழுதியிருந்த செய்திகள் வீரப்பனின் மனிதத்தை வெளிப்படுத்துவதாக இருந்தது.

அக்கடிதத்தில், குப்புசாமி ஊரைவிட்டுப் போனது தன் உயிரே போய்விட்டதுபோல் இருந்தது என்று வீரப்பன் குறிப்பிடுகிறான். மேலும், குப்புசாமிக்காகத் தினமும் கோவிலுக்குச் சென்று, சாமி கும்பிடுவதாகவும் எழுதியிருந்தான். கடன் வாங்கி மூன்று ரூபாய் கொடுத்தனுப்பியுள்ளதாகவும், நேரில் வருவதைவிட, பஸ்ஸுக்கு ஆகும் செலவுத்தொகை குப்புசாமிக்கு உதவியாக இருக்கும் என்பதால், அந்தப் பணத்தைக் கொடுத்துவிட்டதாகவும் எழுதியுள்ளான். வேறு இடத்தில் கேட்டிருக்கும் கடன்தொகை கிடைத்தால், நேரில் பார்க்க வருவதாகவும் எழுதியிருந்தான்.

இக்கடிதம், வீரப்பனின் மனிதநேயத்தை மட்டும் வெளிப்படுத்தவில்லை. மனிதநேயம் இல்லாமல் இருந்த, தங்கவேலுவின் பக்கத்து வீட்டு நபரையும் மனம் மாறச் செய்தது.

**ஆறுமுகம் :**

குப்புசாமி வேலை செய்த சைக்கிள் கடைக்கு எதிரேயிருந்த விறகுக்கடை ஒன்றில் கூலி வேலை செய்யும் ஏழைத் தொழிலாளிதான் ஆறுமுகம்.

வீரப்பன் அளவிற்குக் குப்புசாமியிடம் நட்பு இல்லை என்றாலும், ஓரளவு அறிமுகம் ஆனவன். குப்புசாமியை மருத்துவமனையில் சேர்த்த செய்தியை அறிந்தவுடன், தன் பிள்ளைகளுக்காக வாங்கியிருந்த நான்கு சாத்துக்குடிப் பழங்களில் இரண்டையும், ஒரு ரூபாயையும் கொடுத்துக் குப்புசாமியிடம் சேர்த்துவிடச் சொன்னான். வீரப்பன் கொடுத்தவற்றைமட்டும் கொடுத்துவிட்டுப் போயிருக்கலாம். ஆனால், அவ்வாறு செய்வதற்கு ஆறுமுகத்தினுள் இருந்த மனிதநேயம் இடம் கொடுக்கவில்லை.

**(அல்லது)**

**ஆ) இராமானுசர் நாடகம் வெளிப்படுத்தும் மனிதநேயத்தைச் சுவைபட விளக்கி எழுதுக.**

**முன்னுரை :**

சிறுகதையானாலும் புதினமானாலும் நாடகமானாலும் படித்த பிறகு, படித்ததிலிருந்து, வாழ்க்கைக்கு உதவக்கூடிய பயனுள்ள செய்தி ஒன்று கிடைக்கும். அது நன்னெறியை உணர்த்தி வாழ்வைச் செம்மைப் படுத்துவதாக அமையும். இங்கு 'இராமானுசர்' நாடகத்தின் வாயிலாக வெளிப்படும் மனிதநேயம் குறித்துக் காண்போம்.

**இராமானுசர் :**

இறைவன் திருமாலின் பெருமைகளையும் வழிபட வேண்டிய முறைகளையும் வழிபடுவோர் பெறும் சிறப்புகளையும் குறித்து மக்களிடையே கூறி நன்னெறிப்படுத்திய ஆன்றோர்களுள் இராமானுசர் முதன்மையானவர். இவ்வகை ஞானியருள், உலகிலுள்ள பாமரரும் இறையருள் பெற்று நற்கதி அடைய வேண்டும் என விரும்பி, அதற்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்துச் செயலாற்றியவர் இராமானுசர். பெரும்பாலும் இறைவழிபாட்டாளர்கள், தங்கள் துயர் போக்கிக் கொள்வதில் மட்டுமே பெரும் குறியாக இருப்பார்கள். ஆனால், இறைவழிபாட்டில் எல்லாரையும், ஏன் – தம் குருவையும் (ஆசாரியரையும்) மிஞ்சி உலகில் வாழ்ந்த மக்கள் அனைவரின் நற்கதி பேற்றை விரும்பிச் செயல்பட்டவர் இராமானுசர் எனக் குறிப்பிடுவது மிகையன்று!

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**இராமானுசர் மனஉறுதி :**

இராமானுசர் தமது ஆசாரியரிடத்தில் (குருவினிடத்தில்) இருந்து இறையருள் பெறுவதற்கான புனிதத் திருமந்திரத்தைப் பெற விரும்பினார். அதற்காக, ஆசாரியர் 'பூரணர்' என்பாரின் உறைவிடம் நோக்கி, விடாது தொடர்ந்து பலமுறை சென்றார். இதனைப் "பெரிய நம்பிகள் கூறினாரென்று பதினெட்டு முறை வந்துள்ளோம்" எபீ முதலியாண்டான் கூறியதனால் அறியமுடிகிறது. இவ்வாறு பதினெட்டாவது முறை இராமானுசர் சென்று, பூரணர் வீட்டு வாயிலின் முன்புறம் மனத் தளர்ச்சி இல்லாமல், 'திருமந்திரத்தைப் பெறவேண்டும்' என்ற உறுதியோடு நின்றுள்ளார்.

**பூரணர் உபதேசம் செய்தல் :**

மந்திர உபதேசம் செய்யும் சிறப்பு பெற்ற ஆசாரியர் பூரணர், வீட்டு வாயிலில் கூரேசர், முதலியாண்டான் ஆகிய இருவருடன் வந்து நின்றிருந்த இராமானுசரைக் கண்டு, "தண்டு கொடியுடன் உம்மை மட்டும்தானே வரச் சொன்னேன்" என்றார். இராமானுசர் பணிவோடு, "சுவாமிகள் என்மீது கோபம் கொள்ளல் வேண்டா! தாங்கள் கூறிய தண்டு, கொடிக்கு இணையானவர்கள் இவர்கள். எங்கள்மீது பரிவு கொண்டு அருள்புரிய வேண்டும்" என வேண்டினார். பூரணரும், அவர்களை இல்லத்துள் அழைத்துச் சென்று, இருக்கை அளித்து அமர்த்தி தமக்குப் பரம ஆச்சாரியார் ஆளவந்தார் அருளிய, அரிய பொக்கிஷமான திருமந்திரத்தை, உபதேசம் செய்தார். மூவரும் பூரணருக்கு நன்றி கூறி விடைபெற்றனர். அம்மந்திரத்தை வேறு எவரிடமும் கூறாது தியானம் செய்து அருள் பெறுமாறும், ஆசாரியரின் நியமத்தை மீறினால், நரகம் புக வேண்டி இருக்கும் என்றும் பூரணர் ஆணையிட்டார்.

**இராமானுசர் செய்த அருஞ்செயல் :**

பூரணர் அருளிய திருமந்திரத்தைப் பெற்ற இராமானுசர், திருக்கோட்டியூர் சௌம்ய நாராயணன் திருக்கோவிலுக்குக் கூரேசர், முதலியாண்டான் மற்றும் பூரணரின் சீடர் தொடரச் சென்றார். அங்கே கோவிலின் மதில் சுவர்மேல் இராமானுசர் ஏறி நின்றார். கீழே ஊர்ப் பொதுமக்கள் அனைவரையும் திரட்டி நிற்கச் செய்து உரத்த குரலில், "பெரியோர்களே! பக்தியால் முத்தி காணத் துடிப்பவர்களே! பிறவிப்பிணி போக்கும் அருமருந்தான திருமந்திரத்தைக் கூறுகிறேன். எல்லாரும் கேளுங்கள். அனைவரும் இணைந்து மந்திரத்தைச் சொல்லுங்கள்" என்று கூறி, மந்திரத்தை மூன்று முறை கூறினார்.

இச்செய்தி அறிந்த பூரணர் வெகுண்டபோது, இராமானுசர், "சுவாமிகளே! இதனால் நான் மட்டுமே தண்டனை பெற்று நரகம் சேர்வேன். மக்கள் அனைவரும் நலம் பெறுவர் அல்லவா?" என்றார். இராமானுசர் கூறியது கேட்ட பூரணர், "எம்பெருமானே! உமது அருள் உள்ளம் எமக்கு இல்லாது போயிற்றே! பரமாச்சாரியார் ஆளவந்தாரின் திரு உள்ளத்தை அறிந்தவர் தாம் மட்டுமே! இறைவனின் திருவருளை உலகிற்கு உணர்த்திய தாமே 'எம்பெருமான்' என்னும் திருநாமத்தை நிலையாகப் பெற்று நீடூழி வாழ வேண்டும்" என வாழ்த்தினார்.

**முடிவுரை :**

அரிய பொருளை வேண்டிப் பெறுபவர், அதன் பலனைத் தாம் மட்டுமே அனுபவிக்க வேண்டும் என விரும்புவர். அத்தகையவர் வாழும் உலகில், மக்கள் அனைவரும் பிறவிப் பிணி நீக்கி நற்கதி பெற வேண்டுமெனத் தாம் அரிதின் முயன்று பெற்ற மந்திரத்தை அனைத்து மக்களும் அறியுமாறு கூறிய இராமானுசரின் மனம், எத்தகைய கருணை நிறைந்தது என்பதை எண்ணிப்பார்க்கும்போது, இராமானுசர் நாடகம் வாயிலாக வெளிப்படும் மனிதநேயமும் "பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்" என்பதும் தெளிவுபடுகிறது.

**45. அ) பள்ளி ஆண்டுவிழா மலருக்காக நீங்கள் நூலகத்தில் படித்த கதை / கட்டுரை / சிறுகதை / கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.**

**குறிப்பு : நூலின் தலைப்பு – நூலின் மையப்பொருள் – மொழிநடை – வெளிப்படுத்தும் கருத்து – நூலின் நயம் – நூல் கட்டமைப்பு – சிறப்புக் கூறு – நூல் ஆசிரியர்.**

**நூல் தலைப்பு :** கண்ணீர்ப் பூக்கள்

**நூலின் மையப்பொருள் :** இன்றைய சூழலில் மனிதனின் ஏக்கங்கள், அதனால் மனத்தில் ஏற்படும் பாதிப்புகள்.

**மொழிநடை :** படிக்காதவர்களும் உள்ளம் மகிழ வாசிக்கும் எளிமையான இனிமையான நடை.

**வெளிப்படுத்தும் கருத்து :**

இக்கவிதை நூல், வாழ்வியல் எதார்த்தங்களை அப்படியே படம்பிடித்துக் காட்டுகின்றது. இந்த உலகம் போட்டி நிறைந்த ஒன்று; பூசல்களைக் குறைத்தால் அமைதி தவழும். ஆசைகளைத் துறந்தால் ஆனந்தம் பிறக்கும். மனிதர்கள் நிகழ்காலத்தில் கிடைக்கும் களாக்காயை விட்டுவிட்டு எதிர்காலத்தில்

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



கிடைக்கும் பலாக்காய்க்கே ஆசைப்படுகின்றனர். இறைவன் படைத்த படைப்பில் அனைவரும் சமமாகப் பார்க்கப்பட வேண்டும்; சமமாக நடத்தப்படவும் வேண்டும். சுதந்திர இந்தியாவில் சுதந்திரம் இல்லாமல்தான் இருக்கின்றோம். கிடைத்த வாய்ப்புகளைத் தவறவிட்டுக் கிடைக்காத வாய்ப்புக்காக ஏக்கம் கொண்டு, இழந்த வாய்ப்புக்காகத் துக்கம் கொண்டாடுகின்றோம். பெண்மையைப் போற்றும் இந்நாட்டில் பெண்ணை இழிவுபடுத்துகின்றோம். வாழ்வின் சுவையான தருணங்களைப் பசியாற மறக்கின்றோம். சுயநலத்திற்காகப் பிறர் நலத்தைக் கெடுக்கின்றோம். நாம் யாரையும் அன்பு செய்யாமல், நம்மை அன்பு செய்ய ஆள் இல்லையே என்று அங்கலாய்க்கின்றோம். மரங்களை வெட்டி வீழ்த்துகின்றோம். அதற்கும் உயிர் இருப்பதை மறந்து! இவைபோன்ற பலவகையான கருத்துகளை இப்புத்தகம் வெளிப்படுத்துகிறது.

**நூலின் நயம் :**

இந்நூல், கவிதை நூலுக்குரிய அனைத்து நயங்களையும் பெற்று நலமுடன் திகழ்கிறது. எதுகை, மோனை, இயைபு என்னும் தொடை நயங்கள், அதிகமாகக் கவிதையில் விரவி வருவதைக் காணமுடிகிறது.

**நூல் கட்டமைப்பு :**

இந்நூல், இருபத்தெட்டுக் கவிதைகளை உள்ளடக்கிய தொகுப்பாகும். இதில் உள்ள ஒவ்வொரு கவிதையும், வாழ்வியல் எதார்த்தங்களை எடுத்தியம்புகிறது. இருபத்தெட்டுக் கவிதைகளில் ஒன்று, 'கண்ணீர்ப் பூக்கள்' என்னும் கவிதை. இக்கவிதையின் தலைப்பையே புத்தகத்தின் தலைப்பாக மாற்றியுள்ளார் ஆசிரியர். சில கவிதைகள் சிறியவையாகவும், சில கவிதைகள் பெரியவையாகவும் இந்நூலில் இடம்பிடித்துள்ளன. ஆனால், கருத்துகள் நிறைவாகவே உள்ளன.

**சிறப்புக் கூறு :**

இக்கவிதைத் தொகுப்பு, முப்பதாவது பதிப்பாகும். ஒரு புத்தகம் முப்பதுமுறை பதிப்புப் பெற்று வெளிவந்துள்ளது எனில், அதைவிடச் சிறப்பு வேறு என்ன வேண்டும்? அந்த அளவிற்கு இப்புத்தகம், சிறப்பாக உள்ளது. தலைப்புகள் ஒன்றோடு ஒன்று விரவிக் காணப்படவில்லையென்றாலும், பல கருத்துகள் பரவிக் காணப்படுகின்றன.

**நூல் ஆசிரியர் :**

கண்ணீர்ப் பூக்கள் நூலின் ஆசிரியர் மு. மேத்தா அவர்கள். இத்தகைய சிறப்பான நூலை ஒவ்வொருவரும் படித்துப் பயன்பெறுவோமாக.

**(அல்லது)**

**ஆ) குறிப்புகளைப் பயன்படுத்தி, 'சாலைப் பாதுகாப்பு' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.**

**குறிப்புகள் :**

**முன்னுரை – சாலை விதிகளை அறிவோம் – ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் – விபத்துகளுக்கான காரணங்கள் – தேவையான விழிப்புணர்வு – நம் கடமை – முடிவுரை.**

**சங்கடமின்றிச் சாலையில் பயணம் செய்வோம்**

**முன்னுரை :**

பயணம் என்பது தவிர்க்க முடியாதது. ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்வது என்பது, இன்றைய வாழ்வில் கட்டாயமாகியுள்ளது. இந்த வகையில் தொழில் செய்யவோ, கல்வி கற்கவோ, பொழுதுபோக்குக்கான இன்பச் சுற்றுலா செல்லவோ உறவினரைக் காணவோ பயணங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இன்று விரைவான தரைப்பயணங்களை மக்கள் மிகுதியாக மேற்கொள்கின்றனர். அதற்காகப் பலவகை ஊர்திகள் பெருகிவிட்டன. அவை நம் பயணத்தை விரைவாகவும் சுலபமாகவும் மாற்றியுள்ளன.

**சாலை விதிகளை அறிவோம் :**

'சாலைப் பாதுகாப்பு' என்பது, சாலையில் விபத்துகள் ஏற்படாமல், பாதுகாப்பாக நல்ல முறையில் பயணம் செய்வதைக் குறிக்கும். பயணம் செய்வோர், உயிர்ப் பாதுகாப்பை முன்வைத்துப் பயணம் செய்யத் திட்டமிட வேண்டும். சாலைகளில் ஊர்திகளில் இடப்புறம் பயணித்தல், நடைபாதையில் நடத்தல், தடைமேடைகளைக் கவனித்துச் செல்லுதல், சாலையின் நடுவில் அமைந்த மஞ்சள் கோட்டை மதித்தல், எச்சரிக்கை விளக்குகளைக் கவனித்தல், மஞ்சள் விளக்கு எரியும்போது நிதானமாக இருத்தல், சிவப்பு விளக்கு எரியும்போது அதை மதித்து நிற்றல், பச்சை விளக்கு எரியும்போது பயணத்தைத் தொடர்தல் என்னும் நெறிமுறைகளைத் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் :**

ஊர்தி ஓட்டுநர், இருக்கைப் பட்டையை அணிய வேண்டும். இருசக்கர ஊர்தியில் பயணிப்பவர், தலைக் கவசத்தை அணிய வேண்டும். முன்னால் செல்லும் வாகனங்களை முந்திச் செல்ல, உரிய அனுமதி கிடைத்தபின் வலப்புறமாக முந்திச் செல்ல வேண்டும். சாலை வளைவுகளிலும், பாலங்களிலும் வாகனங்களை முந்திச் செல்ல முயலக்கூடாது. நீண்ட தூரப் பயணத்தின்போது, ஓய்வு எடுக்காமல் தொடர்ந்து வாகனங்களை ஓட்டிச் செல்லக் கூடாது. மது குடித்துவிட்டு வாகனங்களை ஓட்டக்கூடாது. நிதானமாகக் களைப்பு இல்லாமல் ஓட்ட வேண்டும். சாலை விதிமுறைகளைத் தெளிவாகத் தெரிந்து புரிந்து, வாகனங்களைச் செலுத்தவேண்டும்.

**விபத்துகளுக்கான காரணங்கள் :**

சாலை விதிகளை முறையாகக் கடைப்பிடிக்காமை, உடல் களைத்த நிலையில் சற்று ஓய்வு எடுக்காமல் பயணத்தை மேற்கொள்வது, வாகனங்களைச் செலுத்தும்போது கைப்பேசியைப் பயன்படுத்துவது, சாலைகளில் கவனத்தைச் செலுத்தாமல் பேசிக்கொண்டே பயணம் செய்வது, போதை தரும் பொருள்களைப் பயன்படுத்திக் கொண்டு உற்சாகமாகச் செல்வது எனப் பல காரணங்களை விபத்துக்களுக்கு அடிப்படையாகக் கூறலாம். பயணம் என்பது எதற்காக என்ற சிந்தனையில் சிதைவு இல்லாமல் மேற்கொண்டால், பயணம் இன்பமாக இருக்கும்.

**தேவையான விழிப்புணர்வு :**

சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகளால், குடும்பங்கள் நிலைகுலைந்து விடும் என்பதை எடுத்துக் கூறி, உயிரிழப்புகள் நேராவண்ணம் பாதுகாக்க முயலல் வேண்டும். விடுமுறை நாள்களில் பாதுகாப்பான பயணம் குறித்தும், சாலை விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் குறித்த பரப்புரைகளை மேற்கொள்ளலாம். சாலைவிபத்துகள் அடிக்கடி நடக்கும் இடங்களில், அறிவிப்புப் பலகைகள் வைக்கலாம். கல்லூரி, பள்ளி மாணவர்கள், இருசக்கர வாகனத்திலோ, மகிழுந்திலோ தேவையற்ற சாதனை சார்ந்த போட்டிகளை நடத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

**நம் கடமை :**

பயணம் செய்யும்போது தேவையான ஓட்டுநர் உரிமம் முதலான ஆவணங்களை உடன் கொண்டு செல்ல வேண்டும். தேவையற்ற சுமைகளை ஏற்றிக்கொண்டு செல்லுதல் கூடாது. எரிபொருள் முதலானவை தேவையான அளவுக்கு இருக்கிறதா எனச் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். முதலுதவி செய்வதற்குத் தேவையான சிறு பெட்டியில் உரிய மருந்துகள் உள்ளனவா எனச் சரிபார்த்துக் கொள்வது நலம். பயணத்தில் தடை ஏற்படாமல் இருக்கத் தேவையான சாதனங்களை உடன் கொண்டு செல்ல வேண்டும்.

**முடிவுரை :**

மனித உயிர் என்பது, அற்புதமானது. மனிதன் சாதிக்கப் பிறந்தவன். அவன் சமுதாயத்தில் தனக்கும் பிறருக்கும் பயன்பட வாழவேண்டும்! அரிய செயல்களைச் செய்தல் வேண்டும்! சாதனைகள் படைக்க வேண்டும்! பயணத்தின் பயனை நிறைவாகப் பெறச் சாலை விதிமுறைகளை அறிந்து கடைப்பிடிக்க வேண்டும். சமூகப் பொறுப்பும், தனிமனித ஒழுக்கக் கட்டுப்பாடும் அவசியம். பாதுகாப்பு என்பது பயணம் மேற்கொள்பவருக்கும் இருக்க வேண்டும்; பாதசாரிகளுக்கும் இருக்க வேண்டும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# மனப்பாடப்பகுதி

## அன்னை மொழியே

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே! (PTA - 2,4, 6, Sep.-21, May - 22)
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே! (PTA - 1, Mar.-24)
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

– பாவலரேறு பெருஞ்சித்திரனார்

## முல்லைப்பாட்டு

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின் (PTA - 3)
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், “கைய
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர், தாயர்” என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்.

– நப்பூதனார்

## காசிக்காண்டம்

விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின் (PTA - 2,5)
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே.

– அதிவீரராம பாண்டியர்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## திருக்குறள்

1. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
   மெய்ப்பொருள் காண்ப தறிவு.

2. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே (PTA - 4, 5,Sep.-21, 22)
   நல்லார் தொடர்கை விடல்.

3. பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்
   கண்ணோட்டம் இல்லாத கண்.

4. அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
   பெருமை முயற்சி தரும்.

5. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை (May - 22, Mar.-24)
   இன்மை புகுத்தி விடும்.

## பெருமாள் திருமொழி

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால் (Sep.-22, Mar.-24)
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.

– குலசேகராழ்வார்

## நீதி வெண்பா

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி (Mar.-23)
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று.

– கா. ப. செய்குதம்பிப் பாவலர்

## திருவிளையாடற்புராணம்

### மன்னன், புலவரிடம் மன்னிப்பை வேண்டுதல்

புண்ணியப் புலவீர் யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப் (PTA - 5, Sep.-20)
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா.

– பரஞ்சோதி முனிவர்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

### ஆடுக செங்கீரை !

செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத் (PTA - 4)
திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழுரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்
கட்டிய சூழியு முச்சியு முச்சிக் கதிர்முத் தொடுமாட
வம்பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குக னாடுக செங்கீரை.

– குமரகுருபரர்

## கம்பராமாயணம்

### பாலகாண்டம் – நாட்டுப்படலம்

தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்க, (Sep.-21)
கொண்டல்கண் முழவி னேங்கக் குவளை கண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ.

### அயோத்தியா காண்டம் – கங்கைப் படலம்

வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும் போனான்;
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ?
ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான்.

– கம்பர்

## திருக்குறள்

1. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத் (PTA - 1, Mar.-23)
   தியற்கை அறிந்து செயல்.

2. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
   பொருளல்ல தில்லை பொருள்.

3. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
   றுண்டாகச் செய்வான் வினை.

4. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச் (PTA - 6)
   சுற்றமாச் சுற்றும் உலகு.

5. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
   இன்மையே இன்னா தது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## சிலப்பதிகாரம்

### மருவூர்ப்பாக்கம்

(PTA - 1, 6,Sep.-22)

தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்;

பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்;

– இளங்கோவடிகள்

## காலக்கணிதம்

(PTA -3, Mar.-23)

மாற்றம் எனது மானிடத் தத்துவம்;
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை!
தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!
கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;
நானே தொடக்கம்; நானே முடிவு;
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!

– கண்ணதாசன்

## தேம்பாவணி

### இயற்கை கொண்ட பரிவு

(PTA - 2,Sep.-20, May - 22)

நவமணி வடக்க யில்போல்
    நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
    தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
    துணர்அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
    ஒலித்து அழுவ போன்றே.

– வீரமாமுனிவர்

ஐ ஐ ஐ ஐ ஐ

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com